O,-892 M
N26
186097

...கூடணக் காப்பகம்
சென்னை 600 008
நூலகம்

உ

கடவுள் துணை.

மந்திரிகுமாரனல் சொல்லப்பட்ட

பன்னிரண்டு கதைகள் என்னும்

# மதனகாமராஜன் கதை

பெரிய எழுத்து

S. R. N. & SONS MADRAS

சித்திரப்படங்களுடன்

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

இதன் விலை] 1926. [அணா-12.

O:1 592 M
1:6
186097
சென்னை 600 008

உ

கடவுள் துணை.

மந்திரிகுமாரனால் சொல்லப்பட்ட
பன்னிரண்டு கதைகள் என்னும்

# மதனகாமராஜன் கதை

OFFICE OF ... 17 DEC 1923

கடல்சூழ்ந்த நெடியவுலகத்தில் நீர்வளம் நிலவளம் குடிவளம்மிகுந்த மயேந்திரபுரியென்று ஒருநகரமுண்டு. அந்நகாத்திற்கு மயேந்திரனென்றொரு அரசனுண்டு. அவ்வரசன் நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்து நான்கு கலைக்கியானம் மனுவிக்கியானம் முதலியவற்றை ஐயந்திரிபற வுணர்ந்து தன்னிலும் எண்மடங்கு அதிகமான விவேகத்தையுடையமனையனென்கிறமந்திரியோடு தன்னுயிர்போல மன்னுயிரைக் காப்பாற்றிச் செங்கோல் நடாத்திவருங் காலத்தில் பாக்கிய மெல்லாவற்றையும் பெற்றுப் புத்திரபாக்கிய மொன்றில்லாததைப்பற்றி அரசனும் மந்திரியும் மனவருத்தமுற்று, சிவாலயம், விஷ்ணுவாலயம், பிரமாலயம் முதலிய தேவாலயங்களுக்கு மிகவுஞ் சிறப்புத் திருவிழாவு மியற்றி அன்னதானம் சொர்னதானம் சோடசதானம் முதலிய முப்பத்திரண்டு தானங்கள் வழுவற வியற்றித் தேவபக்தியில் சிறந்தவராய்ப் பிரார்த்தனைசெய்துவருகிறகாலத்திலே, தேவானுகூலத்தால் அரசனுக்கு ஒரு புத்திரனும் மந்திரிக்கு ஒரு புத்திரனும் உண்டாயினர், அரசன் புத்திரனுக்கு மதனகாமராசனென்று பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தான், மந்திரி தன் குமாரனுக்குப் புத்திசாதுரியனென்று பேர்வகித்து சீராட்டி வளர்த்துவந்தான். அரசனும் மந்திரியும்புத்திரர்களிடத்து அன்புவைத்துவளர்த்துஐந்துவயதானபின்பு நல்லசுபமுகூர்த்தத்தில் வித்தியாப்பியாசஞ்செய்வித்து, உபாத்தியாயர் இரண்டு புத்திரர்களையுந் தன் இரண்டு கண்களாகப் பாவித்து வித்தியாப்பியாசஞ் செய்வித்து வந்தார். பிள்ளைகளிருவரும் நுட்பமாகிய பொருள்களை

யெல்லாம் அறியும் சக்தியுடைய நுண்ணறிவாளிக
ளாதலால் உபாத்தியாயர்ஒருதரஞ்சொல்லுவதற்குமுன்
னே கிரகித்துக் கொண்டவர்களாய் நான்குவேதம்ஆறு
சாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியானம் மனுவிக்கி
யானம் முதலியவற்றை யோதி, அதற்குத் தகுதியான
கேள்விகளைக்கேட்டு ஐயந்திரிபறக் கற்றவர்களாகிக் கல்
விச்சாலையில் கற்கவேண்டியவற்றை யெல்லாங் கற்று,
உபாத்தியாயருக்கு நல்ல வெகுமதிசெய்து, கல்விச்சாலை
யடைந்து வில்வித்தை அம்புவித்தை அஸ்திரசஸ்திர
வித்தை யானையேற்றம் குதிரையேற்றம்முதலியவற்றை
யறிந்து, சகல அரசர்களும் மதிக்கத்தகுந்த மல்யுத்தம்
தொந்தயுத்தம் முதலியவற்றிற் சிறந்து, இராஜதந்திரங்
களை வகிர்ந்து இளவரசுப்பட்டத்துக்குத்தகுந்த வயதை
யுடையவராகினர். அரசனும் மந்திரியும் தங்கள் மைந்
தர் வாலிபத்தை யடைந்ததை யறிந்து நல்ல சுந்தர
முள்ள பெண்களை விசாரித்து இருவருக்கும்மணஞ்செய்
வித்து அவர்கள் இஷ்டப்படியிருக்க உத்தரவுசெய்தார்.
இரண்டு பிள்ளைகளும் இணைபிரியாமல் இராஜன் மந்திரி
யென்கிற மரியாதையோடு சினேகித்து வருகிறவர்களாத
லால் இவ்விரண்டுபிள்ளைகளும் நாடோறும் உதயத்திற்
கெழுந்து நித்தியகடனை அங்குள்ள திருக்குளத்தில்
முடித்து அத்திருக்குளத் துறையருகில் வந்திருந்துக்
கொண்டு அங்கு ஜலம்திரட்டிச் செல்லும் ஸ்திரீகளின்
தலைமீதிருக்கும் குடத்தை இருவர்களில் இராசகுமார
னாகிய மதனகாமராசன் தன்கையிலிருக்கும் மண்ணுண்
டையைத் தொடுத்துத்துளைசெய்விக்கிறது; மந்திரிகுமா
ரனாகிய புத்திசாதுரியன் அக்குடத்திலுள்ள நீரானது
வெளிப்படுமுன் ஈரமண்ணுண்டையைத் தன் வில்லில்
தொடுத்து அத்துளையை அடைக்கிறது வழக்கம். இவ்
வாறு தினந்தோறும் அரசனும் மந்திரியும்சேர்ந்து பத்
துநாழிகைபரியந்தம் விளையாடி, அதன்பின்பு அரண்ம
னைக்குட்சென்று அறுசுவையோடுங்கூடிய உண்டியை
யுண்டு தாம்பூலந்தரித்து முன்போல் இருவருங் கூடிக்
கொண்டு தங்களிஷ்டமான வேலையி லிருப்பார்கள். இப்
படியிருக்கிற காலத்தில் ஒருநாள் அரசனும் மந்திரியும்
வழக்கப்படி திருக்குளக் கரையில்வந்து உண்டைவில்



விளையாட்டி லிருக்கும்போது மந்திரி அரசனை நோக்கி
ஓ மகாராஜனே! எனக்கு இன்றையதினம் என்னமோ
அதிக பசியாயிருக்கின்றது; நாம் போசனத்துக்குச்செல்
வோம் வாருமென்று கூற, அரசன் சொல்லுகிறான்: ஓ
மந்திரி! சூர்யோதயமாகி நாலுநாழிகை யாகவில்லை;
இதற்குள்ளே பசியென்ன தினந்தோறுஞ் செல்லும்
வேளைக்குச் செல்லலென்றனன். மந்திரி சொல்லுகிறான்:
ஓ சுவாமி! அப்படியா அந்தவேளை பரியந்தம் பசிவே
தனை தாங்கமாட்டேன்; எழுந்திருந்து அரண்மனைக்குச்
செல்லலா மென்றனன். அரசன்பார்த்து பசிவேதனை
அதிகமாயிருந்தால் நீமாத்திரஞ் சென்று போசனஞ்
செய்துவா; தினந்தோறும் செல்லும்வேளைக்குநாம்போ
வோமென்றுகூற, மந்திரி சொல்லுகிறான்: ஓ சுவாமி!
நான்வரும்பரியந்தம் தாங்கள் சும்மா யிருப்பீர்களா?
அதற்காக நான் தங்களை பிரிவதற்குச் சமுசயமாயிருக்கிற
தென்று சொல்ல, அரசன் சிறுநகைகொண்டு சொல்லு
கிறான்: ஓ! மந்திரி! உனக்கேன் மனக்கவலை; நீ வருகிற
பரியந்தம் இந்த வில்லை யெடுக்கிறதில்லை; மனவருத்த
மின்றி நீ செல் என்று உறுதிபுகல, மந்திரி அக்கருத்
துக்கிசைந்து தன் அரண்மனைக்குச் சென்றான். இரா
சன் திருக்குளத்துக்கரையி லிருந்தான். இப்படியிருக்க,
அந்நகரத்துக்கு அரசுரிமைபூண்ட இராசனுக்கு ஆசா
ரியான் குமாரத்தி இந்த ராஜகுமாரனாகிய மதனகாமரா
சன் அழகைக்கண்டு விருப்பங்கொண்டுசமயம்கிடைக்கா
மல்நாடோறும் எந்தவேளை மந்திரிகுமாரன் பிரிவானோ
வென்று சமயம்பார்த்துக்கொண்டு யிருப்பவளாதலால்,
இராசன் தனித்திருப்பதையறிந்து தக்ஷணம் தன்பிதா
வுக்குப் பூசைக்கிடஞ்செய்து பூசைக்குவேண்டிய பூஜாதி
ரவியங்களைச்சேர்த்து வைத்துவிட்டு,ஒருகுடத்தை இடு
ப்பில்வைத்துக்கொண்டு ஜலந்திரட்டவருகிறவள்போல்
குளக்கரைக்கு வந்தாள். அங்கேதனியாயிருக்கிற இராஜ
குமாரனைக்கண்டு குடத்தை ஜலத்தருகில் வைத்துவிட்டு
மதனகாமனிருக்குமிடத்திற்குச்சென்று ஓ ராசகுமாரகா!
நாள்தோறும் மந்திரிகுமாரனும் தாங்களும் இணைபிரி
யாமல் இருப்பீர்களே, இன்றையதினம் நீமாத்திரம்
தனித்திருக்கவேண்டியகாரணமென்ன? வென்று வினவி

ளள். அரசன் கேட்டு ஆசாரியன் குமாரத்தியாகையால் மரியாதைசெய்து சொல்லுகிறான்: ஓ அம்மணி! என் மந்திரி அதிகபசியாயிருந்தமையால் போசனஞ்செய்துவர அரண்மனைக்குச் சென்றனன். அவன் வருகிறபரியந்தம் நானிங்கிருக்கின்றேன் என்று கூற, ஆசாரியன் குமாரத்தி புன்னகைகொண்டு சொல்லுகின்றாள்:—

ஓ இராசகுமாரகா! பசியால்வருந்திய மந்திரியிடத்து அனபுவைத்துப் பசிதணியப் போசனஞ்செய்துவரக் கட்டளையிட்டீர்; அது பெரிதல்ல; நான் உமது அழகைக்கண்டு அதிகமயலாகி அநேகநாளாகக் காமப்பசியினால் வருந்தி யிருக்கிறதால் நாம் இருவருஞ் செல்வோம் வாருமென்றுகூறி, நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கையும் விட்டுக் காம சன்னதங்கொண்டு நின்றாள். அரசன் கண்டு ஓகோ இதென்ன அனியாயம் தெய்வமே! தெய்வமே!! என்று தெய்வத்தைக் குறித்துத் துதித்து மனவருத்தமுற்றுச் சொல்லுகின்றான் ஓ அம்மணி! நீங்கள் ஆசாரியன் குமாரத்தியாயிருந்து மௌடீகரைப்போல் வசனிப்பது தகுதியல்ல, இன்பமாய்ப் பெற்றோனும் இடர்தனைத்தீர்த்தோனும் அன்புடன் அன்னமளித்து இரட்சித்தோனும் ஓதுவித்தோனும் உபதேசித்தோனும் இந்த ஐவரும் பிதாவென்று மநுசாஸ்திரத்திற் கூறியிருக்கத் தாங்கள் சகோதரவாஞ்சையை என்னிடத்தில்வைக்காமல் வேறுவிதமான வாஞ்சையை வைப்பது தகுதியல்லவென்று மறுத்தனன். ஆசாரியன குமாரத்திசொல்லுகிறாள்: ஓ ராசகுமாரகா! வலிய அணையவந்தால் தடையின்றி அவர்களை அங்கீகரித்துக் கூடவேண்டுமென்று நீ குறித்துக்காட்டிய மநுசாஸ்திரத்தில் கூறியிருக்கிறதை அறியீரோ தடையின்றி என்னைக்கூடுவது தருமமென்று மேல்விழுந்து ஆலிங்கனஞ்செய்ய எத்தனித்தாள். அந்தக்குறிப்பை அரசன் கண்டு சிவசிவாவென்று காதில் கரத்தை வைத்துப் புதைத்துக்கொண்டு ஓகைலாசபதி! திரியம்பகா! பார்வதிசமேதா! பரமதயாளா! என்று துதித்து, ஓ அம்மணி! நீங்களென்ன சற்றும் அறிவில்லாமல் மேல்விழுந்துவருகிறீர்கள்; தங்களை நான் சகோதரியென்று தீர்மானித்து வாயாரச்சொல்லிவிட்டேன்; அவ்



வாக்கியத்திற்குப் பழுதாகநான் நடக்கேன்,என்னையேன் வருத்துகிறீர்கள்; அரண்மனைக்குட் செல்லு மென்று கூற, இந்த வாக்கியத்தைக்கேட்ட ஆசாரியன்குமாரத்தி கடுஞ்சினமடைந்து சொல்லுகிறாள்: ஓ ராசகுமாரகா மநுசாஸ்திரவிதி கூறியும் என்னை அவமதிக்குள்ளாக்கினை, இனியொரு முகூர்த்தத்தில் உன்னைக் கொல்விக்கிறேன் பார் என்று கூறி தக்ஷணம் தான் உடுத்தியிருந்த ஆடையைக் கலைத்துக்கொண்டு கூந்தலை யவிழ்த்துத் தாறுமாறாக விரித்துப் போட்டுக்கொண்டு கைகளி லிருந்த வளையல்களையும் உடைத்து அங்கமெங்கும் கீறிக்கொண்டு, புருஷன் வலியயிழுத்துப் புணர்ந்த ஸ்திரீயைப்போல வேடந் தரித்து ஓவென் றலறிக்கொண்டு பூசைசெய்துக்கொண்டிருக்கின்ற பிதாவின் பாதத்தில் வந்து விழுந்து முறையிட்டாள். பூசையிலிருந்த ஆசாரியன் மனங்கலங்கிக் கைகால்நடுங்கித் தன்மகளை வாரித் தழுவி ஓ அம்மணி உனக்கு இந்தக்கெடுதியாரால் நேரிட்டது? சொல்லென்று வினவினன். குமாரத்தி சொல்லுகிறாள்:—

ஓ ஐயா! தங்களுக்கு பூசைக்கிடஞ்செய்து பூசை திரவியத்தையுஞ் சேகரித்துவைத்துவிட்டுச்சலந்திரட்டிவரக் குளத்திற்குச்சென்றேன்; அங்குஇந்நகரையாளும் இராஜகுமார னிருந்தான்; என்னைப்பார்த்து தட்சணம் மேல்விழுந்து என்னைக்கூடென்று உருத்தினன், நான் சம்மதிக்காமல் மீறினதின்மேல்என்னையிந்த அலங்கோலஞ்செய்தானென்று கூறினள். இந்த வாக்கியத்தைக் கேட்டு ஆசாரியர் காலாந்த ருத்திரனைப்போலச் சீறிப் பாதசாரியாய் இராஜசமுகத்திற்குவந்தார். அதனை அறிந்தஅரசன் ஆசாரியரைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து ஓ சுவாமி! தாங்கள் கடுஞ்சினமடைந்து பாதசாரியாய்வந்த காரணமென்னஎன்று வினவ, ஆசாரியர்கண்கள் பொரிபறக்க நோக்கிச் சொல்லுகிறார்:—

ஓ அரசனே? உன்புத்திரன் குளக்கரையி லிருந்து சலந்திரட்டவந்த என்குமாரத்தியைக் கண்டு மோகங்கொண்டு வலிய மேல்விழுந்து தாறுமாறாக அங்கமெல்லாம் பின்னப்படக் கற்பழித்தான். இது ராஜாங்கத்தில்



தருமா? என்று ஓவென்று அலறிக்கூறினார். அவ்வாக்கியத்தைக் கேட்ட அரசன் நடுக்கமுற்று மறுபடியும் வணங்கிச்சொல்லுகிறான் ஓ சுவாமி! யாவராயினும் குற்றவாளிகளா யிருப்பார்களாகில் அவர்களை தட்சணம் தண்டிப்பதற்கு அடியேன் காத்துக்கொண்டிருக்கத்தாங்களிதற்காக மனவருத்தம் அடையவேண்டிய தில்லை, இதோ அரைக்ஷணத்தில் என்புத்திரனைக்கொல்ல உத்தரங்கொடுக்கிறேன் கோபந்தணியுங்களென்று இதஞ்சொல்லிச் சபாமண்டபத்துக்கழைத்துப்போய் சோடசவுபசாரஞ்செய்து ஆசாரியரை ஒரு ஆசனத்தி லிருத்தி மனையானென்கிற மந்திரியை யழைத்து தன் புத்திரன் செய்த அக்கிரமத்தை யெடுத்தோதி தக்ஷணம் அவனைச் சிரச்சேதம் செய்துவரக் கொலையாளிகளுக்கு உத்தரங்கொடு இதோ முத்திரைமோதிரமென்று கொடுக்க, மந்திரி ஆசாரியார் பொய்சொல்லாரென்றும் இராசகுமாரன் வாலிபதிசையடைந்திருப்பதால் ஒருவேளை அப்படிக்கிருந்தாலும் இருக்குமென்று யோசித்து முத்திரை மோதிரத்தை வாங்கிக் கொலையாளிகள் கையிற் கொடுத்து, இராசகுமாரன் குளத்துக் கரையிலிருக்கிறான் நீங்கள் சென்று அவனைக் கண்டு முத்திரை மோதிரத்தைக் காண்பித்து அரசன் கட்டளையைத் தெரிவித்து சிரச்சேதஞ் செய்துவாருங்களென்று கூறியனுப்பினன். கொலையாளிகள் குளக்கரைக்குவந்து இராசகுமாரனைக் கண்டு மந்திரிகூறிய வார்த்தையைக்கூறி முத்திரைமோதிரத்தைக் காண்பித்து எழுந்து வாருமென்று அழைத்தார். இராசகுமாரனாகிய மதனகாமராஜன் கண்டு திடுக்கிட்டு தெய்வகடாட்சம் இப்படியிருக்கிறபோது இனிநாம் செய்யு முயற்சியினால் என்ன பயன் அடையப்போகிறோம், நமதுமந்திரி நம்மைவிட்டுப் பிரிந்தபடியினாலல்லவோ நமக்கு இவ்வித விதி வாய்த்ததென்று கிலேசமுற்றுக் கொலையாளிகளைப்பார்த்துச் சொல்லுகிறான். ஓ கொலையாளிகளே! என் சிரசை வெட்டிவிடுங்கள்; எனக்கு மனக்குறை ஒன்றிருக்கிறது; அதனை யுங்களுடன் சொல்லுகிறேன்; நீங்கள் அதனைக்கேட்டு மனக்குறையைத்தீர்த்தபின்பு உங்கள் கருத்துக்கிசைந்தபடி சிரச்சேதஞ்செய்யுங்களென்றுகூற, கொலையாளிகள்கேட்டு மகாராசாவின்

புத்திரனாதலால் மனமிரங்கி அக்குறையை வெளியிடுவா
யென்று கூறினர்.

அரசன் சொல்லுகிறான்: ஓ கொலையாளிகளே! என்
மந்திரி போசனஞ்செய்து வருகிறேனென்று கூறிப்போ
யினன்; இதுவரைக்கும் வரக்காணோம்; அவனை நான
ழைத்துவரச் சொன்னதாகச்சொல்லி நீங்கள்வந்த வர
லாற்றையும் எடுத்துக்கூறுங்களென்று கூறினன். அவ்
வாறே கொலையாளிகள் கேட்டுத் தங்களில் ஒருவனை மந்
திரிவீட்டுக்கு அனுப்பினர். கொலையாளி மந்திரி அரண்
மனைக்குச் சென்று காவலாளிகளுக்குத் தெரிவித்தான்.
காவலாளிகள் மந்திரிகுமாரனைக்கண்டு உமது அரசனா
கிய மதனகாமராஜனிடத்திலிருந்து கொலையாளிவந்து
வருத்தமெல்லாந் தெரிவித்து உங்களைக் காணவேண்டு
மென்று கூறுகின்றானென்று உரைத்தனர். அந்தவசன
த்தைக்கேட்ட புத்திசாதுரியமுள்ளமந்திரி அந்தவேளை
போசனஞ்செய்ய வுட்கார்ந்து ஒரு கவாளம் அன்னமெ
டுத்து வாயில்வைத்து மற்றொரு கவாள மெடுக்குந் தரு
ணமாக யிருப்பினும் கையை வுதரிக்கொண்டு எழுந்து
கைகால் சுத்திசெய்து கொலையாளியை என்ன சங்
கதியென்று வினவ, கொலையாளி சொல்லுகிறான்: ஓ
ஐயா! உமது ராஜகுமாரன் ஆசாரியன் குமாரத்தியைப்
பலாத்காரத்தினால் கற்பழித்தாரென்று அரசனுக்குத்
தெரிந்து அரசன் இராஜகுமாரனைக் கொலைசெய்யச்சொ
ன்னதாக உங்கள பிதா எங்களுடன் சொல்லி அரசன்
முத்திரை மோதிரமுங்கொடுத்தார்; நாங்கள் இராஜகுமா
ரனைக்கண்டு சேதியைத் தெரிவித்தோம்; அவர் தங்களை
யழைத்துவரக் கட்டளையிட்டார்; அதுசேதி உங்களுக்
குத் தெரிவிக்க வந்தேனென்றுகூற, மந்திரிகுமாரன் கே
ட்டுத் திடுக்கிட்டு ஓகோ! மோசம் வந்தது, இனி நாம்
தகுந்தயோசனை செய்யவேண்டும், நமதரசன் மநுசாஸ்
திரவிதி பிசகாதவன், ஏதோ ஒரு காரணத்தினால் இவ்வ
கைப்பட்ட தண்டனை இராஜனுக்குக்கிடைத்தது. நாம்
நடந்ததை யறியவேண்டுமென்று கருதி, தட்சணம் குதி
ரைலாயத்திற்குச்சென்று பஞ்சகல்யாணி குதிரைகளில்
இரண்டுக்குச் சீனி முதலியவற்றைக் கட்டித் தகுந்த
ஆடையாபரணந் திரவியம் ஆயுத வகைகள் எடுத்துக்



கொண்டு கொலையாளியுடன் குளக்கரைவந்து அரசனைக்
கண்டு வணங்கி, ஓ சுவாமி! நானிவ்விடம்விட்டு அரண்
மனைக்குச் சென்றபின்பு நடந்ததென்ன? உண்மையா
கச் சொல்லுமென்று வினவ, அரசன் சொல்லுகிறான்:
ஓ மந்திரி! நீ இவ்விடம் விட்டுப் போனபின்பு ஆசாரி
யன் குமாரத்தி சலந்திரட்டவந்து குடத்தைச் சலத்தரு
கில் வைத்துவிட்டு என்னருகில் வந்து தனியாயிருக்க
வேண்டிய தென்னவென்றுவினவ, நான் மந்திரிகுமா
ரன் போசனஞ்செய்வதற்காக சென்றதைக் கூறினேன்.
பின்பு அவள் என்மேல் மோகங்கொண்டிருப்பதைத்தெ
ரிவித்து மேல்விழுந்து அணையவந்தாள். நான் அக்க
ருத்துக்கிசையாமல் மறுத்ததின்மேல் அவளென்னைக்
கொல்லுகிறேனென்று சபதங்கூறிபோய்த் தன் பிதாவி
னுடன் நான் அவளை பலாத்காரஞ் செய்ததாய்ச் சொ
ல்லி அரசனால் எனக்கு உயிர்ச்சேதம் உண்டாகும்படி
செய்துவைத்தாள். இதுதான் நடந்ததென்று கூறி
னன். மந்திரிகேட்டு இந்தவனியாயம் இப்போது வெ
ளிப்படுத்தினால் உலகம் பொய்யென்று நினைக்கும், அது
வுமன்றி புத்திரனாதலால்தடையாகவிட்டானென்று அர
சனுக்கு ஒரு இழிவுவரும், இந்தவேளை பொறுத்து மற்
றொருவேளை இக்கருத்தை வெளியிடவேண்டுமென்று
கருதிக் கொலையாளர்களைப்பார்த்து நடந்த தொன்று
முடிந்ததொன்றாக இருக்கின்றமையால் நீங்களென்ன
சொல்லுகிறீர்களென்றுவினவ, கொலையாளிகள் வணங்
கிச்சொல்லுகிறார்கள்; ஓ ஐயா! மகாராஜனுக்கிருக்கிறது
ஒரு புத்திரன்தான்; அரசாட்சி இவர்க்கேயன்றி மகாரா
ஜனுக்கிருப்பினும் சிறப்பில்லை; நடந்தது ஒருவிதம்முடி
ந்தது ஒருவிதம் ஆதலால் நாங்கள் அரசன் கட்டளைப்
படி நடக்கவந்தோமாயினும் நாங்களொரு தந்திரஞ்
செய்கிறோம். நீங்களிந்த நகரத்தைவிட்டுவிட்டுச் சில
காலம் தேசசஞ்சாரஞ் செய்யுங்கள் நாங்கள் செய்யுந்தந்
திர மென்னவெனில் ஏதாவதொரு பறவை அல்லது
ஒரு மிருகம் இவற்றி லொன்றைக்கொலைசெய்து உதிர
த்தை அரசனுக்குக் காண்பிக்கிறோம். நீங்கள்மாத்திரம்
இந்நகரத்திலிராமல் எங்கேயாவது போய்விடவேண்டு
மென்று சொல்லினர். மந்திரி அக்கருத்துக்கிசைந்து

இராஜமாரனை ஒரு குதிரையின்மே லேற்றிக்கொண்டும் தானொரு குதிரையின்மே லேறிக் கொலைகளத்துக்குப் போக்குக்காட்டிச் சென்றனர்.

கொலையாளிகள் தங்கள் கருத்துக் கிசைந்தபடி உதிரத்தை அரசனுக்குக்காண்பித்துப்போயினர். மதனகாமராஜனும் புத்திசாதுரியனென்கிற மந்திரியும் முகம்விட்டவாக்கில் குதிரைகளை நடத்தி காடு மலை வனம் வனந்திரங்களைக் கடந்து வெயிலா லடிபட்டு விடாய்த்துபசி தாகம் களையோடு நித்திரையில்லாமல் இராப்பகலாக நடந்து இந்திரபுரமென்கிற நகரத்துக்குவந்துசேர்ந்து, அங்கொரு கிழவி வீட்டிற்குச்சென்று ஓ அம்மணி! எங்களிருவருக்கும் உணவும் குதிரைகளுக்குப் புல் கொள் முதலியவைகளை உதவி செய்வாயாகில் உனக்கொருவராகன் தருகிறோம்; உன் மனச்சம்மதி என்னவென்றுவினவினர். அக்கிழவி அக்கருத்துக்கிசைந்து கொடுங்களென்றாள். அப்படியே ஒரு வராகன் கொடுத்து ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டு களையாறினர். கிழவி குதிரைகளுக்குப் புல் கொள் முதலியவற்றை வைத்துஉபசரித்தாள். அரசனும் மந்திரியு மகிழ்ந்து அக்கிழவிவீட்டிலேதானே தினம் ஒருவராகன்கொடுத்துச் சாப்பிட்டு சிலநாளிருந்து ஒருநாள் அந்தநகரத்தின் அலங்காரத்தைப் பார்ப்போமென்று கருதி குதிரைச்சவாரியாக வெளிப்பட்டு வீதிகளையுங் கடைகளையுங் கண்ணுற்று வந்தார்கள். அப்படி வருகிறபோது அந்நகரத்திலிருக்கும் சிவாலயத்தைப்பார்த்து இவ்வாலயம் மிக வுன்னதமாயிருக்கின்றது! இதற்குள்ளே சென்று சுவாமியைத் தரிசிப்போமென்று கருதி ஆலயத்திற்குப் புகவந்தார்கள். அங்குவந்தவுடன் ஆலயத்துக் கபாடத்தைச் சாத்தப்பட்டிருந்தது. அதனைக்கண்டு அங்கிருக்கிறவர்களைப்பார்த்து கதவு சாத்தப்பட்டிருக்கிறகாரணமென்னவென்று வினவினர். அங்கிருக்கிறவர் சொல்லுகிறார்: ஓ! புண்ணியவான்களே! இந்நகரத்துக்கதிகாரி குடிகள்திரைகட்டவில்லையென்று ஊர்க்குப் பொதுவாகிய ஆலயத்தின் கதவையடைத்தார்களென்றார்கள்.

அதனைக்கேட்ட இராசனும் மந்திரியும் சிறுநகை கொண்டு அந்நகரத்ததிகாரியிடத்திற்சென்று ஓ மகானுபாவா! திரைகட்டாதிருந்தால் ஆலயத்தைச்சாத்தி முத்திரிக்கவேண்டியதைத் தவிர்த்து அவரவர்களை யழைத்து தண்டனைசெய்து திரைவாங்கிக்கொள்ளுமென்று கூற, அந்நகரத்துக் குடிகள் கட்டவேண்டிய திரையைக் கொடுத்தார்கள். அந்நகரத்துக்கு அதிகாரி காரியஸ்தானிகரை அழைப்பித்து அவரை கதவைத்திறந்து முன்போலபூசை நடத்துங்களென்றான். ஆலயத்தைத் திறந்து சுவாமிக்கு அபிஷேக முதலியவற்றைச் செய்தார்கள். அரசனும் மந்திரியும் அவ்வாலயத்துட் சென்று ஆலயத்திலிருக்கின்ற சித்திரவிசித்திர விநோதங்களையும் பிராகார அகல ஒழுங்குகளையும் பார்வையிட்டுப் பிரதட்சணம்வரும்போது வடக்குப் பிராகாரத்தில் மதில் சுவற்றில் ஒருபடம் கட்டியிருந்தது, அதனை ராசன் கண்டு அருகிற்சென்று உற்று நோக்கும்போது அதிலிரண்டு கன்னிகைகள் எழுதப்பட்டிருந்தாலும் அவ்விரண்டு கன்னிகைகளும் தன் சுயரூபமாக நின்றாற்போலே அரசன்கண்களுக்குப் புலப்பட்டது. அரசன்கண்டு மோகித்துப் பூமியில்விழுந்தான், மந்திரிகண்டு அச்சமுற்று ஆ! தெய்வமே! பிரதட்சணம்வந்த அரசன்ஸ்மரணைதப்பி பூமியில் விழவேண்டிய காரண மென்னவென்று துக்கித்து; அரசன் அருகிற்சென்று வாரியெடுத்து மார்பில் தழுவிக்கொண்டு களைதெளிய உபசாரஞ்செய்து மதிலைப் பார்த்தனன். மதிலில் ஒருபடந் தோன்றிற்று. அப்படத்தை யுற்றுப்பார்க்கும்போது இரண்டு கன்னிகை எழுதியிருந்தது.

தெரிந்தவுடனே ஒகோ இந்தக் கன்னிகையைக் கண்டு அரசன் மோகித்து மூர்ச்சையடைந்தாரென்று தெரிந்து அதற்குத் தகுதியான உபசாரஞ்செய்து களையைமாற்றினான், அரசன்கண்டு விழித்துப்பின்னும்அப்படத்தைப்பார்ந்து மறுபடியுங்களைத்தான். மந்திரி முன்போல் களையைமாற்றினான். இப்படி அனேக தடவை மூர்ச்சையாகவே மந்திரி களையாற்ற முடியாமல் சற்றுலோசித்து நாம்செய்யும் உபசாரத்திற் பயனில்லை; இப்படத்திலிருக்கிற மாதர்கள் வந்தாலொழிய அரசன்சோகந்தீராதென்றுகருதி தட்சணம் அந்த ஆலயத்து தர்மகர்த்தனை யழைப்பித்து இப்படம் யாரால் எழுதப்பட்

டது, இங்கு கொண்டுவந்து கட்டினவர் யாரென்று
வினவ தர்மகர்த்தன் சொல்லுகிறான். ஓ! மகானுபாவா!
தேவகிபுரமென்றொரு நகரமிருக்கிறது. அதின் குடியா
கிய வெங்கைய னென்னும் சிற்பாசாஸ்திரி உண்டு.
அவன் வழக்கமாக இவ்வாலயத்துக்கு வருகிறது அவ
னிப்படத்தையெழுதிக்கட்டினானென்றுகூறினன். இந்த
வசனங்களைக்கேட்ட மந்திரி சற்றாலோசித்துச் சொல்லு
கிறான். ஓ! தர்மப்பிரபுவே! வருஷம் பன்னிரண்டானா
லும் இந்தப் படத்திலிருக்கின்ற கன்னிகைகள் வரலாற்
றைத்தெரிந்துகொண்டு அக்கன்னிகைகளை அழைத்து
வருகிறேன்; அதுபரியந்தம் இந்த அரசனுக்கு ஒரு
இடையூறும்வாராமல் பாதுகார்ப்பது உமது கடமை
என்றுகூறி, திரவியவுதவிசெய்து இடம் பொருள் ஏவல்
கிஞ்சிற்றேனுங் குறைவுபடாமல் நடத்திவரச்சொல்லி
தான் குதிரையின்மேலேறி வெங்கையனென்கிற சிற்பா
சாஸ்திரியிருக்கிற தேவகிபுரத்தை நாடிச்சென்று காடு
மலை வனம் வனாந்திரங்களைக் கடந்து மூன்று நாளில் சிற்
பாசாஸ்திரி வீடறிந்து வீட்டுக்குட்சென்றுசிற்பாசாஸ்
திரியைக்கண்டு பத்துநாள் பரியந்தமிருந்து பதினோரு
நாள் சிற்பாசாஸ்திரியும் தானும் போசனஞ்செய்து ஓரி
டத்தில் தனியாயிருக்கிறபோது ஏதோ பேச்சுமூலமாக
பேசுவதுபோலே தான் நாடிவந்த படத்தின்சங்கதியை
எடுத்து ஐயா! இந்திரபுரத்திலிருக்கும் சிவாலயத்தில்
கட்டியிருக்கிற படத்திலிருக்குங் கன்னிகை எழுதியவர்
தாங்கள்தானே என்று வினவினன். அதற்குசிற்பாசாஸ்
திரி நான்கன்னிகையைக்கண்டவனல்லஇந்நகரத்துக்கு
பதின்காதவழியி லிருக்கிற வீமாபுரத்தையாளுகிற வீம
ராசனிடத்திலிருக்கிற பெரியபோயி எனக்குச் சினேகம்,
அவனும்நானும் இந்திரபுரி சிவாலயத்துட்சென்றோம்,
அங்கு அவன் வைத்திருந்த ஒருமயிரைக்கொடுத்தான்;
அந்த மயிரினுடைய லட்சணத்தைக்கண்டு அதன்மேல்
என் புத்திசாதுரியத்தினால் அந்த இரண்டு கன்னிகை
களை எழுதினேனென்று கூறினான். மந்திரி சொல்லுகி
றான், அந்தப் பெரியபோயி தங்களுக்கு சினேகிதனாகை
யால் அவன்பெயர் மனைவிபெயர் கொள்வினை வழி என்
னும் இரகசியமான சங்கதி தெரிந்திருக்குமே, அதனை



எனக்குச் சொல்லவேண்டுமென்று வினவ, சிற்பாசாஸ்
திரி சொல்லுகிறான்; ஓ மகானுபாவா ! அந்தப்பெரிய
போயிபெயர் முத்தியால்நாய்க்கன், அவன் மனைவிபெயர்
இலட்சுமக்காள், அவளுக்கு ஒருபிள்ளையும் பெண்ணும்
உண்டு, அந்த இலட்சுமக்காளுக்குத் தாய்வீடு வீதர்ப்ப
தேசம், அந்தப்பெண் தாயார்வீட்டுக்குப் போனதில்லை,
தாய்வீட்டாரும் இவ்விடம் வந்ததில்லை, அந்தஇலட்சு
மக்காள் சிறுவயதிலேயே வந்துவிட்டாளென்று கூறி
னன். சிற்பாசாஸ்திரி சொல்லியவற்றைத் தெரிந்துக்
கொண்டு இரண்டு மூன்றுநாளங்கிருந்து எங்கையோ
போகிறவன்போலே உத்தரவு பெற்றுக்கொண்டு வீமா
புரிவந்துசேர்ந்து சவுளிக்கடைக்குச்சென்று சிற்றாடை
செல்வப்பிள்ளை தோவத்தி சிறுபிள்ளைகளுக்கு சிறு
திண்டி மஞ்சள் பழம் பாக்கு வெற்றிலை புடவை தோவ
த்தி அங்கவஸ்திரம் பாகை இவைகளை வாங்கிஒரு கூலி
யாள் தலையில் எடுப்பித்துக்கொண்டு வீட்டை விசாரித்து
அந்தவீட்டுக்கு அடுத்தவீட்டுக்குச் சென்றான். அவ்வீ
ட்டிலுள்ளவர்கள் ஆரடாவென்றுகேட்டார்கள், மந்தி
ரிசொல்லுகிறான் நான் தெற்கே தொலைதூரத்திலிருந்து
வருகிறேன்; இந்நகரத்து இராசனிடத்தில் என்மைத்
துனன் பெரியபோயியாக விருக்கிறார். அவரைத் தேடி
வந்தேன், என் சகோதரியின்பெயர் இலட்சுமக்காள்
சிறுபோதிலேயே, கலியாணஞ்செய்துக் கொடுத்துவிட்
டோம் மறுபடியும் நான்வருவதில்லை, அவர்களும்வர
வில்லை நான்பார்க்கவேண்டுமென்றுவந்தேன் இந்தவீடு
தானென்று சொன்னார்கள். அதுவறிந்து இவ்விடம்
வந்தேனென்றான். அதுகேட்டு அடுத்த வீட்டுக்காரர்
இலட்சுமக்காளுக்குத் தெரிவித்தார்கள். அந்தம்மாள்
அவனைப்பார்த்தவுடன் மந்திரி விம்மி விம்மி அழுகிற
வன்போலபிநயித்து அம்மணியென்றுகட்டிக்கொண்டு
உன்னை ஐந்துவயதில் விவாகஞ்செய்து கொடுத்துவிட்
டோம் இதுபரியந்தரம் நாங்களும் வரவில்லை நீயும்வர
வில்லை நானாகிலும் வரலாமென்றால் தாய்தந்தையர்கள்
இறந்துவிட்டார்கள், அதனால் வீட்டலுவல்பார்க்கஎன்
னைவிட வேறொருவருமில்லை தாய்தந்தையர்கள் இறந்த
சங்கதி தெரிவிக்கலாமென்றால் ஆள்கள் இசையவில்லை

இனி நாமாவது பார்த்துவருவோமென்று வந்தேனென்று சற்றுநேரம் வினவிப் பின்பு வீட்டுக்குப்போய் கொண்டுவந்தவஸ்திரத்தையும் புடவையையும்மற்றுமுள்ள பண்டு பலாதிகளையும் குழந்தைகளுக்குக் கொடுத்துயோகக்ஷேமங்களை விசாரித்திருந்தான். இதற்குள் அரண்மனையிலிருந்து பெரியபோயியாகிய முத்தியால் நாய்க்கனும் வந்துவிட்டான். அவனைக்கண்டு வினவி யோகக்ஷேமங்களை விசாரித்துக் கொண்டுவந்த பாகை தோவத்தி அங்கவஸ்திரத்தைக்கொடுத்து கண்டுகொண்டான். முத்தியால் நாய்க்கனும் பாகை தோவத்தியை அங்கீகரித்து மகிழ்ந்து மைத்துனர் ஏறிவந்த குதிரையைநன்றாகப்போஷித்து மைத்துனனுக்கும் விருந்து செய்து வைத்திருந்தான்.

அப்பால் இருபதுநாள்வரைக்கும் மந்திரி அந்தப் பெரியபோயிவீட்டில்தானே யிருந்து ஒருநாள் இராத்திரி முத்தியாலுநாய்க்கன் படுத்திருக்கிற தன் மனைவியைப்பார்த்து அடிமாதே! உன் சகோதரன்வந்துஇருபது நாளாயிற்று; நான் கையில்வைத்திருந்த இருபது வராகனும் சிலவழிந்துபோயிற்று நாளையதினம் சிலவுக்கில்லையே என்றுசொல்லி வருத்தப்பட்டிருக்கிறதை தலைக்கடைத்திண்ணையில் படுத்திருக்கிற மந்திரி கேட்டு, பொழுதுவிடிந்தபின் தன் சகோதரியாகிய லட்சுமக்காளிடத்திற்கு வந்து அம்மா நான் ஊருக்குப்போகவேண்டும் எனக்குக் கொஞ்சம் பழையது போடென்று கேட்டான். இலட்சுமக்காள் அப்பா! வந்தகால் ஆரவில்லையே இன்னும் இரண்டு மூன்றுதினம் தங்கியிருந்துபோகலாமென்று உபசாரவார்த்தைகள் சொன்னாள். மந்திரி நான்வந்துநெடுநாளாயிற்று போகவேண்டும் பழையது வைத்தால் உண்டு பிரயாணமாகலாமென்று நினைத்திருக்கிறேனென்றான். இலட்சுமக்காள் பழையது வைத்தாள்; மந்திரிபழையதை சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அத்தருணத்தில் முத்தியால்நாய்க்கன் வந்து மைத்துனன் பழையது உண்ணுகிறதைக் கண்டு என்மைத்துனா! சூரியோதயத்திற்கே பழையது உண்ணுகிறதென்றான். மந்திரி சொல்லுகிறான் ஐயா! நான்வந்து நெடுநாளாயிற்று ஊருக்குப் போகலாமென்று உதயத்



துக்கெழுந்து பழையது உண்ணுகிறேனென்றான். நல்லது மைத்துனா இன்னும் இரண்டு மூன்றுநாளிருந்து போகலாமென்றுசொல்லி பிரயாணத்தைத் தடுத்தான். அன்றையதினம்போக மறுநாள் முத்தியால்நாய்க்கனும் மந்திரியும் உண்டானபின் தனித்து ஓரிடத்தி லிருக்கிறபோது மந்திரி சொல்லுகிறான். ஓ! அத்தான்! நமது அரசனுக்கு புத்திரர்க ளிருக்கிறார்களாவென்று வினவினான். முத்தியால் நாய்க்கன் சொல்லுகிறான்: அப்பா மைத்துனா! இந்த அரசனுக்குப் புத்திரர்களில்லை இரண்டு குமாரத்திக ளிருக்கிறார்கள், இன்னும் அவர்களுக்கு விவாகமில்லையென்றான். அதைக்கேட்ட மந்திரி சொல்லுகிறான். அப்பெண்களை நான் பார்க்கலாகுமா என்றான். முத்தியால்நாய்க்கன் சொல்லுகிறான். அந்தரண்மனையி லிருக்கிற எனக்கே அந்தக்கன்னிகைகளைக் காண்பது அரிதாக விருக்கின்றதே உனக்கு அவர்கள் தரிசனமாவார்களா என்றான். மந்திரி சொல்லுகிறான் ஓ மைத்துனா! அந்தக் கன்னிகைகளுக்கு விவாகமாயிற்றா என்றான். முத்தியால்நாய்க்கன் கேட்டுச்சொல்லுகிறான். அப்பா மைத்துனா! அந்தக் கன்னிகளை யார்வந்துகேட்கிறார்களோ அவர்களை ராசன் கொன்றுவிடுகிறான். அதனால் யாவரும் அந்தக் கன்னிகைகளை வந்துகேட்கவில்லை என்றான். மந்திரி சற்றாலோசித்துச் சொல்லுகிறான். ஓ அத்தான்! நாளையத்தினம் எனக்கு எண்ணையிட அரசனரண்மனையில் இராசகன்னிகைக ளிருக்கிற கட்டுக்கடுத்தவிடத்தில் என்னை உட்காரவைத்து எண்ணையிடுகிறநாய் முப்பத்திரண்டு தாளமும் உன்கையிலே போடவேண்டும், அப்படிப்போட்டு எண்ணையிடுவாயாகில் அப்பெண்கள் உன்னை யழைத்துக் கேட்பார்கள் நீ அப்போது ஊரிலிருந்து என்மைத்துனன் வந்தான். அரசனிடத்தில் அதிகவேலையா யிருந்தபடியால் இங்கே எண்ணையையிட்டு அனுப்பிவைக்கிறேனென்றுசொல்லு அப்போது நான் பார்க்காததுபோல் பார்த்துக்கொள்ளுகிறேனென்று சொல்லி, மறுநாளையதினம் அவ்வாறு எண்ணையையெடுத்துக்கொண்டு இராசன் அரண்மனைக்குப்போய் பெரிய போயியாகிய முத்தியால் நாய்க்கனிடத்தில் இராசகன்னிகைகள் இருக்கிற விடத்து சமீ

பத்தில் மந்திரி எண்ணையிட்டுக் கொண்டிருந்தான். முத்
தியால்நாய்க்கன் முப்பத்திரண்டு தாளமுந்தீர்த்து எண்
ணையிட்டான். எண்ணையிடுகிற தாளசப்தத்தைக் கேட்ட
இராசகன்னிகைக ளிருவரும் கண்ணாடி சன்னலைத்
திறந்து ஓகோ பெத்தபோயி! நீ யாருக்கு எண்ணையிடு
கிறாயென்றார்கள். அம்மணி என் மைத்துனன் ஊரி
லிருந்து வந்தான் எண்ணையிடச் சொன்னான் அரண்ம
னையிலே வேலையதிகமாயிருக்கின்றமையால்இங்குதானே
எண்ணையிட்டனுப்புகிறே னென்றான். இதற்குள் மந்
திரி அந்த எண்ணைக்கிண்ணத்திற்றோன்றும் இராசகன்
னிகைகளின் சாயலை யுணர்ந்து சாடையாகக் கண்டுகொ
ண்டிருந்தான். பின்பு இராசகன்னிகைகள் முன்போலச்
சன்னலை மூடிக்கொண்டார்கள். மந்திரியும் வீடுவந்து
சேர்ந்து நலங்கிட்டுக்கொண்டு ஸ்நானஞ்செய்துஓரிடத்
தில் வந்திருந்து அந்த இராசகன்னிகைகள் அதிக
சௌந்தரியத்தை பெற்றிருக்கிறார்கள். ஆதலால்
நமது அரசனும் மோகித்திருக்கிறார் இவர்களை எந்த
விதத்திலாவதுகொண்டுபோவோமென்றால்இவ்வரசன்
யாராவது வந்து பெண்கேட்டால் கொலைசெய்கிறானாய்!
இதற்கு நாம்தானென்ன செய்யலாம் தெய்வானுகூல
மிருந்தால்தான் இக்கன்னிகைகளைக் கொண்டுபோக
லாம் இல்லாவிடில் இறந்துவிடுவதே உத்தமமென்று
தீர்மானித்துக்கொண்டு இரண்டு மூன்றுநாள் அங்கி
ருந்து முத்தியால் நாய்க்கன் இலட்சுமக்கா ளிடத்து
விடைபெற்றுக் குதிரையின்மேலேறி அந்நகரத்தைக்
கடந்து மேற்றிசையாகச் சென்று காடு மலை வனம்
வனாந்திரம் முதலியவற்றைக்கடந்து மேற்றிசைக்கடலை
நெருங்கி குதிரையைப் பார்த்துச் சொல்லுகிறான். ஓ
அசுவமே! இதுவரைக்கும் என்னுடன் இருந்தாய்
நமது இராசனுக்குவந்த இடையூறு நம்மால் நீங்க
வில்லை, இனி நாம் இருப்பதிற் பயனில்லை நானிக்கட
லிலே விழுந்து இறக்கப்போகிறேன் நீ எங்கேயாவது
சென்று பிழையென்று சொல்லிக் கடலி லிறங்கினன்.
குதிரை நாமும் இறப்பதே நலமென்றுகருதி அக்காலை
யில் மந்திரியாகிய தன் எஜமானனுடனிறங்கிற்று;மந்திரி
எவ்வளவுதூரம்சென்றும் கழுத்தளவு இருக்குதேயன்றி



தலையைமுழுத்தும் சலமில்லை. குதிரைக்கும் அவ்வாறா
கவே யிருந்தது, மந்திரிபார்த்து ஓகோ நாம் கடலில்
விழுந்து உயிர்விடுவோமென்றாலும் இக்கடல் நம்மைக்
கொல்லாமல் எவ்வளவுதூரஞ் சென்றபோதிலும் கழுத்
தளவு சரியாக யிருக்கிறது. ஐயோதெய்வமே! கடலுக்கு
நான் ஒருகுற்றமுஞ் செய்யவில்லை என்னைஏன் கொல்ல
வில்லையென்றுமுறையிட்டு, அரகரா! சம்போ! சங்கரா!
கவுரீசா! திரிபுரதகனா! செகத் ரட்சகா! அன்பானு
கூலா! அடியேனை ஏன் சஞ்சலத்துக்குள்ளாக்கினைஎன்
றோலமிட்டுக் கடலிற்சென்றான். அத்தருணத்தில் பார்
வதியும் பரமேஸ்வரனும் நகர்சோதனைக்கு வெளிப்பட்
டுக்கடல்மத்தியிற் சென்றார்கள்.

இந்த ஓசையும் அம்மன்காதில் பட்டமாத்திரத்தில்
சுவாமியை எச்சரித்து யாரோ ஒரு சிவபக்தன் கடலில்
விழுந்து முறையிடுகிறான். அவன் குறையைத் தீர்க்கா
மல் செல்வோமாகில் நமக்குத் தோஷமுண்டாகும்
என்று சொல்ல, சுவாமி அம்மன் கருத்துக் கிசைந்து
மந்திரி குமாரன் முன்னம் வந்து தோன்றினர். மந்திரி
குமாரன் நல்ல அறிவாளியாதலால் இக்கடலில் வந்து
தோன்றினவர் பரமேஸ்வரன் பார்வதியென்று தட்ச
ணம் உணர்ந்து வலம்வந்து நமஸ்காரஞ் செய்து சிவ
சிவ! சம்போ சங்கரா! கங்கையைத்தரித்தவா வென்று
பலவாறு புகழ்ந்து நின்றான். சுவாமி கிருபைகூர்ந்து
சொல்லுகிறார்: அப்பா மந்திரி! நீயேன் கடலில் விழு
ந்து இறக்கவந்தாய் உன் கருத்தை வெளியிடென்று
கூற மந்திரி சொல்லுகிறான். ஓ! சுவாமி! எனதரசன்
ஓர் படத்திலிருந்த கன்னிகைகளைக் கண்டு மோகித்தி
ருக்கிறான். அதனால் அக்கன்னிகைகளைக்கண்டு பிடித்
துக்கொண்டுபோவோமென்று நாடுதேச தேசாந்திரங்க
ளெல்லாம் சுற்றி அலைந்து கடைசியில் அக்கன்னிகைக
ளைக் கண்டேன். அந்தக் கன்னிகைகளைப் பெற்ற அர
சன் கலியாணஞ் செய்துகொள்ளுகிறோமென்று யாவர்
வந்து கேட்கிறார்களோ அவர்களைக் கொன்றுவிடுகி
றான். ஆகையினால்நானிருப்பதினால் பயனென்ன இறப்
பதே நலமென்று கருதி கடலில் இறங்கினேன் "சாகத்
துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்காலளவு" என்பது

போல கழுத்தளவு சலமா யிருந்ததேயன்றி என்னை முழுத்தவில்லை, அதனால் தங்களை நினைத்தேனென்று கூறினான். சுவாமி மகிழ்ந்து நல்லது நீ கரையேறி முன்போல் அந்த நகரத்துக்குட்சென்று அங்கொரு விடுதி வாங்கிக்கொண்டு சிலநாள் சென்றபின்பு ஒரு மணியோசை உனக்குமாத்திரங் கேட்கும் அந்த ஓசையைக் கேட்டமாத்திரத்தில் இராச பூஷணங்களுடனே அலங்காரமாக சிங்காரித்துக்கொண்டு வீதியில் உலாத்திக்கொண்டிரு, அவ்வரசனது அரண்மனையி லிருந்து மந்திரிமார் உன்னை அழைக்க வருவார்கள். அப்போது நான் தேசாந்திரி இன்றையதினம் இங்கு தங்கிப்போகலாமென்று வந்தேன் என்னை ஏன் அழைக்கிறீர்களென்று காலதாமதஞ் செய்துக்கொண்டிரு, அதற்குள் அந்த அரசன் வந்து அழைத்துக்கொண்டுபோய் கலியாணஞ்செய்விப்பான்; நீ பிராமணஸ்திரீகளால் மாங்கல்ய தாரணஞ்செய்து இளைய பெண்ணை நீயும் மூத்த பெண்ணை அவ்விராஜனும் கலியாணம் செய்துக்கொள்ளுங்களென்று கூறி மறைந்துவிட்டார். மந்திரிகுதிரையோடு கரையேறிகுதிரையின்மலேறி முன்போலவீமோபுரம்வந்து அங்கொரு விடுதிவாங்கிக்கொண்டு சிலகாலமிருந்தான், அங்கே பார்வதிசமேதராகப் பரமேஸ்வரர் எழுந்தருளி நகர்சோதனை வந்து வீமாபுரமேவி அங்கிருக்கும் குளத்தினருகி லிருக்கிற அத்திமரத்தடியில்பார்வதியையும் ரிஷபத்தையும் பிறர்கண்ணுக்குத் தோன்றா வண்ணம் இருக்கும்படி கட்டளையிட்டுத் தான் நகரத்துட்சென்று காவி காஷாயம் தண்டு கமண்டலதாரியாய் புலித்தோல் மான்தோல் சூலம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு அதிகவாலிபதிசையை யடைந்தவர்போல சிவவேட சந்நியாசி அரசன் அரண்மனைக்குட் சென்றார். அரசன் கண்டு அகஸ்மாத்தாக உள்ளம்பூரித்து எதிர்வந்தழைத்துப் பொன்மயமான பீடத்தி லிருத்திச் சோடசோபசாரஞ்செய்து சுவாமி! அடியேன் கடைத்தேற யாதுகாரணத்தைப்பற்றி வந்ததென்று வினவ, சுவாமி மகிழ்ந்து அப்பா! இராஜசேகரா! இன்றையத்தினம் புசிப்புக்கு உன்னிடத்தில் வந்தேனென்று கூறி சுவாமியும் பூசைக்கெழுந்தருளினார். சுவாமி வருகிறதற்



குள் பலவகைபதார்த்தத்தோடு போசனஞ்செய்துவைத்தான், சுவாமியும்வந்துவிட்டார். அரசனழைத்துவந்து பொற்பீடத்திருத்தி பதார்த்தத்தையும், திருந்திய அன்னத்தையும் வட்டித்து பூசைசெய்து அமுதுகொள்ளுங்களென்று வேண்டினன். சுவாமியாகிய தபசி அரசனைப் பார்த்து ஓ மகாராஜனே! உனக்குப் புத்திர ருண்டாயிருந்தால் அழைப்பியென்றுகூற, இராஜன் சொல்லுகிறான் ஓ சுவாமி! அடியேனுக்குப் புத்திரரில்லை இரண்டு குமாரத்திக ளிருக்கிறார்களென்று வணங்கினன். தபசி சொல்லுகிறார். அரசனே! அவ் விரண்டு குமாரத்தியையும் அழைப்பியென்று கூறினன. இரண்டு குமாரத்திகளை அழைத்துவந்தான். அவ்வரசன் குமாரத்திகளும் தபசியை வணங்கி நின்றார்கள். தபசி அவர்களுக்கு ஆசீர்வாதஞ்செய்து திருநீறளித்தார். இருகன்னிகைகளுக்குக் கொடுத்த திருநீற்றை நெற்றியிலும் மார்பிலும் அணிந்துக்கொண்டு உள்ளுக்குங்கொண்டார்கள். தபசி அரசனை நோக்கிச் சொல்லுகிறார். ஓ மகாராஜனே! இவ்விரண்டுமாதருக்கும் விவாகமாயிற்றோவென்றார். அரசன்வணங்கி ஓ சுவாமி! இன்னுமிந்த இரண்டு கன்னிகைகளுக்கும் விவாகமில்லையென்று கூறினான். இந்த வாக்கியத்தைக் கேட்ட தபசி கடுஞ்சினமடைந்து அடா பாவி! இன்னுமிந்த மாதருக்குக் கலியாணஞ்செய்யவில்லையா? ஐயையோ! இந்தப் பாவி வீட்டுக்கு ஏன் வந்தேனென்று கைகால்களை யுதறிக்கொண்டு தட்சணம் அந்தர்த்தானமாய் மறைந்துவிட்டார். அரசன்கண்டு ஓகோ வந்தவர் சாம்பவமூர்த்தி நாமிந்தக்கன்னிகைகளை விவாகஞ் செய்விக்காமலும் கலியாணத்துக்கு வந்தவர்களை நொலைசெய்தோம். ஆதலால் வந்த சாம்பவமூர்த்தி போசனஞ்செய்யாமல் மறைந்துவிட்டார். இனியொரு முகூர்த்தத்தில் இவ்விரண்டு குமாரத்திகளை யாருக்காவது மணம் புரிவிக்கிறேனென்று உறுதி செய்துக்கொண்டு உடனே மந்திரிகளையழைத்து, ஓமந்திரிமார்களே? நமது நகரத்தில் யாராவது இராசகுமாரர்கள் வந்திருக்கிறார்களா? பார்த்திருந்தால் சீக்கிரந்தெரிவித்து பலாத்காரமாகவானாலு மழைத்து வாருங்களென்று விடைகொடுத்துப் புரோகிதர்களை யழைத்து முகூர்த்தம்வைத்

துக்கொண்டான். மந்திரிகள் இராஜவீதிகளினிடத்தும் கடைவீதிகளினிடத்தும் வருகிறார்கள். அத்தருணத்தில் தபசிவேடந் தரித்து மறைந்த சாம்பவமூர்த்தி குளக்கரை அத்திமரத்தடியிலிருக்கும் பார்வதியாரோடு தான் போய்வந்த சங்கதி தெரிவித்தவுடனே ஜெயகண்டிகையெடுத்து மந்திரிகுமாரனுக்கு மாத்திரங் கேட்க வடித்தார். அந்தச் சத்தத்தைக் கேட்ட மந்திரி ஆனந்தக்கூத்தாடிக்கொண்டு எழுந்து பரமசிவத்தை தியானித்துக்கொண்டு மகர குண்டல ஆர கேயூர மணிமகுட கடக கங்கணம் முதலியவற்றையணிந்து பரிமளமிகுந்த நறுமலர் மாலைகளைப் புனைந்து ஆயுதபாணியாக வீதியில்வந்து உலாத்திக்கொண்டிருந்தான். அரசனாலனுப்பப்பட்ட மந்திரிகள் இந்த மந்திரியைக் கண்டு மரியாதைசெய்து ஓ இராசகுமாரகா! உன்னை அரசனழைக்கிறான் வருவையாகில் உனக்குச் சகல சுகமுமுண்டாக்குவார் என்றனர். அதற்கு மந்திரிகுமாரன் ஓ மந்திரிமார்களே! நான் தேசசஞ்சாரம் செய்ய வந்தேன், இன்றையத்தினம் இவ்வூரிலிருந்து நாளையதினம் வேறுவூருக்குப்போகலாமென்றிருக்கிறேன். எனக்கிந்த இராசனிடத்தில் வேலையென்ன அவனால் என்ன சுகம் போமென்று கூறினான். மந்திரிகள்பார்த்து ஓ ஐயா! வலியவருகிற சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுகிறீர் இந்த இராசனுக்கு இரண்டு புத்திரிகளிருக்கிறார்கள் அவர்களை அனேகம்பேர் வந்து கேட்டார்கள் அக்காலத்தில் கொடுக்காமல் வலிய யாருக்காவது விவாகஞ்செய்விக்கிறேனென்று நிச்சயித்துக்கொண்டு எங்களையனுப்பினார். நீரும் எங்கள் கண்ணுக்குப் புலப்பட்டீர் வாரும் போவோம் மறுக்காதீரென்று இனிய வசனஞ்சொல்ல, மந்திரிகேட்டு ஓ மந்திரிமார்களே! நான் வருகிறதில்லை போங்களென்று கூறுமுன் மந்திரிகள்கண்டு ஓகோ இந்த ராசகுமாரன் முன்நடந்த வழக்கத்தைக் கேட்டு அச்சப்படுகிறான் நாமென்ன உறுதி கூறினும் நம்பான், இனி அரசன்வந்தால் உத்தமமாயிருக்குமென்றெண்ணித் தங்களிலொருவனை அரசனிடத்து அனுப்பினார். அனுப்பிய மந்திரி அரசனைக் கண்டு வணங்கி ஓ சுவாமி! தாங்கள் முன்நடத்திய வழக்கத்தினைக் கேட்



டிருந்த ஒரு இராஜகுமாரன் வரமாட்டேனென்று சொல்லுகிறான்; தாங்களே இரதகஜதுரகபதாதிசூழ நடந்து வந்து இராசகுமாரனைக்கண்டு மரியாதைசெய்து நீர் அச்சமில்லாமல்வந்து என்னிரண்டு குமாரத்திகளையும் விவாகம்புரியுமென்று வேண்டினால் வருவான். ஆகையால் தாங்கள் தயவுசெய்து வரவேண்டுமென்று பணிய, இராஜனும் அதற்குச் சம்மதித்து நேரில்போய் மந்திரிகுமாரனைக்கண்டு வேண்டிய உபசார வார்த்தைகள்கூறி தன் மாளிகைக்குவந்து தன் இரண்டு குமாரத்தியையும் விவாகம் செய்துக்கொண்டு போகவேண்டுமென்று வேண்ட மந்திரி குமாரன் சொல்லுகிறான். ஓ மகாராசனே! முன்னம் யாராவது உன் குமாரத்திகளைக் கேட்டார்களோ? அவர்களையெல்லாம் கொலைசெய்துவிட்டு இப்போது என்னை நீர் வலியவந்து அழைக்கிறீர் எனக்குஞ் சிறிது அச்சமாக இருக்கின்றது. உனக்கொரு கெடுதிசெய்கிறதில்லையென்று ஒரு உறுதியும், எங்கள் தேசத்துவழக்கத்தின்படி மணத்தை நிறைவேற்றிக்கொள்ள ஒருவாக்குதத்தம் செய்தால் நானுமுமதுகருத்துக்கிசைகிறேனென்றுகூற, அரசன் அக்கருத்துக்கிசைந்துஉறுதியான வாக்குத்தத்தஞ் செய்தான். பின்பு மந்திரி குமாரன் வந்த அரசனோடு தானுஞ் சேர்ந்து அரண்மனைச் சென்றான். அரசன் கலியாணமண்டபத்தை அரைக்ஷணத்தில் அலங்காரஞ்செய்து புரோகிதரையழைத்து ஓ சுவாமி! இதோ மாப்பிள்ளையிருக்கிறார் அவருக்கு நமது குமாரத்திகளை மணம்புரிவியும் இந்த ராசகுமாரன் தங்கள் தேசாசாரப்படி மணம்புரியவேண்டுமாம். அந்தசாங்கியப்படி நடப்பியுமென்றுகூறினன். புரோகிதன் மந்திரியை யழைத்துக்கொண்டுபோய் நல்ல சுபமுகூர்த்தத்தில் மணவறையிலிருத்தி மூன்றும் நிலங்கு முதலிய சாங்கியத்தை நிறைவேற்றி இராசகன்னிகைகளையும் அழைப்பித்து அவ்விருவருக்கும் நலங்கிடச்செய்து ஸ்நானஞ் செய்வித்து அலங்காரமாக வரச்சொல்லி, பெண்களையும் பிள்ளையையும் ஸ்நானஞ்செய்வித்து அலங்கரித்துக்கொண்டு வந்தபின்பு ஓமமுதலியவற்றை நடத்தி மாங்கல்யத்தைக் கையிலேந்தி பெரியோர்களுடைய ஆசீர்வாதத்தைப்பெற்றுக்கொண்டு மந்

திரியிடத்திற் கொடுத்து தரிக்கச் சொன்னார். மந்திரி சொல்லுகிறான் மாங்கல்யதாரணம் எங்கள் தேசத்தில் பிராமண சுமங்கிலிகளால் தரித்துக் கொள்ளுகிறது, ஆகையால் பிராமண சுமங்கிலிகளைக்கொண்டு புரோகிதர் அவ்வாறு மாங்கல்யத்தை இரண்டு இராசகன்னிகளுக்குந் தரிப்பித்து அரசாணிக்கால் முதலியவற்றைச் சுற்றிவைத்து ஐந்துநாள் முகூர்த்தம் மகிழ்வுண்டாக நல்லமரியாதை செய்து தானதர்மங்களைச் செய்தான். பெண்களும் பிள்ளையும் அந்தப்புரத்துட் சென்று அறுசுவையோடு கூடிய உணவைப் புசித்து சூரியன் அஸ்தமானபின்பு மந்திரி பள்ளியறைசேர்ந்து நித்திரை செய்பவன்போ லிருந்தான்.

அப்படியிருக்க இராசகன்னிகைகளில் மூத்தவள் அன்றையதினம் ஸ்நானஞ்செய்து பரிமளகந்தங்களைப் பூசி ஆடையாபரணாலங்கிர்தளாகி பரிமளமிருந்த நருமலர் மல்லிகைசூடி பலகாரம் பழவர்க்கம் வெற்றிலை பாக்கு தாம்பூலம் திரவியம் முதலியவற்றை தட்டில் ஏந்திக்கொண்டு மகரயாழை எடுத்துக்கொண்டு பள்ளியறை சேர்ந்து படுத்திருக்கிற தன்கணவன் குறிப்பைக்கண்டு நித்திரை செய்கிறானென்று கருதிசைகைசெய்து மஞ்சத்தையாட்டி யாழைமீட்டிப் பாடியும் எழுந்திருக்காததைக் கண்டு மனதில்வருத்தமுற்று கையாற்றட்டுவோம் எழுந்திருக்காவிடில் வாளுக் கிரையாக்குவோமென்று கருதி மூன்றுவிரல்களினால் ஒருதரந்தட்டினள். மந்திரி நித்திரையிலிருந்து விழித்தவர்போல் விழித்தான். இராசகன்னிகை கண்டு ஏது சுவாமி! அதிக நித்திரை என்றாள். வனத்தில் அதிக வேலை யிருந்ததினால் அதிக நித்திரையா யிருந்தேனென்று கூறினன். இராச கன்னிகை களித்து ஓ சுவாமி! இதோ நான் கொண்டுவந்த பண்டு பலாதிசளையும் பலகார வர்க்கங்களையும் அங்கீகரித்து அடியாளை ஆலிங்கனஞ் செய்யுமென்று கூறினள். மந்திரி பண்டுபலாதியும் பலகாரங்களையும் தன் கருத்திற்கிசைந்தமட்டும் புசித்து நீரருந்தி தாம்பூலமிட்டுக்கொண்டான். இராசகன்னிகை யாழையெடுத்துமீட்டி நல்ல கீர்த்தனைகளைப்பாடி புணர்ச்சியில் கருத்தைவைத்துமந்திரியிருக்கும் மஞ்சத்தில்வந்து ஆலிங்கனஞ்செய்ய எத்



தனித்தாள். அக்கருத்தை மந்திரியறிந்து ஓகோ நாம் இராசகன்னிகையை நமதரசனுக்கு நியமித்திருக்கின்றோம் கடவுளும் கட்டளையிட்டிருக்கின்றார். மாங்கலியத்தை பிராமண சுமங்கலிகளாற் புனைந்தோமென்று நினைத்து இந்தவேளை கதாபிரசங்கத்தால் அவள் காதலை தணிப்பதே தகுதியென்று உறுதி செய்துக்கொண்டு சொல்லிகிறான், ஓ மாதுசிரோன்மணி! நானொருகதை சொல்லுகிறேன் அது மனதுக்கு மிகவும் மகிழ்வைக் கொடுக்கும் பின்பு இருவரும் கலந்தணைவோமென்று கூற, இராசகன்னிகை அக்கருத்துக்கிசைந்து முன்னமிருந்த விடத்திலேதானே யிருந்தாள். மந்திரி குமாரனாகிய புத்திசாதுரியமந்திரி மஞ்சத்தில் எழுந்து வீற்றிருந்து சொல்லுகின்றான்.

---

முதலாவதுநாள் கதை

## கூடுவிட்டுக் கூடு பாய்கிறது

கேளும் மாதுசிரோன்மணி! தருமாபுரமென்றொரு நகரமுண்டு. அந்நகரத்துக்கு தருமனந்தனென்றொரு அரசனுண்டு, அவ்வரசன் மந்திரிபிரதானிதண்டத்தலைவர் யூகத்தலைவர் அணித்தலைவர்படைத்தலைவர்சேனைத்தலைவர்களோடு மனுநீதி வழுவாமல் செங்கோல்நடாத்தி தன்னுயிர்போல்மன்னுயிரையும் பாதுகாத்துஐந்துவருஷகாலமாக அரசுசெய்து வந்தான். ஆனால் அவ்வரசனுக்குப் புத்திரனில்லை தனக்குப் புத்திரனில்லாத குறையை மனதில் வைத்து தேவாலயம் பிரமாலயம் முதலியதற்கு அதிகமாகச் சிறப்புத்திருவிழாவுஞ்செய்து அன்னதானம் முதலிய சோடச தானமுஞ்செய்து காலை சந்தி மத்தியான மந்திரம் முப்பொழுதும் தெய்வத்தைப் பிரார்த்தித்து வந்தான். தேவானுகூலத்தினால் அரசனுக்கு ஒருபுத்திரன் பிறந்தான். அரசன் மகிழ்ந்து சர்க்கரை வழங்கி அனேக தானதருமங்களைச்செய்து அப்புத்திரனைச் சீராட்டி பாராட்டி வளர்த்து வந்தான். மூன்றுவருஷஞ் சென்றபின்பு மறுபடியும் அவ்வரசனுக்கு ஒரு புத்திரனுண்டாயிற்று. அரசன் அதிக மகிழ்வையடைந்து தானதருமங்களைச்செய்து இரண்டுபுத்தி

ரர்களையும் பாதுகாத்து வளர்த்துவந்தான். இப்படி
யிருக்கிற காலத்தில் ஒருநாள் அவனுட னெதிர்த்துப்
போர்செய்யாத ஒரு அரசன் காலவித்தியாசத்தினால்
போர்க்கோலங்கொண்டு அவ்வரசனோடெதிர்த்துபோர்
செய்து வெற்றியடைந்து நாடு நகர முதலியவற்றைக்
கைப்பற்றி அரசனையும் அரசன் மனைவியையும்இரண்டு
புத்திரரையும் நகர்ப்புறத்திற் றுரத்திவிட்டான். அரசன்
மனவருத்தமுற்று ஆதெய்வமே! தெய்வமே! என்னி
டத்தி லிருக்கும் சுத்தவீரரில் ஒருவர்க் கிணையில்லாத
சொற்ப வல்லபமுடைய அரசனால் நான் அவமான
மடைந்தது காலவித்தியாசமோ! அல்லது உமது கிரு
பையோவென்று முறையமிட்டு மற்றொரு பட்டணத்
தில் சேர்ந்து மாதகவாள மெடுத்து சீவனஞ் செய்துக்
கொண்டு புத்திரர்களைப் பாதுகாத்து வந்தான். புத்திரர்
களில் ஒருவனுக்கு ஏழுவயதும்மற்றொருவனுக்குஐந்து
வயதுமாயிற்று. அரசன் கண்டு ஓகோ நமது காலம்
வீணாயிற்றே புத்திரர்களாயினும்சுகப்படுவார்கள் என்று
பார்த்தால் அவர்களையுஞ் சிறுபோதில் திருத்தினால்தா
னே பயனடைவார்கள் முக்கியமாய் முன்னம் கல்வி
பயிற்சியாக்கவேண்டுமே அதற்கென்ன செய்கிறதென்று
கருதி அந்நகரத்தைவிட்டு மற்றொருநகரத்தில் புத்திரர்
மனைவியோடு சென்று உபாத்தியாய ரிருக்கிறார்களோ
வென்று சுற்றிப்பார்த்து வந்தான். அந்நகரத்தில் ஒரு
வேதியன் கல்விச்சாலை வைத்திருப்பதையறிந்து தன்
னிரண்டு புத்திரர்களையு மழைத்துக்கொண்டுபோய் புத்
திரர்களை அவன்காலில்போட்டு தானும்அவர்க்குநமஸ்
காரஞ்செய்து எழுந்து நின்று ஓ சுவாமி! இந்தப்புத்தி
ரர்கள் என்குமாரர்கள். இவர்களுக்கு வித்தியாப்பியா
சஞ் செய்வித்தால் இவர்களில் ஒருவனை தங்களுக்குத்
தட்சணையாகக்கொடுத்து விடுகிறேனென்றுகூற, வேதி
யன் அக்கருத்துக்கிசைந்து புத்திரர்களைவிட்டுப் போ
வென்று விடைகொடுத்துவிட்டான். அரசன் தானும்
தன்மனைவியுமாக அந்நகரத்தில் சிலநாளிருந்து பின்பு
மற்றொரு நகரத்துட் சென்று சீவனஞ்செய்துக்கொண்
டிருந்தார்கள். இங்கே வேதியன் மூத்தபிள்ளையை தன்
பசுமாடுமேய்க்க வைத்துக்கொண்டு இளையபிள்ளைக்கு



கல்வியைக் கற்பித்துவந்தான். இளையபிள்ளை நாலுவே
தம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியானம
மறுவிக்கியானம் முதலியவற்றைஐயந்திரிபறவுணர்ந்து
அவ்வேதியன் மாந்திரிகத்திலும் கூடுவிட்டுக் கூடுபாய்
கிற வித்தையிலும் இந்திரஜாலம் மயேந்திரஜால வித்
தைகளிலும் வல்லவனாதலால் இளையபிள்ளை அவ்வேதி
யனுக்கு மனமகிழ நடந்து அந்த வித்தைகளெல்லாம்
சீராகக்கற்றுக்கொண்டு மெய்ஞ்ஞான விளக்கமுண்டாகி
அடக்கத்தோடிருந்தான். இப்படி சிலநாளிருந்து ஒரு
நாள் நமது தாய் தந்தையர் அன்று வந்தாரே என்று
மறுபடியும் வாராதிருக்கிற தென்னவென்று ஓரிடத்தி
லிருந்து கியான திருஷ்டியினால்பார்த்தான். தாய்தந்தை
யர் ஒரு நகரத்தில் மாதகவாளமெடுத்து சீவனஞ்செய்
துக்கொண்டிருக்கிறதும், அவர்கள் படும் வருத்தத்தை
யும் கண்டு, ஓ நமது மாதாபிதாக்கள்வருத்தமடைகிறது
தகுதியல்ல, மேலும் நமது பிதா வேதியற்கு ஒருபிள்ளை
யைத் தத்தஞ்செய்திருக்கிறார் இவ்வேதியன் மூத்தவனை
மாடுமேய்க்கவைத்து நமக்கெல்லா வித்தையும் கற்பித்
திருக்கிறான்; இவ் வேதியன் கருத்தென்ன வென்று
கியான திருஷ்டியினால்பார்த்தான்வேதியன் கருத்தாவது:
அரசன் வந்தவுடன் மூத்தபிள்ளையைச் சிங்காரித்து சட்
டாம்பிள்ளைபோல் வைத்து அவனை அரசனுக்குக் கொ
டுக்க நினைத்திருக்கிறதைத் தெரிந்து, ஓகோ வேதியன்
நமது பிதாவை மோசஞ்செய்யக் கருதியிருக்கின்றான்;
நாமும் சாக்கிரதைப்படவேண்டுமென்று கருதி, மறு
நாள் சமயம்பார்த்து அன்றிரவில் கருடவுருவந்தரித்து
தன்தந்தை தாயாரிருக்கும் நகரிற்சென்று அவர்களைக்
கண்டு தன்னுருமாறி பழையவுருவந் தரித்து வணங்கி
ஓ! மாதாபிதாக்களே! அடியேன் தங்கள் இளையகுமா
ரன் வேதியரிடத்தில் வித்தியார்த்தியாக விட்டு வந்து
இதுபரியந்தம் எட்டிப் பாராதிருக்கிறீர்களே? நான்
வந்தேன் இனியாகிலும் களிகூர்ந்து என்னை யாதரியுங்
களென்று கூறினன். தாய்தந்தையர் நித்திரை விழித்
தெழுந்து மைந்தனை மார்புரத் தழுவி ஆசீர்வதித்துச்
சொல்லுகிறார்கள். அப்பா! புத்திரசிகாமணியே! இரா
வில் நடுச்சாமவேளையில் எவ்வாறு வந்தாய் நானிருக்கி

றது உனக்கெப்படி தெரியுமென்று வினவ, புத்திரன்
சொல்லுகிறான்: ஐயா நான் தங்களுடைய கட்டளைப்படி
வேதியனிடத்தில்வித்தியாப்பியாசஞ்செய்துவந்து அவ
னுக்கு மகிழ்வுண்டாக நடந்து அவ்வேதியன்கற்றஅரு
மையாகிய சகலவித்தைகளும் கூடுபாய்கிற வித்தையும்
ஞானக்கண்ணும் பெற்றுக்கொண்டேன் தாங்களென்ன
மாக விருக்கிறீர்களென்று ஞானதிருஷ்டியினால் பார்த்
தேன். இந்நகரத்தி லிருக்கிறதும் நீங்கள்வருத்தப்படுகி
றதும் தெரிந்து உபாத்தியாயர் கருத்தை ஆராய்ந்து
பார்த்தேன். அவர் தங்களை மோசஞ்செய்ய எண்ணங்
கொண்டு தமையனை தன் பசுமாடு மேய்க்க வைத்துக்
கொண்டு, எனக்குக் கல்வியெல்லாம் கற்பித்திருக்கிறார்.
தாங்கள் வந்தவுடன் மாடுமேய்க்கிற என் தமையனை
யழைத்து ஆடையாபரணங்களினால் சிங்காரித்து பள்
ளிக்கூடத்தில் சட்டாம்பிள்ளையாக வைத்து எனக்குப்
பாடம்வராத பிள்ளைக்கு இடும் தண்டனையாகிய அண்
ணாந்தாளை எனக்கிட்டு வருத்தப்படுத்திதங்களுக்குவிருந்
திட்டு உபசரித்து எங்களிருவரையும் தங்களிடத்தில்
விட்டு உமக்கிஷ்டமானபிள்ளையை யிட்டுக்கொண்டுபோ
வென்று சொல்ல எண்ணியிருக்கிறான் தாங்கள் என்னை
யழைத்துக்கொண்டு வரவேண்டியது. இனி காலதாம
தஞ் செய்யாமல் நீங்கள் வாங்களென்று கூறி முன்
போல் கருடரூபத்தைத் தரித்து உபாத்தியாயர் வீட்டுக்
குவந்து பழையவுருவத்தோடிருந்தான். அரசனும்பொ
ழுது விடிந்தபின்பு தானும் தன்மனைவியுமாகப் பிரயா
ணப்பட்டு உபாத்தியாயர் வீட்டுக்குவந்தார். வேதியன்
கண்டு ஒருபிள்ளையை யனுப்பி ரகசியமாகமாடுமேய்க்கும்
பிள்ளையையழைத்து வரச்சொல்லி அப்புத்திரன் வந்த
வுடன் அவனுக்கு ஸ்நானமுதலியவற்றைச் செய்வித்து
நல்ல ஆடையாபரணங்களைக் கொடுத்து அணிந்து
கொள்ளச்சொல்லி தன் பள்ளிக்கூடத்தில் சட்டாம்பிள்
ளையாக நியமித்து உட்காரவைத்து இளையபிள்ளை கை
யில் ஒரு புஸ்தகத்தைக்கொடுத்து கழுத்தில் அண்ணாந்
தாள்போட்டு அதட்டிக் கொண்டிருந்து அரசனைப்
பார்த்து நீர் நம்மிடத்தி லொப்பிவித்த இரண்டுபிள்ளை
களுக்கும் நான் சமமாகப் பாடஞ்சொல்லி வந்தேன்.



மூத்தவன் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயருக்கு உதவி
செய்யும் சட்டாம்பிள்ளையாக யிருக்கிறான் இளையவன்
மந்த புத்தி வகித்துத் தினமிப்படி வருத்தப்படுகிறா
னென்று சொல்லி, சற்றுநேரம் பேசியிருந்தபின்புபோச
னத்துக்கெழுந்து அரசனையும் அவர் மனைவியையும்
அழைத்துக்கொண்டு பிள்ளைகளையு மிட்டுக்கொண்டுவீட்
டிற்குரியவர்களை நீராடச்செய்து பூசைமுடித்துக்கொ
ண்ட பின்பு யாவருக்கும் விருந்திட்டு உபசரித்து போ
னஞ்செய்தபின்பு தாம்பூலம் சந்தனம் புஷ்பம்வைத்து
யாவரு மணிந்துகொண்ட பின்பு பிள்ளைகளிருவரையு
மழைப்பித்து எதிரில் நிறுத்தி ஓ ஐயா! உமதுபிள்ளைக
ளிதோ விருக்கின்றார்கள் உமக்கிஷ்டமான பிள்ளையை
அழைத்துப்போமென்று கூறினன். இராசன் இளைய
பிள்ளை சொன்னது மெய்தானென்று கருதி ஓ வேதி
யரே! மூத்தபிள்ளை எனக்கடங்கி உத்தரவு சொல்லான்;
இளையபிள்ளையை எனக்குக் கொடுவென்றுகூறி இளைய
பிள்ளையைக் கைப்பற்றிக் யிட்டுக்கொண்டுதானிருந்தநக
ரத்துக்கு வந்துவிட்டான். உபாத்தியாயர் பார்த்து ஆ!
ஆ! நாம் ஒன்று நினைக்க தெய்வம் தானொன்று நினைத்
தது நாய்செய்த தீவினையென்று தன்னைத்தான் நிந்தித்
துக்கொண்டு முன்போல் மூத்தபிள்ளையை மாடுமேய்க்க
வனுப்பிவிட்டான். இங்கே இளையபிள்ளை தன் பிதாவை
நோக்கி ஓ ஐயா? பொழுதஸ்தமாயிற்றே சுகமாயிருக்கி
றீர்களே எனக்குப் பசியாகயிருக்கிறதென்றான். அரசன்
சொல்லுகிறான் அப்பா புத்திரசிகாமணியே! உன்னை
யழைத்துவந்ததினால் நாமின்றையப்பொழுது விரதமா
யிருக்கவேண்டியதாயிற்று நாளையதினம் இரண்டுவீடு
சென்று உபாதானம் வாங்கிவந்து முன்னம் உன்பசி
யைத் தணிக்கிறேன் அதுபரியந்தம் மனம்பொறுத்திரு
வென்று கூற, புத்திரன் சொல்லுகிறான்; ஐயா! இத்
தனை நாள் உபாதானமெடுத்து ஒரு நாளைக்குமிகுதிவைத்
துக்கொள்ளாமல் சமுசாரஞ் செய்தீர்களா? நல்லது
இவ்வூரரசன் ஒருசாவல் வைத்துக்கொண்டிருக்கிறான்
அதற்குச் சரியானசாவல் கிடைக்குமாகில் அதற்குநூறு
வராகன் விலைகொடுக்கிறேனென்று சொல்லியிருக்கிறான்
நானொரு சாவலாகின்றேன் என்னை இன்றிராத்திரிக்கு

இங்குவைத்திருங்கள் சூரியவுதயத்தில் நான் கூவுகிறேன்; அந்த ஓசையைக்கேட்டு உம்மிடத்தில் சிலதூதர் வந்து சாவலை விலைகேட்பார்கள் இதன்விலை நூறுவராகனென்று சொல்லும், அவர்கள் நூறுவராகன் கொடுப்பார்கள் அதை வாங்கிக்கொண்டு இவ்விடத்தில் வந்து சமயல்செய்யுங்கள் சற்றுநேரத்திற்குள் தங்களிடத்திற்கு வந்துவிடுகிறேனென்று கூற, தந்தை அக்கருத்துக்கிசைந்தான் புத்திரன் சாவல்ரூபமாகினான் தந்தை அச்சாவலையெடுத்துக்கொண்டு அவனரண்மனைக் கருகில் வந்து அன்றிரவு பொழுதைப்போக்கினான். சூரிய னுதயமாகிய தருணத்தில் சாவல் கூவிற்று; சாவலோசையைக் கேட்டமாத்திரத்தில் ராசனிடத்தி லிருக்கிற தூதர்கள்வந்து சாவலைப்பார்த்து மகிழ்ந்து இதுவிற்கிறதா? இதன் விலை என்னவென்று வினவினர்? அரசன் அச்சாவல் விற்கிறதுதான் இதன்விலை நூறுவராகனென்று கூறினான், தூதர் அச்சாவலை எடுத்துக்கொண்டுபோய் அரசனுக்குக் காண்பிக்க அரசன் மகிழ்ந்து இச்சாவலுக்கு நூறுவராகன் கொடுங்களென்றுகூறி, இச்சாவலை பத்திரப்படுத்துங்களென்று கட்டளையிட்டான். தூதர் நூறுவராகனைச் சாவல்கொண்டுவந்தவனுக்குக்கொடுத்துவிட்டு சாவலை ஓரிடத்தில் கொண்டுவந்து அதன்பேரில் பெரிய இரும்புச்சாலை கவிழ்த்து மேல் ஒரு பெரும்பாரையை வைத்தார்கள். காவலாயிருந்த ராஜகுமாரன் சாலிலிருந்து வெளிப்படுவதற்குச் சக்தியில்லாமல் யவ்வுருவத்தை நீக்கி பெருச்சாளிஉருவமெடுத்துபூமியைக் கிண்டிச் சுரங்கஞ் செய்துக்கொண்டு மாடமாளிகைகூட கோபுரங்களைக் கடந்து வெளிப்பட்டு முன்போல் சுயரூபத்தை எடுத்துக்கொண்டு தாய்தந்தையரிடத்துவந்து சேர்ந்தான். பிதாமகிழ்ந்து சமையல்செய்த வுணவை புத்திரனுக்கிட்டு தானும் தன்மனைவியும் புசித்து அதுமுதல் கிஞ்சித்து சுகமடைந்தார்கள். இங்கே கோழி வாங்கின அரசன் தனக்கொழிவானவேளையில் அச்சாவலைக்கொண்டுவரும்படி தூதருக்குக் கட்டளையிட்டான். தான் சாவலைவைத்து கவிழ்த்தசாலை யெடுத்துப்பார்த்தான். சாவலில்லாமல் ஒருவளையிருக்கிறதைக்கண்டு கையைமுறித்துக்கொண்டு ஓடோடியும் வந்து அரசனிடத்



தில் வணங்கி சுவாமி! சாவலை இரும்புச்சாலை கவிழ்த்துவைத்தோம் அதனைக்காணோம்கவிழ்த்திருந்தவிடத்தில் ஒருவளை இருக்கிறதென்று கூறினர்.

அரசன் கேட்டு திடுக்கிட்டு ஆ! இதென்ன ஆச்சரியம் சாவலை பெருச்சாளிகொல்லுமா? ஒருவேளை கொன்றாலும் கொல்லும். அந்தவளையைச் சோதித்துப்பெருச்சாளியைக் கண்டு வாருங்களென்று கட்டளையிட்டார். சிலபேர்கூடி மண்வெட்டி கட்டப்பாறை முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சாவலிருந்த விடம் வந்து வளை சென்றவிடமெல்லாங் கொத்தி அதனால் அரண்மனையிற்பாதி பாழாக்கினார்கள் அப்படி பாழாக்கிப்பெருச்சாளி யகப்படாமற்போகவே மனவருத்தமுற்று அரசனுக்குத்தெரிவித்தார். அரசன் மனவருத்தமுற்றுசாவல் போனதுமன்றி நமதரண்மனையிலும் பாதியிடிபட்டுப் போயிற்றென் றெண்ணி, முன்போ லரண்மனையைப் புதிப்பிக்கவேண்டுமென்று உத்தரவுகொடுத்தான். இங்கே யரசனும் இளைய குமாரனும் அரசன் மனைவியும் அந்த நூறுவராகனை வைத்துக்கொண்டு கடுக அமுது படிவாங்கி சீராகப் புசித்து வந்தார்கள். நூறுவராகனுஞ் சிலவாயிற்று; பிதா புத்திரனைப்பார்த்து அப்பா புத்திரசிகாமணியே! உன்னால்கிடைத்த நூறுவராகனும் இன்றையவரைக்கும் வந்தது நாளைக் கொன்றுமில்லையென்றுகூற, புத்திரன் சொல்லுகிறான். ஓ ஐயா! இந்நகரத்தில் தனபாலசெட்டி யிருக்கிறான் அவனுக்கதிக செல்வமிருக்கிறது அவனுக்கோ ஒருபிள்ளை அவன் சவாரி போகவேண்டுமென்றால் கால் சவாரிகளேயன்றி வாகனாதிகளில்லை, தந்தை யென்ன சொன்னபோதிலும் அவன்சவாரியேறுகிறதில்லை நான் ஒரு பஞ்சகல்யாணி குதிரையாகிறேன் என்னைக் குளக்கரையில் வைத்து உலாத்திக்கொண்டிரு அந்தச்செட்டி உதயத்துக்கு அக்குளத்துக்கு வருவான் என்னைப் பார்த்தவுடன் ஆசைகொண்டு விலைகேட்பான், நீ ஆயிரம்வராகன் விலையென்று சொல்லு அவனுக்குப் பெரிதல்ல அவன் அழைத்துக்கொண்டுபோய் தன் பிதாவுடன் சொல்லுவான் பிதா விலைகொடுப்பான் அதை வாங்கிக்கொண்டு வந்துவிடுமென்று கூறி, தன்னுருமாறி ஒரு பஞ்சகல்

யாணி குதிரைபோல் எதிரில்வந்து கனைத்து நின்றான். தந்தைமகிழ்ந்து குதிரையைச் சூரியோதயத்தில் குளக் கரை யருகில் கொண்டுபோய் உலாத்திக்கொண் டிருந் தான் செட்டியின் குமாரன் குளத்திற்குவந்து தந்தசுத்தி செய்துக்கொண்டு வீட்டுக்குப்போகிறவன் குதிரையைக் கண்டு மகிழ்ந்து குதிரையருகில்வந்து ஓ குதிரைக்காரா! இந்தக்குதிரை விற்கிறதா? என்றான். குதிரைக்காரன் குதிரை விற்கிறதுதானென்றான். இதன் விலை என்ன வென? குதிரைக்காரன் இதன்விலை ஆயிரம்வராகனென் றான் நல்லது என்னுடன் வாவென்று அழைத்துக் கொண்டு தன் பிதாவிடத்தில்வந்து இந்தக்குதிரை ஆயி ரம்வராகனும் இது எனக்கு வேண்டும் வாங்கிக்கொடும் என்றுவினவ, பிதாமகிழ்ந்து தன்னிடத்தில் வந்திருக் கிற உபாத்தியாயரை யழைத்து இந்தக் குதிரையைப் பாருமையாவென்றான். அந்த உபாத்தியாயர் குதிரையா யிருக்கிற பிள்ளைக்கு உபாத்தியாயராக யிருந்தவனாதலால் குதிரையை தடவிப்பார்த்து குதிரையின் குணத்தையும் தன்னிடத்தில் வாசித்த பிள்ளையென்று அறிந்துகொ ண்டு இவன் நம்மை வஞ்சித்து பிதாவுடன் சேர்ந்தா னல்லவா;இவனை உபாயமாகக் கொல்லவேண்டுமென்று கருதி செட்டியாரிடத்திற் சென்று சொல்லுகிறான்.

ஓ ஐயா? இந்த அஸ்வம் நல்ல அஸ்வந்தான் இதன்மேலேறினால் சுவர்க்காசி புவனமெல்லாம் சவாரி வரும்;உன்பிள்ளை யிதன்மேலேறினால் மறுபடியும் புத்தி ரனைக் காணப்போகிறதில்லை உமக்குவேண்டாம் எனக்கு ஆயிரம்வராகன் கொடும் வீட்டுக்குப்போய் கொடுத்த னுப்பிவிடுகிறேன் இதன் வேகத்தை உன்முன் காண்பிக் கிறேனென்றுகூற,செட்டியார்கேட்டு மனவருத்தமுற்று நமக்கிருக்கிறது ஒருபிள்ளை, இந்த அஸ்வத்தால் அப் பிள்ளையை யிழந்துவிடுவதா யிருக்கிறது இப்படியாவது துலைக்கிறது நல்லதென்று ஆயிரம்வராகன் உபாத்தியா யருக்குக் கொடுத்தான். உபாத்தியாயர் அஸ்வத்தை வாங்கிக்கொண்டு செட்டிக்குப் பணங்கொடுத்து தன்னி ருப்பிடஞ் சென்றான். உபாத்தியாயர் அந்த அஸ்வத் தின்மேல் சவாரிவிட்டார்; அது சுவர்க்க புவனமெல் லாம் சவாரிவந்தது செட்டியார்பார்த்து நீர்சொன்னது



சரிதானென்று நினைத்துக்கொண்டார் உபாத்தியாயர் அஸ்வத்தை இம்சிக்கவேண்டுமென்று நினைத்துசேருந் தண்ணீருமா யிருக்கிற சலத்தைக் காண்பித்தார். அஸ் வமாயிருக்கிற இராசகுமாரன் கண்டு நம்மைக் கொல்ல நினைக்கிறானென் றெண்ணி நீருருந்துவதுபோல அபி னயித்து அக்குளத்திலிருக்கும் மீன்களிலொன்றாகமாறி நீரில் மறைந்தான். அஸ்வம் நின்றபடி விழுந் திறந் தது. உபாத்தியாயர் பார்த்து இது மாய அஸ்வமாகை யால் நிச்சயமாய் இறந்ததல்ல வேறுருக் கொள்வா னென்று தன் கியானதிருஷ்டியால் பார்த்தான். இராஜ குமாரன் மீனாகி யிருப்பது தெரிந்து தட்சணம் தன்னி டத்தில் படிக்கிற பிள்ளைகளைக் கூப்பிட்டு இந்நீரை யிறைத்துவிட்டு இதிலுள்ள மீன்களையெல்லாம் பிடித் துக்கொடுங்களென்றான். பிள்ளைகள் நீரை யிறைத்து விட்டு மீனைப்பிடித்துக் கரையிற்போட்டு கொல்லுகிறார் கள். பின்பு இராசகுமாரனாகிய மீன் பார்த்துப் பாபி என் னைக்கொல்ல நினைத்திருக்கின்றான்; நல்லது இவனைஎப் படியும் ஏமாற்றிப்போவோ மென்று சுற்றிப்பார்க்கிற போது, அவ்வூரில் ஓர் எருமைசெத்துப்போய் அவ்வூர் வெட்டியான் அந்த எருமை எடுத்துவந்து குளக்கரை யில்போட்டுவிட்டு மாடறுக்கும்ஆயுதங்களைஎடுத்துவரப் போனான். அதனை ராசகுமாரன் கண்டு அவ்வெருமை யிற் பாய்ந்தான். எருமை உயிருற்றெழுந் தோடிற்று; வெட்டியானும் வந்துவிட்டான்; உபாத்தியாயர்கியான திருஷ்டியால் பார்த்தார். எருமையாயிருக்கிறது தெரி ந்து வெட்டியானும் தானுமாகவோடி அந்த எருமை யை வெட்டியானால் பிடிக்கச்சொல்லி சித்திரவதைசெய் யச்சொன்னான். தோட்டி ஒருமரத்தில் கட்டியடித்தான். இராசகுமாரன் இனி என்னசெய்வோமென்று அம்ம ரத்தைச் சுற்றிப்பார்க்கிறபோது அதிலொரு பஞ்சவர் ணக்கிளி செத்துக்கிடந்தது. அதை யறிந்து தட்சணம் அதிற்பாய்ந்து பறந்தான். உபாத்தியாயர் கியானதிருஷ் டியால் பார்த்து தானொரு கருடனாக வுருவங்கொண்டு துரத்தினான். கிளியும் காடு மலை வனம் வனாந்திரங்களை யும் கடந்து, ஒரு நகரத்தை யடைந்து, அந்நகரத்தில் ராசகுமாரத்தியின் கன்னியா மாடத்துக்காக ஓடுகிற

போது, அந்த ராஜகுமாரத்திநாலுபக்கத்திலுள்ளசாள
ரங்களைத் திறந்துவைத்து நடுமத்தியிலொரு ஆசனம்
போட்டு அதிலிருந்து மயிராற்றிக்கொண்டிருந்தாள்.
கிளி கண்டு ஜன்னல்வழியாகச் சென்று அவள் மடியில்
விழுந்தது. அதை இராசகுமாரத்தி கண்டு மகிழ்ந்து
கிளியை எடுத்துமுத்தமிட்டுமார்போடணைத்து ஆதரித்
தாள். உபாத்தியாயராகிய கருடன்பார்த்து நல்லது பய
லே! என்னிடத்தில் வித்தையைக் கற்றுக்கொண்டு மோ
சஞ்செய்தாயல்லவா? உன்னை எவ்விதத்திலும்கொல்லு
கிறேனென்று சபதம்செய்துவிட்டுப் போனான். கிளி நீ
கெட்டாய் போவென்று மறுவுத்தரவு கொடுத்துவிட்டு
இராசகுமாரத்தி மடியிலிருந்தது. இராஜகுமாரத்தி அக்
கிளிக்கு பண்டுபலாதி கொடுத்து பாலமுதூட்டி தட்
டானை யழைப்பித்து நவரத்தினங் கொடுத்து கிளிக்
கூண்டு ஒன்று செய்யச்சொல்லினாள். தட்டான் அவ்வா
றே ஒருகூண்டு செய்துகொடுத்தான. இராசகுமாரத்தி
கூண்டில் கிளியைவிட்டு இக்கூண்டுக்குத்தகுந்த கிளி
தான், இக்கிளியைக்கடவுள் கொடுத்தாரென்றுமகிழ்ந்து
முத்தாடி இரவும்பகலும் கிளியிடத்தில் கருத்தைச்செ
லுத்தி வேளைக்குவேளை கிளிக்கு உபசரித்துப் பாது
கார்த்து வந்தாள். அன்றையத்தினம் இரவில் தான்
போசனஞ்செய்து கிளிக்குப்பண்டுபலாதிகள் கொடுத்து
சற்றுநேரம் மடியில் வைத்துக்கொஞ்சிக்குலாவி, பின்பு
கூண்டில் விட்டு கபாடபந்தனஞ்செய்து தான் அம்ச
தூளிகா மஞ்சத்தில் சயனித்து நித்திரைபோனாள். கிளி
யாகவிருந்த இராசகுமாரன் நடுச்சாமவேளையில் கூண்
டைவிட்டு வெளியில்வந்து தன்சுயரூபத்தை யெடுத்துக்
கொண்டு மஞ்சத்தில்வந்து அங்கிருந்த தாம்பூலங்க
ளைத் தரித்து சுகந்தகலவைச் சாந்தணிந்து நித்திரை
சோதித்துக் கூடுதலொன்று தவிர மற்ற அலங்கோல
மெல்லாம் இராசகுமாரத்தியைச்செய்து முன்போலகிளி
ரூயங்கொண்டு கூண்டிற் புகுந்தான்.

அதன்பின்பு இராசகுமாரத்தி திடுக்கென்று விழித்
துக்கொண்டு தான் இருக்கிற அலங்கோலத்தைக்கண்டு
அச்சமுற்று ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்! இது
வோ கன்னிகாமாடம் புறத்தில் அரசனுக்கிணையால்காவ



லிருக்க சுத்தவீரர் அற்பமானவரல்ல, யானையையும்
வெற்றியடையத்தக்கவர்;உட்புறத்தி லிருக்கின்ற கன்னி
காவலோ அவர்கள் எண்மடங்கதிசமாயிருப்பவர்; நமத
ரண்மனையோ கபாடஞ் சாத்தினபடியிருக்க நம்மைக்
கனவில் அலங்கோலஞ்செய்து போயினன். நாமின்றிர
வில் அதிக நித்திரையா யிருந்துவிட்டோம் நாளையதி
தினம் விழித்து வருபவனைக் கண்டு பிடிப்போமென்று
கருதி மஞ்சத்திற் படுத்திருந்து சூரியோதயத்துக்கெழு
ந்து நித்தியக்கடனைமுடித்துப் போசனஞ்செய்து கிளிப்
பிள்ளைக்குப் பண்டுபலாதி பாலன்ன மருந்தி சற்றுநேர
ம் மடியில்வைத்து சீராட்டி கொஞ்சிக்குலாவி சூரிய
னஸ்தமானவுடன் தானும் புசித்து, கிளிக்கும் கனிவர்க்
கங்களை யருந்தச்செய்து கொஞ்சிக்குலாவி கிளியைக்
கூண்டில் விட்டு கபாடபந்தனஞ் செய்து தாதிகளை
யழைத்து எச்சரிக்கையாக விருங்களென்று சொல்லி
விட்டு தான் மஞ்சத்தில் படுத்து பதினைந்துநாழிகைபரி
யந்தம் விழித்திருந்து பின்பு அயர்ந்து நித்திரைபோய்
விட்டாள். இப்படியிருக்க ராசகுமாரன் கூண்டைவிட்டு
வெளியேவந்து நித்திரை சோதித்து மஞ்சத்திலுட்
கார்ந்து தாம்பூலந்தரித்து கலவைச்சாந்தணிந்து முன்
போல இராசகுமாரத்தியை அலங்கோலஞ்செய்து கிளி
யுருவ மெடுத்து முன்போலாகி கூண்டி லிருந்தான்.
இராசகுமாரத்தி நித்திரைதெளிந்தெழுந்திருந்து தன்
அலங்கோலத்தைக் கண்டு தன்னைத்தானே நிந்தித்துக்
கொண்டு வருகிற புருஷன் வல்லவனாய் இருக்கிறான்,
இவ்வல்லமையை யுடையவன் நம்மை எழுப்பி மன
மொத்து விளையாடாமல் நம்மையறியாமல் விளையாடிப்
போகிறதில் பயனென்ன? ஆகிலும் இன்றையத்தினம்
பதினைந்து நாழிகை பரியந்தம் விழித்திருந்தமையால்
அயர்ந்து நித்திரை போய்விட்டோம். நாளையத்தினம்
பகலில் நித்திரைசெய்து இரவில் விழித்திருக்கவேண்டு
மென்று நினைத்து மறுபடியும் சயனித்து பொழுது
விடிந்தபின் எழுந்து நித்தியக்கடனை முடித்து போச
னஞ்செய்து கிளிக்கு அமுதருந்தி மஞ்சத்தில்சயனித்து
சூரியன் அஸ்தமாகிற பரியந்தம் நித்திரைசெய்து திரு
விளக்கேற்றினபின் எழுந்து கைகால் சுத்திசெய்துபோ

சன்ஞ்செய்து கிளிக்கழுதளித்து அதனோடு சற்றுநேரம் விளையாடினபின் கிளியைக் கூண்டில்விட்டு தான் மஞ்சத்தில் படுத்து நித்திரை செய்தவள்போல சன்னசல்லாவை போர்வையிட் டிருந்தாள். நடுச்சாமபரியந்தம் நித்திரை யில்லாம லிருக்கிறதை கிளியாகவிருக்கிற ராஜகுமாரன்கண்டு இன்றையத்தினம் ராஜகுமாரத்தி நித்திரை செய்யாள்; நாமும் போகாமலிருக்கலாகாது; நமக்கு உபாத்தியாயர் எட்டுநாளையில் நம்மைக் கொல்லுகிறோமென்று சபதஞ் செய்து போயிருக்கிறார்; இன்றைய தினத்தோடு மூன்றுநாளாயிற்று. இனி யிருக்கிறது ஐந்துநாள். இதற்குள் நடக்கப்போகிறதை யெல்லாம் இந்தராசகுமாரத்தியுடன் சொல்லவேண்டும். ஆதலால் இனி சும்மா யிருக்கிறது தகுதியல்ல வென்று கருதி, கூண்டைவிட்டு வெளியில் வந்து, தன் சுயரூபத்தை எடுத்து மஞ்சத்தில் வந்து உட்கார்ந்து தாம்பூலம் தரித்து கலவைச்சாந்துபூசி ராஜகுமாரத்தியைத் தொட்டான். இராஜகுமாரத்தி கிளியாயிருந்த ராஜகுமாரன் மஞ்சத்தில் வந்து உட்கார்ந்த வரைக்கும் பேசாமலிருந்து பார்த்திருந்தவளாதலால் ராசகுமாரன் கரத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கேட்கிறாள்; நீயார்? எந்தநகரம்? உமது பெயரென்ன? நீ இவ்விடத்தில் கிளியாக யிருக்கவேண்டிய தென்ன? உமது வரலாற்றைச் சொல்லுமென்று வினவ, இராஜகுமாரன் ஓ! மாதுசிரோன்மணி! தருமாபுரித் தலைவனாகிய தர்மநந்தன ராஜனுமாகிய என்தந்தைக்கு இரண்டு புத்திரருண்டு; எனக்கு மூத்தவனொருவர்; நான் இளையவன்; என்தமையனுக்கு ஏழுவயது எனக்கு ஐந்துவயது அக்காலத்தில் என் தந்தைபேரிலே வேற்றரசன் படையெடுத்துவந்து போராடி வெற்றியடைந்து எங்களுடைய தேசத்தை விட்டுத் துரத்திவிட்டான்; என் மாதாபிதா நாடுகள்தோறுந் திரிந்து சீவனஞ்செய்து எங்களிருவரையும் உபாத்தியாயரிடத்தில்விட்டு இப்புத்திரருக்கு கல்விப்பயிற்சி செய்வித்தால் இவர்களி லொருவரைத் தட்சணையாக எடுத்துக்கொண்டு மற்றொரு பிள்ளையை எனக்குக்கொடுமென்று சொல்லிவிட்டுப் போயினர்.



உபாத்தியாயர் மூத்தவனை மாடுமேய்க்க வைத்து எனக்குச் சகலவித்தையுங்கற்பித்து கூடுவிட்டுக்கூடுபாய்கிற வித்தையும் ஜாலவித்தைகள் அனைத்தையுங் கற்பித்து என்பிதா வந்தால் மூடனைப்போ லண்ணாந்தாள் போட்டு என் தமையனை எல்லாந் தெரிந்த சட்டாம்பிள்ளையைப்போலே அபினய வேடந்தரித்து என்பிதாவை மோசஞ்செய்யக் கருதியிருந்தான். நான் இதை யுணர்ந்து பிதாவுக்கு மோசத்தைத் தெரிவித்துப் பிதாவை வரச்செய்து வேதியனை விட்டு மனச் சம்மதியாகவே பிதாவினிடஞ்சேர்ந்து சாவலாகி நாலுவராகன் சம்பாதித்துக் கொடுத்து சீவனஞ்செய்து பின்பு குதிரையுருவங்கொண்டு ஆயிரம் வராகன் ஒரு செட்டியாரிடத்தில் வாங்கி என்தந்தைக்குக்கொடுத்தேன். அந்த செட்டியாரிடத்தில் என் வாத்தியார் வந்திருந்தார் அவர் என்னையறிந்து தானே அந்த ஆயிரம்வராகனைக் கொடுத்துவிட்டு என்மீதிலேறி நான்வருத்தமுறக் சவாரிசெய்து என்னைக் கொல்லவேண்டுமென்று கருதி சேருநீருமாகவிருக்கிற சலத்தைக் காண்பித்தான். நான் அச்சலத்தை யருந்தினதுபோல அபிநயித்து குதிரைரூபத்தைவிட்டு மீன்ரூபமாகி அக்குளத்தி லிருந்தேன், அதனை உபாத்தியாயரறிந்து தன்னிடத்தில் வாசிக்கின்றபிள்ளைகளால் அந்நீரை யிரைத்து மீன்களை வதைக்கச்சொன்னார். அப்போது அவ்வூரில் ஒரு எருமை செத்துப்போயிற்று. அதனைத் தோட்டி யெடுத்துவந்து அக்குளக்கரையில்போட்டு ஆயுதமெடுத்துவரப்போனான். நானவ்வெருமையிற் புகுந்துஓடினேன். அதனை உபாத்தியாயர் கண்டு அந்தஎருமையை தோட்டியுடன்சொல்லிக் கட்டியடித்தான். அதுகண்டு நானொரு பஞ்சவர்னக்கிளியாகி உயரப்பறந்தேன்உபாத்தியாயர் கருடனாகத் துரத்திவந்தார். நான் இச்சன்னல்வழியாக உன்மடியில் விழுந்தேன் அவன் எட்டுநாளையில் என்னைக் கொல்லுகிறேனென்று சபதஞ்செய்தான் நீர் கெட்டீர் போமென்று நயன பாஷையினாலே சொன்னேன் நீ கன்னிகழியாப் பெண்ணாதலால் உனக்கு நானே கணவனாயிருக்க உன் நித்திரைசோதித்து உன்னை அலங்கோலஞ்செய்தேன். நீ என்னைப்பிடிக்க வேண்டுமென்று விழித்திருந்தனை

யாலும், உபாத்தியாயர் சொல்லிய எட்டுநாளில் மூன்று
நாள் சென்றமையாலும், இனி நடக்கிறதை உனக்குத்
தெரிவிக்கவேண்டு மாதலால் நான் என் சுயரூபத்தை
எடுத்துக்கொண்டு உன்னிடத்திற்கு வந்தேன். இனி
மேல் நடக்கப்போகிறதைச் சொல்லுகிறேன், அது
என்னவென்றால் உபாத்தியாயர்கழைக்கூத்தாடிகளோடு
சேர்ந்து உனது பிதாவிடத்தில்உத்திரவுபெற்று,கூத்தா
டினதற்குப் பரிசாக உன்னிடத்தி லிருக்கின்ற கிளியைக்
கேட்பான். நீ கொடுக்கமாட்டேனென்று மறுத்துச்
சொல்லு. மறுபடியும் அரசன்கேட்டு அனுப்புவார்.
அப்போது நீ தாட்சண்யமின்றி கிளியைக் கழுத்தை
முறித்துக்கொன்று தாதிகள்கையில் கொடு; உடனே
கழுத்திலிருக்கின்ற முத்துமாலையை உன்பிதா கேட்ட
னுப்புவார். நீ மாலையை கொடுக்காமற் கோபித்துக்
கொண்டு முத்துமாலையை யறுத்து முற்றத்தி லிறைத்து
விடு. அதன்பின்பு நடக்கும் அதிசயத்தைப்பாருமென்று
சொல்லினன். இராசகுமாரத்தி கேட்டு ஓகோ! இந்த
ராஜகுமாரன் வழங்கியசேதி காதிலேயுங் கேட்டறியோம்
நாம் பார்க்காததுபோலத் தற்காலம் பார்க்கும்படியாக
சில அதிசய மிருக்கின்றது. நாம் பார்க்கலாமென்று
கருதி, அந்த ராசகுமாரன்மீது காதல்கொண்டுஇருவரு
மனமொத்து கூடிக்கலந்து சுகித்திருந்தார்கள். இராச
குமாரன் முன்போல் கிளியுருவந் தரித்துக்கொண்டு
யிருந்தான். இப்படி ஐந்துநாளுமாயிற்று. உபாத்தியா
யர் கழைக்கூத்தாடிகளோடு சேர்ந்து அந்நகரத்திலிருக்
கும்படியான அரசனிடத்துவந்து கூத்தாடுவதற்குதாம்
பூலம்பெற்று எழுபதடிகம்பம் நாட்டி அதன்மேல் உபா
த்தியாயரேறி உலகிலுள்ள கழைக்கூத்தாடிகளில் வல்ல
வர்களென்று பிழைகொள்ளக் கூத்தாடினர். அரசன்
கண்டு மகிழ்ந்து உனக்கென்னவேண்டும்? கேட்டதைக்
கொடுக்கிறேனென்றான். அந்நகரிலுள்ள ராசவர்க்கங்
கொடுத்த ஆடையாபரணபெற்ற உபாத்தியாயர் ஓ!
மகாராஜனே! உமது குமாரத்தி வைத்துக்கொண்டிருக்
கிற பஞ்சவர்னக்கிளியைக் கொடுக்கவேண்டுமென்றான்.
அரசன் சிலதாதிகளை யழைப்பித்து தன்குமாரத்திகையி
லிருக்கும்படியான கிளியை வாங்கிவர கட்டளையிட்



டான். தாதிகள் ராசகுமாரத்தியை வணங்கி அரசன்
கூறியவாறு கிளியைக் கேட்டார்கள். அடி தாதிகளே!
உயிருக்குயிராக வளர்த்துவருகிற கிளியைக் கொடுப்பே
னோ? வேறொரு கிளியை வருவித்துக்கொடுக்கச் சொல்
லுங்களென்று கூறிக் கடுகடுத்து திட்டியனுப்பினாள்.
தாதிகள் அரசனிடத்திற் சென்று இராசகுமாரத்திகூறி
யவற்றைக் கூறினர். உபாத்தியாயர் ஓ! மகாராசனே!
அந்தக்கிளிவராமல் நான்கம்பத்தைவிட்டிறங்கேனென்
றான். அரசன்கேட்டு மறுபடியும் தாதிகளை யனுப்பி
கிளியை வாங்கிவரச்சொன்னான். தாதிகள்வந்து கேட்
டார்கள்; இராசகுமாரத்தி சினங்கொண்டு கிளியைக்
கழுத்தை முறித்துத் தாதிகள் முன்போட்டு எடுத்துப்
போங்களென்றாள். அக்கிளியைக் கொண்டுபோய் அர
சன்முன் வைத்தார்கள், உபாத்தியாயர் சொல்லுகிறார்,

ஓ! மகாராசனே! கிளிதா னிறந்து போயிற்று;
உமது குமாரத்தி கழுத்திலிருக்கிற முத்துமாலையைவாங்
கிக்கொடுமென்றான். அரசன் அக்கருத்துக் கிசைந்து
தாதிகளை யனுப்பி முத்துமாலையை வாங்கி வாருங்க
ளென, தாதிகள்வந்து ராசகுமாரத்தியைக் கண்டு உன்
கழுத்திலிருக்கிற முத்துமாலையைக்கொடு அம்மணியென்
றார்கள். இராசகுமாரத்திபார்த்து இராசகுமாரன்சொல்
லிய வசனங்களெல்லாம் சரியாகவே யிருக்கிறதென்று
கருதி என்ன நடக்கிறதோ பார்ப்போமென்று சொல்லு
கிறாள். ஓ! தாதிகளே! நான் முத்துமாலையைத் தரித்தி
ருக்கிறது என் பிதாவுக்கு மனமில்லை நான் மாலையைக்
கொடுக்கேனென்று கடுகடுத்து முத்துமாலையை யறுத்து
விட்டாள், முத்துகள்வாசலெல்லாம்சிந்தின,முத்துகள்
சிதறினமாத்திரத்தில் எல்லாம்புழுவாயின. உபாத்தியா
யர் கியான திருஷ்டியாலுணர்ந்து மேலுருக்காண்பித்து
ஒரு கோழிவடிவெடுத்து அப்புழுக்களையெல்லாம் மூக்கி
னாலே கொத்திக்கொண் டிருந்தான். இராசகுமாரன்
உபாத்தியாயரைவிட அதிகவல்லமையுடையவனாதலால்
தட்சணம் ஒருபூனையுரு வெடுத்துக் கோழியை ஒரேய
மூக்கா யமுக்கினான். உபாத்தியாயர் பார்த்து மகிழ்ந்து
சபாஷ்! இராஜகுமாரா! என்னைவிட சிறந்த வித்தை
யுடையவனாயிருக்கிறாய் இனியுன்னை ஒன்றுஞ் செய்கிற

இல்லை என்னை விட்டுவிடென்று கூறினன். இராஜகுமாரன் சிரித்து உம்மைப் பலபேரறியக் கொல்லாமல் விடுவேனோவென்று பின்னுமொரு கவ்வு கவ்வினான். ஓவென்றலரவே கூத்தாட்டத்தைக் கண்டிருந்த சர்வஜனங்களுங்கேட்டு அரசன் முதலான யாவரும் கன்னியாமாடம் வந்தார்கள். ஆள்வரவுவருவதைக்கண்ட இராஜகுமாரத்தி சன்னல்களைச் சாத்திக்கொண்டாள், அரசன் மந்திரி முதலானவர்களும் வந்து பூனையும் கோழியும் போர்செய்கிறதைக்கண்டு ஏதென்று வினவினர். பூனையாயிருக்கிற ராசகுமாரன் சொல்லுகிறான்: எல்லாமிந்தக் கோழியைக்கேட்டால் சமாச்சாரம் விளங்குமென்றான். கோழியாயிருக்கிற உபாத்தியாயர் ஓ! ராஜனே! எல்லாம் பூனையாகவிருக்கிற ராசகுமாரனைக் கேட்டால் விளங்குமென்றான். அரசன் பூனையைக்கேட்டான், பூனையாகவிருக்கிற ராசகுமாரன் தன்பிதா நகரிழந்ததும், இவரிடத்தில் வித்தியாப்பியாசஞ்செய்யக் கருதினதும், தான் அம்மோசத்தைப் பிதாவுக்குத் தெரிவித்துத்தன்சம்மதியின்பேரில பிதாவிடஞ் சென்றதும், சாவலானதும்குதிரையானதும் அக்கிளிக்காக இந்தவுபாத்தியாயர் கழைக்கூத்தாடினதும். என்னைக்கொல்ல நினைத்துக் கிளியாயிருந்த என்னைக்கேட்டதும், கிளிசெத்தபின்பு முத்துமாலைகேட்டதும், பின்பு புழுவானதும், உபாத்தியாயர் கோழியானதும், தான் பூனையானதும் ஆதியோடந்தமாகச் சொன்னான். இராசன் கேட்டு ஆச்சரியப்பட்டு உபாத்தியாயரைப்பார்த்து ஓ! ஐயா! உமது கருத்தென்னவென்று வினவ; உபாத்தியாயர் என்கருத்தென்ன நான் கொல்லவென்று நினைத்தது மெய்தான்; புத்தியிலுயர்ந்த இராஜகுலப் பிள்ளையாதலால் என்னாலினியிவனை வெல்ல முடியாது, இனி இவனுக்கும் நமக்கும் பகையில்லை இதுமுதல்சினேகம்போலிருக்கிறோம். இது சத்தியம் சமாதானப்படுத்துமென்றுகூற, அரசன்கேட்டு ஓ! இராஜகுமாரா! உன்கருத்தென்னவென்று வினவ, உபாத்தியாயர் சொல்லியது சரிதான் இனியொருவேளை ஏதாவது வஞ்சம் நினைத்தாலும் நான் தப்பித்துக் கொள்ள எனக்கு வல்லமையிருக்கிறதென்று கூறி பூனையுருவத்தைவிட்டு சுயரூபந்தையெடுத்தான். உபாத்தியா



யரும் வேதியருருவந் தரித்தான். அரசன்கண்டு மகிழ்ந்து வேதியருக்கு உபசாரஞ்செய்துசில நீதிகள்சொல்லி இராசகுமாரனைப் பார்த்து ஓ! இராசகுமாரகா! கிளியாக என்குமாரத்தியினிடத்தி லிருந்தமையால் நீயே அந்தக் கன்னிகையை மணம்புரியுமென்று கூறித் தன்னரண்மனைக்கு இருவரையும் அழைத்துப்போய் நல்ல சுப முகூர்த்தத்தைப்பார்த்து அம்முகூர்த்தத்தில் தன்குமாரத்தியை மணஞ் செய்வித்து ரத கஜ துரக பதாதிகள் முதலியவைகளும் ஆடையாபரணங்களும் திரவியமுங் கொடுத்தான். வேதியன் அவனைநோக்கி ஓ மகாராசனே! உன்குமாரத்திக்குக் கணவனாகியும் எனக்கு மகனாகியுமிருக்கிற ராஜகுமாரனுக்கு நான் விருந்திட்டனுப்பவேண்டும் விடை கொடுமென்று உத்தரவு பெற்றுக் கொண்டு இராசகுமாரனையும் இராஜகுமாரத்தியையும் அழைத்துக் கொண்டுபோய் தன்வீட்டில் விருந்திட்டு உபசரித்து மாடுமேய்த்த இராஜகுமாரனையும் அழைத்துத் தம்பியுடன்கூட்டி மகிழ்வாக அனுப்பிவைத்தான். இராஜகுமாரன் தமையனையும் மாமனார் கொடுத்தரதகஜதுரகபதாதிகளையும் அழைத்துக்கொண்டு பிதாவுக்குரிய நகரம்போக அரசன் நம்மேல் போர்செய்ய வந்தானென்று கருதி எதிர்கொண்டுவந்து மரியாதைசெய்து தன்னரசை அப்புத்திரனுக்குக் கொடுத்துவிட்டுப் போயினன். இராசகுமாரன் அரசுரிமைபெற்று மாதா பிதாக்களை அழைப்பித்து பிதாவுக்குப்பட்டாபிஷேகஞ்செய்து தமையனுக்குக் கல்வியைக் கற்பித்து ஒரு ராசகுமாரத்தியை அவனுக்கு கலியாணஞ் செய்வித்து யாவரும் சுகித்திருந்தார்கள். அவ்வளவு வல்லமையுடைய ராஜகுமாரனல்லவோ உன்னை மணம்புரியவேண்டுமென்று மந்திரிகுமாரன் கண்ணெதிரிலிருக்கும்ராசகன்னிகைக்கு உரைத்தான். சூரியன் உதயமாயினான். மந்திரிகுமாரன் பெண்ணே! சூரியோதயமாயிற்று நித்தியக்கடனை முடித்துக்கொள்ள நீபோவென்று விடைகொடுத்து தானும் பள்ளியறைவிட்டு நித்தியக்கடனை முடித்துக்கொள்ளச் சென்றான்.

முதலாம்நாள் கதை-முற்றிற்று.

## இரண்டாம்நாள்

## பூனைக்குட்டி வளர்த்த கதை

இரண்டாநாள் உதயத்திற்கு மந்திரி யெழுந்து ஸ்நானஞ்செய்து பூசை முடித்து உண்டு தாம்பூலந் தரித்து சுகந்த கலவைச் சாந்தணிந்து பரிமளமிகுந்த நறுமலர் மாலைசூடி சூரியன் மேற்றிசைக்கடலிலாழ்ந்த பின் பள்ளியறைசேர்ந்து நித்திரைசெய்பவர்போல்மஞ்சத்தில் சயனித்திருந்தான். இராசகன்னிகைகள் இருவரில் இளையாள் சூரியனஸ்தமானபின்பு நீராடி ஆடையணிந்து சந்தனம் புனுகு கஸ்தூரி கற்பூரம் சவ்வாது குங்குமமணிந்து ஆபரணாலங்கிர்தளாகி நறுமலர்மாலை சூடிச் சிற்றுண்டியாகிய பலகாரவகைகளையும் பண்டுபலாதிகளையுந் தட்டிலேந்திக்கொண்டு தாம்பூலந் திரவியமும் மற்றொரு தட்டிலேந்தி வீணையைக் கையிலேந்திக் கொண்டு பள்ளியறைக்குட்புகுந்து கொண்டுவந்தபலகாரமுதலியவற்றையெல்லாம் ஓரிடத்தில் வைத்துக் கணவன் நித்திரை செய்துக்கொண் டிருக்கிறதைக் கண்டு எழுப்பினால் குற்றம் வருமென்று அஞ்சி வீணையைக் கையிலேந்திச் ஸரஸநாண இசைகூட்டிப் பாடினள். மந்திரிகுமாரன் கேட்டு மகிழ்ந்து அசையாமல் நித்திரைசெய்பவர்போ லிருந்தார். இராசகுமாரத்தி கண்டு ஓகோ நமது கணவன் அசந்து நித்திரைசெய்கிறாரென்றெழுந்து மஞ்சத்தையசக்கினள். அதற்கும் எழுந்திருக்காததைக்கண்டு கையாலொருதரம் தட்டினால் எழுந்தாலாயிற்று எழுந்திருக்காவிட்டால் கழுதையென்று நிதானித்துக்கொள்ளவேண்டுமென்று கருதித் தன்விரலால் மெதுவாகத் தட்டினாள். மந்திரிகுமாரன் விழித்தான். இதை ராசகுமாரத்திகண்டு ஏது சுவாமி! நித்திரை அதிகமாயிருக்கிறதென்றாள். மந்திரிகுமாரன் சிரித்து ஓ பெண்கள் நாயகமே! கல்யாணபீடையென்றுசொல்வார்களே அது பொய்யாகாமல் என்னை நித்திரைக்குள் ளாக்கினதென்றுகூற, இராசகுமாரத்தி சிறுநகை புரிந்துகொண்டுவந்த பண்டுபலாதி முதலிய யாவையும் எதிரில்வைத்துப் புசியுங்களென்றாள். மந்திரி தனக்கு இஷ்டமானவற்றில் சிறிதருந்தி மற்றதை நீக்கி நீரருந்தித் தாம்பூ



லந்தரித்து வேடிக்கையாகச்சங்கீதம்பாடிச் சற்றுநேரஞ் சென்றபின்பு காதல்மீறி மந்திரிகுமாரனைக் கலந்தணைய வந்தாள். மந்திரிகுமாரன் கண்டு ஓ! ஓ! இந்தவேளை நேற்று இவட்கு மூத்தாளைக் கதைசொல்லிக் காதலைத் தணித்ததுபோல் இவள் காதலையுந் தணிக்கக் கதை சொல்லவேண்டுமென்று கருதி இளையவளைப் பார்த்து பெண்ணே! நான் ஒரு கதைச் சொல்லுகிறேன், அக்கதை முடிந்தவுடன் இருவருங் கூடுவோமென்று கூற, இராசகுமாரத்திகேட்டுநல்லதென்று அங்கிருக்கும்ஆசனத்திலிருந்தாள். மந்திரிகுமாரன் சொல்லுகிறான்:—

கேளும் மாது சிரோன்மணி! அளகாபுரி யென்றொரு நகரமுண்டு. அந்நகரத்திற்கு அளகேசனென்றொரு ராசனுண்டு. அவ்வரசன் தன்னுயிர்போல் மன்னுயிரையுங் காப்பாற்றித் தானும் தன்னுடைய மனைவியும் சுகித்துவருங்காலத்தில், சிலநாள் சென்றபின்புஒரு புத்திரனைப் பெற்றாள். புத்திரன் பிறந்த மூன்றுவருஷ காலத்துக்குள் அவ்வரசன் இறந்துபோய் விட்டான் அவ்வரசனுக்குச் சகோதரன் ஒருவனுண்டு; அவன் அந்தப் புத்திரனை முன்னிலையாக வைத்துக்கொண்டு தானதர்ம காரியங்களை நடத்தி தமயன் மனைவியையும் புத்திரனையும் பாதுகாத்துவந்தபின் இப்புத்திரன் பட்டத்துக்குரியவனாதலால் சிலகாலஞ்சென்றால் நமக்குக் கெடுதிநேரிடுமென்று நினைத்து, கைசோரவிட்டுப் பராமுகமாய் சிலநாளிருந்தான். அரசன் மனைவிகண்டு மனவருத்தமுற்றுப் புத்திரனைவிட்டுத்தாய்வீடுபோய்ச்சேர்ந்தாள். புத்திரன் அந்நகரிலுள்ள குடிகள் வீடுகள்தோறுஞ்சென்று அவர்கள்கொடுத்த அமுதுபடி அறுசுவை பதார்த்தங்களை வாங்கிவந்து சமையல்செய்து சிலகாலமுண்டான் தன்தாய்வீடுபோன அரசன்மனைவிதாய்வீடு சதமல்லகணவன்வீடுசதம்நமக்குக் கணவனில்லைபுத்திரனிருக்கிறான் புத்திரனாலேதான் ஏதாவதொரு வர்த்தகம் செய்து சீவனஞ்செய்துக்கொண்டிருப்பதே நலமென்று ஆலோசித்துத் தாய்வீட்டாரிடத்தில் நூறு வராகன் வாங்கிக்கொண்டு மறுபடியும் முன்போல் தன்னுடைய இராச நகரத்திற்குவந்து புத்திரனை யழைப்பித்து தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, சிலநாள் சென்றபின்பு



தான்வைத்திருந்த நூறுவராகனைத் தன் குமாரனிடத்தில் கொடுத்து அப்பா! புத்திரசிகாமணியே! எத்தனை நாள் இரந்து குடிக்கிறது பார்க்கிறவர்கள் நம்மைப் பார்த்து நகைப்பார்கள். ஆகையால் நான் கொடுக்கும் படியான பணத்தை வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு வர்த்தகஞ் செய்து அதன் வரும்படியில் நாம் சீவனம் செய்துக்கொண் டிருக்கலா மென்றாள். புத்திர னக்கருத்துக்கிசைந்து பணத்தை யெடுத்துக்கொண்டு நகரத்தை கந்து பெரியகாட்டில் வந்தான். அங்கு, ஒரு குடித்தனக்காரன்வீட்டிலிருந்த பூனை குட்டிப்போட்டது. அக்குட்டிகளால் அவன் தினந்தோறும் வருத்தப்பட்டு அக்குட்டிகளை காட்டில்விட்டு வரவேண்டுமென்று கருதி குட்டிகளையெல்லாம் பிடித்து ஒரு கோணியில் கட்டிக்கொண்டு அக்காட்டில் வந்தான். இராசகுமாரன் அவனைப் பார்த்து அப்பா! உன்தலையில மூட்டையென்ன? அது என்ன சரக்கென்று வினவ, குடியானவன் கேட்டு அப்பா! இது சரக்கல்ல பூனைக்குட்டி இதனை விற்கக் கொண்டுபோகிறே னென்றான். இராசகுமாரன் ஒவ்வொன்று என்னவிலையென்று வினவ, குடித்தனக்காரன் கேட்டு உள்ளமகிழ்ந்து மேலுக்குச் சரியான விலைகொடுக்காமல் நூறுவராகன் கொடுக்கிறேனென்று கள்ளங்கபடில்லாமல் சொன்னபடியால் ஐந்நூறுவராகன் குட்டியை உனக்கு நூறுவராகனுக்குக் கொடுக்கிறேனென்று மனஞ்சலித்துக்கொள்பவர்போல அபிநயித்து மூட்டையைப் பூமியில்வைத்து கட்டவிழ்த்தான். குட்டிகளெல்லாம் ஓடிப்போய் ஒரு குட்டிமாத்திர மிருந்தது.

பின்பு ராசகுமாரன்கண்டு அப்பா! குட்டி ஐந்நூறு வராகனென்றாயே? குட்டிகளெல்லாம் ஓடிப்போயின. ஒரு குட்டிதானே யிருக்கிறதென்றான். குடித்தனக்காரன் சிரித்துச் சொல்லுகிறான். ஐயா! நீர் கேட்டது ஒருகுட்டிதானே ஒருகுட்டியிருக்கின்றது மற்றக் குட்டிகளெல்லாம் பேயப் போய்விட்டதென்றான். இராசகுமாரன் மெய்தானென்றுகருதி நூறுவராகனைக்கொடுத்துவிட்டு பூனைக்குட்டியை வாங்கிக்கொண்டு முன்போலத் தன் நகரத்துக்கு வந்தான். குடித்தனக்காரன் நூறுவராகனை வாங்கிக்கொண்டு தெய்வத்தை நினைத்துப் புகழ்ந்து

தன்வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். இராஜகுமாரன் பூனைக்குட்டியைக் கையிலேந்தி முத்தமிட்டு சீராட்டிக் கொண்டு தாயிடத்துக்குச் சென்றான். தாய் கண்டு அப்பா! மகனே! இது யேது பூனைக்குட்டி யென்றாள். புத்திரன் சொல்லுகிறான். அம்மா! நீ கொடுத்த நூறு வராகனையுங் கொடுத்து இந்தப் பூனைக்குட்டியை வாங்கி வந்தேனென்றான். தாய்கேட்டு கோபமும் மனஸ்தாபமுங்கொண்டு இந்தப் பிள்ளை பகைவர்முன் எவ்வாறு பிழைக்கப்போகிறானோ வென்று ஏங்கித் தலைவிதியை நினைந்து துக்கித்து முன்போலத் தாய்வீடுபோயிருந்தாள். இராசகுமாரன் முன்போல பூனைக்குட்டியை கையிலெடுத்துக்கொண்டு குடிகள் வீடுதோறுஞ் சென்றான். குடித்தனக்காரர் இராஜகுமாரனையும் பூனைக்குட்டியையும் பார்த்து மனம் இரங்கி இரண்டு சீவன்கள் பிழைக்கும்படி அமுதுபடியும் பதார்த்தமும் கொடுத்து வந்தார்கள்.

அதைவாங்கிவந்து சமையல்செய்து தானும் புசித்துப் பூனைக்குட்டிக்கும் போட்டு சீவனஞ் செய்துக்கொண்டுவந்தான். இவ்வாறு சிலகாலஞ் சென்றபின்பு தாய்வீடு போயிருந்த அரசன் மனைவி நமது புத்திரனுக்கு இனியாவது விவேக முண்டாயிருக்கும் நாம் சென்று முன்போல வர்த்தகஞ்செய்யச் சொல்லுவோமென்றுகருதி நூறுவராகன் தாய்வீட்டாரிடத்தில் வாங்கிக்கொண்டு தன்னரசன் நகரத்துக்குவந்து புத்திரனையழைத்து ஆதரித்து சிலநேரம் வைத்திருந்து புத்திமதிகளைச்சொல்லி நூறுவராகனைக் கொடுத்து முன்போல மோசம்போகாமல் ஏதாவது ஒரு சரக்குவாங்கி வர்த்தகஞ்செய்யப்போவென்றாள். புத்திரன் அந்த நூறுவராகனை வாங்கிக்கொண்டு முன்வந்தகாட்டில்வந்தான். அங்கொரு பாம்புப்பிடாரன் சில பாம்புகளைப் பெட்டியில் அடக்கிக்கொண்டு சாவடியே வந்தான். வரும்வழியில் பூமியைத் தாங்கும் ஆதிசேடன் புத்திரன் பூலோகத்தின் வேடிக்கை பார்க்கவந்தான். இந்தப் பாம்புப்பிடாரன்கண்டு தட்சணம் ஒரு தடைக்கட்டு மந்திரஞ்சொல்லி தடைகட்டித் தன்பெட்டியில் அடக்கஞ்செய்து எடுத்துக் கொண்டு இராசகுமாரன் முன்னே தோன்றினான். இராசகுமாரன் கண்டு சோகி! காவடியில் கொண்டுபோகிறதென்ன சரக்கென்றான்? ஐயா! இது உயர்ந்த பாம்புகள் ராசசமுகத்திற் கொண்டுபோய் ஆட்டினால் அவர்கள் பாம்பை விலைக்குக் கேட்பார்கள். ஒவ்வொரு பாம்பை நூறு வராகனுக்குக் கொடுப்பேனென்றான். இராச குமாரன்கேட்டு அப்பா! ஜோகி! என்கையில் நூறுவராகன் இருக்கின்றது அதைக் கொடுக்கிறேன். எனக்கு ஒரு பாம்பு கொடென்றான். சோகிபார்த்து நாம் இன்றைய தினம் புறப்பட்டவேளை நல்லவேளையென்று கருதி மனமகிழ்ந்து மேலுக்கு வருத்தமுற்றவன்போல் ஐயா ஐந்நூறுவராகன் பெறும்படியான பாம்பை உனக்கு நூறு வராகனுக்குக் கொடுக்கிறேன் இந்தாவென்று ஆதிசேஷன் புத்திரனாகியபாம்பைஎடுத்துக்கொடுத்தான். இந்த ராசகுமாரன் அதனை வாங்கிக்கொண்டு தன்கையிலிருந்த நூறுவராகனையுங் கொடுத்துவிட்டு பாம்பைவாங்கி மார்போடணைத்துக்கொண்டு நகரத்துக்கு வந்து தாயைக் கண்டு அம்மணி இந்தப் பாம்பு ஐந்நூறு வராகன் எனக்கு நூறுவராகனுக்கு அகப்பட்டதென்று களிப்புடன் சொன்னான். தாய்கேட்டு மனவருத்தமுற்று ஓகோ புத்திரனைப்பெற்றது வீணேயன்றி இவனால் நமக்குப் பயனில்லையென்று கருதி புத்திரனைக் கடிந்துகொண்டு மறுபடியும் தாய்வீடுசென்றாள்.



பின்பு இராசகுமாரன் பூனையையும் பாம்பையும் எடுத்துக்கொண்டு குடிகள் வீடுதோறும் சென்றான். குடித்தனக்காரர்கள் பார்த்து ஓகோ! ராசகுமாரன் சில காலம் தனிப்படவிருந்தான். சிலகாலம் பூனைக்குட்டியுந் தானுமாக விருந்தான். தற்காலத்தில் பாம்பு வைத்துக் கொண்டிருக்கிறான். மூன்று சீவனும் பிழைக்கவேண்டுமென்றுகருதித் தகுந்த அமுதுபடியும் பதார்த்தங்களும் கொடுத்துவந்தார்கள். இராசகுமாரன் சமையல்செய்து பூனைக்குட்டிக்கும் போட்டு தானும் புசித்துப் பாம்புக்கும் பாலைவார்த்து வந்தான். பனிரெண்டுவருஷகாலஞ் சீவனஞ்செய்துக்கொண்டிருக்க தாய்வீடுபோன அரசன் மனைவி பெற்றவளாதலால் "உற்றது நமக்கு சிற்றடி ஒருவினென்று" புத்திரன்மேலாசைகொண்டு இனியாகிலும் புத்தியுள்ளவனா யிருக்கமாட்டானா? நாம்போய் திருத்து

வாமென்று மறுபடியும் நூறுவராகன் தாய்வீட்டாரி
த்தில் வாங்கிக்கொண்டு தன்னரசனுடைய நகரத்
துக்குவந்து புத்திரனைப் பார்த்து, அப்பா! குமாரகா!
பாம்பென்றால் படையும்நடுங்குமென்று பழமொழியிருக்
கிறது. நீ பாம்பைவைத்திருந்தால் உன்னிடத்தில் யார்
வந்து நெருங்குவார்கள் அப்பாம்பை மாத்திரம் முன்
வாங்கிவந்த விடத்தில் கொண்டுபோய் விட்டுவாவென்
றாள். தாய்சொல்லைக் கடவாததலால் வாய்திறந்து பே
சாமல் நல்லதென்று பாம்பை மாத்திரம் எடுத்துக்
கொண்டு முன்வாங்கிவந்த விடத்தில்வந்து பாம்பைப்
பூமியில்விட்டு ஓ! நாகேந்திரா! இதுபரியந்தம் இரவும்
பகலும் பாலும் நீரும்போல பிரியாமல் நீயும்நானுமாக
விருந்தோம், இன்று என் தாயார் உன்னை வாயாரவிட்டு
வரச்சொன்னாள். இனிஉன்கருத்துக்கிசைந்த விடத்திற்
குச் செல்லென்று கூறிவிட்டு நாலடிதூரம் நடந்தான்.
நாகேந்திரன் கண்டு இந்த ராசகுமாரன் கள்ளங்கபடில்
லாதவன். மேலும் நம்மைப் பன்னிரண்டு வருஷகால
மாக வைத்து வளர்த்ததுமல்லாமல் பாம்புப்பிடாரனு
டைய கையிலிருந்து வருத்தப்பட்டிருந்த நம்மை நூறு
வராகனைக் கொடுத்து வாங்கி நமக்கு வருத்தமில்லாமல்
பால்வார்த்து வந்தான்.

இவனுக்கொரு உதவிசெய்யவேண்டுமெனக் கருதி
ஓ! இராசகுமாரகா! ஓ! ராசகுமாரகா! எனக்கூவிற்று.
நாகம் ஒருநாளும் பேசினதை அறியாத ராசகுமாரன்
இதேதுஇக்காட்டில் மனிதர்சப்தம் உண்டாகிறதென்று
சுற்றிப் பார்த்தான். ஆளரவ மில்லா திருக்கிறதைப்
பார்த்து ஆரோவென்று பின்னும் நாலடிதூரம் நடந்
தான். நாகேந்திரன் முன்போலக் கூவினான். கூவுதலைக்
கேட்டு சுற்றுமுற்றும் பார்த்து உற்றுநோக்கச் சப்தம்
பிறந்தவிடம் நாகேந்திரனிடத்திற்றானெனக்கருதி இரா
சகுமாரன் நாகேந்திர னருகில்வந்து, ஓ! நாகேந்திரா!
எந்தனிடத்தில் பன்னிரண்டு வருஷகாலமாயிருந்து
என்னுடனே வசனியாம லிருந்தனை. இன்று நீ
வசனித்ததைக் கண்டு அகமகிழ்வையும் ஆச்சரியத்
தையுமடைந்தேன். ஆகிலும் நீ என்னை அழைத்தகார
ணம் யாதென்றுவினவ, நாகேந்திரன் சொல்லுகிறான்:



ஓ! ஐயா! தாய்சொற் கடக்காமல் என்னைக் கொண்டு
வந்து விட்டுப் போகிறையே என்னை இதுபரியந்தம்
பாதுகாத்துவந்த உனக்கு யான் யாது உபகாரஞ்செய்
வேனென்று கருதி உன்னையழைத்தேன், அது யென்ன
வென்றால் நீ இங்கேதானே இரு. நான் ஆதிசேடனு
டைய குமாரன். ஆதலால் என்பிதாவிடத்துக்குச் செல்
லுகிறேன் என் பிதா என்னைக்காணமல் வருத்தப்படுகி
றார். அவர் என்னைப் பார்த்தமாத்திரத்தில் களிப்ப
டைந்து என்னைத்தழுவி வீட்டுக்கு வரச்சொல்லுவார்.
நான் பிதாவுடன் போகாமல் நீரல்ல என்பிதா பூலோ
கத்திலிருக்கிறார் அவரிடத்திற்குப் போவேனென்று
சொல்லுவேன், அவர் யாரென்றுகேட்பார்? நானுன்னை
சிறப்பாகச் சொல்லுவேன்; என் பிதா உனக்கு முத்துச்
சிவிகைகொடுத்தனுப்புவார்; நீ அதிலேறி எங்கள் நாட்
டுக்குவா; வந்தவிடத்தில் உனக்கு விருந்து முதலியவை
செய்து என் புத்திரனுக்கு நல்ல புத்திசொல்லி இங்கு
நிறுத்தவேண்டுமென்று என்பிதா உன்னைவேண்டுவார்;
அப்போது நீ என்னையழைத்து எனக்கு புத்திசொல்லி
உன் பிதாவிடத்தி லிருவென்று சொல்; நான் சம்மதித்
திருக்கிறேன் அதுகண்டு என்பிதா மகிழ்ந்து உனக்கு
வேண்டியவை என்னகேள் தருகிறேனென்று உன்னை
வினவுவார்; நீ அப்போது பணிவுடையவனாகி ஐயா!
தங்கள் கிருபையினால் எல்லா பாக்கியமு மிருக்கின்றது
தங்கள் கையிலிருக்கிற சீவரத்தினக் கணையாழியைக்
கொடுங்களென்று வினவு, என்பிதா அக்கணையாழியைக்
கொடுப்பார்; நீ யதைவாங்கி விரலி லணிந்துக்கொண்டு
விடைபெற்று உன் நகரத்திற்சென்று பரமசிவனை நினை;
நீ என்ன நினைக்கின்றையோ அவையெல்லாம் சித்தி
யாகும்; என்னை வளர்த்ததற்கு உபகாரம் இதுதானெ
ன்று கூறி; இராசகுமாரனை அங்கு நிறுத்தித் தான் நாக
லோகம்போய்ச் சேர்ந்து நாகலோகத்துத் தூதர்கள்
தங்களரசன் குமாரனாகிய நாகேந்திரனைக்கண்டு ஆனந்
தங்கொண்டு மகிழ்ந்து அழைத்துக்கொண்டுபோய் ஆதி
சேடன்முன் விட்டார்கள். ஆதிசேஷன்கண்டு தீராத
ஆவல்கொண்டு களித்து மகனை யெடுத்து மார்போட
ணைத்து அப்பா! புத்திரசிகாமணி! இத்தனை நாளாக

எங்கிருந்தா? யென்று வினவ நாகேந்திரன் சொல்லுகி
றான்: ஐயா!பூலோகத்தில் விநோதங்களைப்பார்க்கச்சென்
றேன். அங்கொருபாம்புப்பிடாரன் என்னைத்தடைகட்டி
தன்பெட்டியி லடக்கஞ் செய்துக்கொண்டு ஒரு காட்டின்
வழிசென்றான். அங்கொரு ராசகுமாரன் கண்டு எனக்
காக நூறுவராகன் அந்தப் பாம்புப்பிடாரனுக்குக் கொ
டுத்து வாங்கிக்கொண்டு தன் நகரத்திற்குச்சென்று மூன்
றுவேளையும் பால்வார்த்து வளர்த்து பன்னிரண்டு வரு
ஷகாலம் பாதுகாத்துவந்தான். ஒருநாள் நான் தாய்தந்
தையரைப் பார்க்கவேண்டு மென்று கேட்டுக்கொண்
டேன்; அந்த அரசன் பிலத்துவாரத்தருகில் கொண்டு
வந்துவிட்டான்; நானிவ்விடம்வந்தேன்; இனி அரை
மாத்திரைப்போதாவது இருக்கக்கூடாது நான் போக
வேண்டும் எனக்கு விடைகொடுங்களென்றுவினவ, ஆதி
சேஷன் குஞ்சிரிப்படைந்து அப்பா! புத்திரசிகாமணி
யே! தாங்களல்லவோ தாய்தந்தையர்கள் நீ இங்கிருக்க
வேண்டியது, அதைவிட்டு பூலோகத்து அரசனிடத்தில்
இருக்கிறேனென்கிறையே இது தகுதியல்ல வென்று
வினவ, நாகேந்திரன் சொல்லுகிறான்: ஐயா! இன்பமா
கப்பெற்றோன்-இடர்தனைத்தீர்த்தோன்-அன்புடன்அன்
னமளித்து ரட்சித்தோன்-உபதேசித்தோன்-இந்த ஐவ
ரும் மக்களுக்குப் பிதாவென்று சொல்லப்படும். அவர்க
ளில் பெற்றவன் பெரியவனல்ல;இடர்தனைத் தீர்க்கிறவ
னும் அன்பாக அன்னமளிக்கிறவனுஞ் சிறந்தவர்கள்;
இருதொழிலும் எனக்குச் செய்தவன் பூலோக ராசகுமா
ரன், ஆதலால் அவன்தான் எனக்குப்பிதா நான் விரை
விற் செல்லவேண்டும்; அவர் கட்டளைப்படி நான் நடக்
கிறவனென்றுகூற, ஆதிசேஷன் கேட்டுத் தன்னிடத்தி
லிருக்கிற மந்திரிகளில் ஒருவனை யழைப்பித்து ஓ! மந்
திரி! முத்துச்சிவிகை எடுத்துக்கொண்டுபோய் பிலத்து
வாரத்தி னருகில் ஒரு ராஜகுமாரனிருக்கிறானும் அவனை
யழைப்பித்துக் கொண்டுவாவென்று கட்டளையிட்டான்.
பின்பு மந்திரி சில ஏவலாளர்களைக் கொண்டு முத்துச்சி
விகையை எடுப்பித்துக்கொண்டுபோய் இராசகுமாரனைக்
கண்டுமுத்துச்சிவிகையில் அவனை ஏற்றிக்கொண்டுஆதி
சேஷனிடத்து விட்டான். இராஜகுமாரன் ஆதிசேஷ



னுக்கு வணங்கிநின்றான். ஆதிசேஷன் இராஜகுமாரனை
வாரி மார்போடணைத்து பலஆசிகள் கூறி, தன்னுடன்
சமமாக வுட்கார வைத்துக்கொண்டு சிலநேரம் யோக
க்ஷேமங்களை விசாரித்து, பின்பு தன் புத்திரனைவளர்த்த
அருமையைக் குறித்து சிறப்பித்துச் சொல்லுகிறான்:
ஐயா! இராசகுமாரனே! உன் புத்திரன்போல் பாது
காத்துவந்தனை அதுபெரிதல்ல இப்போது என் புத்தி
ரன் உன்னைவிட்டுப் பிரியேனென்று சொல்லுகிறான். நீ
தயவுசெய்து என்புத்திரனை என்னிடத்தில்தானேயிருக்
கச்சொல்லி கட்டளையிடவேண்டுமென்றுவேண்ட, இரா
சகுமாரன் சொல்லுகிறான்: ஓ! நாகேந்திரா! பெற்றவர்
கள் கருத்துக்கிசைந்து அவர்கள் கட்டளைக்குள்ளாகி
யிங்கேதானே இருமென்று சொல்ல, நாகேந்திரன் அக்
கருத்துக்கிசையவே ஆதிசேஷன் மகிழ்ந்து தட்சணம்
அந்தராசகுமாரனுக்கு விருந்திட்டு இரத்தினாபரணங்
கள் வெகுமதிசெய்து, ஓ! இராசேந்திரா! எனது புத்திர
னைப் பாதுகாத்து என்மனமகிழ என்னிடத்தில் விட்ட
தற்கு நான் பிரதி உபகாரமென்னசெய்வேன்? உன்கருத்
துக்கிசைந்ததைக்கேள் தருவேனென்று வினவ, இராச
குமாரன் சொல்வான்: ஓ ஐயா! தங்கள் கிருபையினால்
எனக்கு வேண்டிய பாக்கியமிருக்கின்றது தாங்கள்விரலி
லணிந்திருக்கிற நவரத்தினக் கணையாழியைக் கொடுக்க
வேண்டியதென்று சொல்ல, ஆதிசேஷன் கேட்டு மகிழ்
ந்து தக்ஷணம் தன்கையிலிருந்த கணையாழியைக் கழற்றி
இராசகுமாரன் கையிற்போட்டு ஆசீர்வாதஞ் செய்து,
பின்னுஞ்சில ஆபரணங்கள் கொடுத்து முத்துச்சிவிகை
யிலேற்றி அனுப்பிவைத்தான். நாகேந்திரனுங் கூட
வந்து வழிவிட்டு இந்தமோதிரம் தேவேந்திரனுக்குங்
கிட்டாது உனக்குக் கிடைத்தது பத்திரப் படுத்திக்
கொண்டு வேண்டியவற்றை நினையும்; அதுஉண்டாகும்;
போய்வாரும் இராஜகுமாரா வென்று விடை கொடுத்
துத் தன்பிதாவிடத்துவந்துசேர்ந்தது. இராசகுமாரன்
முத்துப்பல்லக்கை விட்டிறங்கி நாகலோகத்தாரை யனு
ப்பிவிட்டு காட்டில் சிலதூரம் நடந்து இக்கணையாழி
யின் திறத்தை யறியலாமென்று கருதி பரமசிவனை
நினைத்து இக்காடெல்லாம் பஸ்மீகரமாக எறிந்துபோ

கக்கடவ தென்று நினைத்தான். நினைத்தமாத்திரத்தில் இராசகுமாரனிருந்தவிடம் தவிர மற்ற வனமெல்லாம் பஸ்மீகரமாக எரிந்து வெறும்பூமியாயிற்று. உடனே இராசகுமாரன் கண்டு மகிழ்ந்து ஐந்நூறு காதவழி அகலநிகளமுமான ஒரு நகரம் மாடமாளிகை கூடகோபுரமுதலியவையோடு உண்டாகவேண்டுமென்று நினைத்தான். அப்படியே உண்டாயிற்று. உடனே இராஜகுமாரன் கண்டு அந்தநகரத்திற்கு நிஷதபுரியென்று பெயரிட்டு தன்னைப் பாதுகாத்துவந்த நகரத்துக் குடிகள் இங்கு வரவேண்டுமென்று நினைத்தான். பூனையும்தாயும் வந்து சேர்ந்தார்கள். இராசகுமாரன் தன்நகரத்திலிருக்கிற மந்திரி பிரதானி முதலியவர்கள் இங்குவரவேண்டுமென்று நினைத்தான். அப்படியேவந்துசேர்ந்தார்கள். தான் அரசனாகி மகுடாபிஷேகம்பெற்று குடிகளையழைத்து உங்கள் கருத்துக்கிசைந்தபடி உழுது பயிரிட்டுச் சீவனஞ்செய்துவாருங்கள், என்னைப் பாதுகாத்து வந்ததற்குப் பிரதி உபகாரம் இதுதானென்று கூறி, அவர்களுக்கு வேண்டியவற்றை உதவி கிரமமாக இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தான்.

தாய்பார்த்து அப்பா! புத்திசிகாமணியே! இத்தியாதி வைபவங்களும் உனக்கு எவ்விதமாய்க் கிடைத்தது? உரைக்கவேண்டுமென்று கூறிய தாய்க்கு நாகேந்திரனால் கொடுக்கப்பட்ட கணையாழியின் மகத்துவமென்று சொல்லி அரசாளும் நாளையில் சந்திரகாந்த மண்டபத்திற்படுத்து நமக்கு தகுதியானநாயகி உலகில் எவளிருக்கிறாளென்று யோசித்து தன் கியானதிருஷ்டியால் பார்த்தான். அதில் சொர்னபுரி நகரத்தில் சொர்னராசன் குமாரத்தி ரூபவதியாக இருக்கிறது தெரிந்து, நல்ல நிலவாதலால் நடுச்சாமவேளையில் அக்கன்னிகை இங்குவரவேண்டுமென்று நினைத்தான். நினைத்தமாத்திரத்தில் கணையாழியினது மகத்துவத்தால் நித்திரைசெய்கிற இராசகன்னிகை அகஸ்மாத்தாய் இராசகுமாரனிடத்து வந்துவிட்டாள். இராஜகுமாரன் கண்டு மோகங்கொண்டு அவளையணைய அருகிற் சென்றான். இராசகன்னிகை விழித்துப்பார்த்து இராசகுமாரன் அணையவருகிறதையுந் தன் அரண்மனையல்லாதிருத்தலையும்யோ



சித்துச்சொல்லுகிறாள்: ஓ! இராசகுமாரகா! "கிணற்றுத் தண்ணீரை வெள்ளங்கொண்டு போய்விடாது" நான் ஒரு இராசகுமாரனுக்குப் பாரியாளாக வேண்டியதேயல்லாமல் வேறில்லை. ஆகிலும் நீர் அதிகவல்லமைசாலியாக விருக்கிறீர்; நித்திரைசெய்கிற என்னை அகஸ்மாத்தாய் உமதிடத்துக்கு அழைத்துக்கொண்டீர். என்னைப் பலபோறிய மணம்புரிவது உமக்குப்பெரிதல்ல, ஆதலால் என்னை முன்னிருந்தவிடத்துக் கனுப்பியும் நான் அவ்விடஞ்சேர்ந்துதாய்தந்தையர்களை சம்மதிக்கச்செய்கிறேன், நீர் உமது மந்திரிமார்களை அனுப்பிவையும் அவர்கள் வந்தவுடன் அரசனால் மணவோலை உமக்கனுப்புவிக்கச் செய்கிறேனென்று கூற, இராசகுமாரன் சம்மதித்து முன்னிருந்தபடி இராசகுமாரத்திதன் கன்னியாமாடஞ் சேரவேண்டுமென்று நினைத்தான். இராசகுமாரத்தி தன்னிருப்பிடஞ்சேர்ந்து உதயத்திலெழுந்து ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து தாய்தந்தையிடத்தில் வந்து வணங்கிச் சொல்லுகிறாள்: ஓ! புண்ணியசாலிகளே! எனக்குத்தகுந்த இராஜகுமாரனில்லையென்று இதுவரைக்கும் விவாகமில்லாதிருந்தேன், நமது நகரத்திற்கு நூற்றுக்காதவழிதூரத்தில் நிஷதபுரியென்றொரு நகரமிருக்கிறது, அதற்குத் தலைவனாகிய இராஜகுமாரனொருவனிருக்கிறான், அவன் அழகிற் சிறந்தவன்-ஆண்மையி லுயர்ந்தவன்-சத்தியநெறியிற் றலைமை பூண்டவன்-உத்தம குணத்திலோங்கியவள்ளல் நற்றவத் தருமம் நாளும் புரிபவன்-அன்னை பிதாவை அரசனெனத்தொழுபவன் இன்னும் அவனுக்கு மணமில்லை. ஆதலால் என்னை அவனுக்கு மணம்புரிவியுமென்று கூற, தாய் தந்தையர்மகிழ்ந்து அக்கருத்துக்கிசைந்தார்கள். இராசகுமாரத்தி கன்னியாமாடம் சேர்ந்தாள். நிஷதபுரி இராசகுமாரன் சூரியோதயமானவுடன் ஸ்நானஞ் செய்து பூசைமுடித்துஉண்டு ஆடையாபரணாலங்கிர்தனாகிச்சபா மண்டபத்தில்வந்து கொலுவிலிருநது மந்திரிகளையழைத்து மந்திரிமார்களே! இந்நகரத்திற்கு நூற்றுக்காதவழியில் சொர்னபுரியென்றொரு நகரமுண்டு, அதில் ஓர் இராசகன்னிகையிருக்கிறாள் அந்தநகரத்தரசனிடத்திற் சென்று அக்கன்னிகையை எனக்கு மணம்புரிவிக்கப்

பேசி முகூர்த்தம்வைத்து தெரிவியுங்களென் றனுப்பினான். மந்திரிமார் சிலராணுவத்துடன் வெளிப்பட்டுசொர்ணபுரிசென்று அரசனைக்கண்டு தகுந்தமரியாதைசெய்து பெண்கேட்டனர். இராசன் தன் குமாரத்தியை அந்தப்புறத்தி லழைத்து நீ குறித்த இராசகுமார னிடத்திலிருந்து மந்திரிகள்வந்து மணமுகூர்த்தம்வைத்துகொடுக்கச்சொல்லி வினவுகிறார்கள் நீயு முன்னமே சொல்லியிருக்கிறபடியால் முகூர்த்தம்வைத்துக் கொடுத்து மணவோலை யனுப்பிவைக்கிறதா? சொல்லென்று வினவ, இராசகன்னிகை சம்மதிதானென்று கூற, இராஜன் மந்திரிமார்களுக்கு முகூர்த்தம் வைத்துக்கொடுத்து அந்த நாளைக் குறித்துக்காட்டி மணவோலை யொன்றெழுதித் தூதர் கையில் கொடுத்தனுப்பினான். அம்மணவோலையை தூதர்கள் பெற்றுக்கொண்டு, நிடதபுரிக்குவந்து இராஜகுமாரன் கையில் கொடுத்தனர். இராசகுமாரன் தட்சணம் தன் ரத கஜ துரக பதாதிகளோடு தாயையும் பூனையையும் இரதத்திலேற்றிப் பிரயாணமாகிநகரத்தை விட்டு வெளிப்பட்டு காடு மலை வனாந்திரங்களைக்கடந்து சொர்ணபுரி சேர்ந்தான். சொர்ணபுரி ராஜன் எதிர்கொண்டுவந்து தகுந்த மரியாதைசெய்து தன்னரண்மனைக்கு அழைத்துப்போய் நல்ல சுப முகூர்த்தத்தில்கலியாணமண்டப மியற்றி வேதியர் மூலமாய்க் கிரியைகளை நடப்பித்துத் தன் குமாரத்தியைக் கன்னிகாதனமாக இராசகுமாரனுக்கு மணம்புரிவித்துச் சீதனமாக இரத கஜ துரகபதாதிகள் ஆடையாபரணங்கள் கொடுத்து அனுப்புவித்தான். இராசகுமாரனும் இராசகுமாரத்தியும் இரதமேறி மற்றப்பரிசனங்கள் அவரவர்களுக்கு இஷ்டமான வாகனரூடராகி வரத்தக்கின பேர்களுடன் நகரம்சேர்ந்து குடிகள் முதலான யாவருக்குங்களிப்புண்டாக விருந்துசெய்து தான தருமங்களை வழுவாமல் நடத்தி நகர்வலம்வந்து அரண்மனையிற் சென்று தாய் தகப்பன் மனைவி அம்மூவருடன் யாதொருகுறைவுமின்றிச் சுகித்திருந்தான்.

இப்படி யிருக்கிறகாலத்தில் ஒருநாள் இராசகுமாரத்தி தன்கணவனை நோக்கி ஓ! சுவாமி! அடியேன் விடியுமுன்னெழுந்து கடலில் ஸ்நானஞ்செய்து தங்க



ளையும் தங்களை யீன்ற மாதாவாகிய என் மாமியையும் பூசிக்கவேண்டுமே! பள்ளியறைக்குங் கடற்கரைக்கும் ஒரு சுரங்கஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று வினவினாள். இராசகுமாரன் அக்கருத்துக் கிசைந்து கடற்கரைக்கும் பள்ளியறைக்கும் சுரங்க முண்டாகக் கடவதென்று நினைத்தான். நினைத்தமாத்திரத்தில் சுரங்கம் அமைந்தது. இராசகுமாரத்தி உதையமாகிறதற்குள்சுரங்கத்தின் வழியாகச் சென்று கடலில் ஸ்நானஞ்செய்து மாமியாரையும் கணவனையும் பூசித்து நாள்தோறும் வணங்கிவந்தாள். இப்படி சிலகாலஞ் சென்றபின்பு ஒருநாள் இராசகுமாரத்தி உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்து வரும்போது அவள் கூந்தலிலிருந்து ஒரு மயிர் அவளையறியாமல் கடற்கரையில் உதிர்ந்தது. அம்மயிர் பந்துபோல் சுருட்டிக்கொண்டு கடலில் அகப்பட்டுக் கரையிலொதுங்கி யிருந்தது. கொச்சிதேசத்தரசன் வேட்டையாடி அவ்வழியாக வந்தான். அவன் கண்ணுக்குப் பந்துபோல் சுருட்டிக்கொண்டிருந்த மயிர் தோன்றினதை அவ்வரசனெடுத்துப்பார்த்து வியப்படைந்து இம்மயிரே எழுபதுபாகமு மிருதுவா யிருக்கின்றதே இம்மயிரைப்பெற்ற கன்னிகை எவ்வாறிருக்கவேண்டுமென்று கருதிக் காதல்கொண்டவனாகத் தன் நகர மடைந்து மயிர்ப்பந்தை ஓரிடத்தில் வைத்து, இந்த அளகத்தையுடைய கன்னிகையைக்கொண்டுயாராவதுவருவார்களாகில் அவர்களுக்கு என்பூமியிற்பாதிகொடுக்கிறேனெனப் பறையறைவித்தான். அப்பறையோசையைக் கேள்விப்பட்ட அனேகர் அக்கன்னிகையைத் தேடித் திரிந்து வருந்தினவராகினரேயன்றிப் பயனடைந்தவர்களல்ல; அப்படிச் சிலகாலஞ் சென்றபின்பு அந்நகரத்தில் ஒரு கிழவி இச்சேதியைக்கேட்டு நான் அக்கன்னிகையைக் கொண்டுவருகிறேனென்று அரசனிடத்துத் தாம்பூலம் பெற்று அரசன் குறித்த கடற்கரையருகில்வந்து அன்றிரவில் அக்கம்பக்கங்களி லிருக்கும் கட்டைமுட்டைகளைச் சேர்த்து பிணஞ்சுடுவார்போல நெருப்பிட்டு எறிவித்து அழுதுக்கொண்டிருந்தாள் அச்சமயத்தில் தினந்தோறும் உதயத்துக்கெழுந்து கடலில் ஸ்நானஞ் செய்கிற இராசகுமாரத்தி வழக்கப்படி ஸ்நானஞ் செய்து

திரும்பினாள். கிழவி அழுகிற ஓசையைக்கேட்டு அருகிற் சென்று ஓ! அம்மணி! நீயார்? இங்கிருந்து புலம்ப வேண்டிய தென்னவென்று வினவினள். கிழவி என்னடி மகளே! நீயென்ன வேற்று மனுஷிபோலே வசனிக்கிறாய்? இப்போ என்னுட னிருந்து பிரிந்துவிட்டாய் தெய்வானுகூலத்தினால்பிழைத்து மறுபடியும் இங்குவந்தாய்; இதற்குள் என்னை மறந்துவிட்டாயோ வென்று கட்டிக்கொண்டு புலம்பினாள். அந்த இராசகுமாரத்தி கண்டு ஓ! ஓ! இக்கிழவிக்கும் நம்மைப்போல பெண்ணிருந்து இறந்துவிட்டதா யிருக்கவேண்டும், அவளை யிவ்விடத்தில் வைத்துத் தகனஞ்செய்ததாக யிருக்கவேண்டும், அவள் நம்மைக் கண்டமாத்திரத்தில் தன்பெண்ணென்று கருதி நம்மைத் தழுவிப் புலம்புகிறாளென்று நிதானித்துச் சொல்லுகிறாள்: ஓ! அம்மணி! மனிதரைப்போல மனிதரிருப்பதுண்டு; ஆகிலும் நான் இராசகுமாரத்தியாக விருந்தாலும் தற்காலத்தில் உனக்குப் பெண்ணாகவே நானிருக்கின்றேன்; உன் வரலாற்றைச் சொல்லென்று வினவினள். கிழவி சொல்லுகிறாள்: ஓ! அம்மணி! நானும் என்குமாரத்தியுமாக தேசசஞ்சாரஞ் செய்யவந்தோம் வந்தவிடத்தில் இங்கு என்மகளிறந்துவிட்டாள், அவளைவிட வேறொரு மனிதரில்லை அவளைத் தகனஞ் செய்துவிட்டுத் தனியே நின்று புலம்பியிருக்கிற சமயத்தில் தெய்வம் உன்னைக் கூட்டிவைத்ததென்று சொல்ல, இராசகன்னிகை கேட்டுச் சொல்லுகிறாள்: ஓ! அம்மணி! உன்மகள் வேறு நான் வேறல்ல என்னிடத்தில் இருக்கிறையோ? வென்று வினவினள். கிழவி அக்கருத்துக் கிசைய, இராசகுமாரத்தி மகிழ்ந்து ஓ! அம்மணி இன்றையத்தினம் நீயிங்கிரு நாளையத்தினம் வந்து உன்னை அழைத்துப்போகிறேனென்று சொல்லி வந்து மாமியாரையும்மணவாளனையும் நித்தம்வணங்குகிறபடி வணங்கி பின்பு மாமியாரிடத்திலும் புருஷனிடத்திலும் கிழவியின்சேதியைத் தெரிவித்து, வர்கள் சம்மதியின்பேரில் மறுநாளுதயத்தில்ஸ்நானஞ்செய்து வருகிறபோது கிழவியையழைத்துக்கொண்டுவந்து தன்னிடத்தில்வைத்து பாதுகாத்துவந்தாள். இப்படிச் சில காலஞ் சென்றபிறகு கிழவி தனியேயிருந்து நாம் வந்த



வேலையென்ன? இங்கே சும்மாயிருந்தால்கொச்சிராஜன் இரவும்பகலும் நமது வரவுக்கெதிர்பார்த்திருப்பானே? இந்த ராஜகுமாரத்தியை எவ்வாறு கொண்டேகலாமென்று யோசித்துக்கொண்டிருக்கிறகாலத்தில் ஓர் நாள் இராசகுமாரன் தன்மனைவி தாய்க்கிழவி இவர்களைவைத்துக்கொண்டு இக்காலத்தில் அருமையான பழவர்க்கமென்ன? அதனைச்சொல்லுங்கள் நானழைப்பிக்கிறேனென்றான். அக்காலையில் மாங்கனிஅரிதாகையால்மாங்கனி வேண்டுமென்றனள். தட்சணம் இராசகுமாரன் கணையாழியை விரலிலிட்டு மாங்கனி வேண்டுமென்று நினைத்தான். அதிக மதுரமான மாங்கனி அகஸ்மாத்தாய் கொத்துக்கொத்தாய் வந்துவிழுந்தன. யாவரும் புசித்துஆனந்தமடைந்தனர். கிழவிகண்டு அந்தக்கணையாழியில்தானிருக்கிறது சூட்சம். அக்கணையாழி நமக்குக் கிடைக்குமாகில் இராஜகுமாரத்தியை இலேசில்கொண்டு போகலாமென்றுகருதி இரண்டொருதினம் கழிந்தபின் தலைநோகுதென்று பாசாங்குபோட்டு நிறையமுக்காடிட்டுப் படுத்துக்கொண்டாள். இராசகுமாரத்தி கண்டு ஓ! அம்மணி! உனக்கென்னநோவு? சொல்லென்று வினவ, மகளே! என்னமோ அகஸ்மாத்தாய் எனக்குதலைநோவு வந்தது என்னசெய்வே னென்றாள். இராஜகுமாரத்தி கேட்டு இதை அரசனுக்குத் தெரிவித்தாள். கணவன் சில பண்டிதர்களை யழைப்பித்து தலைநோய்க்கு அவிழ்தங் கொடுங்களென்று கட்டளையிட்டான். பண்டிதர்கள் திவ்வியமான அவிழ்தங்களைக் கொடுத்தார்கள். அதைக் கிழவி வாங்கித் தின்றவள்போல அபிநயித்து மருந்தை எறிந்துவிட்டுத் தலைநோய் தீரவில்லையென்று ஓவென்றலறிக்கொண் டிருந்தாள். இராசகுமாரத்தி வந்து ஓ! அம்மணி! தலைவலிஎன்னமாயிருக்கிறதென்றாள். கிழவி ஓ வென்றலறி அம்மணி தலைநோய் தீரவில்லை என்ன செய்வேனென்றழுது இராசகுமாரத்தியை ஓர் அறையிலழைத்துப்போய் அம்மணி மருந்தென்னமாயமென்ன உன்கணவன்கையி லிருக்கிற கணையாழியைவாங்கிவந்து சற்றுநேரம் என்விரலி லிடுவையாகில் தலைநோவு நீங்கும் அதைவிட வேறேயவிழ்தமில்லையென்றாள். இராசகன்னிகை கேட்டுச் சொல்லுகிறாள் ஓ! அம்மணி! அர

சன்கையிலிருக்கிற கணையாழி எனக்குக்கிடைக்கும்வகை எப்படி ஒருநாளும் ஒன்றுவேண்டுமென்று நான்கேட்டறியேனேயென்றாள். கிழவிசொல்லுகிறாள்: அடிபோடி மகளே! நான் வேண்டுமென்றால் அக்கணையாழியை வாங்கிவருகிறது ஒருபெரிதா! என்மகளானால் இப்படிச் சொல்லுவாளோ வென்றாள். இராசகன்னிகை கேட்டு மனவருத்தமுற்று, ஓ! அம்மணி அரசனுக்குக் கோபம் வராமலிருக்கவும் அக்கணையாழி எனக்குக் கிடைக்கவும் ஒருதந்திரஞ்சொன்னால் அவ்வாறு நடந்து கணையாழி வாங்கிவந்து சற்றுநேரம் போட்டு வைக்கிறேனென்று கூறினள். கிழவிசொல்லுகிறாள்: ஓ! அம்மணி! இன்றையதினம் இரவில் பள்ளியறைசேர்ந்தபின்பு அரசன் உன்னிடத்திற் கொஞ்சி விளையாடவருவான். அவ்வேளையில் நீ பிணங்கிக்கொள்; மாதர் பிணங்குவது சகசமாதலால் அரசன் பிணக்கைத் தீர்க்க இனிய வசனஞ் சொல்லுவான். நீ அந்தவேளையில் நீர்விரலில் அணிந்திருக்கிற 'மாதர்மயங்கு மோதிரத்தை, ஒருநாளிலாவது எனக்குப் போட்டு அழகுபார்த்தையா வென்று கேள். அரசன் தட்சணம் தன்கையி லிருக்கிற கணையாழியைக் கழட்டி உன்கையிலிடுவான்; நீ அதை வாங்கிக்கொண்டு நீர்க்கு விலகுகிறவள்போல் எழுந்துவந்து கணையாழியை என் கையிற் கொடுத்துவிட்டு நீ பள்ளியறைசேர். நான் உதயத்துக்கு உன் கையில் கணையாழியை கொடுத்துவிடுகிறேனென்று கூற, இராசகன்னிகை அக்கருத்துக்கிசைந்து இரவில் பள்ளியறை சேர்ந்தாள். இராசன்வந்து காமமீறி சரசஞ்செய்ய இராசகுமாரன் அருகில் நெருங்கினன். இராசகன்னிகை பிணங்கினள். இராசன் பிணக்குத்தீர்க்க சில இனிய வசனஞ் சொல்லி ஓ மாதரசே! உனக்கு என்னகுறை? அதைத் தெரிவித்தால் அக்குறையை நீக்குகிறேனென்றான். இராஜகுமாரத்தி இதுதான் தருணமென்று, கருதி ஓ சுவாமி! உமது கையிலிருக்கிற கணையாழியை ஒருநாளிலாவது என்கையிற்போட்டு அழகு பார்த்தீரோ வென்றாள். அரசன் சிரித்து காலவித்தியாசத்தால் முன்பின் யோசிக்காமல் தட்சணம் கணையாழியைக் கழற்றி அவள் கையி லிட்டான். இராஜகன்னிகைகணையாழியைப்பெற்றுக்கொண்



டபின்பு நீர்க்கு விலகுகிறவள்போல்வந்துகிழவிகையில் மோதிரத்தைக் கொடுத்துவிட்டு பள்ளியறை சேர்ந்து கணவனோடு சுகித்திருந்தாள். கிழவிமோதிரத்தைக் கையிலிட்டுக் கொண்டு தன் நகரத்திற்குப் போகவேண்டுமென்று நினைத்தாள். உடனேகிழவியும் நினைத்தமாத்திரத்தில் தன இருப்பிடம்வந்து அரசனிடத்திற் சென்று அரசனைக்கண்டு, ஓமகாராஜனே! நீர் நினைத்தபடியாக அக்கன்னிகை கிடைக்க ஒருகணையாழி கொண்டுவந்தேன் இந்தாரும் இந்தக்கணையாழியை கையிற்போட்டுக் கொண்டு அக்கன்னிகையை நினையும்; அக்கன்னிகை உன்னிடம்வந்து சேருவாளென்றாள். இராசன்கணையாழியை வாங்கி கையிற் போட்டுக்கொண்டு இராசகன்னிகை இவ்விடம் வரவேண்டியது; இராசகன்னிகையின் கணவனுக்கு வெறிகொள்ளக் கடவது; அந்த நகரம் எரிந்துபோகக் கடவதென்று நினைத்தான். அப்படி நினைத்தமாத்திரத்தில் புருஷனுக்கு அரைப்பு தேய்த்துக்கொண்டிருக்கிற இராஜகன்னிகை கொச்சிராசனிடத்து அடைந்தாள், அரசனுக்கு வெறிபிடித்தது, அந்நகரம் சாம்பலாகவும் எரிந்துபோய்விட்டது. இராசன் வெறியேறியிருந்தாலும் பூனைக்குட்டியைவிடாமல் அதனை யெடுத்துக்கொண்டு நகரங்கடோறுஞ் சென்று பிச்சையெடுத்துச் சீவனஞ் செய்துக்கொண்டு பிரமைகொண்டவனாகத் திரிந்தான். இங்கே இராசகுமாரன் ஓஓ! நமக்கு நம்மால் கேடுவந்ததேயன்றி வேறொருவரால் வந்ததேயல்லவென்று தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு தனக்குள் ஒன்றையோசித்து அதற்கு ஓர்தந்திரஞ் செய்யவேண்டுமென்று நினைத்துமிருந்தான். கொச்சிராசன் இராசகன்னிகையைக் கண்டு காதல்மீறி மேல் விழுந்து விளையாடவந்தான். இராசகன்னிகை கண்டு சொல்லுகிறாள்; ஓ ராசேந்திரா! நீயே மணவாளன், நானே உனக்கு மனைவியென்று பிரமன விதித்திருந்தான் ஆதலால் நான் அகஸ்மாத்தாய் உன்னிடத்திற்கு வந்தேன்; இனி 'ஆக்கப்பொறுத்தது ஆறப்பொறுக்காதா', எட்டுநாளைக்கு எனக்கு ஓர் விரதம் உண்டு. இந்த எட்டு நாளைக்கு எனக்கு வேண்டியவற்றைக் கொடுத்தால் எட்டா நாள் வன போசனஞ் செய்

வித்து ஒன்பதாநாள் உன் கருத்தின்படி நடக்கிறேனென்று கூறினள்.

அரசன் அப்படியே சம்மதித்துத் தன்சமுகத்திலிருக்கும் காருபாரிகளுக்கு இந்த இராச குமாரத்தி கேட்கின்றவற்றை யெல்லாம் கொடுத்து வாருங்களென்று கட்டளையிட்டுத் தன் அரசு செலுத்தி கிழவிக்கு வேண்டியவற்றை யுதவி, தன் தாயைப்போல் பாதுகாத்துவந்தான். இராசகுமாரத்தி தனக்கு வேண்டியவற்றை தினம் ஆயிரம் பதினாயிரம் பொன்வாங்கி அன்னதானம் பரோபகாரம் கன்னிகாதானம் முதலிய முப்பத்திரண்டு அறமுஞ் செய்துவந்து, எட்டாநாள் ஏழைபரதேசிகள் பித்தன் போக்கன் முதலான யாவருக்கும்இன்றையதினம் போசனமென்று பறையறைவித்து அன்னசத்திரத்தில் பலவகைபதார்த்தத்தோடுசமையல்செய்து யாவரையும் அழைப்பித்து பந்தியாக உட்காரவைத்து இலைபோட்டு வட்டித்து வருகிறபோது வெறிகொண்ட அரசன் அரைப்பு தலையோடு பந்தியில் உட்கார்ந்து இலைபோடுகிறவனைப் பார்த்து இப்பூனைக்கு இலைபோடென்று கேட்டான். இலைபோடுகிறவர்கள் சீ சீ பூனைக்கென்ன யிலையோவென்று மறுத்தார்கள்; வெறிகொண்ட அரசன் கூடாது அவசியம் இலைபோடவேண்டுமென்று கேட்டான். இந்தச் சங்கதி இராசகுமாரத்தியறிந்து இலைபோடும் ஏவலாளிகளை யதட்டி பூனையும் ஒரு சீவன்தானே, அதற்கும்யிலைபோடென்றுஉத்திரவு செய்தபிற்பாடு அவள்தாரமாகயிருந்துக்கொண்டுவெறிகொண்ட இராசகுமாரனுக்கும் பூனைக்கும் திருப்தியாக வட்டித்துவரக் கட்டளையிட்டுக்கொண்டிருந்தாள். எல்லோரும்போசனஞ்செய்து கைகால் சுத்திசெய்துதாம்பூலம் தட்சணைகளை வாங்கிக்கொண்டு அவரவர்கள் கருத்துக்கிசைந்த யிடத்திற்குச் சென்றார்கள். இராசகுமாரத்தியும் அன்றையத்தினங் கொஞ்சம் அமுதுகொண்டு அந்தப்புரத்திலிருந்தாள். வெறிகொண்ட அரசன் ஏழுநாளாக நல்லன்னம் புசியாதவனாதலால் எட்டாநாள் இராசகுமாரத்தியால் கிடைத்தபல பதார்த்தத்தோடு கூடிய உணவைப் புசித்து இளைப்பு மேலிட்டுக் கைகால் சுத்திசெய்யாமல் அந்தக் கொச்சிதேசத்தரசன்



மனையின் பின்புறவாசற் றிண்ணையில் மல்லாந்துபடுத்துப் பூனையை மார்பிலேத்திக்கொண்டு நித்திரைபோய் விட்டான். அன்ன சத்திரமும் அரசன் அரண்மனைப் பின்புறவாயலும் ஒன்றாதலால் அன்னசத்திரத்தில்போசனஞ்செய்த பரிகலமெல்லாம் அரண்மனை வாசலின் அருகிலெடுத்துப் போட்டிருந்தது. அன்று இரவில் எலிகளெல்லாம்வந்து அப்பரிகலத்தைத்தின்றுக்கொண்டிருந்தது. அரசன் எலிகளைப்பார்த்து ஓ ஓ! எலிகளே! நல்ல பதார்த்தங்களாக இருக்கிறவற்றில் சிலதுகொண்டுவாருங்களென்று கூறிற்று. எலிகள் அரசன்கட்டளைப்படி நல்ல உருசியுள்ள பதார்த்தங்களை வாயினாற்கவ்விக் கொண்டுவந்து கொடுத்தன. எலியரசன் அதனைப்புசித்துக்கொண்டிருக்கிற சமயத்தில் வெறிகொண்ட ராசன் மார்பிலிருக்கிற பூனைகண்டு அந்த எலிராசனைப் பிடிப்போமாகில் நமது இராசனுடைய கணையாழி வருமென்று கருதிப்போய் அந்த எலியை நோகாமல்பிடித்துக் கொண்டது எலிராஜன் பயந்து அபயம் அபயமென்று கூவிற்று. அதனைப்பார்த்துப்பூனை சொல்லுகின்றது:—

ஓ எலிராசனே! நீ அபயமென்று கூவினதிற் பயனில்லை; இவ்வூர் அரசன்கையில்என் அரசன்நவரத்தின கணையாழிமோதிரம் இருக்கின்றது. அதனை எவ்விதத்திலாவது உனது சேனைக்குச் சொல்லி வரவழைத்தால் உன்னை விட்டுவிடுகிறேனென்று கூற, எலிராசன் அக்கருத்துக்கிசைந்து தட்சணம் தன் சேனாசமுத்திரத்தை யழைத்து இவ்வூர் இராசனிடத்திலிருக்கின்ற நவரத்தினக் கணையாழியைக் கொண்டுவாருங்கள். நீங்கள் கணையாழியைக் கொண்டு வராமற்போனால் என்னுயிருக்குக் கேடுவருஞ் சொன்னேன்; விரைவில் நவரத்தினக்கணையாழியைக் கொண்டுவாருங்களென்று கண்டிப்பான கட்டளையிட்டது. எலிகளெல்லாம் அரசன் அரண்மனையிற் சென்று எங்குந்தேடி பள்ளியறைக்குள் வந்து பெட்டிகளையெல்லாம் சோதித்து வருகிறபோது கொச்சிராசன் அக்கணையாழியை பொன்னாற்செய்த கொலுசில் மாட்டித் தன்மஞ்சத்தில் கட்டிவைத்து நித்திரைபோய் விட்டான். எலிகள் கண்டு ஆனந்தங்கொண்டு மெதுவாக லகுபாய்ந்து அச்சங்கிலியை யிழுத்ததுகள். அசையாம

லிருக்கவே தங்கள் கூட்ட மனத்தையுங் கூட்டிவந்து வல்லமையினாலே யிழுத்துப் பற்களினாலே கடித்துக் கணையாழியைக் கவ்விவந்து தங்கள் அரசன்முன் வைத்தது. பூனை எலியரசனை விட்டு நீங்கள் சுகமாக உங்கள் இஷ்டப்படி யிருங்களென்று சொல்லி கணையாழியைக் கவ்விக்கொண்டு அரசன் மார்பில் வந்து உட்கார்ந்து மோதிரத்தை மார்பில் வைத்தது அரசன்விழித்துக் கணையாழியையும் பூனையையும் பார்த்தான். அப்போது பூனை பார்த்து ஓ ஐயா! இந்தமோதிரத்தை ஒரு கிழவி மோசஞ்செய்து வாங்கிக்கொண்டு அவள் இவ்வரசனிடத்திற் றந்தாள். அரசன் விரலிலணிந்து இராசகுமாரத்தியை அழைப்பித்துக்கொண்டு தங்களுக்கும் வெறிபிடிக்கச்செய்தான். இராசகுமாரத்தியும் அவ்வரசனை மோசஞ் செய்யக் கருதி எட்டுநாள் விரதம் எனக்கு உண்டென்றுசொல்லி எட்டாநாள் விருந்திட்டாள். விருந்தில் மிருந்தபரிகலத்தை எலிகள்புசிக்கவந்தது. அதில் எலிராசனை நான்பிடித்து எலிகளாலிந்தக் கணையாழியை வரவழைத்தேன்; நீர் இக்கணையாழியை எடுத்துக் கையிலணிந்து முன்போல் நமது இருப்பிடம் போவோம் வாருமென்று கூற, அரசன் கேட்டு மிக மகிழ்ந்து தட்சணம் தன் இருப்பிடத்திற்குவந்து முன்போல் நகரமாகவேண்டுமென்று நினைத்தான், எரிந்துபோன நகரம் முன்போல சகல ஜனங்களோடும் பிரகாசித்தது. என்மனைவி யிங்கு வரவேண்டுமென்று நினைத்தான். ராசகன்னிகையும் வந்துசேர்ந்தாள். கொச்சிராசனுக்கு வெறியேறக்கடவது அந்நகர் சாம்பலாகக்கடவதென்று நினைத்தான். அப்படியே அவ்வரசனுக்கு வெறி பிடித்து நகரம் சாம்பலாயிற்று. அக்கிழவி இங்கு வரவேண்டுமென்று நினைத்தான். கிழவியும்வந்துசேர்ந்தாள். தாயார் மனைவி கிழவி மந்திரிமார் குடியானவரையும் வைத்துக்கொண்டு மோதிரம்வந்த வரலாற்றையும் அதனால் வந்த வாழ்வையும் அம்மோதிரத்தை கிழவி மோசஞ்செய்து வாங்கிப்போன விதத்தையம் பின்பு மோதிரம் வந்தவழியையுஞ் சொல்லி கிழவியை சுண்ணாம்புக் கால்வாயில் வைத்துக் கொளுத்திப் போட்டு மனைவியைப்பார்த்து இனிமேல் இவ்வகைப்பட்ட துற்



செய்கையிற் பிரவேசிக்காதேயென்று திட்டஞ்செய்து முன்போல் நிஷ்தபுரி நகரில் வாழ்ந்துக்கொண் டிருந்தான். அவ்வளவு வல்லமையுடைய இராசகுமாரனல்லவோ உன்னை மணம்புரியவேண்டுமென்றனன். சூரிய னுதயமாயினான். மந்திரிகுமாரன் இராசகன்னிகைக்கு விடைகொடுத்து அரண்மனைக்குச் சென்றான். இராசகுமாரத்தியும் அந்தப்புறத்திற்சென்று நித்தியக்கடனை முடித்துக்கொண்டாள்.

இரண்டாம்நாள்கதை-முற்றிற்று.

---

மூன்றாம்நாள்

## தாயைப் பெண்டாளவந்த இராஜகுமாரன் கதை

மூன்றாம்நா ளிரவில் மந்திரிகுமாரன் பள்ளியறை சேர்ந்தான். இராசகன்னிகைக ளிருவரில் மூத்தாள் பள்ளியறைவந்து சேர்ந்து காதல்மீறித் தன் கணவனிருக்கு மஞ்சத்திலிருக்க வந்தாள். மந்திரி குமாரன் கண்டு இராசகுமாரத்தியைப் பார்த்து ஓ மாதுசிரோன்மணி! ஒருசிறியகதை சொல்லுகிறேன், அதை நீ கேட்டபின்பு இருவரும் கூடிக் கலந்து அணைவோமென்று கூறிச்சொல்லுகின்றான்: கேளும் பெண்ணே! மதுராபுரியென்கிற நகரத்தில் மாதமும்மாரி பெய்யவும், தானதருமங்களோங்கவும், மன்னியபயிர்கள் தழைக்கவும் துன்னிய வுயிர்கள் பிழைக்கவும், மாதவங்கள் செழிக்கவும், கோயில்கள் குளங்கள் செழிக்கவும், மனுநீதிகுன்றாமல் அரசுபுரிந்துவரும் மதனகிரிராசன் தன் மனைவியோடுசுகித்துப் பாதுகாத்துவரும் நாளில் சகல பாக்கியமும் நிறைந்து புத்திரசந்தானம் இல்லாமையால் மனமகிழ்ச்சி குறைந்து வாடியகாலையில் தெய்வகடாக்ஷத்தால் ஒரு புத்திரனைப் பெற்றார். அப்புத்திரன் சர்வலோக அதிகாரியாகப்பட்டவனாவும் அரசனைவிட ரூபசௌந்தரியமுடையவனாகவு மிருந்தான். அரசன் கண்டு அப்புத்திரனுக்கு சகல நூல்களையுங் கற்பிக்குங் காலத்தில் கற்பித்து ஆயுதப்பயிற்சி செய்யுங்காலத்தில்சகலாயுதப்பயிற்சியும்செய்வித்து, இளவரசுபட்டத்துக்குத் தக்க பருவகாலத்தில் புத்திரனுடைய வல்லமைக்குத்

தகுந்த ரூபசவுந்தரியமுள்ள மனைவி வேண்டுமென்று
தன் புத்திரனைப்போல் ஒருபட மெழுதி சில தூதர்க
ளிடத்து கொடுத்தனுப்பிவைத்தான். தங்கள் நாடுநக
ரம் முதலியவற்றிற்சென்றுமுடிவில்மேற்றிசையிற்செல்
வோமென்று கருதி மேற்குத்திசைக்கு வருகிறபோது
அவ்வழியில் ஒரு ஆறு தோன்றிற்று. தூதர்கள்ஆற்றங்
கரையி லிறங்கினர். அவ்விடத்தில் விசயநகர மென்
றொரு நகரம் உண்டு. அந்நகரத்துக்கு அதிகாரியாகிய
வீரபோகவசந்தராசன் தனக்குப் புத்திரனில்லையென்று
பக்தியோடு தேவதாபூசைசெய்துவந்தான். தெய்வானு
கூலத்தால் ஒரு புத்திரியைப் பெற்றான்.அந்தப் புத்திரி
பூவுலகிலுள்ள மாதர்களின் அழகு திரண்டொரு உருக்
கொண்டாற்போல அதிகசௌந்தரியமுள்ளவளாயிருந்
தாள். அரசன் குமாரத்தி பருவகால மடைந்தவுடன்
அக்கன்னிகையின் சௌந்தரியத்துக்குத் தகுந்த அழ
குள்ள புருடனைத் தேடவேண்டுமென்று தன் புத்திரி
யைப்போல் ஒருபடமெழுதித் தூதர்கள் கையில் கொடுத்
தனுப்பிவைத்தான். அத்தூதரும் ஆற்றங்கரையில் வந்
திறங்கினர். இருபடத்தாருங் கலந்து ஒருவர்படத்தை
ஒருவர்பார்த்து மகிழ்ந்தவர்களாகிப் படத்தை மாற்றிக்
கொண்டு பிள்ளைபடத்தைபெண்ணுக்கு உரியவரிடத்துச்
சேர்த்தார்கள். இரண்டு அரசர்களும் பார்த்து மகிழ்ந்த
வராகி ஒருவர்க்கொருவர் கடித முன்னிலையிற் பேசிக்
கொண்டும் ஒருமுகூர்த்தம் வைத்துஅம்முகூர்த்தத்தில்
பிள்ளைக்குடைய அரசன் புத்திரனைச் சிங்காரித்து இரத
கஜ துரக பதாதியுடனே வெளிப்பட்டு பெண்ணுக்
குடைய அரசன் நகரம்போய் சேர்ந்தான். பெண்ணு
டைய தகப்பன் எதிர்கொண்டு தனது நகரத்தைச்சொர்
க்கலோகம்போல் அலங்கரித்து கல்யாண மண்டப
மியற்றி குடிகளும் சகலராசர்களு மறிய நியமித்த
முகூர்த்தத்தில் வேதவேதியரால் கலியாண மண்டப
மியற்றித் தன் குமாரத்தியை மதனகிரிராசன் புத்திர
னுக்கு மணஞ்செய்துவைத்தான். மணம்நிறைவேறின
பின் யாவருக்கும் தானதருமங்களைச் செய்து அரசர்க
ளுக்குத் தகுந்த மரியாதைகளைச் செய்து அவரவர்களை
யனுப்பிவிட்டான். பின்பு மதனகிரிராசன் அந்நக



ரத்தில் சிலகால மிருந்தான். இராசகுமாரத்தியும் இரா
சகுமாரனும் மதனும் ரதியும்போற் கூடிக்கலந்து சில
காலஞ் சென்றபின்பு தன் தந்தையோடு தானும் தன்
மனைவியும் மதுராபுரிக்குவந்து சேர்ந்தார்கள். மதனகிரி
ராசன் தன்குமாரனையும் மருமகளையும் நகர்வலமாகச்
செய்து தானதருமங்களைச் செய்துஅரண்மனை சேர்ந்து
சிலநாள் சென்றபின்பு தன் குமாரனும் மருமகளும்
அரண்மனையிலிருந்தால் நம்மிடத்துக்கு வருகிற அரசர்
கள் கண்டால் திருஷ்டிதாங்குமென்று கருதி,வேறொரு
விடுதி புதுக்கி அதில் சகல பதார்த்தங்களையும்ஏவலாளி
களையும் வைத்துத் தன்குமாரனையும் மருமகளையும்அந்த
உப்பரிகையில் குடியேற்றினன். இராசகுமாரனும்இராச
குமாரத்தியும் ஆகிய இருவரும் அவ்வுப்பரிகையிற் சேர்
ந்து இரதியும் மதனும்போலச் சுகித்திருந்தார்கள். இப்
படி யிருக்கிற காலத்தில் ஒருநாள் சந்திரோதயமான
வுடன் நிலாமணி முற்றத்திலிருக்கிற சப்ரகூடமஞ்சத்
தில் இருவரும் சயனித்து நித்திரைசெய்தார்கள். அன்
றையதினம் நடுச்சாம வேளையில் சொர்க்க லோகத்தி
லிருந்து சப்தகன்னிகைகள் கடலில் ஸ்நானஞ்செய்ய
அவ்வழியாக வருகிறவர்கள் இராசகுமாரனையும் இராச
குமாரத்தியையும்பார்த்து ஆ ஆ ! இந்தஇராசகுமாரன்
மன்மதன்போலிருக்கின்றான், இவ்வகைப்பட்ட புருஷ
னையல்லவோ கூடவேணும்,மற்றபுருஷரைக் கூடுவதிற்
பயனென்ன வென்று சடலாடி வரும்போது காதல்
கொண்டவளாகி நீ நான் என்றுமுந்திமுடிவில் மூத்தவ
ளாதலால் அவள் முந்தி கூடுகிறது; தன்பின்பு வரி
சைப்படி வாரத்துக்கொருவர் கூடுகிறது என்று முறை
போட்டுக்கொண்டு மூத்தவள் வந்து இராசகுமாரத்திக்
குத் தெரியாமல் ராசகுமாரனை ஒரு பூமாலையாகச்செய்து
கழுத்திலணிந்து தன் இருப்பிடம் வந்துசேர்ந்து அன்
றையத்தினம் தன்காதலை தணித்துக்கொள்ள, பூமாலை
யை முன்போல இராசகுமாரனுக்குக் கூடி மற்றநாள்
இளையாளிடத்துக்கு அனுப்பினாள். மற்ற கன்னிகள்
அனைவரும் தங்கள் இஷ்டப்படி இராசகுமாரனைச்
சேர்ந்து வந்தார்கள். இங்கே இராசகுமாரத்தி நித்தி
ரைதெளிந்தெழுந்து பார்த்தாள் பக்கத்திற்படுத்திருந்த





கணவனைக் காணாதவளாகி மற்ற அறைகளில் தேடினள். அங்குங்காணாதவளாகி மனவருத்தமுற்று தாதிகளையும் காவலாளிகளையும் கேட்டாள். தாதிகளும் காவலாளிகளும் அறியோமென்று கூறவே இராசகுமாரத்தி தூதர்களால் இராசகுமாரன் காணாதசேதியை அவள் மாமனாருக்குத் தெரிவித்தாள். அரசன்கேட்டு கிலேசமுற்று தூதர்களையனுப்பி நாடு தேசம் காடு மலைவனம் முதலியவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்துவரக் கட்டளையிட்டு மருமகளிடத்துவந்து மருமகளுக்குத் தேறுதல் சொல்லிப்போனான். தேடப்போன தூதர்கள் வந்து எந்தநாட்டிலும் உமது புத்திரனில்லையென்றார்கள்.

அரசன்கேட்டுத் துக்கசாகரத்திலழுந்தி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். கன்னிகைகள் தாங்கள் விதித்த முறைப்படி ஆளுக்கொருநாளாகக் காதலைத்தணித்துக்கொண்டு சக்களத்தியாகிய இராசகன்னிகைக்குமொரு நாள் நியமித்துத் தாங்கள் ஸ்நானஞ்செய்யவருகிறபோது இராசகுமாரத்தி யிடத்தில்விட்டு அந்த இராசகுமாரத்தி அதிக நித்திரையாயிருக்க நீறு மந்திரித்துப் போட்டு ஸ்நானஞ்செய்து போகிறபோது இராசகுமாரனை முன்போல மாலையாக்கிக்கொண்டு சொர்க்கலோகம் போவார்கள். இப்படி நடந்துவருங்காலத்தில் இராசகுமாரத்தி கர்ப்பவதியானாள், தாதிகள்கண்டு ஆச்சரியங்கொண்டு இது என்னமாயம்? புருஷன் வருகின்றதற்கு வழியில்லாமல் கட்டுங்காவலாயிருக்க, இந்த உப்பரிகையில் இருந்த இராசகன்னிகை கர்ப்பவதியான காரணம் என்னவென்று ஐயமுற்று, இச்சேதி அரசனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு அரசனிடத்து வணங்கி ஓய்சுவாமி! தங்கள் மருமகள் அகஸ்மாத்தாய் கர்ப்பவதியாயிருக்கிறாளென்று சொல்ல, அரசன்கேட்டுதிடுக்கிட்டு அதிககவலைபெற்றிருக்கிற நமது மருமகள் கர்ப்பவதியா யிருக்கிறாளென்றால், இனி நமக்கு அதைவிட யிழிவென்ன விருக்கிறது; இனி அரைமாத்திரப் போதாவது வைத்துக்கொண் டிருக்கலாகாதென்று உறுதிப்பாடு செய்துக்கொண்டு உப்பரிகைக்குவந்து மருமகளைக் கண்டு, கணவனை நீங்கிய உனக்கு கர்ப்பந்தரித்தது எவ்வாறு? அதனைத் தெரி

விக்கவேண்டுமென்று வினவினன். அவள் ஒன்றும் அறியாதவளாதலால் நானென்று மறியேனென்று உரைத்தாள்.

அவ்வாக்கியத்தைக் கேட்டு அரசன் கடுஞ்சினமடைந்து உப்பரிக்கைவிட்டு வெளிப்படுத்த தன் அரண்மனைக்குவந்து ஏவலாளிகளை யழைத்து என் மருமகளைக் கண்ணைக்கட்டி காட்டில் விட்டுவாருங்களென்று கட்டளையிட்டான். ஏவலாளிகள் இராசகுமாரத்தியைக் கட்டி காட்டில் விட்டு வந்தார்கள். இராசகுமாரத்தி புலம்பி கண்கட்டை யவிழ்த்துக்கொண்டு காடு மலைவனாந்திரங்களில் சுற்றி காய் கனிகளைத் தின்று பசியை யடக்கிச் சில காலம் அப்படியிருந்து பிறகு எந்தவூரையாவது சேர்வோமென்று கருதி வருகிறபோது, ஒருகிளைவழிதோன்றிற்று, அவ்வழியாக வரும்போது மதுராபுரியிலிருக்கும் தாசிக்கு ஓர் குமாரத்தி, அவள் அதிக ரூபவதியாயிருந்து தாயின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தன் மரபுத்தொழில் செய்துவந்து அகஸ்மாத்தா யிறந்துவிட்டாள். அப்படி யிறந்தவளைத் தாய்கண்டு மனவருத்தமுற்றுப் புலம்பிஅவளை யெடுத்துவந்து தகனஞ்செய்து வீட்டுக்குப்போய் மறுபடியும் புத்திரசோபத்தால்வந்து மகள் உடல் எரிகிறதைக்கண்டு ஓரிடத்திலுட்கார்ந்து புலம்பிக்கொண்டிருந்தாள். இந்தப் புலம்பலோசையும் மயானத்தி லெரிகிற சோதியும் இராசகுமாரத்திக்குத் தோற்றப்பட்டது. இராசகுமாரத்திகண்டு ஒருசெந்தீயும் அழுகுரலுந் தோற்றப்படுகிறது. அங்குசென்றால் ஊராருகிலிருக்குமென்று கருதி அவ்விடத்திற்கு வந்தாள். அது மயானமாக யிருப்பதைக்கண்டு அழுதுக்கொண்டிருக்கிற கிழவியிடத்தில் வந்து நீ யாரம்மா? இந்த நடுச்சாமவேளையில் இங்குவந்து புலம்பவேண்டிய தென்னவென்று வினவ, தாசிகண்டு திடுக்கென்றெழுந்து என் மகளே? என்னையறியாயோ? ஒரு நாழிகைக்கு முன்னிருந்தாய் அதற்குள் என்னை மறந்துவிட்டாயோவெனக் கட்டிக்கொண்டு புலம்பினாள். இராசகுமாரத்தி கண்டு ஓ ஓ! இக்கிழவிக்கு நம்மைப்போல் ஒரு பெண் இருந்ததா யிருக்கிறது, நம்மைக்கண்டதும்மகளென்று நினைத்துப் புலம்புகிறாளென்று நிதானித்துக்கொண்டு



கிழவியை யாதரித்து ஓ அம்மணி! மனிதரைப்போல மனிதர் உலகிலிருக்கிறதுதான்; உனது மகளல்ல; நான் ஆருமற்றபாவி யென்றனள். தாசிகேட்டு அம்மணி! நீ என்னிடத்தில் இரு, என் மகளைப்பார்க்கிறதுபோல உன் முகத்தைப்பார்த்துத்துக்கமில்லாமலிருக்கின்றேன், இருக்கின்றையாவென்ன? இராசகுமாரத்தி அக்கருத்துக்கிசைந்தாள் இராசகுமாரத்தியை யழைத்துவந்துதனது வீட்டில் வைத்துக்கொண்டு தனது மகளைப்போல் பாலித்து நாளுக்குநாள் தாசித்தொழிலில் பிரவேசிக்க போதித்து வருவாள். இராசகுமாரத்தி சிறையிலிருப்பவள்போ லிருந்தாளேயன்றி தாசி போதனைக்கு உள்ளாகாமலிருந்தாள். பிரசவகாலம் சமீபித்தது; இடுப்புநோயுண்டாயிற்று; இராசகுமாரத்தி தாசிக்குத் தெரிவித்தாள்; மருத்துவச்சிகளை யழைப்பித்து அவர்களைப் பார்த்து, ஓ மாதர்களே! எனது பெண்ணுக்குப் பிரசவவேதனை யுண்டா யிருக்கின்றது, நீங்கள் பக்குவமாக மருத்துவம் பார்த்து பிள்ளை பிறந்தால் அதனைக் கொன்றுவிட்டு ஒருமணையை அவளுக்குக் காண்பித்து இதனைப்பெற்றாயென்று சொல்லவேண்டும். அவள் நம்புவதற்கு ஒருதந்திரஞ் சொல்லுகின்றேன் அப்படி நீங்கள் செய்யுங்கள்; அது என்னவென்றால்: இப்போதே அவள் கண்ணைக் கட்டிவிடுங்கள் அவள் ஒத்துக்கொள்வாளென்றுபோதித்து அதிகமாகத் திரவியத்தைக்கொடுத்தாள். மருத்துவச்சிகள் அக்கருத்துக்கிசைந்து இராசகுமாரத்தியின் அருகிற்சென்று அவள் கண்ணைக்கட்டிவிட்டு உபசரித்திருந்து புத்திரன் பிறந்தவுடன் அப்புத்திரனை காளிகோயிற்கு அருகில் இருளோங்கிய செடிகளின் நிழலில் ஒருகந்தையைவிரித்து அதில் சிசுவை வளர்த்திவிட்டு வீட்டுக்குப் போகும்போது புத்திரனை எடுத்துப் போகலாமென்று கருதி தாசிவீட்டிற்கு வந்து ஒருமணையில் விளக்கெண்ணையைத் தடவி இராசகுமாரத்தி முன்போட்டு கண்கட்டை யவிழ்த்துவிட்டுப் பார் என்றனர். இராசகுமாரத்திகண்டு உலகத்தில் ஸ்திரீகள் மணையைப்பெறுகிறது வழக்கமாக்குமென்று நினைத்துக் கொண்டு மனவருத்தமுற்றிருந்தாள். தாசிஇராசகுமாரத்திக்கு நீராட்டிவிட்டு பத்துநாளைக்குள் முன்னிருந்த

வுடம்புபோல் தேற்றிவிட்டாள். மருத்துவச்சி வீட்டுக்குப் போகும்போது காளிகோயிலுக்குப்போய் சிசுவைத்தயிடத்தைப் பார்த்தாள். காளி, சிசு தன் ஆலயத்துக்கு வந்தவுடன் அவ்விடத்தில் பின்னுஞ்சிலசெடிகளுண்டு பண்ணி அக்குழந்தைக்கு வெயில் படவொட்டாமல் ஒரு சர்ப்பமாக உருக்கொண்டு சிசுவை மறைத்து அந்தச் சிசுவுக்கு ஆகாரமாக அச்செடியில் ஒருதேன்கூண்டு தோற்றுவித்து, அத்தேன் சிசுவாயில் விழும்படி வைத்துப் பாதுகாத்திருந்தாள். மருத்துவச்சி சிசுவைக்காணாமல் அலைந்து வீடுபோய்ச் சேர்ந்தனள். காளி குழந்தையைவளர்த்துவந்தாள். இராசன் புத்திரசோகமடைந்து தன் பட்டத்துக்குப் பிள்ளையில்லையென்கிற ஏக்கத்தை மனதில்வைத்ததுமன்றி, இரவும்பகலும் தெய்வங்களைப் பிரார்த்தித்து முடிவில் தன் நகரத்துக் காளியைத் தியானித்து இனி இவளால் நமக்குப் புத்திரபாக்கியம் வரவேண்டுமென்று உறுதியாய் நம்பி தினந்தினம் அந்தம்மனுக்கு சிறப்புசெய்துஇருவேளையும்சந்நிதானத்துக்கு வந்து துதிசெய்து அம்பா! மகேஸ்வரி! அகாரசூர்ய வீரபத்திரி! மாதவி! வீரமாகாளி என்று பலவாறு புகழ்ந்து பணிந்து ஆ எனக்குப் பின்பு என் அரசுக்கு ஒருவருமில்லையென்று மனக்குறையைக் கூவிப் போவான்; இப்படியாக மூன்றுவருஷ காலம் பிரார்த்தித்து வருங்காலத்தில் மாதவி குழந்தைக்கு மூன்றுவயதானதை யறிந்து இனி பிள்ளைக்காரிடத்தில் பிள்ளையைச் சேர்க்கவேண்டுமென்று கருதி சகல பாஷைக்கும் ஆதாரமான ஸ்ரீ பஞ்சாட்சரத்தை அக்குழந்தைக்கு உபதேசித்து அன்றிரவில் இராஜன் கனவில்வந்து ஓ மகாராஜனே! நாளையதினம் உதயத்துக்கு என் சந்நிதியில்வந்து துதித்து நிற்கும்போது அகஸ்மாத்தாய் உன்கண்முன் ஒருகுழந்தை தோன்றும்; அதனை யெடுத்துவந்து வளர்த்து உன் பட்டத்துக்கு வைத்துக்கொள் என்று சொல்லிப்போயினள். அரசன் விழித்து கினவோ நினைவோ அல்லது காளிக்கு நம்மீது கிருபை யுண்டாயிற்றோ வென்று மகிழ்ந்து சூரியவுதயமானவுடன் ஸ்நானஞ்செய்து பூசை திரவியத்தோடு காளிகோயிலுக்குச் சென்று, அந்தம்மனுக்கு அபிஷேகம் செய்விக்கச் சொல்லி



பூசை நைவேத்திய தீபாராதனை செய்தபின்பு அம்மனை வணங்கிப் பலவாறு புகழ்ந்து நின்றான். காளி அக்குழந்தையை மாயமாக யெடுத்துவந்து அரசன் முன் வைத்து மறைந்தனள். குழந்தை அரசன்முன் கூக்குரலிட்டு அழுதது. அரசன் கண்டு பரமானந்த மடைந்தவர்போல் மகிழ்ந்து குழந்தையை வாரியெடுத்து மார்போடணைத்து அதனைப்பற்றி அரண்மனைக்கு வந்து அக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து ஐந்துவய தானபின்பு கல்வியைக் கற்பித்து ஆயுதப்பயிற்சி யானையேற்றம் குதிரையேற்றம் முதலானவைகளைக் கற்பித்து வாலிபதிசையடைந்தகாலத்தில் இளவரசுபட்டங்கட்டயத்தனித்துக் குமாரனை ஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரணங்களினால் அலங்கிர்தஞ்செய்து நகர்வலம் வரச்செய்து தான் மந்திரிகள் தண்டத்தலைவர்கள்யூகத்தலைவர்கள் அணித்தலைவர்கள் படைத்தலைவர்கள் இரத கச துரக பதாதி முதலானவர்கள் புடைசூழ, இராஜகுமாரனை பஞ்சகல்யாணிகுதிரைமேலேற்றிப் பவனிவருகிறபோது மேலைத்தெருவில் வந்தான். மேலைத்தெருவிலிருக்குந் தாசிவீட்டிலிருக்கிற இராஜகுமாரனுக்குத் தாயானவள் வீட்டின் நடையிலிருந்து வேடிக்கை பார்த்திருந்தாள். இராசகுமாரன் தாயென்று அறியாதவன் ஆதலால்தாசியென்று மோகித்து நாலடிதூரம்போய்த் தன் அருகில் வருகிற ஊழியக்காரனிடத்தில் முப்பதினாயிரம் பொன் கொடுத்து இன்றையத்தினம் இராசகுமாரன் வருகிறாரென்று சொல்லி இந்தப்பொன்னைத் தாசிகையில் கொடுத்துவாருங்களென்று கட்டளையிட்டான். ஊழியக்காரன் பொன்னைத் தாசிகையில் கொடுத்து இராசகுமாரன் இன்றையத்தினம் உங்கள்வீட்டிற்கு வருகிறாரென்று சொல்லிவிட்டுப் போயினர். தாசிக்கிழவி பணத்தை வாங்கிக்கொண்டு இராசகுமாரத்தியை அதிகவிநோதமாகச் சிங்காரித்துக் கொள்ளச்சொல்லி தன்னால் கூடியவரைக்கும் போதித்தாள். இராசகுமாரத்தி கேளாமல் அப்போதே ஒரு அறையில் புகுந்துக்கொண்டு கபாடபந்தனஞ் செய்து மூலையில் படுத்துக்கொண்டு தான் முன்னிருந்ததை நினைத்துக்கொண்டு தேவதையைக் குறித்துத் துக்கித்

துக்கொண்டிருந்தாள். இராசகுமாரன் நகர்வலம்வந்து அரண்மனைசேர்ந்து அன்றிரவில் போசனஞ் செய்து ஆடையாபரணங்களை யணிந்து பரிமளமிகுந்த நறுமலர் மாலைசூடி பஞ்சகல்யாணிமேலேறி தாசிவீட்டிற்குவந்து வீட்டருகில் குதிரையையும்அடப்பக்காரனையும்வைத்துவிட்டு உள்ளே புகுந்து தலைக்கடையைக்கடந்து சற்காரிற்சென்றான். அங்கு ஓர் பசுங்கன்று கட்டப்பட்டிருந்தமையால் அதன்வாலைத் தெரியாமல் மிதித்துக்கொண்டு அப்புறம் நடந்தான். அக்கன்று அம்மாவென்று கூவி இந்த இராசகுமாரன் என்வாலை மிதித்துப்போகிறான்; பார்த்தையா என்றது, பசு கண்டு இந்த இராசகுமாரன் தாயைப் பெண்டாளப் போகின்றான். அது மாத்திரந்தானா இன்னம் அதிகமான குற்றஞ் செய்வானென்று கூறிற்று. இராசகுமாரன் காளியினால் பஞ்சாட்சர வுபதேசம் பெற்றவனாதலால் பசு சொல்லியதைக் கேள்வியுற்று முன்வைத்தகாலை பின்வைத்துக்கொண்டு தன் அரண்மனை வந்து சேர்ந்து சூரியோதயமானவுடன் தனது பிதாவாகிய மதுராபுரித் தலைவனிடத்து வந்து மந்திரவாளை யுருவிக் கையிலேந்தி ஓ பிதாவே! எனக்குத் தந்தை யார்? நீதானா? அல்லது மற்றையாராவது இருக்கிறார்களா? அதனைத் தெரிவிக்கவேண்டுமென்று வினவ; அரசன்கண்டு திடுக்கிட்டு இவனுக்கு உண்மையைச் சொல்லாவிட்டால் நம்மை வெட்டுவதுமின்றித் தன்னையும் வெட்டிக்கொள்வான்போ லிருக்கிறது; உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்று கருதிச் சொல்லுகிறான்: ஓ புத்திரசிகாமணியே! எனக்கு ஒரு புத்திரனிருந்தான், அவனுக்குத்தக்க அழகுள்ள இராசகன்னிகையை மணம்புரிவித்து இந்த உப்பரிகையில் வைத்துப் பாதுகாத்து வந்தேன்; அந்தப்புத்திரன் அகஸ்மாத்தாய் எங்கேயோ போய்விட்டான். அதன் பின்பு மனவருத்தமுற்றுக் காளியை வணங்கிவந்தேன், அவள் உன்னைக் கொடுத்தாள். அவளிடத்துச்சென்று வினவினால் உடற்பிறப்பு தெரியுமென்று கூறினன். இராசகுமாரன் அந்த அரசனையும் ஊரிலுள்ள பிரமுகாளையும் அழைத்துக்கொண்டு காளிகோயிற்குப்போய் அவளுக்குப் பூசைசெய்து பலவாறு துதித்து ஓ அம்மணி! என்



பிறப்பு வெளிப்பட நீவந்து சொல்லாவிட்டால் என்னுடைய பிராணனைப்போக்கிக்கொள்வேன்; இதுஉண்மையென்று மந்திரவாளையுருவிக் கையிலேந்தினான். காளி கண்டு இந்தவேளை இவன்பிறப்புஞ் சொர்க்கத்திலிருக்கிற இராசகுமாரன் வரலாறும் அவன்வரும் வரலாறும் இராஜகுமாரத்தியிருக்கிற வரலாறும் தெரிவிக்கவேண்டுமென்று கருதி தட்சணம் பிரசன்னமாகி சகலரும் அறியச் சொல்லுகிறாள்.

கேளும் மகாராசனே! உன்புத்திரனையும் மருமகளையும் உப்பரிகையி லிருக்கக் கட்டளையிட்டபின்பு இராசகுமாரனும் இராசகுமாரத்தியும் நிலாமணி முற்றத்திற் படுத்திருந்தார்கள். சொர்க்கலோகத்து கன்னிகைகள் கண்டு இராஜகுமாரன்மேல் காதல்கொண்டு ஒரு பூமாலையாகச் சபித்து சொர்க்கலோகத்திற்கு எடுத்துப்போய் தங்கள் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டுமுறைப்படி இந்த இராசகுமாரத்தியிடத்து ஒவ்வொருநாள் விட்டு அந்த நாளில் இராசகுமாரத்தி ஸ்மரணை தப்பி யிருக்கும்படிசெய்து இராசகுமாரன்கூடினபின்பு அழைத்துக்கொண்டு தெய்வலோகஞ்சேர இராசகுமாரத்தி கர்ப்பவதியானாள். இங்கு நீபிள்ளையை நாற்றிசையும் தேடுவித்தும் காணமல்மனவருத்தமுற்றிருக்கையில்தாதிகளால்இராஜகுமாரத்திகர்ப்பமானதையறிந்து அவளைக்காட்டில்துரத்திவிட்டாய்.இராசகுமாரத்திகாடுமலைகள்தோறும்சுற்றி இவ்வூர் சுடுகாட்டில் இராத்திரி நடுச்சாமவேளையில் வந்தாள். இவ்வூர்தாசி மகளைப் பறிகொடுத்து மயானத்திலுட்கார்ந்து அழுபவள் இவளைத் துவந்து ஆதரித்துத் தாசிகள் தொழிலைப் போதித்துவந்தாள்.இராசபுத்திரி அப்போதனைக்குள்ளாகாம லிருந்து பிரசவகாலஞ் சமீபித்ததைத் தெரிவித்தாள். சில மருத்துவச்சிகளைக் கொண்டு பார்வையிடச் சொல்லி பிள்ளை பிறந்தால் கொன்றுவிட்டு ஒருமணையைப் பெற்றாயென்று பெற்றவளுக்குச் சொல்லக் கட்டளைசெய்தாள். மருத்துவச்சிகள் பிறந்தபுத்திரன் அழகுடையதாக யிருக்கிறதைக்கண்டு, கொல்லாமல் என் ஆலயத்திலிருக்கும் ஒருசெடியின்கீழ் வளர்த்திப் போயினர். நான் மூன்று வருஷகாலமாக வளர்த்து பொருள்காரனிடத்தில் பொருளைச்சேர்க்கக்

கருதி, உனக்குப் புத்திரனைக் கொடுத்தேன். அப்புத்திரன் இளவரசுப்பட்டம்பெற்று நகர்வலம்வரும்போது அந்தத் தாசிவீட்டிலிருக்கும் தன்தாயை யறியாமல்மோகித்து அன்றிரவில் அவள் வீட்டிற்குச்செல்லும்போது அங்கொரு பசுங்கன்றிருந்தது. அதன்வாலை இராசபுத்திரன் மிதித்தான். அக்கன்று தாயுடன்தன்வாலை மிதித்ததைச்சொல்லிற்று. பசு, தாயைப் பெண்டுபிடிக்கப் போகிறவன் இதுதானாசெய்வான் இன்னும்அனேகஞ்செய்வான் என்று சொல்லிற்று. என்னால் பஞ்சாட்சரம் உபதேசித்துக்கொண்ட இராச புத்திரன் அதுவுணர்ந்து என்னை வினவினான்; நான் சகலருக்குந் தெரிவித்தேன்; தாசிவீட்டிலிருக்கிற இராசபுத்திரியை யழைத்துக்கொண்டு இந்த இராசபுத்திரனையும் இவன்தாயாகிய அந்த இராசபுத்திரியையும் அந்த உப்பரிகையி லிருக்கும்படி திட்டஞ்செய்து கன்னிகைகளைக் குறித்து எட்டு சுக்கிரவாரம் விரதமிருக்க இராசகுமாரத்திக்குச் சொல்லி, அவர்கள் பிரசன்னமானவுடன் மங்கிலியபிட்சை கேட்கச்சொல்லு; அவர்கள் உன் புத்திரனைக் கொண்டுவந்து விட்டுப்போவார்கள்; பின் புத்திரமித்திரரோடு அரசு செய்துயிருப்பாயென்றுகூறி மறைந்துவிட்டாள். அரசன்கேட்டு மகிழ்ந்து பேரனைத்தழுவி தாசியையழைத்து சிரச்சேதஞ்செய்துவிட்டு மருமகளை யழைத்து மருத்துவச்சிகளுக்குஇனாம்கொடுத்து சந்தோஷமாய்ப் பேரனையும் மருமகளையும் அந்த வுப்பரிகையி லிருக்கச்சொல்லி சுக்கிரவார விரத மிருக்கக் கட்டளையிட்டான். இராசபுத்திரி கன்னிகைகளைக்குறித்து எட்டுசுக்கிரவார விரதம் இருந்தாள். கன்னிகைகள் பிரசன்னமாகி உனக்குஎன்ன வேண்டுமென்று வினவினர். இராசகுமாரத்தி பலவாறு துதித்து மங்கிலியபிட்சைகொடுக்கவேண்டுமென்றுவினவினள். கன்னிகைகள் மகிழ்ந்து அவள் கணவனை யளித்துவிட்டு தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள். இராசகுமாரன் மனைவியையும் மகனையும் ஆதரித்து பிதாவைக்கண்டு வணங்கி யோகக்ஷேமாதிசயங்களை விசாரித்து பிதாவின் பட்டத்துக்குறியவனாய் முன்போல் தன் மனைவியுடன் சுகித்திருந்தான். அவ்வளவு அழகுடைய புருஷன் உன்னைமணம்புரிந்து விவாகஞ்செய்யவேண்டுமென்று சொல்லினன். சூரியோதயமானான். மந்திரிகுமாரனும் இராசபுத்திரியும் பள்ளியறைவிட்டு அந்தப்புரஞ்சென்று ஸ்நானம்செய்து பூசைமுடித்து உண்டிருந்தார்.



மூன்றாம்நாள்கதை-முற்றிற்று.

## நான்காம்நாள்

## ஆமையாயிருந்த இராஜகுமாரன் தகப்பன்கோரின பெண்ணை மணம்புரிவித்தகதை

நாலாநாளிரவில்மந்திரிகுமாரன் ஆடையாபரணாலங்கிர்தனாகி பள்ளியறைசேர்ந்தான், இராஜகன்னிகைகள் இருவரில் இளையாள் ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டு கலவைச்சாந்தணிந்து ஆடையாபரணாலங்கிர்தளாகி பள்ளியறைசேர்ந்து சற்றுவேடிக்கையார்த்தமாக வீணைவாசித்துப் பின்பு காமமீறி கணவனை ஆலிங்கனஞ்செய்ய எத்தனித்தாள். மந்திரிகுமாரன் கண்டு ஓ பெண்கள் நாயகமே! நான் சிறியகதைசொல்லுகிறேன்; அதைக் கேட்டபின்பு கூடுவோமென்று எதிரிலுட்கார வைத்தான். இராசபுத்திரி அக்கருத்துக்கிசைந்து எதிரிலிருந்தாள்; மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: கேளும். மாதுசிரோன்மணி! மல்லிகார்ச்சுனபுர மென்று ஒரு நகரம் உண்டு அதற்கு ஸ்ரீவேங்கடராசன் என்றொரு அரசனுண்டு, அவ்வரசன் நெடுநாளரசுசெய்து புத்திரனில்லாதிருக்கிறதை யோசித்துமனவருத்தமுற்றுத்தன் மனைவியினிடத்து வெறுப்படைந்து மற்றொருராசகன்னியை மணம்புரிந்து மூத்தமனைவியை வேறோர் அரண்மனையில் வைத்து ஒருதாதியைக்காவல்வைத்தான் இளையமனைவி நித்தியம் படியரிசி தாம்பூலம்முதலியவற்றைக் கொடுத்துக்கொண்டு வந்தாள். மூத்தமனைவி தனக்கு விட்ட விடுதியிலிருந்து தனக்குக்கொடுத்தபடியரிசியைத் தாசி முதலானவர்களை வரவழைத்துக்கொண்டு சமயல் செய்வித்துத் தானும் தன் குதிரையும் தாதியோடு சீவனஞ்செய்துவந்தாள். அரசன் இளையமனைவியிடத்துக் காதல்கொண்டவனாகி நெடுநாள்வாழ்ந்தும் புத்திரனில்லாதிருக்கிறதை யறிந்து புத்திரபாக்கியம் ஈஸ்வரனாலல்






லது மனுஷயத்தனத்தினுல் உண்டாகிற தில்லையென்று மந்திரிகள்வசத்தில் தன்னரசை ஒப்புவித்துத்தான்வரு கிறபரியந்தம் அரசில் ஒருகுறைவும் வாராம லிருக்கும் படி திட்டஞ்செய்து துறவற வேடம்பூண்டு காட்டிற் சென்று அங்கிருக்கும் பெரியோர்களிடத்து உபதேசம் பெற்று பரமனைநோக்கி நெடுநாள் தவத்திலிருந்தான். அரசன் பலவாறு புகழ்ந்து அடியேனுக்குப் புத்திர பாக்கியம் அளிக்கவேண்டுமென்று வேண்ட பரமன் ஒரு மாங்கனியைக் கொடுத்துவிட்டு மறைந்து தமது இருப்பிடஞ் சேர்ந்தார். அரசன் அக்கனியை யெடுத் துக்கொண்டு தன் நகரமடைந்து முன்போல் முடிபெ ற்று அந்தப்புரஞ்சேர்ந்து இளையமனைவியிடத்தில் கொ டுத்து இக்கனி ஈஸ்வரன் கையில் பெற்றுக்கொண்டது இதைப்புசித்தால் புத்திரன் உண்டாகு மென்றனன். இளையமனைவி அதைவாங்கி வைத்துக்கொண்டு அர சன சபாமண்டபத்துக்குப் போனபின்பு அக்கனியைப் பிழிந்து அதனது இரசத்தைப் புசித்துத் திப்பியைக் கொட்டையோடுமுற்றத்திலெறிந்துவிட்டாள். நித்தியப் படித்தனம்வாங்கிவரும் மூத்தமனைவியின் தாதி அதனைக் கண்டு எடுத்துக்கொண்டு தன் எசமானி யிடத்திற் கொ டுத்து அம்மணி இக்கனி அரசன் ஈஸ்வரன் கையில் பெற்றது இதனைப்புசித்தால் புத்திர னுண்டாகுமென்று இராசன் இளையமனைவிக்குக் கொடுத்தார். அந்தமாது இரசத்தைப் புசித்துத்திப்பியை முற்றத்திலெறிந்துவிட் டாள். இதைநான்கண்டு எடுத்துவந்தேனென்று கூறி னள். மூத்தமனைவி அக்கனிக்குள்ளிருக்கிற பருப்பைப் புசித்துத்தோலையுங்கொட்டையையும் தாதிக்குங்குதிரை க்குங்கொடுத்தாள். உடனே கற்பமுண்டாயிற்று. மூத்த மனைவி நல்ல சுபமுகூர்த்தத்தில் பிரசவித்தாள். ஆனல் அது ஆமையாகவிருந்தது; தாதி ஒருபுத்திரனைப் பெற் ருள்; நாய் இரண்டுகுட்டிகளையும் குதிரை ஒருபஞ்சகல் யாணியையும் ஈன்றன. இராசன் இளையமனைவிஇரண்டு புத்திரர்களைப்பெற்ருள். இராசன்கண்டு மகிழ்ந்து சர்க்க ரைவழங்கிவேதவேதியர்க்கும்யாவர்க்கும்வேண்டியவற் றை யுதவித் தானதர்மஞ்செய்து அப்புத்திரர்களை நா ளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகவளர்த்து

வந்து ஐந்துவயதில் வித்தியாப்பியாசஞ்செய்துவில்வித்
தை அம்புவித்தை யானையேற்றம் குதிரையேற்றம் முத
லியவற்றைப்பயிற்சிசெய்வித்துஇளவரசுபட்டத்துக்குத்
தக்கவயது அடைந்தபின்பு தன்னுடைய ராஜகாரியங்க
ளில் பழக்கஞ்செய்து வந்தனர். மூத்தமனைவி ஆமை
யாய்ப் பெற்றோமென்று எள்ளளவேனும் வருத்தமடை
யாதவளாகி 'இட்டார்க்கு யிட்டபலன்' என்றவாக்கியத்
தை நினைத்து நாம் இவ்வளவு கொடுத்துவைத்தோம்,
பேராசைப்பட்டால் வருமோ வாராதென்று கருதி புத்தி
ரனுக்கு வேளைக்குவேளை தலைமுழுக்காட்டி அமுத
ருந்தி இரவில் தன்பக்கத்திற் படுக்கவைத்து வந்தாள்.
ஆமையாயிருக்கிற குழந்தை வளரவளர அமுதுபோதா
மல் இரவில் தாய்க்குத்தெரியாமல்பார்த்துஆமையோட்
டைநீக்கி ஓரிடத்து வைத்துவிட்டு மடப்பள்ளிக்குப்
போய் காலைபோசனத்துக்கு வைத்திருக்கிறபழைய அமு
தைப் புசித்துவிட்டு முன்போலத் தாயிடத்து வந்து
ஆமை யோட்டிற் புகுந்துக்கொண்டு படுத்துக்கொள்
வான். இப்படி இரண்டொருதினம் நடந்து வரவே
ஆமைக்குத்தாயானவள்சோற்றுப்பானையில் பழையதில்
லாதிருப்பதைக்கண்டு ஐயுற்றுத் தாதியையழைத்துஅடி
மாதே! இரவில்வைத்த அமுது உதயகாலத்திற் பார்த்
தால் குறைந்திருப்பதென்னவென்று வினவினள்,தாதி
சொல்லுகிறாள்: ஓ அம்மணி! தாங்கள் எனக்கிடும்
அமுதை நான் புசித்தும்மீதியாகி நாய்க்கிடுகிறேன்; நான
றியேனென்றுகூற, இராசகன்னிகை உற்றுநோக்கி இத
னைக்கண்டு பிடிக்கவேண்டுமென்று அன்றிரவில் படுத்த
படி விழித்துப்பார்த்தாள். அன்றிரவு ஆமையாயிருந்த
இராசபுத்திரன் எழுந்து ஆமையோட்டை ஓரிடத்தில்
வைத்துவிட்டு மடப்பள்ளியில்சென்று பானையிலிருந்த
சாதந்தைப் புசித்துக்கொண் டிருந்தான். ஆமைக்குத்
தாயானவள்கண்டு அதிக மகிழ்வையடைந்துசூரியனைப்
போல் தேககாந்தியையுடைய பிள்ளை நமக்கு உண்டாயி
ருக்க இனியொருகுறைவுமில்லையென்று எழுந்துஆமை
யோட்டைமாத்திரம் எடுத்து நெருப்பிற் போட்டு விட்டு
நித்திரை செய்கிறாப்போ லிருந்தாள். இராசபுத்திரன்
பசியாமற்புசித்துக் கைகால்கள் சுத்திசெய்துதாயிடத்து



வந்து ஆமையோட்டைப் பார்த்தான். அதுகாணமற்
போகவே ஓ அம்மணி! ஆமையோடெங்கே? யென்று
வினவினான். தாய்சொல்லுகிறாள்: அப்பாமகனே! நான்
தான் அவ்வோட்டை எடுத்து நெருப்பிற் போட்டுவிட்
டேன் நீ ஏன் ஆமையுருவாயிருக்கிறாய், இனி சொரூப
மாகவே யிருக்கவேண்டுமென்று கூறினள். புத்திரன்
வணங்கி இன்னுஞ் சிலகாலம் அந்த உருவமாகயிருக்க
வேண்டும், அதன்பின்பு ரூபத்தோ டிருக்கவேண்டும்,
அதற்குள் பதறி ஓட்டைக்கொளுத்திவிட்டாய்; மிஞ்சிப்
போனதற்கு வருத்தப்படுகிறதிற் பயனில்லை, இனியாகி
லும் என்சொற்படி சிலகாலம் நீ மட்டடக்கவேண்டும்;
அதன்பின் மனதுக்கிசைந்தபடி சுயரூபத்தோடிருக்கி
றேன்; அதுபரியந்தம் நான் உடலெங்குங் கரியைப்பூசிக்
கொள்ளுகிறேன் என்னைப்பெட்டியில்போட்டுமூடிவைத்
துக்கொண்டு வேளைதப்பாமல் பாதுகாத்துவா என்று
கூறி உடலெங்குங் கரியைப் பூசிக்கொண்டான். தாய்
மகன் கட்டளைப்படி மகனை யொரு பெட்டியில் வைத்து
மூடிவளர்த்துவந்தாள். சாம்பவமூர்த்தி நாரதரையழை
த்து மல்லிகார்ச்சுன நகரத்துக் கதிபதியான ஸ்ரீவேங்கட
ராசன் மூத்தமனைவியின் புத்திரன் நமதருளால் உற்பத்
தியானவன் அவன் எழுத்தறியாதிருக்கிறான் அவனுக்
குச் சகலகலைக்கியானங்களுங் கற்பித்துக் கியான திருஷ்டி
விளங்கப் பஞ்சாட்சரத்தை யுபதேசித்து வாவென்று
கட்டளையிட்டார். நாரதர் பரமன்கட்டளைப்படி பெட்டியி
லிருக்கிற இராசபுத்திரனுக்கு நாலுவேதம் ஆறுசாஸ்
திரம் அறுபத்துநாலு கலைக்கியானம் மறுவிக்கியானம்
முதலியவற்றை ஐயந்திரிபறக்கற்பித்துக் கியான திருஷ்டி
விளங்கப் பஞ்சாட்சரத்தை யுபதேசித்துப் போயினர்.
இராசபுத்திரன் சகலகலை வல்லவனாயும், இராசகாரிய
துரந்தரனாகியும் இருந்தான். ஸ்ரீ வேங்கடராசன் தன்
இளையமனைவியிடத்துப் பிறந்த புத்திரர்களை யழைப்
பித்து அவர்களைத்தழுவி பக்கத்தில் வைத்துக்கொண்டு
அப்பாமக்களே! புத்திரர் பிதாவின்கருத்துமகிழ நடக்க
வேண்டியது பெரியகடமை. ஆதலால் என்கருத்திலொன்
றிருக்கின்றது அதனை நிறைவேற்ற வேண்டுமென்றான்
புத்திரர்கேட்டுவணங்கி ஐயா! புத்திரர் பிதாவின்கருத்து

மகிழ நடக்கவேண்டியது கடமைதான். தாங்கள் கருத்தை வெளியிட்டால் அதனை நிறைவேற்றி மகிழ்வுண்டாக்குகிறோமென்று சொல்ல, அரசன் சொல்லுகிறான்: அப்பா மகனே! இந்நகரத்துக்கு மேற்றிசையில் இமயபர்வதமென்றொரு பெரியமலை இருக்கின்றது, அந்தமலையில்ஒருகன்னிகையிருக்கிறாள், அவளைக்கொண்டுவந்து எனக்கு விவாகஞ் செய்விக்கவேண்டும், அதுதான் என் கருத்தென்றுகூற, புத்திரர்கள்கேட்டு இதோ மறுமாதத்தில் அக்கன்னிகையைக்கொண்டுவருகிறோமென்றுகூறி இருவரும் பிரயாணமாகி வெளிப்பட்டார்கள்.

பெட்டியிலிருக்கிற இராசபுத்திரன் ஞானதிருஷ்டியால் பிதாசொன்னதும் தம்பிகள் பிரயாணப்பட்டதும் தெரிந்துக்கொண்டு தாயையழைத்து அச்சேதியைத்தெரிவித்து நான் போகாமற்போனால் அக்கன்னிகைவரப்போகிறதில்லை, ஆகையால் எனக்கு விடைகொடென்று பணிந்துவிடைபெற்று உடலெல்லாம் பின்னுங்கரியைப்பூசிக்கொண்டு யாரோ ஒருகாட்டாள்போலஇராசபுத்திரருடன் பின்வந்தான். முன்னஞ்செல்லுகிற இராச புத்திரர்கள் கண்டு ஆரோ பாட்டசாரி வருகிறானென்று நினைத்துக்கொண்டு நடந்தார்கள். அவ்விருவரும்தமையணுகிய இராசபுத்திரன் தம்பிகள்போகிறவழி பிரியாமல் கூடநடந்தான். மூவரும் நகரத்துக்கு அருகில் வந்தார்கள். அங்கோர் பெரிய ஆறொன்று தோற்றப்பட்டது; அவ்வாறு அந்தநகரத்து இராசன்புத்திரி மஞ்சள் நீராடியஜலம், அது ஓராறாய்ப் பெருகியிருக்கிறது; அவ்வாற்றிலிறங்காமல் எவன் தாண்டுகிறானோ அவனுக்கு மாலையிடுகிறேனென்று உறுதிப்பாடு செய்துக்கொண்டு அவ்வாற்றங்கரையில் தனது சேவகரைவைத்து இவ்வாற்றை எவன் தாண்டிவருகிறானோ அவனை யழைத்து வாருங்களென்று கட்டளை யிட்டிருக்கிறாள்; அவ்வாற்றை இந்த இராசபுத்திரர்கள் கண்டு அதிலிறங்கி ஜலமருந்திக் கரையேறினார்கள். அதை இராஜகுமாரன் கண்டு ஓ ஓ! நமது சகோதரர்கள் இது ஆற்று நீரென்றும் மஞ்சள்நீராடிய நீரென்றும் கண்டு தெளியாமல் அந்த நீரையருந்தினரென்று மனவருத்தமுற்றுத்தான் அக்கரையருகிற்சென்று நிதானித்து நோக்கி நீர் மஞ்



சள் நிறமாக யிருப்பதையும் அதில் உண்டாயிருக்கிற ஜலத்தையும் அறிந்துஇதுமஞ்சள் நீராடியஜலமென்று நிதானித்துத் தன்வல்லமையால் பாய்ந்து அவ்வாற்றின்கரையைச் சேர்ந்தான். சேவகர்கள், கண்டு நமது இராசபுத்திரிக்கு இவன்தான் கணவனென்று மதித்து இராசபுத்திரனிடத்துவந்து ஓ ஐயா! தாங்கள் இங்கே தானே யிருக்கவேண்டியது; எங்கள் இராசபுத்திரி யிவ்வாற்றைக் கடக்கிறவரெவரோ அவர்க்கு மனையாளாகக் கருதியிருக்கிறாள்; தாங்கள் இவ்வாற்றி லிறங்காமல் பாய்ந்துவந்தமையால் நீங்கள்தான் இராசபுத்திரிக்குக் கணவனென்று சொல்லினார். இராசபுத்திரன் கேளாதவன்போல் பாராமுகமாயிருந்து பின்பு தம்பிமாரிருக்கிறவிடத்துக்கு மறுபடியும் முன்போலப் பாய்ந்துஇவ்வாற்றையுங்கடந்து குதிரையோடுஇரண்டுதோள்களிலுமெடுத்துக்கொண்டு இக்கரையைவந்துசேர்ந்தான். இராசபுத்திரர் கண்டு அதிக ஆச்சரியங்கொண்டு பாட்டைசாரியா யிருந்தாலும் நமக்குப் பெரிய உபகாரஞ் செய்தானென்று மனமொத்துவசனித்துக்கொண்டிருந்தார்கள். அந்நகர் இராசபுத்திரி முன்னம் ஆற்றைக்கடந்ததையுங்கண்டு மகிழ்ந்து உப்பரிகையை விட்டிறங்கி பிதாவினிடத்துவந்து, ஐயா! இதுபரியத்தம் கன்னிகழியாமலிருந்தேன்; இன்றையதினம்கருத்தின்படி ஒருவர் நான் நியமித்திருந்த ஆற்றைக்கடந்துவந்தார்; அவரெவராயிருந்தாலுஞ்சரி, அவரையழைத்துவந்து என்னைவிவாகஞ்செய்வித்துக் கொடுமென்று கூறினள். அரசன் அக்கருத்துக்கிசைந்து மந்திரிமார் புடைசூழ முத்துச்சிவிகை யொன்றை எடுப்பித்துக்கொண்டுவந்து ஆற்றங்கரையி லிருக்கிற மூவரில் விறகுதலையனைப்போலவும் பார்க்க விகாரமாகவும் இருக்கிறவனைக்கண்டு இவர்தானா? ஆற்றைக்கடந்தவரென்று விசாரித்துச்சேவகர்கள் இவர்தானென்று சொல்லத்தெரிந்து இராசகுமாரனிடத்துவந்து அப்பா முத்துச்சிவிகையிலேறி இந்நகரத்துக்குவந்து என்மகளைமணம்புரியென்றனன். இராசபுத்திரனாகிய பாட்டசாரி சொல்லுகிறான்: ஓ அரசனே! என்னைப்பார்த்தால் விறகுதலையனுக்குங்கேடாயிருக்கிறது, எனக்கு உன்மகளை மணம்புரிவிக்கிறேனென்று

சொல்லுகிறீரே உலகத்தில் பருவப் பெண்கள் கைநி
றைந்த பொன்னைப்பார்க்கிலும் கண்ணிறைந்த கணவ
னைத் தேடுவார்கள்; தங்கள் பழமையாகிய பந்துக்களை
நாடுவார்கள். ஆகையால் ஒன்றுக்கும் உதவியில்லாத
எனக்கோர் பிரதிக்கினையுண்டு; அதென்னவெனில் நான்
குளிக்கிறதில்லை, முழுகுவதில்லை, இப்படியே வந்து
மணம்புரிய உத்திரவு கொடுத்தால் நான் வருகிறேன்;
இல்லாவிட்டால் வருகிறதில்லையென்று கூற, அரசன்
கேட்டு உன்கருத்தின்படி நடப்பிக்கிறேனென்றுசொல்லி
முத்துச்சிவிகையில் ஏறச்சொல்லினர். இராசபுத்திரன்
தம்பிமார் இருவருங் கூடிவர, இனியவார்த்தைசொல்லி
அழைத்துக்கொண்டு தான் முத்துச் சிவிகையிலேறி,
அரசன் நகரடைந்து நல்ல சுபமுகூர்த்தத்தில் அந்ந
கரத்து இராசபுத்திரியை மணம்புரிந்து அன்றிரவில்
கூடிக்கலந்து, இராசபுத்திரியைப்பார்த்துச் சொல்லுகி
ருன்: ஓ மாதே! நான் மல்லிகார்ச்சுனநகரத்துக்கதிபதி
யாகிய ஸ்ரீவேங்கடராசன் மூத்தமனைவியிடத்துப் பிறந்த
வன். என்னுடன்வந்த யிருவரும் அந்த அரசன் இளைய
மனைவியிடத்துப் பிறந்தவர்கள், என்பிதா இமயகிரியி
லிருக்கிற கன்னிகையை மணஞ்செய்யவிரும்பித் தன்புத்
திரரிருவரையும் அழைப்பித்துத் தன்கருத்தைத் தெரி
வித்தனர்; புத்திரரிருவருடன்கூடி அக்கன்னியைக்கொ
ண்டுவரநானும்வந்தேன்; வந்தவிடத்தில்உன்னைமணம்
புரிந்தேன்; இனிநானிருக்கக்கூடாது,இமயகிரிக்குச்செல்
லவேண்டும், கெடுவிட்டிருக்கிறது. கெடுவிட்டநாள் ஒரு
மாதத்திற்கு இரண்டாநாளாயிற்றே நான்போகிறேன்
இன்னும் இருபத்தெட்டுநாளைக்குள் இவ்விடம் வருகி
றேன். வராவிட்டால் நீ அந்தமலைக்குவாவென்றுகூறி
சிலவு வாங்கிக்கொண்டு தம்பிமார்களை யழைத்துக்
கொண்டு நகரத்தைக்கடந்து நெடுந்தூரஞ் சென்றுன்.
அங்கு ஓர் நகரம் உண்டு; அந்நகரத்து இராசபுத்திரி
ஒரு உறுதிப்பாடு செய்துகொண்டிருந்தாள்; அதாவ
தென்ன வெனில்: ஒருகாசுகொடுக்கிறது அந்தக்காசுக்கு
எண்ணை விறகு இலை இந்தமூன்றுங்கொடுத்து மறுபடி
யுங் காசைக்கொடுக்கிறவனெவனே அவனைமணஞ்செய்
துக்கொள்ளுகிறேனென்று தீர்மானித்துக்கொண்டு ஒரு



சேவகன்கையில் ஒருகாசு கொடுத்து பாட்டையில் வைத்
திருந்தாள் அச்சேவகன் இம்மூவரையுங் கண்டு குதிரை
மேல் செல்லுகிற இராசகுமாரரிருவர்கையில் காசைக்
கொடுத்து மறுபடியுங் காசைக்கொடுக்கிற சக்தி உங்களி
லுண்டோவென்றுன். இராசகுமாரர்களிருவருங்கேட்டு
அடடா! இதென்ன ஆச்சரியம் கொடுக்கிறது ஒருகாசு,
அதற்கு எண்ணை விறகு இலை வாங்கிக்கொடுத்து மறுப
டியுங் காசைக் கொடுத்துவிடுகிறது அடே போபோ
பயித்தியக்காரா என்று சொல்லி நடந்தார்கள். ஆமை
யாகிய இராசபுத்திரன் கேட்டு அடா சேவகா! அது
என்ன?வென்று வினவினன். சேவகன் கண்டு, ஐயா!
நான் கொடுக்கிறது ஒருகாசு இந்தக் காசுக்குத் தாங்கள்
எண்ணெய் விறகு இலை இவை வாங்கிக்கொடுத்து மறுப
டியுங் காசை எனக்குக் கொடுக்கவேண்டும். இந்த சக்தி
உம்மிடத்திலிருக்குமாகில் இந்த நகரத்து இராசகுமா
ரத்தி உமக்குமனைவியாவாளென்றுகூறி காசைக்கொடுத்
தான். அந்தராசபுத்திரன் காசைவாங்கிக்கொண்டுபத்தடி
தூரஞ்சென்று எள்ளுச்செடியிலொன்றைப்பிடுங்கிச் சே
வகன்கையில் கொடுத்தான். இராசகன்னிகைகண்டு எள்
ளினுலெண்ணையும் அதன் கொம்பினுல் விறகும் இலையி
னுல் இலையும் அமைந்திருப்பதை அறிந்து மகிழ்ந்து
தட்சணம் தந்தையிடத்துவந்து ஐயா இதுவரையில்
கன்னிகழியாமலிருந்தேன்; இன்று கன்னி கழியும்படி
கடவுள் கிருபைபுரிந்தார். நான் நினைத்திருந்த பிரதிக்
கினையின்படி நிறைவேற்றின புருஷனை யழைத்துவந்து
மணஞ்செய்யுமென்றனள். அரசன் அக்கருத்துக்கிசைந்
து தட்சணம் மந்திரிமாரோடு வெளிப்பட்டு நகர்ப்புறத்
துச்செல்லும் விறகுதலையனைப்போலப் பார்க்கிறதற்குவி
வாரமாயிருக்கும்இராசகுமாரனைக்கண்டு அழைக்க, இராச
குமாரன் சகோதாரரைப் பார்த்து அப்பா, மந்திரிமார்க
ளே! இந்த அரசனழைக்கிருன்; போவோம் வாரு
மென்று அழைத்துக்கொண்டு அரசன் கொடுத்த முத்
துச் சிவிகையின்மேலேறி நகரத்துக்கு வந்து நல்லசுப
முகூர்த்தத்தில் அந்த அரசன் குமாரத்தியை மணம்
புரிந்து அன்றிரவில் இராசகுமாரத்தியுந்தானுங் கூடிக்
கலந்து இராசபுத்திரியைநோக்கி ஓ பெண்கள்நாயகமே!

நான் என்தந்தைக்கு இமயகிரியிலிருக்கிற இராசகன்னிகையை மணம்புரிவிக்கவந்தேன். இங்கே உன்னைமணஞ்செய்ய பிராரத்துவ மிருந்தமையால் மணம்புரிந்தேன். இமயமலைக்குச் செல்லுகிறேன், நீ எட்டுநாள்பார், வராவிட்டால் இமயமலைக்குவந்து சேரென்றுசொல்லி சூரியோதய மானவுடன் தம்பிமாரை யழைத்துக்கொண்டு அந்நகரத்தைக் கடந்து காடு மலை வனம் வனாந்திரங் கடந்து ஒரு நகரத்தருகில் வந்தார்கள். அந்நகரத்து இராசபுத்திரி சகலகலைவல்லவியாய்த் தன்னால் ஒருபுத்தகஞ்செய்வித்து இதற்கு யார் பயன்சொல்லுகிறார்களோ அவரை விவாகஞ்செய்துக் கொள்ளுகிறேனென்று பிரதிக்கினைசெய்து அந்தப்புத்தகத்தை நகர்புறத்திற்செல்லும் பாட்டையிற் சேவகர் கையிற்றந்து கட்டளையிட்டிருந்தாள். அச்சேவகர்கள்குதிரையின்மேல்வருகிற இராசகுமாரர்கையிற் புத்தகத்தைக்கொடுத்து இதற்குப் பயனென்னவென்றார்கள்? அவர்கள் பார்த்து மயங்கி ஒன்றுந் தெரியவில்லை யென்றார். அருகில்வருகிற ஆமையாகிய இராசகுமாரன் அப்புத்தகத்தைவாங்கிப் பார்த்துத் தானுண்டாக்கினதைப் போல் அதன்பயனை யெல்லாம் வருத்தமில்லாமற் சொன்னான். சேவகர்கள் கண்டு ஒருவனோடி இராசகன்னிகைக்குத் தெரிவித்தான். இராசகன்னிகை தன்பிதாவிடத்து வந்து வணங்கி ஓ ஐயா! என் பிரதிக்கினை இன்று நிறைவேறிற்று, நகர்ப்புறத்தில்ஒரு மகாபுருஷன் வந்திருக்கிறான் அவனென்னா லுண்டாக்கின புத்தகத்துக்கு உரை விரித்துரைத்தனன். அவனை யழைத்து என்னைவிவாகஞ்செய்யுமென்றுகூற இராசன் அக்கருத்துக்கிசைந்து முத்துச்சிவிகையோடுவந்து நகர்ப்புறத்தில் வருகிற பாட்டையிலிருக்கிற மூன்று இராசகுமாரர்களில் பார்க்க விகாரமாயிருக்கிற இராசகுமாரனைக்கண்டு மரியாதைசெய்து அழைத்தான். இராசகுமாரன் தம்பிமாரிருவரும் இவன் நகரங்கடோறும் ஒவ்வொரு இராசகுமாரத்தியை விவாகஞ்செய்து வருகிறான், நாம்இவனுடன்செல்வதிற்பயன் என்ன? இரும்பு அடிக்கிறவிடத்து நாய்க்கு என்னவேலை, ஒன்றுமில்லை நாங்கள் எங்கள் காரியார்த்தமாகச் செல்லுகிறோம்; நீர் போமென்றுகூறி, குதிரையைத்தட்டி அதிவேகமாகக்



காடு வனம் வனாந்திரங்கடந்து இமயமலைவந்து அந்த மலையைச் சுற்றிப்பார்த்து தாங்கள் நாடிவந்தகன்னிகையிருக்குமிடங்காணாமல் அங்கேதானே ஓரிடத்திலிருந்து எண்ணமிட்டிருந்தார்கள். ஆமையாகிய இராசகுமாரன் அரசனோடு முத்துச்சிவிகையில் சென்று நகரமடைந்து நல்ல சுபமுகூர்த்தத்தில் இராசகுமாரத்தியை விவாகஞ்செய்து பள்ளியறைசேர்ந்து இரதியும் மதனும்போலக் கூடிக்கலந்து இராசபுத்திரியை நோக்கிச் சொல்லுகிறான்: ஓ! என்மாதுசிரோன்மணி! என்தந்தைக்கு இமயமலையிலிருக்கிற கன்னிகையைக்கொண்டுபோய் விவாகஞ்செய்விக்கவந்தேன். நான் அக்கன்னிகைக்காக இமயமலைக்குச்சென்று ஆறுநாளில்வருகிறேன்வராவிட்டால் நீ அவ்விடம்வந்து சேரென்று சொல்லினன். இராசகன்னிகைசொல்லுகிறாள்: ஓசுவாமி! அக்கன்னிகையை எவ்வாறு கொண்டுவருவீரென்றாள். அதை இராசகுமாரன் கேட்டு இந்த இராசகுமாரத்திக்கு அக்கன்னிகையின் விருத்தாந்தந் தெரியுமென்றுகருதி பெண்கள் நாயகமே! அக்கன்னிகை வருகிறவழி எனக்கு விபரமாகச் சொல்லுமென்றான். இராசகுமாரத்தி சொல்லுகிறாள்: ஓ சுவாமி! அக்கன்னிகை அற்பமானவளல்ல! சொற்காதிபுவனமெல்லாந் துதிக்கத்தக்க சுந்தரத்தையுடையவள் இமயபர்வத உச்சியிலிருக்கிறாள்; அவளை யொருவருங் காணொணாது; அந்த மலையை வலம்வந்து நின்று நோக்கினால் அதன் வுச்சியிலிருந்து கொடிவருகிறது; அக்கொடியைப் பற்றினால் அந்த ராசகன்னி யிருக்கிற இடத்திற்கொண்டுபோய்விடும், அக்கன்னிகையைக்கண்டால் விரகத்துடன் புணரவருவாள் அவளுக்கு இனிய வசனங்கூறி அழைத்துக்கொண்டுவாருமென்று விடைகொடுத்தாள். இராசகுமாரன் உடனே பிரயாணமாகி இமயமலை வந்துசேர்ந்து தம்பிமாரைப்பார்த்து சகோதரர்களே! எனக்கு முன்பாகவந்து ஏன் இமயமலையை வலம்வந்து சுற்றிப் பார்த்துத் திகைத்து நின்றீர்களென்று தானும் அம்மலையைவலம்வந்து நின்றுபார்த்தான். ஒருகொடி கண்ணுக்குத் தோற்றிற்று, அக்கொடியைப்பற்றினான், அக்கொடி மலையினுச்சியிலிருக்கிற இராசகன்னிகையினிடத்திற் கொண்டுபோய்விட்டது, இராச

குமாரன் கன்னிகாமாடத்தின் வாசற்படி கபாடத்தைக் கையினாற் றொட்டான். கபாடந் திறந்துக்கொண்டது, இராசகுமாரன் அந்தப்புரத்துக்குச் சென்றான். இராசகன்னிகைகண்டு காதல்கொண்டு அணையவந்தாள், இராசகுமாரன் பார்த்து தன் மந்திரவாளை பூமியில் வைத்துவிட்டுச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஓ அம்மணி! என் தந்தைக்கு உங்களை விவாகஞ் செய்துக்கொடுக்கும்படி நான் வந்தேன் என்னுடன் தாங்கள் வந்து என்கருத்தின்படி என்பிதாவுக்கு மனையாளாகி எனக்குத் தாயாராயிருக்கப் பிரார்த்திக்கிறேனென்றான். அக்கன்னிகைசொல்லுகிறாள்: ஓராசகுமாரகா! இம்மலையில் தொங்குங் கொடியைப்பிடித்து அக்கொடியைப்பற்றி என்னிடத்துக்கு வந்தவன் எவனோ அவனை மணம்புரிகிறதென்று பிரதிக்கினையாதலால் உன்னை நான் அணைய வரும்போது என்னை மறுத்து அன்னையென்றமையால் இனி உன் கருத்தின்படி உன் பிதாவுக்கு மனைவியாகிறேன்; உன் வரலாற்றைக் கூறென்றாள். இராசகுமாரன் பிறந்ததுமுதல் தம்பிமாரோடு வந்ததும் மூன்றுகன்னிகளை மணம்புரிந்ததும் இமயமலைக்குவந்ததுவரைக்குஞ் சொல்ல, அதனை எழுதிக்கொண்டுவாவென்று அழைத்து இருவரும் அக்கொடியைப்பற்றி யிறங்கினர். இந்தயிருவரையும் பார்த்து இரண்டு இராசகுமாரர்கள் வியப்படைந்து நாம்நாடிவந்த கன்னியை இவன் கொண்டு வந்தான், நாம் என்ன செய்கிறதென்று யோசிக்கும்போது, இந்தராசகுமாரன் ஓ அம்மணி! தங்களை நான் நமஸ்காரஞ் செய்யும்போது என் மந்திரவாளை அங்கு வைத்து இட்டேன் அதை எடுத்து வருகிறேனென்று கூறி கொடியைப்பற்றி மலைமேலேறி மந்திரவாளைஎடுத்துக்கொண்டு மறுபடியும் கொடியைப்பற்றி வரும்போது இரண்டு இராசகுமாரர்கள் கண்டு தங்கள் மந்திரவாளால் அக்கொடியின் முதலை யறுத்துவிட்டார்கள், கொடி முதலறவே பற்றில்லாமல் இராசகுமாரன் பூமியில் விழுந்து மண்டையுடைந் திறந்தான். இராசகன்னிகை கண்டு ஓஒ! இவ்விருவரும் மகாபாதகர்; வீரமும் கல்வியும் அழகுமமைந்த இராசகுமாரன்மடிந்தானேயென்று புலம்பிக்கொண்டிருக்கும்போது இருவரும்வந்து மிஞ்சி



யிறந்துபோனவனுக்குப் புலம்பினாற் பலனுண்டோ? வாரும் அம்மணி என்று இதவுசொல்லி அழைத்துக்கொண்டு தங்கள் நகரம்போய்ச்சேர்ந்துபிதாவைக்கண்டு கன்னிகையை யழைத்துவந்த சேதியைத் தெரிவித்தார்கள். அரசன் கேட்டு மகிழ்ந்து மக்களைமார்புறத்தழுவி ஆசிகள்கூறி பெண்ணே! உன் காதலாலெனக்கு இரவும் பகலும் நித்திரையில்லை, இனி கிருபைகூர்ந்து மணஞ்செய்ய விடைகொடென்று வினவினான் இராசகன்னிகை ஓஒ மகாராசனே! இனி உனக்கு மனைவியன்றி எனக்கு வேறே கணவனில்லை, 'ஆக்கப்பொறுத்தது ஆரப்பொறுக்கவேண்டும்'" ஆதலால் எனக்கு ஒருவிரதம் உண்டு, அதற்குத்தக்க செலவு முதலியவை கொடுத்துவந்தால் பின்பு மணஞ்செய்ய உத்தரவு கொடுக்கிறேனென்று சொல்லினாள். அந்த வசனங்களைக் கேட்ட அரசன் தக்ஷணம் தன்மந்திரிகளையழைத்துவேண்டியவற்றைக் கொடுங்களென்று கட்டளையிட்டு வேறொருவிடுதியுங்கொடுத்தான். அவ்விடுதியிலிருந்து அநேக தருமங்கள்செய்து வந்தாள். இமயமலையிலிருந்துவிழுந்திறந்த இராசகுமாரனுடைய மூத்தமனைவி இறுபத்தாறுநாள்வரைக்கும் பார்த்து கணவன் வராமைகண்டு இருபத்தேழாநாளுதயத்துக் கெழுந்து பிரயாணமாகிக் கணவன் வரச் சொன்ன இமயமலைக்குவந்து நாலுதிசையுஞ் சுற்றிப் பார்க்கும்போது ஒருதிசையில்மண்டையுடைந்துவிழுந்திருக்கிறவனைக்கண்டு மிகவும் புலம்பி அந்தராசகுமாரன் காலினிடத்திலிருந்து பலவாறுபாடி யழுதுக்கொண்டிருந்தாள். இரண்டாம்மனைவி தனக்குச் சொல்லிப்போன கெடுவுதப்பியும் கணவன் வராதிருப்பதை யறிந்துஇறந்திருக்கிற தன்கணவனைக்கண்டு அருகில்வந்து தன்னைப் போலப் புலம்பிக்கொண்டிருக்கிற கன்னிகையைக்கண்டு ஓ அம்மணி! நீயார்? புலம்பவேண்டியதென்னவென்று வினவினாள். இராசகன்னிகை தானிருந்த யிருப்பும்பிரதிக்கினையும் நிறைவேற்றித் தன்னை மணந்துவரும்போது தனக்குக் கெடுவிட்டுவந்ததுங் கெடுவிற்குவராவிட்டால் தன்னைவரச் சொன்னதுங் கூறி, நீயேன் புலம்புகிறாயென்று வினவ, அவளும் தன்வரலாற்றைக் கூறினாள். இருவருஞ் சகோதரிபோல முறைகொண்டு

கட்டி யழுதுக்கொண் டிருந்தார்கள். மூன்றாம் மனைவிக்குச் சொல்லிய கெடுவுப்படி கணவன் வாராமைகண்டுமன வருத்தமுற்றுப் பிரயாணமாகி இமயமலைக்குவந்து இறந்திருக்கிற கணவனைக்கண்டு புலம்பிக்கொண்டு அருகில் வந்து இருவ ரழுதுக்கொண்டிருக்கிறதைக்கண்டு நீங்கள் ஏன் அழுகிறீர்களென்று வினவினாள். இருவரும் தங்கள் வரலாற்றையுஞ்சொல்லி மூவருஞ் சகோதரிகள் போ லொருமித்துப் புலம்பினர். பின்பு மூன்றாம்மனைவி இராசகுமாரனைப்போல ஈஸ்வரர் கிருபையினால் உதித்தவளாதலால் மற்றயிருவரையும் பார்த்துச் சொல்லுகிறாள்: தமக்கையரே! நாம் என்னதான் புலம்பினபோதும் பயனென்ன? ஒருத்திசிதறியமண்டையோடுகளைப் பொறுக்கிவைத்து கைகால்களை சீராய்வைக்கவேண்டும் மற்றொருத்தி அந்த மந்திரவாளை யெடுத்துத் துரும்பு போகத் துலக்கிக்கொண்டிருக்கவேண்டும்; நான் நதியில் ஸ்நானஞ்செய்து நம்மைப்படைத்தஈஸ்வரத்தியானஞ் செய்து நீர் புரோக்ஷிக்கிறேன், ஆண்டவர்கிருபையிருந்தால் நமதுகணவன் எழுந்திருப்பாரென்று சொல்ல, அவ்வாறிருவருஞ் செய்தனர். மூன்றாம்மனைவி நதியில் ஸ்நானஞ்செய்து ஆண்டவனைத் தியானித்துச் சலத்தைக் கொண்டுவந்து கணவன்மேற் றெளித்துப் பிரம்பினால் தட்டினாள். அதற்குள் மந்திரவாளும் துலக்கப்பட்டது. உடனே இராசகுமாரன் நித்திரைசெய்து எழுந்தவர்போ லெழுந்து மூவரையும் பார்த்து மகிழ்ந்துகாடாலிங்கனஞ்செய்து ஓ மாதர்களே! கற்புடையமாதர்களிற் சிறந்தவர்கள் நீங்களாதலால் நான் கூறியபடி வந்து என்னை யாதரித்தீர்கள். உங்கள் மூவர்களிற் கல்விகேள்வியி லாழ்ந்த மூன்றாம்மனைவி மந்திரத்திறத்தினால் மலைமேலேறினதும் மந்திரவாளை மலையின்மேல் வைத்து வந்துவிட்டதும் மறுபடியும் அதனை யெடுத்துவரும் போது தம்பிமார் கொடியை மந்திரவாளிட் டறுத்ததும் தான் விழுந்திறந்ததுஞ் சொல்லி உங்களாலுயிர்பெற்றேன் எனச் சொல்லி மூன்றாம் மனைவியின் நகரஞ் சேர்ந்து அவ்வரசன்கொடுத்த இரதகஜதுரகபதாதிகளையும் ஆடையாபரணங்களையும் பெற்றுக்கொண்டு அவன் அளித்த விருந்தமுதுண்டு விடைபெற்று இரண்டாம்



மனைவியின் நகரத்துக்குவந்து அவ்வரசன் கொடுத்த உடம்படிக்கைகளைப்பெற்று முதல்மனைவியின் நகரத்துக்குவந்து அவ்வரசன் கொடுத்த சீதனப் பொருள்களைப் பெற்று தன் நகரைநோக்கி நடந்து காடு மலை வனம் வனாந்திரங்களைக்கடந்து தன் நகரத்திலிருக்கிற ஒருகிராமத்திற் சேர்ந்து தன்னுடன்வந்த இரத கஜ துரகபதாதிகளையும்மனைவிமார்களையும் அவ்விடத்திலிருத்தி மனைவிகளைப்பார்த்து ஓ மாதர்களே! என் தாயை யனுப்புவிக்கிறேன் அவளோடே நீங்கள் மாத்திரம் வரவேண்டும் மற்ற சனங்களைக் காலம்பார்த்து வருவித்துக்கொள்ளுகிறேனென்று சொல்லி தன் நகரத்துக்குவந்து தாயைக் கண்டுவணங்கி தான்சென்றதுமுதல் வந்ததுவரைக்குஞ் சொல்லி மருமகள்மார் மூவரும் மாமியின் வரவுநோக்கி மல்லிகை முல்லை இருவாட்சி முதலிய மலர்களையுந் தங்கத்தட்டிலிற் கங்கையையும் வைத்துக்கொண்டு காத்திருந்து, அருகில் வந்தவுடன் மூவரும் எதிர்சென்று வணங்கி கங்கையாற் பாதத்தைக்கழுவி மலர்களைச் சொரிந்து அர்ச்சனை செய்து சோடசோபசாரத்துடன் அழைத்துப்போயினர். மாமி மருமகள்மாரை யாதரித்து மூவரையும் முத்துச்சிவிகையி லேற்றிக்கொண்டு தானும் ஒரு சிவிகையிலேறித் தன்னிருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தாள். அங்கே ஆறுமாதம் விரதங்கொண்டிருந்த இராசகன்னிகை ஓ ஓ! நாம் இராசனுக்கு ஆறுமாதங் கெடுவிட்டிருக்கிறோம், அக்கெடுவு நெருங்கிற்று; இனி நாமென்ன செய்கிறது; நம்மை யழைத்துவந்த குமாரனை இந்த ராசன் இளையமனைவியின் புத்திரர் மோசஞ்செய்து கொலைசெய்தார்; அப்புத்திரன் வரவில்லை; அப்புத்திரன் இறந்தவன்தானோ? அல்லது பிழைத்தானோ? அது நமக்குத் தெரியவில்லை; நாம் எழுகடலுக்கு அக்கரையி லிருக்கிற அகிலாண்டகோடி தீர்த்தத்தில் மலர்ந்திருக்கிற தெய்வத் தாமரையைக் கொண்டுவர வேண்டுமென்று அரசனைக்கேட்டால் இவ்வரசன் மற்ற இரண்டு குமாரராலும் முடியாது நம்மைக் கொண்டு வந்த இராசகுமாரனால்தான் முடியும்; அம்மலர்வந்தால் இறந்தவன் பிழைத்தானென்று நிதானித்துக்கொள்ளலாம்; விவாகத்துக்கும் உத்தரவு கொடுக்கலாமென்று

யோசித்து மனதில் வைத்திருந்தாள். அரசன் இராசகன்னிகையிடத்து வந்து தன்வரவைத் தெரிவித்தான். இராசகன்னிகை வந்து வந்தனஞ்செய்து நின்றனள். அரசன்சொல்லுகிறான்: ஓமாதுசிரோன்மணி! நீசொல்லியகெடுவுநெருங்கியது, விவாகத்துக்குஉத்திரவுகொடென்று வினவினன். இராசகன்னிகை சொல்லுகிறாள் ஓ! மகாமண்டலேஸ்வரா! தங்களுக்குச் சொல்லிய கெடுவு நெருங்கியது உண்மைதான் கெடுவுக்குள் ஏழுகடலுக்கு அக்கரையில் அகிலாண்டகோடிதீர்த்தமென்று ஒரு நதியிருக்கின்றது, அதில் புட்பித்திருக்கிற தெய்வத்தாமரைமலர் வேணும் அது வருகிறதுதான் தடை; அதுவந்துவிட்டால் விவாகத்துக்கு நீங்களே முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாமென்று கூறினள். அந்த வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் மகிழ்வடைந்து தன் அரண்மனைக்குவந்து தன் மக்களை யழைத்து அப்பா புத்திரர்களே! ஒருவராலும் அழைத்துவரக்கூடாத இராஜகன்னிகையை யழைத்துவந்தீர்கள், அது பெரிதல்ல; தற்சமயத்தில் ஏழுகடலுக்கு அக்கரையிலிருக்கிற அகிலாண்டகோடி தீர்த்தத்தில் புட்பித்திருக்கிற தெய்வத்தாமரைவரவேணும், அதுவந்தால் தடையின்றி விவாகம் நிறைவேறும் அந்தமலரை விரைவில் கொண்டுவரவேணுமென்று மக்களைப்புகழ்ந்தான். புத்திரர்கள் தந்தை புகழ்தலினால் அதிக மகிழ்வடைந்து தந்தைமனங்களிக்க இதோ அம்மலரைக் கொண்டுவருகிறோமென்று கூறி ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டு ஆயுதபாணிகளாகக் குதிரையின்மேலேறிக் கடற்கரையில் வந்து அக்கடலைக் கடக்கிறது எவ்வண்ணமென்று ஏங்கி ஒருவரையொருவர் பார்த்து, ஓ ஓ! நாம் மலையிலிருந்த இராசகன்னிகையைக் கொண்டுவந்த இராசகுமாரனை வஞ்சித்துக் கொன்றுவிட்டோம், அந்த மகானுபாவன் இல்லாவிட்டால் இந்த இராஜகுமாரத்தியைக் கொண்டுவர நம்மால் முடியாது, தற்காலத்தில் தெய்வத்தாமரைமலரைக் கொண்டுவர உத்திரவாயிருக்கின்றது, நாம் முன்பின் யோசிக்காமல் கொண்டுவருகிறோமென்று உறுதிகூறி வந்தோம், மலர் வருகிறதை பின்பு தேடுவோம் கடல் டக்கிறது எவ்வண்ணமென்று யோசித்துக்கொண்டு



தேனில்விழுந்த ஈயைப்போல மயங்கியிருந்தனர். இங்கே ஆமையாகிய இராசகுமாரன் தன் கியானதிருஷ்டியால் பார்த்துத் தன்பிதா இராசகன்னிகையிடத்துச் சென்றதும் கன்னிகை தெய்வத்தாமரைமலர் கேட்டதும் இராசன் அம்மலரைக் கொண்டுவர தன்குமாரரையனுப்பிவைத்ததும் குமாரர்கள்கடற்கரையில்கலக்கமுற்றிருப்பதையுமுணர்ந்து தட்சணமெழுந்து ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டு தாம்பூலந்தரித்து ஆயுதபாணியாகத் தாயாருக்கு வணங்கிக் காரியத்தைத் தெரிவித்து விடைபெற்று முதல்மனைவி யிடத்துவந்துஇராசாங்கத்தில் நடந்த சேதியைத் தெரிவித்து தெய்வத்தாமரை மலரைக்கொண்டுவர எனக்குவிடைகொடுமென்று கேட்க, அவள் விடைகொடுக்கப்பெற்று இரண்டாம் மனைவியைக் கண்டு அவளிடத்தும் விடைபெற்று மூன்றும் மனைவியிடத்துவந்து அதைத் தெரியச்சொல்லி விடைகேட்டான். மூன்றும்மனைவி சொல்லுகிறாள்: ஓ சுவாமி! அம்மலர் கடற்கரையி லிருக்கின்றது. அதனை எவ்வாறு கொண்டுவருவீர்? சொல்லுமென்று வினவ, இராசகுமாரன்கேட்டு ஓ ஓ! இக்கன்னிகையினிடத்தில் அம்மலர் வரும்படியானவிதம் ஏதோ யிருக்கிறதென்று குறிப்பிலுணர்ந்துகொண்டு சொல்லுகிறான்; என் அருமைப் பெண்கள்நாயகமே! நான் உன்னாலுயிர்பெற்றேன். என்பெருமைக்கும் சுகத்துக்கும் மூலகாரணம் நீயாயிருக்க, என்னை நீயே அம்மலரைஎவ்வாறுகொண்டுவருவீரென்று வினவுகிறது தகுதியல்ல; அம்மலர் வரும்வழியையுரைத்து யாம் பெருமையடைய உனது திருவாய் மலர்ந்தருளவேணுமென்று சொல்ல இராசகன்னிகை கேட்டுப் புன்சிரிப்புக்கொண்டு ஓய் சுவாமி! என்மனதைச் சோதிக்கும்படியாக என்னைச்சிறப்பிக்கின்றீர்கள்; என்னாலொரு காரியமுமில்லை எல்லாந் தங்களுடைய நன்னடக்கையும் ஆண்டவனுடைய கிருபையுந்தானென்று சொல்லினள். இராசகுமாரன் சொல்லுகிறான்: ஓ மாதரசே! புத்தியிலுயர்ந்தவர்கள் எப்போதுந் தன்னைப் பெருமைப்படுத்திக்கொள்ளார்கள்; நீ புத்தியிலுயர்ந்தவளாதலால் அம்மலர் வரும்வழி யுரைக்கவேணுமென்று வினவ, இராசகன்னிகை சொல்லுகிறாள்:

ஓ சுவாமி! இந்த ஏழுகல்லையும் இந்தசீட்டையும் எடுத்
துக்கொண்டுபோய் இந்தக் கற்களிலொன்றைக் கடலில்
போட்டு முன்வற்றிப்பின்சுரக்கவென்றுசொல்லும். அக்
கடல் முன்வற்றிபின்சுரந்துவரும்; ஏழுகடலுக்குஞ்சொ
ல்லி அக்கரையிலேறி அங்குஅகிலாண்டகோடிதீர்த்தம்
தோன்றும்; அத்தீர்த்தக் கரையிலிருந்து சண்டமாருத
கோதண்டராட்சதா என்று கூப்பிட்டால் அந்த ராட்ச
தன் வருவான். அவன்கையில் இந்தசீட்டைக்கொடும்.
அவன் தாமரைமலர் வரும்வழிகாட்டி பூவைப்பெற்றுக்
கொள்ளச் செய்வான். பூவை வாங்கிக்கொண்டு வந்து
சேருமென்று கூறிக்கொடுத்தாள். இராசகுமாரன்கல்லை
யுஞ் சீட்டையும் வாங்கிக்கொண்டு பிச்சைக்காரன்போல
வேடந்தரித்து மந்திரவாளுடன் கடற்கரைக்குவந்து
தம்பிமாரைநோக்கி, அப்பா! தம்பிமாரே! நீங்கள் ஏன்
இங்கிருந்து கலக்கமுற்றிருக்கிறீர்கள்? வந்தகாரண மெ
ன்ன? என்றுவினவ, இரண்டு இராசகுமாரருங் கண்டு
அச்சமுற்று ஓ ஓ! இந்தப் புண்ணியவானல்லவா இமய
மலையிலிருந்தஇராசகன்னிகையை அழைத்துவந்தவன்.
இவனை நாம் வஞ்சித்துக்கொன்று விட்டோம். இவன்
மறுபடியும் பிழைத்துவந்தான்: இவன் நல்ல சாமர்த்தி
யத்தியனாகயிருக்கிறான். இவன் கேட்ட கேள்விகளுக்கு
விடைகொடுக்க வேணுமென்று கருதிச் சொல்லுகிறார்
கள்: ஓ ஐயா! நாங்கள் கடற்கரையிலிருக்கிறஅகிலாண்ட
கோடி தீர்த்தத்தில் புஷ்பித்திருக்கிற தாமரை மலரைக்
கொண்டுபோகவந்தோம் கடலைப் பார்க்கவேகலக்கமுற்
றிருக்கிறோமென்றுகூற, பிச்சைக்காரன்போ லிருக்கிற
இராசகுமாரன் சொல்லுகிறான்: அப்பா, தம்பிமாரே
உங்களால் வரமாட்டாது. நான்சென்று அம்மலரைக்
கொண்டுவந்து கொடுக்கிறேன், நீங்கள்இங்குதானேயிரு
ங்களென்று மற்றொரு பக்கமாய்ச்சென்று தன்கையிலிரு
க்கிற கற்களில் ஒரு கல்லையெடுத்து அக்கடலிற்போட்டு
"முன்வற்றி பின்சுரக்க" என்று கடலிலிறங்கினான்.கடல்
வழிவிட்டது. அவ்வழியேசென்று ஏழுகடலுங்கடந்து
அகிலாண்டகோடி தீர்த்தத்தின் கரையில் நின்று ஓசண்
டமாருத கோதண்ட ராட்சதா!என்றுகூவினான். இராட்
சதன்கேட்டு நமது நாமத்தை அச்சமின்றியெடுத்துரை



த்து அழைத்தவன் யாரென்று கடுஞ்சினமடைந்துகால
தண்டத்துக்கொப்பாகிற தனது ஆயுதத்தைக் கரத்திலெ
டுத்து நிலத்தில்தாங்கி யடித்துக்கொண்டுவந்து பார்த்
தான். இராசகுமாரன் கண்டு சீட்டைக் கொடுத்தான்.
இராட்சதன் அச்சீட்டைப் படித்துப்பார்த்து மகிழ்வ
டைந்து அச்சீட்டை கண்ணிலொத்தி இத்தனைநாள்
சென்றதா? எனதுமாதா என்பேரில்கிருபைவைக்கவெ
ன்று துதித்து தட்சணம் அருகிலிருக்கிறபூதசேனாபதியி
லொருவனை அழைத்து சீட்டைக்கொடுத்து இராசகுமா
ரனைக்கூட்டி நமது அரசனிடத்துக்கு அழைத்துப்போ
என்று கட்டளையிட்டான். பூதசேனாதிபதி இராசகுமா
ரனை யழைத்துக்கொண்டு அந்தநதிக்கரையைவிட்டு நீர
ருகிற்சென்றான். அந்நீரிலிருக்கிற முதலை வாயைத்திற
ந்துகொண்டுவந்தது, அதன்வாயில்பூதசேனாதிபதிகையி
லிருந்த சீட்டைப் போட்டான். அச்சீட்டை இராட்சத
அரசனிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தது. இராட்ச
தன் அதைக்கண்டு மகிழ்ந்துஅச்சீட்டைக்கண்ணில் ஒத்
திக்கொண்டுசீட்டைக்கொண்டுவந்த இராசகுமாரனுக்கு
தெய்வத் தாமரைமலருஞ் சீட்டெழுதி யனுப்பிய கன்
னிகைக்கு ரத்னாபரணமுங்கொடுத்து முதலையைப் பார்த்
துச் சொல்லுகிறான்: ஓமுதலையே! நீ இதனைஇராசகுமா
ரன் கையிற்கொடுத்து அவனையும்உன்மேல் ஏற்றிக்கொ
ண்டுபோய் கடற்கரையில் விட்டுவாவென்றுகட்டளையிட்
டான். முதலை இராசகுமாரன்கையில்பூவையும்இரத்தினா
பரணங்களையுங் கொடுத்து யெடுத்துக்கொண்டு ஒருமுகூ
ர்த்தத்தில்ஏழுகடலையுந்தாண்டிப்பூமியிற்கொண்டுவந்து
விட்டுப்போயிற்று. இராசகுமாரன் பூவைக் கடற்கரையி
லிருக்கிற தம்பிமார்கையிற் கொடுங்களென்றுகூறி இரத்
தினாபரணத்தோடு தன் அரண்மனைவந்துதாயைப்பணி
ந்து தான்போய்வந்தசங்கதியைச்சொல்லி இளையாளிட
த்துவந்து தன் சேதியைத்தெரிவித்து இராட்சதராசன்
கொடுத்தஇரத்தினாபரணத்தைக்கொடுத்தான்.இராஜகன்
னிகைஅந்தஆபரணத்தை வாங்கிக்கொண்டுகணவனுந்
தானுமாக சுகித்திருந்தார்கள். இராசகுமாரர் தெய்வத்
தாமரை மலரையெடுத்துவந்துபிதாவினிடத்திற் கொடு
த்து வணங்கிநின்றனர்.பிதாமகிழ்ந்து இருவரையும்மார்

புறத்தழுவி சில ஆசிகள்கூறி, அம்மலரை யெடுத்துக்
கொண்டு இராசகன்னிகை அரண்மனைக்குவந்துதன்வர
வைத் தெரிவித்தான். இராஜகன்னிகைவந்து வணங்கித்
தாமரைமலர்வந்ததோவென்றாள். அரசன்மலரைக்கொ
டுத்தான். இராஜகன்னிகை அம்மலரைவாங்கிப்பார்த்து
இது தெய்வத்தாமரையென்று தீர்மானித்து இம்மல
ரைக் கொண்டுவந்தவன் என்னையழைத்துவந்த இராஜ
குமாரனென்றும் அவனபிழைத்திருக்கிறானென்றும்மதி
த்துக்கொண்டுமகிழ்ந்துசொல்லுகிறாள்: ஓமகாராஜனே!
இனி தடையில்லாமல் முகூர்த்தத்துக்கு நாள்வைத்து
அந்நாளில் மண்டலத்து அரசரெல்லோரும் வரும்படி
செய்து நீ என்னிடத்து வாருமென்று கூறினள். அர
சன்மகிழ்ந்து புரோகிதனை யழைத்துமுகூர்த்தநாள் நிய
மித்துக்கொண்டு இராஜராஜாக்களெல்லாம் வரும்படி
திருமுகமனுப்பி நகரத்தை அலங்கரிக்கச்செய்து, கலி
யாணமண்டபமியற்றி கல்யாணத்துக்கு வேண்டியபதா
ர்த்தத்தையெல்லாஞ்சேகரித்தான். இதற்குள்மண்டலத்
தரசர்களும் வந்துவிட்டார்கள். அவர்களைக்கலியாணச்
சபையினிடம் இருக்கச்செய்தார். மணக்கோலங் கொ
ள்ளவேண்டிய தாகையால்இராஜகன்னிகைவந்துஅரச
னுக்கு வந்தனஞ்செய்து எல்லாராஜர்களும் வந்தனரா?
என்றனள். அரசன் சொல்லுகிறான்: ஓமாதரசே! அரச
ர்கள் வந்ததுமின்றி முகூர்த்தவேளையும் நெருங்கிற்று;
திருமணக்கோலஞ் செய்துக்கொள்ளவேண்டும். அதற்
காகஉன்னிடத்தில்வந்தேனென்றான். இராஜகன்னிகை
சொல்லுகிறாள்: ஓ மகாராஜனே! உன் மூத்தமனைவி
யும்அவளுடையபுத்திரரும் அவள் மருமகள் யாவரும்
வரவேணும்; அவர்களை அழைத்துவாரும்; அவ்விராஜ
கன்னிகையை அழைத்துவரக் கட்டளையிட்டதும்மூத்த
மனைவிமுதலியவர்கள் வந்தவுடனேஉன்னுடையமூத்த
மனைவியின்குமாரன் என்னைவிவாகஞ்செய்துகொடுப்பா
ன்போவென்றனள். அரசன்கேட்டுத் திடுக்கிட்டுசிந்தை
கலங்கித் தன் அரண்மனைவந்து ஒன்றுந்தோன்றாமல்
ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்! நமது மூத்தமனைவிக்கு
புத்திரனில்லாமையால் இளையாளை மணம்புரிந்தோம்.
இளையாளுக்குப் புத்திரனில்லாமையால் கடவுள்கிருபை



யால் ஒரு மாம்பழங் கொண்டுவந்துகொடுத்தோம். அப்
பழத்தால்இரண்டுபுத்திரர்களை இளையாளீன்றாள். ஜேஷ்
டாளுக்குப் புத்திரனேது? இதுஏதோ அதிகவினோதமா
யிருக்கிறது. இதனை யறியவேணுமென்று மதித்து ஆ
டையாபரணாலங்கிர்தனாகிபஞ்சகலியாணிகுதிரையின்மே
லேறிச் சில பரிசனஞ் சூழ்ந்துவர மூத்தாள் அரண்ம
னையை நாடிவருகிறான். மூத்தாள்பெற்ற ஆமையாகிய
இராஜகுமாரன் ஞானதிருஷ்டியால் பார்த்துத் தாயிட
த்து வணங்கி ஓ அம்மணி! எனது பிதாவருகிறார். நீ
ஆடையாபரணாலங்கிர்தமாக யிருந்து அவருடன் உன்
மருமக்கள்மாரோடு நானும்வருகிறேனென்றுஎச்சரித்து
விட்டு அசனூரிலிருந்தான். சேனைகளைத் தூதனுப்பிசே
னைகளை யழைப்பித்துக்கொண்டு தன்னரண்மனைமுற்றத்
தில் முத்துப்பந்தலிட்டு அலங்கரித்து ஆடையாபரணா
லங்கிர்தனாகி எதிர்சென்று பிதாவை யழைத்து வந்து
பொற்பீடத்திலிருக்கச் சோடசோபசாரஞ்செய்து வண
ங்கி நின்றனர். இராஜன் பார்த்து இதென்ன ஆச்சரிய
மென்று மனதில் மிகவுங் கலக்கமுற்றிருந்தாலும் அந்த
விஷயமான விசேஷமென்று வழங்காமல் வணங்கி யவ
ர்க்கெல்லாம் பல ஆசிகள்கூறி விவாகத்துக்கு வாருங்க
ளென்றழைத்தனன். தட்சணம் இராஜகுமாரன் தன்சே
னைகளை எச்சரித்துத் தன்பிதாவைப் பஞ்சகல்யாணிகுதி
ரையின்மேலேற்றித் தன் தாய்மகளைவிடவிசாரத்தோடு
வெளிப்பட்டு பலவாத்தியம்முழங்க அரண்மனைக்குச்செ
ன்று பிதாவுக்கு நலங்கிட்டு ஸ்நானஞ்செய்து நல்ல சுப
முகூர்த்தத்தில்மணவரையிலிருத்திமனையிலிருந்துவந்த
இராஜகன்னிகைக்குச்சேதிதெரிவித்தான். இராஜகன்னி
கை கேட்டு மகிழ்ந்து ஸ்நானஞ்செய்து மணக்கோலங்
கொண்டு கல்யாணமண்டபத்திற்குத்திரையிட்சொல்லி
அத்திரையில் வந்திருந்து இராஜராஜாக்களும் மற்று
முள்ளவர்களும் கேட்கச் சொல்லுகிறாள்: ஓ மகா சபை
யாரே! அடியேன் ஒருகதை சொல்லுகிறேன் அக்கதை
யைக்கவனித்துக்கேட்டு அதற்குப்பயன் சொல்லவேண்
டும். அதன்பின்பு முகூர்த்தம்நிறைவேறவேணும். ஆத
லால்கேளுங்களென்றுஎச்சரித்துமல்லிகார்ச்சுனராஜன்
கல்யாணஞ்செய்து பிள்ளையில்லாமல் பரமனைநோக்கித்

தவஞ்செய்து மாங்கனிபெற்று அக்கனியாற்புத்திரரைப் பெற்று இமயமலையிலிருக்கும் இடமாக மூத்தகுமாரன் பிறந்ததுமுதல் மலையினுச்சியிலிருக்குங் கன்னிகையைக் கண்டு அழைத்துக்கொண்டுவர இராஜகுமாரர்கள் வஞ்சித்து அந்தக்குமாரனைக்கொன்றதும் எடுத்தோதி அப்புத்திரன் பிழைத்ததும் பிழைக்காததுமறியத் தாமரை மலர்கேட்டதும் அதுவுந்தான் இராஜகுமாரன் பிழைத்தவரலாறும் பூ கொண்டுவந்த வரலாறும் தெரிந்துக் கொள்ள கருத்தாயிருக்கிறேன் சொல்லுமென்று கூறினள் ஆமையாகிய இராசகுமாரன் என் மனைவி மூவர்களில் இளையாளின்நடக்கையால் உயிரைப்பெற்றுக் கொண்டதும் அதன்றியும் பூவைக்கொண்டுவர அவள் உதவியையும் பெற்றுக்கொண்டு வந்ததுமுதல் கல்யாண சபையில் வந்தவரைக்குஞ் சொல்லிமுடித்தான். மகாராஜர்கேட்டு மூத்தபிள்ளையின்மேல்மகிழ்வும் இளையபிள்ளைகள்மேல் இகழ்வுமுற்று இரண்டு குமாரர்களையும் உனக்கு இஷ்டமான தண்டனை செய்துக்கொள்ளென்றுஉத்தரவுகொடுத்தான். மூத்தகுமாரன அவர்களை யாதும் செய்யவேண்டியதில்லை; அவர்களிருக்கிறதில் ஒன்றுங் கெட்டுப்போகாது யாவருக்குந் தெய்வம்பொது; அவர்களின் வினைவழி நடக்குமென்று கூறிச் சகோதரரை யாதரித்துப் பிதாவை மணவரையிலிருத்தி இராஜ கன்னிகையை அழைத்துவந்து மணவறைசேர்த்து விவாகத்தை நிறைவேற்றிச் சகலருக்குந் தக்க மரியாதை செய்து அவர்களைத் தங்களிருப்பிடத்துக்கு அனுப்பித் தானும் பிதாவுஞ் சகோதரர்களும் மனைவிகளுங் குடும்ப சமேதனாகச் சுகமாக வாழ்ந்திருந்தான். கேட்டையோ பெண்கள் நாயகமே! அவ்வளவுபராக்கிரமமுள்ள இராஜகுமாரனல்லவோ உன்னை மணம்புரியவேண்டுமென்று கூறினான். சூரியன உதயமாகிற சமயமாயிற்று. மந்திரி குமாரன் எழுந்து நித்தியக்கடனை முடித்துக்கொள்ளச் சென்றான். இராசகுமாரத்தியும் அந்தப்புரஞ்சென்றாள்.

நாலாநாள்கதை-முற்றிற்று.

---



ஐந்தாம்நாள்கதை

## ஜெகதலப்பிரதாபன் கதை

ஐந்தாநாளிரவில் மந்திரிகுமாரன் உண்டு தாம்பூலந்தரித்துஆடையாபரணாலங்கிருதனாகிப் பள்ளியறை சேர்ந்தான். இராசகுமாரத்திகளில் மூத்தாள் உண்டு தாம்பூலந்தரித்து ஆடையாபரணாலங்கிருதைளாகிப் பள்ளியறைசேர்ந்து காதல்மீறி மந்திரிகுமாரனைத் தழுவ யெத்தனித்தாள். மந்திரிகுமாரன் கண்டு ஓ பெண்கள் நாயகமே! நான் ஒருசிறியகதை சொல்லுகிறேன், அதனைக்கேள்; கதை முடிந்தவுடன் சேருவோமென்று சொல்ல; இராஜகுமாரத்தி அக்கருத்துக்கிசைய மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: கேளும் மாதுசிரோன்மணியே! உதயகிரியென்று ஒரு நகரம் உண்டு, அந்நகரத்துக்கு உலகாதிபன் என்னும் அரசனுண்டு, அவ்வரசனுக்கு ஏழுபுத்திரர்கள். அப்புத்திரருக்குப் பிதாவாகிய உலகாதிபன் நான்குவேதம் ஆறுசாஸ்திரம்அறுபத்துநாலுகலைக்கியானம் முதலியவற்றை ஓதுவித்துவில்வித்தை யானையேற்றம் முதலியவையுங் கற்பித்து புத்திரர் வாலிபதிசை யடைந்தபின்பு ஏழுபேருக்கும் அரண்மனைப்புதுக்கி அதில் அவர்களையிருக்க உத்திரவுகொடுத்து ஒருகுறைவும்வாராமல் பாதுகாத்துவந்தான். ஒருநாள் பூரணச்சந்திரோதயத்தில் உலகாதிபன் தனது உப்பரிகையிலிருந்து சந்திரபிம்பத்தைநோக்கி இவ்வேளையில் நமது குமாரர்கள் கருத்து என்னவிதமாகவிருக்கிறதோ? அதனையறிந்து வருவோமென்று கருதி உப்பரிகைவிட்டிறங்கி மூத்தகுமாரனைக்கண்டு அப்பா புத்திரசிகாமணியே! இந்தச் சந்திர உதயகாலத்தில் உன் கருத்தில் என்ன நினைத்திருக்கிறாய்? அதனையொளியாமல் எனக்கு உரையென்று வினவ, மூத்தகுமாரன் பிதாவை வணங்கிச் சொல்லுகிறான்: ஓ பிதாவே! இந்தச்சந்திரோதயகாலத்தில் இரத கஜ துரக பதாதிகளைக் கூட்டிக்கொண்டு பகைவர்மேல் போர்க்கோலங்கொண்டால் நன்மையாயிருக்குமென்று சொல்ல, அரசன் அக்கருத்தையறிந்துக்கொண்டு இரண்டாவது புத்திரனிடத்து வந்து உன்கருத்தில் என்ன நினைந்திருக்கிறாய்? ஒளிக்

காமலுவையென்று வினவ, புத்திரன் வணங்கிச்சொல்லுகிறான்: ஓ ஐயா! இந்நிலவுகாலத்தில் பயிர்களுக்கு ஏற்றம்பிடித்திரைத்தால்இளைப்பில்லாமலிருக்குமென்று சொல்லினன். அரசன்கேட்டு மூன்றாவது குமாரனிடத்துவந்து வினாவினான். மூன்றாங் குமாரன் பிதாவை வணங்கிச் சொல்லுகிறான்: ஐயா! இந்தவேளை ஏருழுதலால் மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் இளைப்பில்லாதிருக்குமென்றுசொல்ல அரசன்கேட்டு நாலாங்குமாரனிடத்துவந்து உன்கருத் தென்ன வென்று வினவ, நாலாங்குமாரன் வணங்கிச்சொல்லுகிறான். ஐயா! இப்போது வழிப்பிரயாணம்போனால் குளிர்ச்சியா யிருக்குமென்றனன். அரசனகேட்டு, ஐந்தாங்குமாரனை உன் கருத்தென்னவென்று வினவினன். ஐந்தாங்குமாரன் வணங்கிச் சொல்லுகிறான்: ஐயா! இந்தவேளை நால்வகைச்சேனையோடு காட்டிற்குச் சென்று வேட்டையாடினால் பலவிலங்குகள் மடியுமென்றனன். அரசன் கேட்டு ஆறாங்குமாரனிடத்துவந்து உன்கருத்தென்னவென்று வினவினன். ஆறாங்குமாரன் வணங்கிச்சொல்லுகிறான்: ஐயா! இந்த நிலவுகாலத்தில் கூலிக்குக் குத்தினால் உடலுக் கிளைப்பில்லாமலிருக்குமென்றுசொல்லினன். அரசன்கேட்டு ஏழாவது குமாரனாகிய ஜெகதலப்பிரதாபனிடம்வந்து உன்கருத்தென்னவென்று வினவினன். ஏழாங் குமாரனாகிய ஜெகதலப்பிரதாபன் பிதாவைத்தொழுது சொல்லுகிறான்: ஐயா! இந்த உலக வரசர்களை யடக்கி ஏகசக்கிராதிபதியாய் இந்நிலவுகாலத்தில் நிலாமணி முற்றத்தில் அம்சதூளிகா மஞ்சத்தில் இந்திரன்குமாரத்தி அடைக்காய்நல்கவும், அக்கினிதேவன் மகள் கால்வருடவும், வருணன் மகள் இசைபாடவும், நாககன்னிகை சாமரைவீசவும் இருந்தால் மிகஉல்லாசமாயிருக்கும் என்றனன். இந்தவசனங்களைக்கேட்ட அரசன் கடுஞ்சினமடைந்து அடா துன்மார்க்கா! 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்ற வேத வாக்கியத்தை யுணர்ந்திருந்தும் நீ எட்டாதெல்லா மெட்டிப் போராசைப்படுகிறாய். நீ இந்த ராஜாங்கத்திலிருந்தால் அதிக கெடுதல்விளையும், ஆதலால் உன்னை மற்றொரு ராஜாங்கத்துக் கனுப்பிவைக்கக்கூடாது. உன்னைக் கொன்று



விடுகிறதே உத்தமமாயிருக்கிறது. ஆறுபுத்திரரால் நான் சுகத்தையடைவேனென்று சொல்லி தன் அரண்மனைக்கு வந்து கொலையாளியை யழைத்து ஓ கொலையாளிகளே! நீங்கள் எள்ளளவேனுந் தயவு தாட்சண்ய மில்லாமல் என் ஏழாங்குமாரனாகிய ஜெகதலப்பிரதாபனை வெட்டி விடுங்களென்று கடினமாகக் கட்டளையிட்டான். இச்சேதியை அந்தப்புரத்தி லிருக்கிற தாயார் கேட்டு மிகவுந் துக்கித்து ஆயிரம்வராகன்கொண்டிருக்கிற ஒருபையை யெடுத்துக்கொண்டு புலம்பி அப்பா ஜெகதலப்பிரதாபா! உன் பிதாவின் மனங்கோண ஏன் நடந்தாய்? உதயமானதும் உன்னைக் கொலைபுரியக் கொலையாளிக்கு உத்தரவாயிருக்கின்றதே நானென்ன செய்வேன். இப்பவும் நான் சொன்னபடியே செய்வாயாகில் உனது உயிர் பிழைக்கும், அஃதென்னவெனில்: இதோயிருக்கிற ஆயிரம்வராகன் பையை யெடுத்துக்கொண்டு மதிலேறிக் குதித்து ஓடிப்போய்விட்டால் நலம். கேட்டையோ பெண்கள் நாயகமே! சற்று வினாவாகக்கேளும்: சூரியோதயமானவுடன் கொலையாளிகள்வந்துஇராஜகுமாரனைப் பார்த்தார்கள். இல்லாதிருப்பதை யறிந்து அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் கடுஞ்சினமடைந்து ஓ கொலையாளிகளே! எந்தக்காலத்தில் எந்த வேளையில் என்குமாரனைக் காண்கிறீர்களோ அட்சணம் அவனைக் கொன்று விடுங்களென்று கட்டளையிட்டான். மதிலேறிப்போன ஜெகதலப்பிரதாபன் இராவிற்றாலேகாற்றாய்ப் பறந்து காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்து ஒரு நாட்டில் வந்தான். அங்கொரு ஔவையார் வீடுதோன்றிற்று. சூரியன் உதயமானான். ராஜகுமாரன் கண்டு மகிழ்ந்து அவ்வீட்டிற்சென்று ஔவையாரை நோக்கி வணங்கினான். ஔவையார் நீ யாரப்பா என்று வினவினள். இராஜகுமாரன் தன்வரலாற்றையோதி என்னை நீ பாதுகாக்கவேண்டுமென்று சொல்லினன். ஔவையார் கேட்டு மகிழ்ந்து சொல்லுகிறாள்: அப்பா எனக்குப் பத்து எருமைமா டிருக்கின்றது; அதனை மேய்த்துப் பாதுகாத்துக்கொண்டு வீட்டிலுள்ளதை புசித்துக்கொண்டிரு; ஆனால் நீகிழக்கு மேற்கு தெற்கு என்கிறமூன்று திசைக்குச் செல்லு, வடதிசைக்கு மர்த்திரம் போக

வேண்டா மென்றனள். இராஜகுமாரன் அக்கருத்துக் கிசைந்து அன்றையத்தினம் புருதனம் பொசித்து எருமைமாடுகளை யவிழ்த்து ஓட்டிக்கொண்டு கிழக்குத்திசையில் மேய்த்து நாலாநாள் வடதிசைக்குச் சென்றுல் என்ன கெடுதி அதனை யறியவேண்டுமென்று இராஜவமிசமாதலால் தைரியங்கொண்டு எருமைமாடுகளை வடதிசைக்கு ஓட்டிக்கொண்டு மேய்த்தும் ஒரு அதிசயமுந் தன்கண்ணிற்குப் புலப்படாமையால் மாடுகளை நெடுந்தூரம் ஓட்டிக்கொண்டு அங்கு தோன்றிய நாகச்சோலையில் மாடுகளை நிறுத்தி வெயிலுக்கு நாகமரத்தடியில் படுத்துக்கொண்டு அந்த நாகமரத்தைப் பார்த்தான். அம்மரம் அழகாயிருப்பதை யறிந்து அம்மரத்திலேறி கனிகளைப் புசித்துக்கொண்டு சுற்றிப்பார்த்தான். அங்கு ஒருதிசையில் நவரத்தின மிழைத்த படிகளோடு கூடிய திருக்குளம் ஒன்று தோற்றப்பட்டது. இராசகுமாரன் கண்டு ஓ! ஓ! ஔவையார் சொல்லிய வார்த்தை மெய்யாயிருக்கிறதென்று கருதி அதனை முழுதும் பார்ப்போமென்று நினைத்து மரத்தைவிட்டிறங்கி குளத்தருகில் வரும்போது அக்குளத்தில் நாலுபேர் தோழிமாரோடு நீராடுகிற இந்திரன் குமாரத்தியைக்கண்டு ஓ! ஓ! குளத்தில் யாரோ ஒருகன்னிகை தோழிகளோடு நீராடுகிருள் அவள் ஆடைகரையிலிருக்கிறது, அதனைத்தெரியாமல் எடுத்துக்கொள்ள வேணுமென்று கருதி, பூமியில் படுத்து மார்பால் நகர்ந்து தெரியாமல் வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு பத்தடிதூரம் வந்து எழுந்தோடி வந்தான். இந்திரன்குமாரத்தி யதனையுணர்ந்து கரையிலேறி நிர்வாணியாகத்தானே பின்ருேடிவந்து என்னைப் பார் என்னழகைப்பார் பின்னைப்பார் பின் அழகைப்பார் என்று சொல்லிக்கொண்டேவந்தாள். இராஜகுமாரன் வாலிபனுதலால் நிர்வாணியாக வருகிற இந்திரன் குமாரத்தியைத் திரும்பிபார்த்தான், இந்திரன் குமாரத்தி இராஜகுமாரனைக் கல்லாகச் சபித்துவிட்டு வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு போய்விட்டாள். மாடுகள் வழக்கப்படி வீடுவந்து சேர்ந்துவிட்டது. ஔவையார் இராஜகுமாரனைக் காணுதவளாகி வந்தமாடுகளைப் பால் கறந்து பொழுதுபோய்ச் சாமமாயும் இராஜகுமாரன் வாராமை



கண்டு பொழுது விடிந்தபின்பு யோசிப்போ மென்று கருதி, படுத்து நித்திரைசெய்து சூரியன் உதயமானவுடன் எழுந்து இராஜகுமாரனைத்தேடி வடதிசைவந்து நாகச்சோலையருகில் கல்லாகவிருக்கிற இராஜகுமாரனைக் கண்டு ஓ! ஓ! இந்தராஜகுமாரன் இந்திரன் குமாரத்தி கண்ணிலகப்பட்டானே! இவனைக்கல்லாகச்சபித்துவிட்டாளென்று மதித்து தட்சணம் வீட்டுக்குப்போய் பிரம்பும் கலசமெடுத்துக்கொண்டுவந்து கலசத்தி லிருக்கிற நீரை அக்கல்லின்மேல் புரோட்சித்துப்பிரம்பால்தட்டினுள். ராஜகுமாரன் முன்போலெழுந்து ஔவையாரை வணங்கிச் சொல்லுகிருன்: ஓ அம்மா! அடியேன் மூன்றுநாள் கிழக்கு தெற்கு மேற்கு என்ற மூன்றுதிக்கிலேயும் மாடுகளைமேய்த்து நாலாநாள் தாங்கள் கூறியவற்றை மறந்து வடதிசைக்கு மாட்டையோட்டிக்கொண்டு வந்து இந்த நாகச்சோலையில் நிறுத்தி மரத்திலேறி கனிபுசித்திருந்தேன். அப்போது என்து கண்ணுக்கு நவரத்தினமயமான படிகளோடுகூடிய திருக்குளமொன்று தோன்றிற்று; அதன் அருகில் சென்றபோது அதில் நாலுபேர் தோழிகளுடனே ஒருகன்னிகை ஜலக்கிரீடை செய்திருந்தாள். அவளைக்கண்டு அவளுக்குத் தெரியாமல் அவள் வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு வந்தேன். அவள் பின்ருெடர்ந்து என்னைப் பார்த்து என் அழகைப்பார் என்ருள். நான் திரும்பிப்பார்த்தேன் அதன்பின்பு நடந்தசங்கதி யொன்றும்தெரியாது. தங்களைக் கண்டேன், இதுதான் தெரியும். ஆதலால் அடியேன்மீது கோபங்கொள்ளாமல் யான் சொல்லும் வாக்கியங்களைக்கேட்டு என்னை ஆதரிக்க வேண்டுமென்று வணங்கிச் சொல்லுகிருன்: ஓ அம்மணி! அக்கன்னிகை என் கண்முன்னே தானே யிருக்கிருப்போல்இருக்கிறது, அவளை எவ்விதத்திலாவது எனக்கு மணம்புரிவிக்க வேண்டும், உன்னையன்றி எனக்கு வேறேஆதாரமில்லையென்று பலவாறு வேண்டிக்கொண்டான்.

ஔவையார் மகிழ்ந்து நல்லது அப்பா! உனக்கு அந்தக் கன்னிகையை மணஞ் செய்விக்கிறேன் வாவென்று தன் வீட்டுக்கு அழைத்துவந்து மறுநாளுதயத்தில் வழக்கப்படியே நீ அக்குளக்கரைக்குச் சென்று

186097 186097



ஜெகதலப்பிரதாபன் தேவேந்திரன் குமாரத்திஜலக்கிரீடைசெய்ய ஆடைஎடுத்தல்.

உலகாரிடமன் ஜெகதலப்பிரதாபனை கேட்டல்.



அவள் நீராடியிருக்குஞ் சமயத்தில் அவளுக்குத்தெரியாமல் வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு ஓடிவந்துவிடு. அவள் பின்தொடர்ந்து முன்சொன்னதுபோலப்பரியாசவார்த்தை சொல்லிக்கொண்டே வருவாள். நீ திரும்பிப்பார்க்காமல் என்னிடத்திற்கு வந்துவிடு. அதன் பின்பு பக்குவப்படுத்தி விடுகிறேனென்றுசொல்லியனுப்பினள். இராஜகுமாரன் ஔவையார் சொல்லியபடி அக்குளக்கரையில் வந்து காற்றுவாடையறிந்து ஒருபுதரில் பதுங்கியிருந்தான். அன்றையத்தினம் இந்திரன் குமாரத்தி களித்துத் திருக்குளத்திற்குவந்து சுற்றிப்பார்த்து ஆடைகளைந்து கரையில்வைத்துச் சலத்திலிரங்கி நீராடினள். இராசகுமாரன் கன்னிகைக்குத் தெரியாமல் ஆடையைக் கிரகித்துக்கொண்டு ஓட்டோடியும்வந்தான். இந்திரன் குமாரத்தி கண்டுதிகிலுற்றுப் பின்தொடர்ந்து நாணமின்றி பரியாசமான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு ஓடிவந்தாள். இராஜகுமாரன்ஔவையாரிடத்தில் வுந்து வஸ்திரத்தைக் கொடுத்தான். ஔவையார் வஸ்திரத்தை வாங்கி அந்த ராசகுமாரன் துடையைக் கீறி அதில் அந்தவஸ்திரத்தை வைத்து மறுபடியும் அடைத்துவிட்டு குழந்தை வடிவமாக்கித் தன்மடிமேல் வைத்துக்கொண்டு விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தாள். இந்திரன்குமாரத்தி ஔவையாரிடத்தில்வந்து ஓ அம்மணி! ஒரு வாலிபபுருடன் என் வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு இவ்வழியாக வந்தான், பார்க்கவில்லையோவென்று வினவினள். ஔவையார் சொல்லுகிறுள்: ஓ அம்மணி! இந்தச் சிசுவல்லாமல் மற்றொருவரையும் நான் பார்க்கவில்லை; நீ திருவாணியாக விருப்பது நன்மையல்ல, நீயோ யௌவனஸ்திரீ அதிலும் கன்னிகையாயிருக்கிறுய், இதோயிருக்கிற வஸ்திரத்தைக் கட்டிக்கொள் என்று ஒருவஸ்திரத்தைக் காண்பித்தாள். இந்திரன் குமாரத்தி அவ்வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டுமனவருத்த முற்றிருந்தாள். ஔவையார் அக்கன்னிகையைத் தணிவுபடுத்தி அருகி லுட்காரவைத்து ஓ மாது சிரோமணி! நீயோ இன்னும் கன்னிகழியாதவளாயிருக்கிறுய் உன்கலையை யெடுத்தவன் வாலிபனென்று நீயேகூறினுய். அந்தவாலிபன்உன் கட்டழகுக்கு இசை

ந்தவனாகத்தானிருப்பான். அவனை நீ மணம்புரிந்து கொள்ளுகிறதினால் உனக்குஇழிவென்ன? ஸ்திரீகளெல்லாம் புருஷர்க்கு ஐக்கியமாகத்தா னிருக்க வேண்டுமென்று பலபல விதமாகச்சொல்லி இந்திர குமாரத்தியைச் சம்மதிக்கச்செய்து குழந்தைவடிவாயிருக்கிற இராசகுமாரனைப் பழைய வடிவமாக்கி இருவரையும் ஓராசனத்திலிருக்கச்செய்து காந்தர்வவிவாகம் நடத்திஒருவர் கணையாழியை ஒருவர் மாற்றிக்கொள்ளும்படிச்செய்து அறுசுவையோடுங்கூடிய உண்டி யுதவி இவ்விருவரையுங் கூடிக்கலக்கும்படி கூட்டிவைத்தாள். இராசகுமாரனும் இந்திரன் குமாரத்தியும் கருத்தொத்து கூடிக் கலந்து இன்பத்தை அனுபவித்துக்கொண் டிருந்தார்கள். இப்படி ஆறுமாதமிருந்தபின்பு ஔவையார் இருவரையும் அழைத்துஉங்களுக்கிசைந்தவிடத்திற்சென்று சௌக்கியமான அரண்மனையொன்றியற்றி அதில் சுகித்திருங்களென்று கூற, இராசகுமாரனும் இந்திரன்குமாரத்தியும் அக்கருத்துக்கிசைந்து இருவரும் ஔவையாரை வணங்கி விடைபெற்று வெளிப்பட்டார்கள். ஔவையார் இராசகுமாரனைத் தனியே யழைத்து அப்பா! இந்திரன்குமாரத்தியின்வஸ்திரம் அவள்கையிலகப்பட்டதானால்அவள்போய்விடுகிறதுமன்றிஉன்பலத்தையும் வாங்கிக்கொண்டுபோவாள், அதைப்பத்திரமாய் வைத்துக்கொண்டிரு. வேட்டைக்குப் போம்போதும் போர்த்தொழிற்குப் போகிறபோதும் வஸ்திரத்தோடே போகவேண்டாம் உனக்கு உயிருக்குயிரா யிருக்கிறபேரிடத்திற் கொடுத்து போய்வந்து மறுபடியும் முன்போலத்துடையிற்றானே வஸ்திரத்தை வைத்துக்கொள்ளென்று தந்திரஞ்சொல்லி யனுப்பினாள். இராசகுமாரனும் இந்திரன் குமாரத்தியும் காடு மலை வனம் வனாந்திரம் முதலியவற்றைக்கடந்து விஸ்வரஞ்சிதமென்னும் நகரமடைந்து அந்நகரத்தி லிருக்குங் குளத்தின்கரையி லிறங்கி இருவருங் கைகால் சுத்திசெய்து நீரருந்திக் கரையிலிருக்கிற புன்னைமரத்தடியில் நிழலுக்கு உட்கார்ந்திருந்தார்கள். அந்தவேளையில் அந்நகரத்து ராசனுடைய மந்திரி ஏதோ ஒருகாரியார்த்தமாக வந்து குளக்கரையிலிருக்கிற இராசகுமாரனையுங் கன்னிகையையுங் கண்டு பிரமித்து



ஓ ஓ! இந்த ராசகுமாரனுக்கு இவ்வளவு ரூபமுள்ள கன்னிகை எவ்விதத்தில் அகப்பட்டாள். இந்தக்கன்னிகையை நமது இராசனுக்குச் சேர்ப்பித்தால் உத்தமமாகுமென்று கருதி, அரசனிடத்தில் வந்து வணங்கி ஓ ராசனே! எக்காலத்தும் எவ்விடத்தும் எவர்களும் கேட்டறியாத சௌந்தரியமுள்ள ஒருகன்னிகை நமது குளக்கரையில் வந்திருக்கிறாள்; அக்கன்னிகைக்கு கணவன் ஒருவனிருக்கிறான். அவனுக்குத் தகுந்தவனல்ல தாங்களே தகுந்தவர், ஆகலால் அந்த ராசகுமாரனை நமது சமஸ்தானத்தில் சேர்ந்துக்கொண்டு சிலநாளில் கன்னிகையை வசப்படுத்திக் கொள்ளலாமென்று கூறினான். அரசன் அக்கருத்துக்கிசைந்தான். மந்திரி குளக்கரையிலிருக்கிற இராசகுமாரனிடத்து வந்து நீயார்? இங்கு வந்தகாரணமென்னென வினவினன். இராசகுமாரன் சொல்லுகிறான்: ஐயா! நானொரு தேசத்துராஜனுடைய புத்திரன், என்பெயர் ஜெகதலப்பிரதாபன். எங்கேயாவது ஜீவனஞ்செய்யலாமென்று வந்தேனென்று கூறினான். மந்திரி கேட்டு இந்த நகரத்து அரசனிடத்திலிருக்கின்றீராவென்று வினவினன். இராசபுத்திரன் பதினாயிரம்வராகன் மாதம்ஒன்றுக்குச் சம்பளம் கொடுத்தாலிருக்கிறேனென்றான், ஆனால் வாருமென்று மந்திரியவ்விருவரையும் அழைத்து ஒருவிடுதிவிட்டு சமையல் செய்ய ஒரு தாதியை யனுப்பி வேண்டிய பதார்த்தமுங் கொடுத்து இராசபுத்திரன் மனைவியை அவ்விடத்தில் விட்டு இராசபுத்திரனை அரசனிடம் அழைத்துப்போய் பேசி ராசபுத்திரன் கருத்தின்படி சம்பளம்போடுவித்து சேவகத்தில் வைத்தான். பின்பு ராசபுத்திரன் உதயத்திலெழுந்து ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டுதாம்பூலந்தரித்து ஆடையாபரணாலங்கிர்தனாகி மந்திரவாளையுருவிக் கையிற்பிடித்து ராசன்சமுகத்தி லிருப்பான். சூரியன் அஸ்தமானபின் தன் அரண்மனைக்கு வந்து விடுகிறது. இப்படி சேவகம் செய்திருந்தான். மந்திரி மாதமானபின்பு கொல்லரிற் பத்துப்பேரை யழைத்துப் பதினாயிரம் வராகன் கொடுத்து இதனை நமது சேர்வைக்காரன் வீட்டுக்குக்கொண்டுபோய் செலுத்துங்கள் அங்கு நடக்கிற சேதியைத் தெரிந்து சொல்லுங்களென்றுகூறி

அனுப்பினன். கொல்லர் அப்பணப்பையை யெடுத்துக்
கொண்டு இராசன் அரண்மனைக்கு வந்து கதவைத் தட்
டினார்கள். இந்திரன் குமாரத்தி பெரியசேர்வைக்காரனு
டைய மனைவி அரவமறிந்து தாதியரை யனுப்பி யாரெ
ன்று விசாரித்து வாவென்றாள். தாதிவந்து கதவைத்
திறந்து யாரென்று வினவினள். கொல்லரில் பெரிய
சேர்வைக்காரன் சம்பளங் கொண்டுவந்தோ மென்று
கூறினர். இந்தச்சேதியை எசமானிக்குத் தெரிவித்தாள்.
எசமானி கொல்லரை யழைத்துப் பணத்தை எண்ணி
க்கை யிட்டுக்கொண்டு ரசீது கொடுத்தனுப்பிவிட்டு முன்
போலவே கபாடபந்தனஞ் செய்துக்கொண்டிருந்தார்
கள். கொல்லர் மந்திரிகையில் ரசீது கொடுத்துவிட்டு
சேர்வைக்காரன் மனையி லிருக்கிற சாக்கிரதையைச்
சொல்லிப் போயினர். மந்திரி சற்று ஆலோசித்து
ஓகோ! இந்தச் சேர்வைக்காரனைக் கொன்றாலல்லா
மல் அக்கன்னிகை அரசனுக்குச் சித்திக்காதென்று
உணர்ந்து அரசனிடத்துவந்து கருத்தைத் தெரிவித்து
சேர்வைக்காரனைக்கொல்லவேண்டும் ஆதலால்தாங்கள்
தலைவலியென்று அந்தப்புரத்தில் படுத்துக்கொண்டி
ருங்கள். அவனை நாகேந்திரன் விஷத்தைக் கொண்டு
வரக் கட்டளையிடுகிறேன்; அதைக் கொண்டுவரப்போ
வான், அவன் இறந்துபோவானே யல்லாமல் மறுபடி
யும் மீளப்போகிறதில்லை. அதன்பின்பு கன்னிகையைக்
கைவசப்படுத்திக் கொள்ளலாமென்றான். அரசன் அக்க
ருத்துக்கிசைந்து தலைவலி கண்டவரைப்போல் அபிந
யம் காட்டி அந்தப்புரம்போய் மஞ்சத்திற் படுத்துக்
கொண்டான். மந்திரி பெரிய சேர்வைக்கார னிடத்து
வந்து ஐயா! இராஜனுக்குத் தலைவலி கண்டிருக்கிறது,
நாகேந்திரன் விஷம் வந்தால்அது தீருமென்றுபண்டி
தர்கள் சொல்லுகிறார்கள்,அகத்தியம்அதனைக்கொண்டு
வாருமென்று நயமாகச் சொல்லினான். இராசகுமாரன்
அதற்கிசைந்து அரண்மனைக்குவந்தான். நாகேந்திரன்
விஷம் அகப்படுமோ அருகில் நெருங்கினால் நம்மைக்
கொல்லுமேயென ஏக்கங்கொண்டுவர இராசகுமாரனதை
லால் தைரியங்கொண்டுஎப்படியும் அதனைக்கொண்டுவர
வேண்டுமென்று கருதிப் பலவாறு யோசித்து வருத்த



முற்றிருப்பதை மனையாள் கண்டு நாதா! ஏன்மனக்கவ
லையுற்றிருக்கிறீர்? இராச சமூகத்தில் நடந்ததென்ன
சொல்லுமென்று வினவ, இராசகுமாரன் நடந்தசங்கதி
களைச்சொல்லி அதைக்கொண்டுவருகிறேனென்றுசொல்
லிவந்ததையுங் கூறினன். இந்திரன்குமாரத்தி கேட்டுச்
சிரித்து இதற்காக வருத்தப்படுகிறது தகுதியல்ல. இந்த
விஷத்தைக்கொண்டுவருகிறதற்குத்தந்திரஞ்சொல்லுகி
றேன்வாரும் என்னுடைய சூட்சுமஉபாயத்தைப்பாரும்
நீர் மனந் தேறுமென்று அழைத்துக் கொண்டுபோய்
ஸ்நானஞ்செய்து வைத்து உண்டு உதவித் தாம்பூலங்
கொடுத்து நீர்சென்று அரசனைக்கண்டுமூன்றுநாளைக்கு
உத்திரவுகேட்டு வாருமென்று கூறினள். இராசகுமா
ரன் அரசனிடத்துவந்து மூன்றுநாளைக்கு உத்திரவு
பெற்றுக்கொண்டு மனைவிக்குத் தெரிவித்தான்.விரைவில்
ஒரு சீட்டெடுத்து எழுதி என்கணவன் வருகிறார். அவ
ருக்கு உன்குமாரத்தியை விவாகஞ்செய்து கொடுப்பது
மன்றி கிஞ்சித்து விஷமெடுத்து ஒரு சிமிழில்அடக்கஞ்
செய்து கொடுத்தனுப்புவிக்கிறதென்று குறித்துத் தன்
பிதாபேரை அடியிலெழுதி மேலே சிறிய பிதாவாகிய
கார்க்கோடக மகாராஜனுக்குக் கொடுக்கிறதென்று யெ
ழுதி கணவன் கையில் கொடுத்து ஐயா! எந்தப்புற்றின்
துவாரத்திலாவது அந்தச்சுருளைப்போடும். அரைநாழி
கைக்குள் நடக்கிற விதத்தைப் பாருமொன்று சொல்லிக்
கொடுத்தனுப்பினள். இராசகுமாரன் ஓலைச்சுருளை வாங்
கிக்கொண்டு அந்தகாரத்தைக்கடந்து வனத்திற்சென்று
அங்கிருக்கும் புற்றில் இந்தஓலைச்சுருளைப் போட்டான்;
அச்சுருள் நாகத்தின் சிரசில் விழுந்தது, அந்நாகம்
அச்சுருளின்மேல் எழுதியிருக்கிறதை தட்சணம் தமது
ராஜனாகிய கார்க்கோடகனிடத்தில்வந்து;வணங்கிஓலைச்
சுருளைக் கொடுத்தது; அச்சுருளில் கண்டிருந்ததை
யுணர்ந்துக்கொண்டு நூறு நாகேந்திரனை யழைப்பித்து
அதுகளிடத்திலும் முத்துச்சிவிகை கொடுத்து ஒரு
வனத்திலிருக்கும் புற்றருகில் ஒரு இராசகுமாரனிருக்கி
றான். அவனை விரைவில் அழைத்து வாருங்களென்று
கட்டளையிட்டான். நாகேந்திரன் அரசன் கட்டளைப்படி
வந்து இராசகுமாரனை முத்துச் சிவிகையி லேற்றிக்

கொண்டு கார்க்கோடகன்முன் விட்டதுகள். கார்க்கோடகன் கண்டு மகிழ்ந்து தட்சணம் தன் குமாரத்திகளில் அதிரூபவதியாயிருக்கிற கன்னிகையை மணஞ்செய்வித்துப் பதார்த்தத்தோடு உண்டியுதவி ஆடையாபரணவரிசைகொடுத்து விஷத்தில் கிஞ்சித்தெடுத்து ஒருசிமிழில்வைத்து அடக்கஞ்செய்து கொடுத்து, முன்போலவே பூலோகத்துக்கு தனது குமாரத்தியுடன் அனுப்பிவைத்தான். இராசகுமாரனும் நாககன்னிகையும் பூலோகம் வந்தார்கள். சூரியன் அஸ்தமானான். இராசகுமாரன் தன்னோடு வந்தவரை நிறுத்திஇராசகன்னிகையையழைத்துக்கொண்டு தன் அரண்மனைவந்தான். இந்திரன் குமாரத்தி எதிர்வந்து கணவனுக்கு மரியாதைசெய்து தங்கையைத் தழுவி முத்தமிட்டு அழைத்துக்கொண்டுபோய் மூவரும் மகிழ்ந்திருந்தார்கள். சூரியன் உதயமானவுடன் இராசகுமாரன் எழுந்து ஸ்நானம்செய்து பூசைமுடித்து உண்டு தாம்பூலந்தரித்துஆடையாபரணலங்கிர்தனாகி இராஜ சமுகத்திற்கு வந்தான். இவன்வந்தசேதியை அரசனும் மந்திரியுங்கேட்டு, ஆச்சரியப்பட்டவராகி யிருந்தார்கள். இராசகுமாரன் மந்திரியினிடம்வந்து விஷங்கொண்டு வந்தேனென, மந்திரி அதனைக்காண்பியென இராசகுமாரன் இங்கு நான்காண்பித்தால் நகரம் பாழாமேயென வெளியில் வந்தனர். இராசகுமாரன் காற்று வாடை யறிந்து ஒருபக்கமாயிருந்து சிமிழைத் திறந்தான். காற்றுவாடையிலுள்ள மரங்களும் செடிகளும் பஸ்மீகரமாய் எறிந்துவிழுந்தது. அதனைக்கண்டு இராஜனும் மந்திரியும் பயந்து அவன் திடவானென்று மதித்துப் புகழ்ந்து அரண்மனைக்கு வந்தனர். இராசகுமாரன் வழக்கப்படியே தானிருந்துகொண்டு சேவகவிர்த்திச் செய்திருந்தான். ஒருமாதமானவுடன் மந்திரி கொல்லரை யழைத்து கையில் சம்பளத்தைக் கொடுத்து அனுப்பிவித்தான். கொல்லர் சம்பளத்தைக்கொண்டு பெரிய சேர்வைக்காரன் அரண்மனைக்குவந்து கதவைத்தட்டகதவுதிறந்தபின்பு உட்பிரவேசித்துப் பணத்தையெண்ணி ஒப்பிவித்தனர். இரண்டுகன்னிகைகளும் வந்து கணக்கின் ரசீதுக் கொடுத்தார்கள். அதனை வாங்கிக்கொண்டு ஓடோடியும் வந்துமந்தி



ரிகையில் ரசீதுகொடுத்து ஓ ஐயா! முன்னம் ஒருகன்னிகையிருந்தாள் இப்போது மற்றொரு கன்னிகை யிருக்கிறாள், அவள் ரூபத்தை ஒருவராலுஞ் சொல்லொணாது என்று கூறினர், மந்திரிகேட்டு மனவருத்தமுற்று அரசனோடு சற்று ஆலோசித்துச் சொல்லுகிறான்: ஓ ஐயா! இந்தச் சேர்வைக்காரனை எவ்விதத்திலாவது கொன்றால் அக்கன்னிகைகள் இரண்டுபேரும்உனக்குவசப்படுவார்கள், இல்லாவிட்டால் வசப்படமாட்டார்கள், ஆதலால் அதற்கு ஒருதந்திரஞ் சொல்லுகிறேன்; அந்தப்படியே தாங்கள் நடக்கவேணும். அதென்னவெனில்; தாங்கள் வயிற்றுவலி கண்டவர்போல் அபினயித்திருந்தால் அந்தப் பெரிய சேர்வைக்காரனை மகாமீன் பிச்சைகொண்டுவர அனுப்புவிக்கிறேன் அங்கு அவன்போனால் ஒருமீன் அவனை விழுங்கிவிடும், அதன்பின்பு நமது எண்ணம் நிறைவேறுமென்றுகூற, அரசன் அக்கருத்துக்கிசைந்து வயிற்றுவலி கண்டவர்போல்அரண்மனையிற்றானே யிருந்துவிட்டான். மந்திரி பெரியசேர்வைக்காரனிடத்துவந்து அப்பா! நமது அரசனுக்கு வயிற்றுவலி கண்டிருக்கின்றது; இதற்குப் பண்டிதர்மகரமீன்பிச்சை கொண்டுவரச் சொல்லுகிறார்; உன்னைவிட வல்லவர் இந்தசமுகத்திலில்லை. ஆதலால் நீ அந்தப் பிச்சை கொண்டுவாவென்றனன், இராசகுமாரன் அக்கருத்துக்கிசைந்து அரண்மனைக்குவந்து அப்பிச்சுகிடைக்கும் வகையைதாடி பலவாறு யோசித்து வருத்தப்பட்டிருக்கும்போது இரண்டு மனைவிகளும் வந்துநோக்கி ஏன்வருத்தப்படுகிறீர்? என்று வினவ இராசகுமாரன் இராசசமுகத்தில் நடந்ததைச் சொல்லினன். கன்னிகைகள் சிரித்து நல்லது நீர் வாருமென்று அழைத்துப்போய் ஸ்நானஞ்செய்வித்து உண்டியுதவி அரசனிடத்திற் சென்று ஐந்து நாளைக்கு உத்திரவு வாங்கிவாருமென்று அனுப்பினர், இராசகுமாரன் அரசனிடத்திற் சென்று ஐந்துநாளைக்கு உத்திரவு வாங்கிவந்தான். இந்திரன் குமாரத்தியாகிய கன்னிகை ஒருசீட்டெடுத்து அதில் ஐயா! சிறியபிதாவாகிய வருணபகவானே! அடியேனும் நாகேந்திரனாகிய காற்கோடகன் குமாரத்தியும் பூலோகத்தில் சுகமாயிருக்கிறோம்; எங்களுக்குப் பிராண

நாதனாகிய ஜெகதலப் பிரதாபன என்கிற மகாராசனை
அனுப்புவித்தோம்; அவருக்கு உமது குமாரத்தியை
மணம் புரிவித்து ஒருமகரமீனிலேற்றி வரவிடப்பிரார்த்
திக்கிறேன் என்று எழுதி பிதாபெயரும் நாககன்னியின்
பெயரும் எழுதி ஒரு ஓலையில் சுருட்டிக்கணவன்கையிற்
கொடுத்து ஐயா ! இந்த ஓலையை கடலிற்போட்டுக் கடற்
கரையில் சற்றுநேரம் நில்லும்; அதன்பின்பு நடக்கும்
அதிசயங்களைப் பாருமென்றுகூறி விடைகொடுத்தாள்.
இராசகுமாரன் ஓலைச்சுருளைக் கொண்டுவந்து கடலில்
போட்டுக் கடற்கரையில் சற்றுநேரம் நின்றான் கடலி
லிருக்கிற மீன் ஓலைச்சுருளைக்கொண்டு தன்யசமானின்
பெயர் மேலெழுதிருக்கிறதைக்கண்டு வாயல் கவ்விக்
கொண்டு ஒருநொடிப்பொழுதில் உதயகிரி பர்வதத்தி
லிருக்கிற வருணபகவானிடத்தில் கொடுத்தது. வருண
பகவான் பார்த்து மகிழ்ந்து மகரமீன்களில் நூறுமீன்
களை யழைத்து ஒருராசகுமாரன் கடற்கரையிலிருக்கிறவ
ரை யெடுத்துக்கொண்டு அதிசாக்கிரதையாக வாருங்க
ளென்று கட்டளையிட்டான், நூறுமகரமீன்களும் ஒரு
நொடியில் உவற்கடலுக்குவந்து கரையிலிருக்கிற இரா
சகுமாரனை யழைத்து முதுகின்மே லேற்றிக்கொண்டு
சலம்படாமல் இராசகுமாரனை வருணபகவான் முன்
விட்டதுகள் வருணபகவான்கண்டு மகிழ்ந்து தட்சணம்
தன்குமாரத்தியை மணம்புரிவித்து ஆடையாபரணம்
வரிசைகொடுத்து ஒருமகரமீனிலேற்றியனுப்பிவித்தார்
மகரமீன் உவற்கடற்குவந்தது. கடலருகி லிருக்கிறவர்
கள்பெரியசேர்வைக்காரனென்று உணர்ந்து அரசனுக்
குத் தெரிவித்தனர். அரசனும் மந்திரியுங் கேட்டு திடுக்
கிட்டுப் பயந்தவராகி மாடத்தின்மீதி லேறிப்பார்த்து
ஓகோ ! இந்தப் பெரிய சேர்வைக்காரன் நல்லதீரன்,
அதிசூரன், இவனோடு எதிரிட்டுக் கொள்ளக்கூடா
தென்று மதித்து அங்கிருந்தபடி மகரமீன் பிச்சு வேண்
டியதில்லை; வயிற்றுவலி நீங்கிற்று; நீமாத்திரம் வாரு
மென்று சைகைசெய்தனர், இராசகுமாரன் கண்டு மகர
மீனைவிட்டுப் படகேறித் தானும் வருணபகவான்பெண்
ணும் அரண்மனைக்குவந்து அன்றிரவில்மூன்றுகன்னி
கைகளோடு சுகித்திருந்து சூரியன் உதயமான பின்பு



எழுந்து ஸ்நானஞ்செய்து பூசை முடித்துக்கொண்டு
ஆடையாபரணாலங்கிர்தனாகி மந்திரவாளையுருவி கையில்
வைத்துக்கொண்டு வழக்கப்படி சேவகவிர்த்தியி லிருந்
தான், ஒருமாதமாயிற்று, மந்திரி கொல்லரை வரவ
ழைத்து பெரியசேர்வைக்காரன்சம்பளத்தைக்கொடுத்து
அனுப்பினான். கொல்லர் சம்பளத்தை இராசகுமாரன்
அரண்மனையில் செலுத்தி ரசீது வாங்கிவந்து மந்திரி
கையில் கொடுத்து வணங்கி ஓ ஐயா! முன் பார்க்கும்
போது இரண்டு கன்னிகைகளிருந்தனர்கள், இப்போது
மூன்றுகன்னிகைக ளிருக்கிறார்கள், ஒருவர்க்கொருவர்
அழகில் சிறந்தவர்களா யிருக்கிறார்களென்று சொல்லிப்
போயினர்.

மந்திரி ஆச்சரியப்பட்டு அரசனிடம்வந்து கன்னி
கைகள் அதிகப்பட்டிருப்பதைத் தெரிவித்துச் சொல்லு
கிறான்: ஓமகாராசனே! நாம் இதுவரையிலுஞ் சொல்லி
வந்த தந்திரம்போலே தந்திரஞ்செய்யக்கூடாது, மறு
படியும் இந்தவழிவாராமல் ஓடிப்போக அப்பெண்கள்
நமக்கு சித்திக்கும்படி செய்யவேண்டியது ஒன்றிருக்கி
றது. அதாவது, தாங்கள் ஒருவோலை நானொருவோலை
பிரதானி ஒருவோலை நம்முன்னோரான மூதாதை முதலி
யோருக்கெழுதி அவ்வோலையை சேர்வைக்காரன் கை
யில் கொடுத்து மறுஉத்திரவு வாங்கிவாவென்று சொல்
லுவோம். நமதுதாதை முதலியோர்கள் யமலோகத்தி
லிருக்கிறார்களோ? சொர்க்கலோகத்திலிருக்கிறார்களோ?
அல்லது இன்னம் எங்கிருக்கிறார்களோ? இவன் எவ்
வாறு அறியப்போகிறான்? இவனால் முடியாது; அத்து
டன் துலைந்துபோவான்; பெண்கள் நமக்கு வசமாகு
மென்று நினைத்திருக்கிறேன், தாங்கள் அவ்வாறு ஒரு
வோலையை எழுதுங்களென்று கூறி எழுதி வாங்கிக்
கொண்டு பிரதானிகையில் ஒரு ஓலையும் தானொரு ஓலை
யும் எழுதி இன்னம்யார்ஓலை கொடுக்கிறார்களோவென்று
விசாரித்து அவர்களுடைய கையோலையும் வாங்கிக்
கொண்டு பெரிய சேர்வைக்கார னிடத்துவந்து இந்த
ஓலைகளைக்கொடுத்து இதற்கு மறுவுத்தரம் வாங்கிவா
வென்று கூறினான், இராசகுமாரன் அவ்வோலையை
வாங்கிக்கொண்டு வீட்டில்வந்துகூடி இராசன் கருத்



ஜெகதலன் அக்கினியில் விழுதல்.

ஜெகதலனை மகரமீன் எற்றி வருணனிடம் விடல்.

ஜெகதலன் இந்திரன் சபைக்கு போதல்.



தறிந்தீர்களா அவர் மூதாதைகள் இறந்துபோயிருக்க அவர்களை எழுப்ப எழுதிக் கொடுத்து மறுவுத்திரவு வாங்கிவரக் கட்டளையிட்டதை யோசித்தால் நமது கணவனைக் கொன்றுவிட்டு நம்மைச் சிறையெடுக்க வல்லோயிருக்கிறார்கள், இதுபரியந்தம் அக்கருத்தை வகித்தல்லவா விஷத்தையும் மகாமீன்பிச்சையுங்கொண்டுவரச் சொன்னான். நல்லது அந்தாரசனையும் மந்திரிமுதலானவர்களையும் நயத்தினாலேதானே நான் கொல்ல ஒருதந்திரஞ்செய்கிறேன் பார் என்று தங்கைமா ரிருவருங்கூடி இந்திரன் குமாரத்தி கணவனிடத்துக்குவந்து ஓநாதா! இராசனிடத்துச்சென்று எட்டுநாளைக்கு உத்திரவு வாங்கிவா. எட்டாநாள் மாலைப்பொழுதில் நகர்ப்புரத்தில் ஒருகுழிவெட்டி அதில் அக்கினியை வளர்த்தி வைக்கச் சொல்லிவிட்டு வாருமென்றுகூறித் தான்ஒரு அறையிற் போயிருந்து யார் ஓலைகொடுத்தார்களோ அதற்கு அவரவர் மூதாதைகளெழுதும் மறுவுத்திரவுபோல விடையெழுதி கடைசியில் அப்பா! புத்திரபௌத்திரர்களே! நாங்கள் சொர்க்கலோகம் வந்தபின் எங்களுக்கிருக்கும் சௌக்கியத்தை வாயாற் சொல்லத்தக்கதல்ல; தேவாமுதுண்டு நல்ல ஸ்திரீகளைப் புணர்ந்து சுகித்திருக்கின்றோம். நீங்கள் நரலோகத்திலிருக்கிறீர்கள், அதிலும் ஒருவனை அபகரித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்துச் சூது வாது அக்கிரமம் கொலை களவுகள் காமம் நிறைந்த பண்டாரங்களாகிய பாவியானீர்கள் இனியாகிலும் அவ்வகைப்பட்ட துர்மார்க்கங்களை யடையாமல் பதியோடிருங்கள், தாங்கள் காணவேண்டு மென்கிற அவா மிகுதியாயிருக்கின்றமையால் ஒருபயணம் மாத்திரம் வந்து போகவேண்டியது; இருக்கச் சம்மதியானால் இருங்கள்; இல்லாவிட்டால் மறுபடியும் முன்போல பூலோகத்துக்குப் போய்விடுவீர்களென்று குறித்தெழுதி அவரவர் நாமதேயத்தையுமெழுதி மேலே தாங்கள் புத்திரபௌத்திரற்கு மேல்விலாச மெழுதி ஓலைச் சுருளை வைத்திருந்தாள். இராஜகுமாரனிடத்து சென்று எட்டுநாளைக்கு உத்திரவு கொடுக்கவேண்டும், எட்டாநாள் மாலைப்பொழுதில் இந்நகர்ப் புறத்தில் குழி வெட்டி அதில் அக்கினியையுண்டாக்கி வையுங்களென்று கூறி

விடைபெற்று அரண்மனை வந்துவிட்டான். அரசனும்
மந்திரியுங்கேட்டு மகிழ்ந்து எட்டாநாள் மாலைப்பொழு
தில் பெரியகுழியைக் காட்டாள்களால் வெட்டிவித்து
அக்குழியில் நெருப்பையுண்டாக்கி அனைவரும் அக்கு
ழியினருகில் வந்தனர்.

எட்டாம்நாள் இந்திரன்குமாரத்தி அக்கினிபகவா
னுக்குச் சீட்டெடுத்து ஐயா! சிறியபிதாவே! உன்மரு
மகன் வருகிறார், அவருக்கு உன்பெண்ணை விவாகஞ்
செய்துக்கொடுத்து அன்றிரவிலே தங்கள் குமாரத்தி
எங்களிடத்தில் வந்திருக்கவும், அந்த மறுநாள் உதயத்
தில் யாவருங் காணக் கொண்டுவந்து விடவேண்டு
மென்று எழுதி தன்பெயர் தந்தைபெயர் வருணன்குமா
ரத்தியின் பெயர் எழுதி கணவன்கையிற்கொடுத்து பிரா
ணநாதா! நீர் அஞ்சாமல் அக்கினி வலம்வந்து இந்தச்
சீட்டை முன்னம் எரியிலிட்டு பின்பு யாவருங்கொடுத்த
ஓலையைக் காண்பித்து அக்கினியிற்குதியும். அக்கினிபக
வான் உம்மையேந்திக்கொண்டுபோய் தன்திருக்குமாரத்
தியை மணம்புரிவிப்பான், அந்தக் கன்னிகையை நடுச்
சாமவேளையில் இங்கு கொண்டுவந்துவிட்டு முன்போல
வே அங்கிருந்து உதயகாலத்தில் யாவரும் வந்தவுடன்
அக்குண்டத்திலிருந்து வெளியேவந்து இந்தவோலை
அரசன்முன் வைத்துவிட்டு அரண்மனைக்கு வாரு
மென்று கூறி விடைகொடுத்தாள் இராஜகுமாரன் அர
சனிடத்துவந்து இன்றையத்தினம் அக்கினிப்பிரவேச
மாகிறேனென்று கூறினன், அரசனும் மந்திரிமுதலானா
வர்களும் மகிழ்ந்து வாகனரூடராய் நகர்ப்புறத்திலிருக்
கும் அக்கினிக்குழியை வலம்வந்து யாவருக்கும் ஓலைச்
சுருளைக் காண்பித்து நான் போய்வருகிறேன், நீங்கள்
உதயத்துக்கு வாருங்களென்றுகூறி முன்னம் அவன்
மனைவிகொடுத்துள்ள சீட்டைப்போட்டு உடனே அக்கி
னிக்குண்டத்தில் விழுந்தான். அக்கினிபகவான் ஏந்தி
இராஜகுமாரனை யழைத்து தன்னிருப்பிடம் கொண்டு
போய் சிங்காதனத்திலிருத்தி தன்குமாரத்தியையழைத்து
சீட்டைப்பிரித்துக் காண்பித்து உன்மனச்சம்மதி என்ன
வென்றனன், அக்கன்னிகைஇந்தநாயகனைவிட எனக்கு
வேறேநாயகன் சித்திக்கமாட்டான், இவருக்கே மணம்



புரிவியும் என்தமக்கை இருக்கிற விடத்திற்குப் போக
வேண்டுமென்று சொல்ல, அக்கினிபகவான் தட்சணம்
மகளை மணம் புரிவித்து தேவாமிர்தமும் புசித்து மகளை
யும் மருமகனையும் அனுப்பி வைத்தான். இராஜகுமாரன்
மனைவியைத் தன் அரண்மனையில் நடுச்சாமவேளையில்
கொண்டு வந்துவிட்டு முன்போல அக்கினிபகவானிட
த்திலிருந்தான். அக்கினிப் பிரவேசமானதைப் பார்த்து
வந்த அரசன்முதல் யாவரும் பெரிய சேர்வைக்காரன்
மடிந்தானென்று நினைத்துக் கொண்டு உதயத்துக்குவரு
வோமென்று நினைத்து அரண்மனை சேர்ந்து சூரியன்
உதயமானவுடன் யாவரும் வாகனரூடராகி அக்கினிக்
குழியருகில் வந்தார்கள்.

அந்தவேளையில் அக்கினிபகவான் இராஜகுமாரனைக்
கொண்டுவந்துவிட்டான். இராசகுமாரன் சகலருமறியத்
தன் மனைவிகொடுத்த ஓலைகளை மூட்டையாகக் கட்டித்
தோள்மேல் போட்டுக்கொண்டு வெளியேவந்து ஓலைச்
சுருளைக்கொடுத்துவிட்டு தன் அரண்மனைக்குவந்துவிட்
டான். அரசன்முதல் யாவரும்ஓலையைக்கொண்டு அவர
வர் ஓலையைப் பிரித்துக்கொண்டு அரண்மனைச் சேர்ந்து
தனித்தனி படித்துக் கியானம்பிறந்ததுமுதல் ஓ ஓ! நாம்
இதுவரைக்கும் மூடத்தனமாயிருந்துவிட்டோம். நமது
நாள்களெல்லாம் வீணாயிற்றென்று துக்கித்து தாதை
மூதாதை முதல் யாவரையும் பார்க்க ஆவல்கொண்டவ
ராகி யாவரும் சொர்க்கலோகம்போகக் காதல்கொண்டு
சேர்வைக்காரனை யழைப்பித்து எங்களுக்கும் எங்கள்
மூதாதையோர்க்கும் சந்திப்பு செய்வித்து பின்பு இங்கு
கொண்டுவந்து விடுகிறது உன்பாரம் என்று மிகவும் பய
ந்துக்கேட்டனர். இராஜகுமாரன் அக்கருத்துக்கிசைந்து
நாளை மாலைப்பொழுதில் பெரிய அக்கினிக்குழி யுண்டா
க்கி அங்கு வாருங்கள் நான் வழிகாட்டுகிறேனென்று
சொல்லித் தன் அரண்மனைக்குவந்து மனைவிகளோடு
இதைத் தெரிவித்தனன். மூத்தமனைவியாகிய இந்திரன்
குமாரத்தி ஒரு சீட்டெடுத்து ஐயா! அக்கினிபகவானே!
உன்மருமகனாகியஜெகதலப்பிரதாபன் வருகிறார். அவரை
மாத்திரம் பாதுகாத்து மற்றவர்களை யெல்லாம் பஸ்மீகர
மாக்கிவிட்டு மறுபடியும் உமது மருமகனை வெளியில்

விட்டுவிடுமென்று பதித்து அந்தச் சீட்டை கணவனி
டம் கொடுத்து நீர்போய் வாருமென்றுவிடைகொடுத்த
னள். இராஜகுமாரன் மறுநாள்மாலைப்பொழுதில்அக்கி
னிக் குண்டத்தருகில் வந்தான். அரசன் மந்திரிமுதலா
னவர்களும் தன் தந்தைமூதாதை முதலியோர்க்குஞ்சில
காணிக்கைகளை யெடுத்துக்கொடுத்து முன்னேவந்து
அக்கினிக் குண்டத்தின் அருகிலிருந்தனர். இராஜகுமா
ரனைக்கண்ட மாத்திரத்தில் சேர்வைக்காரன்தன்கையை
நீட்டிப் பிடித்துக்கொள்ளுங்களென்று கூறினன். யாவ
ரும் ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டு அரசன்கை
யைப் பற்றிக்கொண்டான். இராஜசன் சேர்வைக்காரன்
கையைப்பற்றிச் சேர்வைக்காரன் குதிக்கிறபோது தா
னுங் குதித்தான் யாவரும் குதித்தனர். சேர்வைக்காரனா
கிய ஜெகதலப் பிரதாபன் தவிர மற்றவர்களெல்லாம்
அரைநொடியில் பஸ்மீகரமாயினர்.

இராஜகுமாரன் வெளியில் வந்து தன் அரண்மனை
யைச் சேர்ந்து மறுநாள் உதயத்திற்கெழுந்து அரசனு
டைய இரத கஜ துரக பதாதிகளை எல்லாம் அழைத்துத்
தன்வசப் படுத்திக்கொண்டு தன்னை யடுத்திருந்த ஒரு
எளியவனுக்கு அப்பட்டத்தைக் கட்டி அவனுக்கு யா
வரும் அடங்கி யிருக்கும்படிசெய்து சிலநாள் அங்கிரு
ந்து அரசு தரித்த முதன்மனைவி நால்வரோடும் அந்நக
ரத்தைவிட்டு வெளிப்பட்டு மற்றொரு தேசத்தைக் கண்டு
இந்திரன் குமாரத்தி சொல்லுகிருள்: ஓ பிராணநாதா!
இந்நிலத்தைப்பார்த்தீரோ நிற்க நிழலில்லை. அக்கினிச்
சுவாலையாக விருக்கின்றது. இதனை என் பிதாவாகிய இந்
திரனுடைய நகரத்தைவிட எண்மடங்கதிகமாக விருக்
கச் செய்கிறேன் பாருமென்றனள். இராஜகுமாரன் சொல்
லுகிருன். ஓ மாதுசிரோன்மணியே! ஏதோ பிராரத்துவ
சம்பந்தத்தால் நீயெனக்கு மனைவியாயினையே யன்றி
நீலோகமாதா! நினைத்ததுமுடிப்பாய். உன்னுல் அசேத
னனுகிய நான் தேவராலும் அடையக் கூடாத பெருஞ்
சுகத்தையும் அடைந்திருக்கிறேன். நீ அப்படியே ஒரு
நகரமுண்டாக்கி அந்நகரத்துக்கு என்னை அரசனாக்கி
எல்லாவரசரும் வணங்கிச் சக்ரேஸ்வரனென துதிக்க
வைப்பாயென்று நினைக்கிறேனென்ருன். அதனை இந்தி



ரன் குமாரத்திகேட்டுமகிழ்ந்துஇராஜகுமாரன்கருத்தின்
படி பாலைநிலத்தை திவ்வியமான ஒரு நகரமாக்கி இரா
ஜாவாகத் தன் கணவனை நியமித்தனள். நாககன்னிகை
நம்மாலொரு வியப்புண்டாக்க வேணுமென்று சிங்கார
வனத்தோப்பு பூங்காவனம் வாழை கமுகு பலாச்சோலை
முதலியதை யுண்டாக்கினுள்; வருணபகவான் கன்னிகை
திருக்குளம் நீரோடை அகழி முதலானதையும் உண்டா
க்கினள்; அக்கினிபகவான்குமாரத்தி ரத கஜ துரகபதாதி
பிரதானி தண்டத்தலைவர் யூகத்தலைவர் அணித்தலைவர்
படைத்தலைவர் முதலானவர்களையும், எக்காளம் துத்தரி
சின்னம் முதலிய வாத்தியக்கருவிகளை யுண்டாக்கி அவர்
களால் அரசனுக்கு மரியாதைசெய்து அரசனை யழைப்
பித்துப்போய் சிம்மாசனுதிபதியாக்கினுள். இராஜகுமா
ரன்மகாமண்டலேஸ்வரனுகி செங்கோல்செலுத்திச்சில
தேசங்களைப்பிடித்துப் பல அரசர்கள் வணங்க, அரசு
செய்து தானும் தன் மனைவிகளோடுங் கூடிக்குலாவிதந்
தையோடு கூறியபடி மேல்மாடத்தில் நிலாமணிப்புறத்
தில் அம்சதூளிகா மஞ்சத்தில் சயனித்து சுகித்திருந்
தார். இங்கே ஜெகதலப்பிரதாபனென்கிற பிள்ளைக்குத்
தந்தையாகிய உலகாதிராஜன் சிலகாலம் அரசுசெய்துக்
கொண்டு வருகையில் ஒட்டகதேசத்து அரசன்மேல்
போர்செய்தான். இரத கஜ துரக பதாதிகளை பறிகொடு
த்து ஆறுபிள்ளைகளும் மனைவியுந் தானுமாக ஒருவருக்
குந் தெரியாமல் ஓடிப்போய் காட்டில் சேர்ந்து விறகு
வெட்டி அதனை நகரங்களில் விற்று சீவனம் செய்துக்
கொண்டு அதிக துன்பமுற்றிருந்தனர். இப்படி சிலகா
லஞ் சென்றபின்பு ஒருநாள் உலகாதிபராஜனும் அவன்
மனைவியும்புத்திரரும்விறகு சுமையையெடுத்துக்கொண்டு
வருகிறபோது வழியில்போகிற மற்றொரு விறகு தலை
யன் ஓ அண்ணமாரே! இந்த வழிபோனுல் ஒரு புதுநக
ரந்தோன்றும். அதில் கொண்டுபோய்விற்பனைசெய்தால்
பத்துபணம் கிடைக்குமென்று சொல்லிப்போனுர். இவர்
கள் அனைவரும் புது நகரத்துக்குவந்து அவர்கள் கரு
த்துக்கு இசைந்தபடி பிரிந்துபோய் விறகுவிற்றனர்.
ஜெகதலப்பிரதாபனுடைய மாதா கொலுமுக வாசலில்
வந்து வெய்யலில் விடாய்த்துப் பூமியில் விழுந்தாள்.

ஜெகதலப்பிரதாபன் பார்த்து நமது அன்னைபோ லிருக்கிறதென்று ஐயுற்று மேடையிலேறி உற்றுநோக்கித்தன் மாதாவாக விருக்கவே தன் மனைவியாரிடத்திற் சென்று இதோ பார்த்தீர்களா? என் மாதா களைத்து விழுந்திருக்கிறாளென்று சொன்னான். அவ்வார்த்தையைக் கேட்ட நான்கு மனைவிகளும் ஒருத்தி விசிறி ஒருத்தி நாற்காலியில் உட்காரவைத்து சலத்தினால் பாதத்தைத் துலக்கி பரமானந்தத்தைப் புகட்டி களைதெளிய விசிறி உபசரித்தனர். மாமியார் களை நீங்கி நீங்கள் யார்? அம்மணி! தெய்வலோகத்தார்போ லிருக்கிறீரே ஏன் எனக்குப் பணிவிடை செய்கிறீர்களென்று வினவினள். நான்குமாதர்களும் அம்மணி தங்களுக்குப் பணிவிடைசெய்யும் பாக்கியத்தை இன்றல்லவோபெற்றோமென்று சொல்லிவாரும் வீட்டுக்குப் போவோமென்று அந்நான்கு மாதர்களும் அரண்மனைக்கு அழைத்து அம்சதூளிகா மஞ்சத்தில் வைத்தனர். பின்பு புத்திரனாகிய ஜெகதலப் பிரதாபன் வணங்கி அம்மணி உங்களுக்கு இவ்வகைப்பட்ட துன்பம் நேர்ந்ததற்குக் காரணம் என்னென்று வினவினன். தாயார் மகனைக் கண்டதும் தழுவி மேல்விழுந்து வாரியணைத்து அப்பா! புத்திரசிகாமணி! நீ வந்து விட்டவுடன் எங்கள்செல்வமும் உன்னுடன் வந்து விட்டது. நாங்கள் இந்த கதியானோம். உனது பிதாவும் தமயன்மாரும் இந்நகரத்து வீதியில் விறகு விற்கிறார்களென்றாள். ஜெகதலப்பிரதாபன் மந்திரிகளுக்குத்தெரிவித்துத் தூதர்கள் தெருக்கள் தோறுஞ் சென்று இராஜனையும் இராஜகுமாரனையும் கண்டுபிடிதது அழைத்துவந்தனர். ஜெகதலப் பிரதாபன் எதிர்கொண்டு அழைத்து வந்து அந்தப்புரத்துக் கழைத்துப்போய் ஸ்நானஞ் செய்வித்து நல்ல அறுசுவை போஜனம் முதலியவைகளை யிடுவித்து அவர்களின் பசி களைபோக்கினர்; பசி நீங்கின பின்பு தந்தை தமையன்மாருக்கு வந்தனை வழிபாடு செய்து ஐயா! தங்களுக்கு இவ்வகைப்பட்ட துன்பம் ஏன் வந்ததென்று வினவ? இராஜன் காலம்வந்தால்எவ்வகைப்பட்டவனும் கெட்டுப்போவான். ஆதலால் செல்வத்துக்கும் அரசுக்கும் ஒரு நிலைமை சொல்லக்கூடாதென்றான்.



ஜெகதலப்பிரதாபன் தன் பட்டத்தைப் பிதாவுக்குக் கட்டித் தமையன்மர் தானும் காவலாளிகளாக விருந்து சிலகாலம் அரசுசெய்து வந்தனர். ஒருநாள் தமையன்மார் மூன்றுபேர் நிறைந்திருக்கிற சபையை ஜெகதலப் பிரதாபன் பார்த்துச்சொல்லுகிறான். ஓசபையாரே! இதோ விருக்கிற என்பிதாவை சுயதேசத்தில் சுகித்திருக்குங் காலத்தில் ஒருநாள் இன்றிரவில் பூரணச் சந்திரன் உதயமான நடுச்சாமவேளையில் புத்திரனுடையகருத்தை ஆராய்ந்கொண்டு என்னிடத்தில் வந்து உன் கருத்தென்னவென்றுவினவ; நான் நிலாமணிமுற்றத்தில் இந்திரன் குமாரத்தி வெற்றிலை மடித்துக்கொடுக்க, வருணன் மகள் கால்பிடிக்க, நாகேந்திரன் மகள் சாமரைவீச, அக்கினிபகவான்மகள் பன்னீர்தெளிக்க,வேடிக்கையாகவிருந்தால் நலமென்றுசொன்னேன். அதற்குஎன்பிதாகோபித்து என்னைக் கொல்ல கொலையாளிக்கு உத்திரவு கொடுத்துவிட்டார். என் தாயார் சொல்லைக்கேட்டு மதிலேறிக் குதித்து ஓடிவந்து விட்டேனென்று சொல்லி, இப்போது என் கருத்தின்படி ஆண்டவன் அந்த நான்கு கன்னிகைகளையும் கூட்டுவித்தானென்றான். பிதாகேட்டு கடுஞ்சினமடைந்து இங்கிருக்கொணாதென்று எழுந்திருக்குங் குறிப்பையுணர்ந்து பிதாவின் பாதத்தில் வணங்கி நமது பகையாளியாகிய ஒட்டராஜனை அதமாக்கிப் பட்டாபிஷேகஞ் செய்கிறேனென்று உறுதிகூறித் தந்தையை மகிழச்செய்து யாவருஞ் சுகித்திருந்தார்கள். ஒருநாள் தமயன்மார் தம்பியை யழைத்து அப்பா! நாம் வேட்டையாடி வருவோம் வாவென்று அழைக்க ஜெகதலப்பிரதாபன் ஔவையார் கூறியதை நினைத்துநமது, துடைக்குள்ளிருக்கும் பட்டு வஸ்திரத்தை தாயாரிடத்தில் கொடுப்போமென்று யோசித்து தாயாரிடம்துடையிலிருந்த வஸ்திரத்தை யெடுத்து மருமக்கள்மார் இன்னும் யாராவது என்ன உபசாரஞ் செய்தபோதிலும் கொடுக்காதே யென்று சொல்லிக் கொடுத்து வேட்டைமுடி தரித்து தமயன்மாரோடுவேட்டைக்குச் சென்றான். இந்த வஸ்திரமெடுத்துக்கொடுக்கும்போது இந்திரன் குமாரத்தி கண்டிருந்தவளாதலால் தன் தமக்கைமாரிடம் சென்று அவர்களையும் அழைத்து மாமியினிடம் வந்து

ஒருத்தி மயிர்வாரிமுடித்தனள், ஒருத்திகால்பிடித்தனள்
ஒருத்திமாமி உன்புத்திரன் என்னமோஒருபொருள்கொ
டுத்தாரே, அதனைக் காட்டம்மா பார்ப்போ மென்றனள்
சூதறியாமல் இந்தப் புடவைதானம்மாவென்று எடுத்
துக் காட்டினள். எதோ அதனைக் கட்டி அழகு பார்ப்
போமென்று நால்வரும் போர்த்துக்கொண்டு கஜபரமே
ஷ்வரா! என இந்திரசமுகத்திற் கொண்டுபோய்விட்டது
இந்திரன் மகளைக்கண்டு ஆதரித்து இதுபரியந்தம் எங்
கிருந்தனையென்று வினவ இந்திரன் குமாரத்தி பூலோக
ராஜனிடம் அகப்பட்டுக்கொண்டதை ஆதியோடந்தமா
கச் சொல்ல, இந்திரன் சில வேதியரை யழைத்து பிரா
யச் சித்தஞ்செய்து வேறொருவிடுதியில்வைத்தான். இந்
திரன் குமாரத்தியால் நியமிக்கப்பட்ட நகரம் ரத கஜ
துரக பதாதி முதலான சேனைகளும் குடிகள் மந்திரி பிர
தானி சகல ஐஸ்வரியமும் மறைந்தது. முன்போலபாலை
நிலமாயிற்று வேட்டைக்குப் போனவர்களுடைய வாக
னமும் மறைந்துபோய் விட்டது. ஜெகதலப்பிரதாபன்
பார்த்து ஓகோ! மோசம்வந்தது. நான் கொடுத்த வஸ்
திரத்தை நமது கன்னிகையிற்கொடுத்து விட்டதாயிருக்
கிறது ஔவையார் சொல்லிய கன்னிகைகள் சொர்க்க
லோகம்போய்ச் சேர்ந்தார்கள். என்ன செய்கிறதென்று
பிரமைகொண்டு நின்றான். தமயன்மார் அறுவரும் பிர
மைகொண்டவராகச் ஜெகதலப் பிரதாபனைக்கண்டு தங்
கள் வாகனம் மாயமாக மறைந்ததைச்சொன்னார்கள்ஜெ
கதலப் பிரதாபன்கேட்டு இதுவெல்லாம் நமதுஅன்னை
யால் வந்த கெடுதியென்று சொல்லி யாவருங் கூடிக்கொ
ண்டு நகரத்துக்குள் வந்தார்கள். நகரமில்லாமல் பாலை
நகரமா யிருப்பதைக் கண்டுகனவருத்தமுற்றுவெறிகொ
ண்டவர்போ லிருக்கிற மாதா பிதாவைக் கண்டு ஓ அம்
மணி? உன்னால் இப்பேர்ப்பட்டஅவகேடுவந்தது நான்
கொடுக்க வேண்டாமென்று உன்கையிற்கொடுத்த பட்டு
பீதாம்பரத்தை ஏன் கன்னிகைகள் கையிற் கொடுத்தா
யென்று வினவ? தாயார் சொல்லுகிறாள் அப்பாமகனே!
எனது கையிற்கொடுத்தது கன்னிகைக ளெப்படியோ
அறிந்து என்னிடத்தில் வந்து உபசாரஞ்செய்து கேட்
டுக் கொண்டனர். நான் கிஞ்சித்து மயங்கிக் கொடுத்த



தேன் கட்டி யழகுபார்க்க நால்வரும் வந்திட்டனர்.
அதன்பிறகு அவர்கள் எங்குற்றனரோ நான் அறியேன்.
நீ இவ்வகைப்பட்ட மாயகன்னிகைகளை மனைவியாகக்
கொள்ளலாமா வெனச் சொன்னாள். ஜெகதலப் பிரதா
பன் வருத்தப்பட்டு நல்லது தாயே! இது காலவித்தியா
சம் அதற்காக வருத்தப்படுகிறதில் பயனில்லை வாருங்க
ளென்று யாவரையும் அழைத்துக்கொண்டு தான்
முன்னே சேவகஞ்செய்ய தன்நகரத்துவாயலில்நண்ணி
அங்கிருக்கும் காவலரை யழைத்து அப்பா! உங்களு
டைய அரசனிடத்து சேர்ந்து உமக்குப் பட்டங்கட்டி
வைத்த அரசன் குடும்பசமேதமாகத் திட்டி வாயலில்
வந்திருக்கிறானெனச்சொல்லுமென்ன,சேவகர்சொல்ல
அரசன், காவலாளிகளே! அந்த ராஜன் வாகனரூட
னாக வந்தானோ? அல்லது கால்நடையாக வந்தானோ?
என்று வினவ, காவலாளிகள் ஐயா! வாகனமில்லை, கால்
நடையாகத்தான் வந்திருக்கிறா னென்றார்கள். அரசன்
சொல்லுகிறான்: நீங்கள்போய் இப்போதுபேசுகிறதற்கு
தருணமில்லை போகச்சொன்னானென்றுசொல்லுமறுத்து
ஏதாகிலுஞ் சொன்னால் பிடரியைப் பிடித்துத்தள்ளிவிடு
ங்க ளென்றான். காவலாளிகள் வந்து ஜெகதலப்பிரதாப
னைக் கண்டு ஐயா! இந்தவேளை பேசுகிறதற்குச்சாவகாச
மில்லையென்று சொன்னார். நீங்கள் மறு உத்திரவு கொ
டாமற் போய்விடவேண்டியதென்று கூற,ஜெகதலப்பிர
தாபன் நல்லதென் றெழுந்து இந்த ராஜன் முன்னம்
என்னை கார்த்துக்கொண்டு நான் காலினாலிட்ட வேலை
யைத் தலையாற் செய்து வந்தமையால் இந்தப் பட்டண
த்தை இவனுக்குக்கட்டினேன். நல்லது நான்முன்போ
லச் சிறப்படைந்த பின்பு இவனைவிசாரித்துக்கொள்ளு
கிறேனென்று ஒரு காட்டிற்சென்று அங்கொரு சிறிய
வூரைக்கண்டு அவ்வூர் அதிகாரியிடத்தில் சென்றுஓகன
வானே! நாங்கள் இராஜாக்கள் இவர்களிருவருந் தமை
யன்மார், காலவித்தியாசத்தால் இக்கதியானோம்; நான்
என் காரியத்தை சுதாரித்துக்கொண்டு வருகிறபரியந்தம்
இவர்களைப்பாதுகாத்தால் உம்மை பிதாவைப்போல்கரு
துவனென்று கூற, அவ்வூரதிகாரி சொல்லுகிறான்:ஐயா
உலர்ந்த சுண்ணாம்பினையும் வாடிய வெற்றிலையும் கை

விடலாகாதெனச் சொல்ல வேண்டியதில்லை, வீட்டில் சமையலாகி யிருக்கிறது, புசித்துச் சுகமாக விருங்களென, விநயத்தோடுகூற அவ்வூரதிகாரியிடத்தில்வந்து ஐயா! எனது காரியம் நிறைவேறுகிற பரியந்தம் நான் புசியேன், ஆதலால் எனக்கு விடை கொடுமென்றுகூறி விடைபெற்று அவ்வூரைவிட்டுக் காட்டில் சிலதூரஞ்சென்றான். அங்கு ஒரு கால்வாய் நீர் அதிகப்பட்டு எறும்புகளை யடித்துக்கொண்டு போகின்றது. அவ்வெறும்புக்கரசனாகிய கட்டெறும்பு இந்த ஜெகதலப்பிரதாபனைக் கண்டு ஓ மகாராஜனே! எங்களை இந்தவேளைப்பாதுகாத்தால் உமக்கு எங்களால் நல்ல சமயத்தில் உபகார முதலியவை செய்வோமென்ற ஜெகதலப் பிரதாபன் கேட்டு அதனை நம்பாமற் புண்ணிய முண்டாகுமென்று நம்பி எறும்புகளை யெல்லாம் நீரினின்றும் வெளியி லெடுத்து விட்டுச் சிலதூரஞ் சென்றான். அங்கொரு தவளை கருடன் வாயிலகப்பட்டு தப்பி கட்டாந்தரையில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தது, இராஜனைக் கண்டமாத்திரத்தில் கூவி என்னை நீரிருக்குமிடத்தில் சேர்த்தால் என்னால் கூடிய உபகாரத்தை தடையின்றிசெய்வேனென்று கூறிற்று. அதையும் இந்த ஜெகதலப் பிரதாபனெடுத்து ஜலம் இருக்குமிடத்தில் விட்டு பின்னும்காட்டில் செல்லும்போது ஒரு பிள்ளைப்பூச்சி நீரில்லாத கட்டாந்தரையில் சிக்கி கனவருத்தப் பட்டுக்கொண்டிருந்தது. இந்த இராஜகுமாரனைக் கண்டு என்னைச் சேறும் ஜலமுமா யிருக்கிற யிடத்தில் கொண்டுபோய் விட்டால் என்னால் ஒரு நலம் உமக்கு உண்டாகுமென்றுகூறிற்று. ஜெகதலப் பிரதாபன்கேட்டு அப்பிள்ளைப்பூச்சியை எடுத்துச் சேறிருக்கு மிடமாகப்பார்த்து அவ்விடத்தில்விட்டு இரவும் பகலும் அன்னந் தண்ணீரில்லாமல் நடந்து ஔவையார் வீட்டுக்கு வந்து அந்தவேளை ஔவையார் இல்லாமையினாலே அங்கு உட்கார்ந்தான். களை மேலிட்டு ஸ்மரணை தப்பி பூமியில் விழுந்திருந்தான் வெளியிற் போயிருந்த ஔவை வந்து களைத்திருக்கிறவனைக்கண்டு முன்வந்த ராஜகுமாரனென்றறிந்து களையாறப் பாலும் ஏடுமாய்ப் புகட்டி விசிறினள். இராசகுமாரன் களை நீங்கிக் கண்விழித்து என்னை யாதரிக்கவென்று பலவாறு



வேண்டி, ஔவையாரிடத்து வந்து விடைபெற்றுப் போனநாள் துவக்கி வருணன் குமாரத்தி நாககுமாரத்தி அக்கினி குமாரத்தி இவர்களை மணஞ்செய்து புது நகர் உண்டாக்கி அதிலிருந்து தன் தாயால் மோசம் போய்ப் பராபரியான பரியந்தஞ் சொல்லி முறையிட்டு முன்போல அக்கன்னிகைகளை அழைப்பிப்பது உங்கள் கிருபையென்று வேண்டி நின்றான்.

இவ்வாறு சொன்னவற்றை யெல்லாம் ஔவையார் கேட்டு புன்சிரிப்பு கொண்டு அப்பா! இராசகுமாரா! நான் அக்கன்னிகைகளைச் சேர்ப்பிக்கிறேன். ஆனால் அவர்கள் உன்னைச் சபிப்பார்கள். ஆதலால் நான் ஒரு தந்திரஞ் சொல்லுகிறேன். அவ்வாறு நடப்பாயாகில் நீ அவர்களை யடையலாம். அது வென்னவெனில்: முன்னம் அந்தக்கன்னிகைகள் குளிக்கும் குளக்கரையில் ஒரு புன்னைமர மிருக்கிறது, அதனடியிலிருந்து அந்நால்வரைத் தியானித்துக்கொண்டிருந்தால் அவர்கள் தேவகன்னிகைகளாதலால் இரக்கமுற்று உனக்கு வசப்படுவார்களென்றுகூற, இராசகுமாரன் அக்கருத்துக்கிசைந்து நவரத்தின கசிதமான படிகளுடைய திருக்குளக்கரையிலிருக்கிற புன்னைமரத்தடியிலிருந்து அந்தநான்கு ஸ்திரீகளைத் தியானித்துக்கொண்டு அன்னம் ஆகாரம் இல்லாமல் நாற்பதுநாள் அதாவது ஒரு மண்டலமிருந்தான். இந்த நான்கு கன்னிகைகளும் நித்தம் வருகிற போதும் போகிறபோதும் பார்த்துக்கொண்டே போகிறதேயன்றி முன்னிருந்தநன்றி எள்ளளவேனும் விசாரிக்காமலேபோவார்கள். இராசகுமாரன் கண்டு ஆ! ஆ! பார்த்தாயா! நான் நாற்பது நாளாக அன்னம் ஆகாரம் இல்லாமல் இருக்கிறதை யறிந்திருந்தும், ஏனென்று விசாரிக்காமல் இருக்கிறார்கள், இனி நம்முயிர் தரிக்கிறதாகயிருக்கவில்லை, நல்லகதியடைய ஆண்டவனை தியானிக்கவேண்டுமென்று கருதி அரி! அரி! கோவிந்தா! மாதவா! அச்சுதா! அனந்தசயனா! பக்தாட்சகா! பரமதயாளா! என்று ஓலமிட்டு பூமியில்விழுந்தான் தேவகன்னிகைகள் கண்டு திடுக்கிட்டு ஆ! ஆ! நம்மிராசன் அன்னம் ஆகாரம் இல்லாமல் நம்மால் பிராணனைவிடுகிறான். ஐயோ! நமக்குப் பாதகம் வருகிறதென்று ஒருவரை யொ

ருவர் பார்த்து இதோ நமது இராசன் நம்மாலிறந்து போகின்ருன். நீங்கள்பார்த்தீர்களாவென்று சொல்லிக் கொண்டாள். அவர்களில் நாககன்னிகை இந்த ராசன் என்று புன்னை மரத்தடியில் வந்திருந்தாரோ அன்றே யறிவேன் நான் சொன்னல் உங்களுக்கு வருத்தமுண்டாகுமென்று நினைத்துச் சும்மா யிருந்துவிட்டேனென்ருள். மற்ற மூவரும் அவ்வாறே கூறினர். இனி நாம் இந்தவேளை சும்மாயிருந்தால் பாதகம் வரும் வாருங்களென்று நால்வருங்கூடி ராசகுமாரனிடத்து வந்து களைத்து விழுந்திருக்கிறவனை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு குடத்தின் சலத்தைக் கொண்டுவந்து தாகத்துக்கருந்தி முந்தாணியில் விசிறி களையாற்றி, ஓ! ராசனே! நால்வரும் வந்தோம் எழுந்திரு என்று கூறினர். இராசகுமாரன் கண்விழித்துப் பார்த்து மகிழ்ந்து அலறி எழுந்து யாவரையுந் தழுவி கன்னியர்களே! என்னை நாட்டிற் கைவிட்டதுபோலக் கைவிட்டு இந்திரலோகம்போய்ச் சேர்ந்துவிட்டீர்கள். நான் பிடித்த கிளையும் முறிந்து மிதித்தகிளையும் ஒடிந்து விழுந்தவன்போலவும், இருதலைக் கொள்ளியி லகப்பட்ட எறும்புபோல வருந்தி அன்னுகாரமில்லாமல் நாற்பதுநாள் உத்தத்தை வகித்திருந்தீர்களேயன்றி முன்பின்னிருந்ததையோசித்துக் கிருபைகூறவில்லை. இப்படி யிருக்கலாமா? உங்களுக்கு என்ன குற்றஞ் செய்தேனென்று அலறிப் புலம்பினன். கன்னிகள்கண்டு முன்பு அன்புடனேகூடிவாழ்ந்தவர்களாதலால் தாங்களும் வருத்தமுற்று முன் பின்பு நாமொன்ருக யிருந்தோம். இனி முன்போலிருக்க எங்கள் சுயவிச்சையல்ல, நீயோ மானிடன், நாங்கள் சொர்க்கமாதர்கள், எங்களுக்கும் உமக்கும் பொருந்துவது அரிது. ஆகையால் எங்களிடத்து அன்புவைக்காமலிருக்கவேண்டுமென்று கூறினர். அரசன் கேட்டு மனவருத்தமுற்று ஓ! ஓ! கன்னிகளே! இறந்து போகிறவனை யெழுப்பி மறுபடியும் இந்தவார்த்தை சொல்லுவதுஉங்களுக்குத் தருமமல்ல, ஆதலால் நீங்கள் என்னைக்கொன்றுவிட்டுப் போங்களென்று விழுந்து பாதத்தைப்பிடிதுக் கொண்டான். நால்வரும் பார்த்து ஓ! ஓ! இதென்ன அனியாயம்? நியாயத்தை எடுத்துச் சொல்லியும்



இராசன் கேளாமல் காலைப்பிடித்துக்கொண்டான். இனி நாமென்ன செய்கிறதென்று சற்றுநேரம் யோசித்துஒரு தந்திரம் தங்களுக்குத் தோன்றிச் சொல்லுகிருர்கள். ஓ! ராசகுமாரா! எழுந்திரும், உம்மைச் சொர்க்கத்திற்கொண்டுபோய்ச் சேர்க்கிறது எங்கள் கடமை, அங்கு வந்தவுடன் நீர் எங்கள் பிதாவினுல்எங்களைக் கலியாணஞ்செய்துக்கொண்டு வருகிறது உமது வல்லமை இவ்வளவு நாங்கள் செய்கிருேமென்றுகூறி இராசகுமாரனை ஒரு சிறிய தவளையாக்கிக் குடத்தில் அவனை வைத்து யெடுத்துக்கொண்டு தன் லோகத்திற்சென்று அங்கு ராசகுமாரனுகச்செய்து நல்ல வஸ்திராபரணமும் மந்திரவாளுங் கொடுத்து இந்திரன் சமுகத்திற்கு அருகில் விட்டுத் தங்கள் இருப்பிடத்துக்குச் சென்ருர்கள்.

இராசகுமாரன் தைரியங்கொண்டுமகரகுண்டலஆர கேயூர கடக கங்கணமுதலிய ஆபரணங்களை யெல்லாம் அணிந்துக்கொண்டு மந்திரவாளையுருவி கையிலேந்தி மீசையைமுறுக்கி அட்டகாசஞ் செய்துக்கொண்டு தேவராசனென்னும் இந்திர சபைக்குச் சென்ருன். இந்திரன் கண்டு ஓ ஓ! இவன் கிச்சித்தேனும் அச்சமில்லாமல் பராக்கிரமத்தோடு நமது கொலுவுக்கு வருகிருன் இவனைப்பார்த்தால் மகாராசனைப்போலிருக்கிருன். அல்லது இவன் வரலாற்றை விசாரிப்போமென்றுகேட்க; ஜெகதலப்பிரதாபன் சொல்லுகிருன்: ஓ தேவராசனே! மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் தலைவனுகிய மகாமண்டலேஸ்வரனுக யிருந்து உமது நகரத்தில் மிகவும் கெட்ட அனியாயம் நடந்திருக்க அதனை விசாரியாமல் அரசுசெய்தல் உமக்கு அழகோவென்றனன். இந்திரன் கேட்டு கிஞ்சித்து அச்சமுற்று நடந்த அனியாயமென்ன? சொல்லுமையா வென்றனன். நான் பூலோகத்தரசன். உமது குமாரத்தி பூலோகத்திலிருக்கிற ஒரு குளத்தில் நீராடினள். நான் கண்டு மோகித்து அவள் வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டேன். அன்றுமுதல்ஒருவருஷகாலம் என்னேடு கூடியிருந்து நாககுமாரத்தி வருணன் குமாரத்தி அக்கினிகுமாரத்தி இம்மூவரையும் விவாகஞ் செய்து புதியநகரமுண்டாக்கி அதிற்குடியேற்றி ஏகசக்கிரேஸ்வரனு யிருக்கச்செய்து நான் வேட்டைக்குப்போ

கும்போது அந்தவஸ்திரத்தை அன்னையிடம்கொடுத்துப்போக அதைஇவர்கள்கிரகித்துக்கொண்டுஉன்னிடத்திற்கு வந்துவிட்டார்கள். வந்தவர் சும்மாவராமல் நகரமுதலியவற்றைப்பாழாக்கி வந்துவிட்டார்கள். இந்த அனியாயத்தைக் கண்டு அந்நால்வரைக்கோரி நாற்பது நாள் பரியந்தம் அன்னம் ஆகாரமுமில்லாமல் இறந்துபோகிற சமயத்தில் அந்நால்வரும் வந்து என்னையாதரித்து முடிவில் ஒரு தவளையாக்கி குடத்திலிட்டு மாயமாகப்போயினர். இந்த அனியாயம் எங்குநடக்கும்? இதனை விசாரணைசெய்து அந்நால்வரையும் எனக்குவிவாகஞ்செய்து அனுப்பிவைப்பதுஉமது கடமையென்றுகூறினன். இந்திரன் கேட்டு அந்நாலு கன்னிகைகளை யழைப்பித்து எதிர் நிறுத்தி விசாரணைசெய்தனர். இராசகுமாரன் சொல்லியதற்குச் சரியாகவே யிருக்கக்கண்டு மகிழ்ந்து நால்வரையும் அரண்மனைக்கனுப்பி ஓ மகானுபாவரே! நீஎன் குமாரத்தியை விவாகஞ்செய்துக் கொள்வதற்குத் தடையில்லை மற்றமூன்று கன்னிகைகளை விவாகஞ்செய்துகொடுக்கிறதற்கு மூன்றுவித பரிட்சைசெய்கிறேன். அதற்கு இளையாமலிருப்பையானால் உன்கருத்தின்படி நால்வரையும் மணம்புரிவித்து உமதிருப்பிடம் அனுப்புகிறேன் என்றுசொல்ல இராசகுமாரன் அக்கருத்துக் கிசைந்தான். இந்திரன் சிலதேவர்களையழைத்து ஓதேவர்களே! நீங்கள் ஒருகாணியைப் புழுதியாக்கி அதில் பதின்கல எள்ளைவிதைத்து நூறுசாலடித்துவாருங்களென்றுசொன்னான். தேவர்கள் அவ்வாறுசெய்து இந்திரனுக்குத் தெரிவித்தனர். இந்திரன் இராசகுமாரனை யழைத்து ஓ ராசகுமாரகா! ஒருகாணியில் ஒருபதிங்கலயெள் விதைத்திருக்கிறேன். அதனைக் குறையாமல்எடுத்துக்கொடுப்பாயாகில் உனக்கு நாககன்னிகை மனைவியாவாளென்று கூறினர். இராசகுமாரன் அக்கருத்துக்கிசைந்து புழுதியருகிற்சென்று கையால்புழுதியைத் தள்ளிப்பார்த்தான். ஒரு எள்ளாகிலும் அகப்படாதிருக்கவே மனவருத்தந்தேடிக்கொண்டோம்இனிநாம் என்னசெய்வோமென்று ஏங்கிப் பூமியைப் பார்த்துப் புலம்பிக்கொண்டிருந்தான். அத்திசையில் ஒரு எறும்பு கடுக ஓடிவந்தது. எறும்பினால் இந்தக் காரியம் நிறைவேறும்; நாம் வரும்போது



எறும்பு உதவிசெய்கிறோமென்று கூறிற்றே; இவ்வேளையதனை நினைக்கவேணுமென்று எறும்புகளை மனதில் நினைத்தான். எறும்புக்காசன் எதிர்வந்து என்னையனே! உனக்குண்டாகிய துயரத்தை அரைமாத்திரையிற் றீர்ப்பேன் என்றால் என்னசெய்யவேண்டியதோ அதை வெளியிட வேண்டுமென்றுகூற, இராசன் சொல்லுகிறான்: ஓ எறும்புக்கரசே! இப்புழுதியில் பதிங்கல எள்ளிருக்கிறது அதனை எடுத்துஒன்றாக அம்பாரம்போடவேண்டுமென்றுகூற, தட்சணம் எறும்புக்கரசன் தன்னினமாகிய செங்காலெறும்பு - சிற்றெறும்பு - கட்டெறும்பு முதலிய பலவித எறும்புக் கூட்டங்களையும் அழைத்து எள்ளைப் பொறுக்கிக்கொண்டுவர உத்தரவு செய்தது. எறும்புகள் கூடிப் புழுதியில் பிரவேசித்து ஒரு முகூர்த்தத்தில் எள்ளையெல்லாம் பொறுக்கி ஒரு அம்பாரமாகச்சேர்த்தன. எறும்பரசன் இராஜகுமாரனைநோக்கி ஓ ஐயா! நீர் செய்த உபகாரத்திற்கு நானொரு உபகாரஞ் செய்துவிட்டேனென்றுகூறி, விடைபெற்றுத்தன் இனத்தோடுசேர்ந்தது இராசகுமாரன் இந்திரனிடத்து வந்து எள்ளைப் பொறுக்கிச் சேர்த்தேன். அளவிட்டுக் கொள்ளுமென்றனன். இந்திரன் தேவர்களால் அளவிட்டுக்கொண்டு மகிழ்ந்து இவன் பராக்கிரமசாலி யென்று மதித்துச் சொல்லுகிறான். ஓ இராசகுமாரகா! நீ வல்லமைசாலி. இதோ என் கணையாழியை இங்கிருக்கிறகிணற்றில் போடுகிறேன், அதை எடுத்துக் கொடுத்தீரானால் வருணன் குமாரத்தியை விவாகஞ்செய்து கொடுக்கிறேனென்று கூறி, கணையாழியைக் கிணற்றில் லெறிந்துவிட்டுப்போனான். இராஜகுமாரன் அக்கிணற்றுக் கருகில் வந்து பார்த்தான். அக்கிணறு பாம்புமயமாயிருந்தது, நெருங்கினவுடன் சற்பங்களெல்லாம் சீறியெழுந்தது. ராஜகுமாரன் பார்த்து தன் மந்திரவாளால் அந்த நாகங்களையெல்லாம் வெட்டினன். வெட்டுண்டநாகம் ஒன்றுபத்து நூறு ஆயிரம் பதினாயிரமாக வளர்ந்தது. அரசன்கண்டு மனவருத்தமுற்று இதற்கென்ன செய்கிறதென்று ஏங்கியிருந்தனன். அங்கொரு தவளை கூவிற்று, அரசன்கேட்டு அதனருகிற்சென்று மண்டூகமே எனக்கு ஒரு வருத்தம் நேரிடும்போது உதவிசெய்கிறேனென்று வாக்குத்

தத்தஞ் செய்கையே இப்போது இந்திரன் கணையாழியைக் கிணற்றிலெரிந்தான். அதையெடுத்துவாவென்று கட்டளையிட்டான். நானும் ஒத்துக்கொண்டு வந்தேன். அதில் நாகங்களிருந்தது, அவைகளையெல்லாம் வெட்டினேன், அவைகள் ஒன்றுபத்து நூறு நூறாக வளருகின்றன. அந்த மோதிரத்தை யெடுத்துக்கொடுத்தால் என் வருத்தம் நீங்குமென்று கூறினன். தவளை அக்கருத்துக்கிசைந்து தன் இனத்தையெல்லாம் ஏககாலத்தில் ஒன்றாகத் திரண்டுவரச்சொல்லி கிணற்றில் நிறைய விழுந்தன. பாம்புகள் தவளையைப் பிடித்துக்கொண்டு பசியாற உண்டுக்கொண்டிருந்தன. அவற்றில் ஒரு சிறிய தவளை தப்பித்துக்கொண்டு பயந்து இராசகுமாரனிடத்துவந்து உட்புகுந்து கணையாழியைக் கொடுத்தது. இராசகுமாரன் கணையாழியை யெடுத்துக்கொண்டு இந்திரனிடத்திற்கு வந்து கணையாழியைக் கொடுத்தான். இந்திரன் மகிழ்ந்து தவளைக்கு உபகாரஞ் செய்தமையால் அந்தத் தவளை யெவ்வளவு தன்னினத்தை யெல்லாங்கொலைசெய்துக்கொண்டு எனக்குபகாரஞ்செய்தது. உபகாரம்வீண் போகாதென்றுகூறி முன்போலத் தவளையை யழைப்பித்து இவைகளையெல்லாம் ஒருபெரிய ஏரியிலிருக்கும்படி கட்டளையிட்டுப் பின்பு இராஜகுமாரனைப்பார்த்து ஓ மகானுபாவா! இன்னும் ஒருபரிட்சைசெய்கிறேன். அதற்கும் இளைக்காதிருந்தால் அக்கினிபகவான் குமாரத்தியைக் கலியாணஞ் செய்துவைக்கிறேனென்றுகூறி,ஒருவாழை மரத்தில் ஏழு வாழை மரத்தை யடக்கி ஒரு வாழை மரம்போலக்கட்டி இதனை வெட்டுவையாகில் உனக்கு அக்கினிகுமாரத்தி மனைவிதானென்று சொல்லி நான்கு கன்னிகைகளையும் அழைத்து எதிரில் நிறுத்தினான். இராஜகுமாரன் மந்திரவாளை யுருவிக்கொண்டுசூதுதெரியாமல் ஒரு வாழைமரமென்று வெட்டப்போயினன். அது ஏழு மரமாயிற்றே. அதில் அவமான மடைவான் இந்தவேளையில் நாம் உதவிசெய்யவேணுமென்றுகருதி நாம் பத்தினியானால் ஒருவெட்டில் மரம்ஏழும் விழவேணுமென்று நினைத்தார்கள். இராசகுமாரன் வெட்டினான், வாழைமரம் ஏழுதுண்டாய் வெட்டுண்டு விழுதது. இந்திரன் கண்டு கன்னிகைகளுக்கும் இவன்மேல்



அன்பிருக்கிறென்று உணர்ந்துகொண்டு அந்தநான்கு கன்னிகைகளையும் தன் மாய்கையினாலே ஒரு வடிவாக்கியெதிரில் நிறுத்தி இந்நால்வரில் ஒரு கன்னிகையைத் தேடுவையாகில் இங்ஙனே மணம் புரிவிக்கிறேனென்று கூற, இராச குமாரன் கண்டு மயங்கி பூமியைப்பார்த்து எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு பிள்ளை பூச்சியைக்கண்டான். அதனைப்பார்த்து ஓகோ பிள்ளைப் பூச்சியே! இந்திரன்குமாரத்தியை நான் அறிந்துக்கொள்ள நீ இந்திரன் குமாரத்தியின் பாதத்தி லேறுவையாகில் முன்செய்கிறோ மென்கிற உபகாரம் இதுதானென்று மனதில் நினைப்பேன்என, அப்பிள்ளைப்பூச்சி இந்திரன் குமாரத்தியின் பாதத்தின்மீதிலேற, இராசகுமாரள் இந்திரன் குமாரத்தி கரத்தைப்பற்றி நின்றான்.

அதுகண்டு இந்திரன் மகிழ்ந்து தட்சணம் நால்வரையும் விவாகஞ்செய்வித்து விருந்திட்டு ஆடையாபரணங்கொடுத்து நால்வரையும் மருமகனையும் பூலோகத்திற்கு அனுப்பிவைத்தான். இராசகுமாரன் நான்கு கன்னிகைகளோடு ஔவையாரிடத்து வந்து வணங்கி நடந்த வரலாற்றைச் சொல்லி அவ்வீட்டில் மூன்று நாள் விருந்து புசித்துத் தன் தாய் தந்தையர்இருக்குங் குடித்தனக்காரனிடத்துவந்து யாவரையுங்கண்டு வணங்கித் தான் சொர்க்கலோகம்போய் வந்த வரலாற்றைக்கூறி அந்தக் குடித்தனக்காரனிடத்தில் சிலகாலமிருந்து யோசித்துப் பின்பு தாய்தந்தையர் குடித்தனக்காரன் குடும்பமாகிய இவர்களோடு முன்னிருந்த பாலை நிலத்திற்கு வந்து பழையபடி கன்னிகைகளால் நகரமுதலியவற்றையுண்டாக்கி முன்போலப் பிதாவுக்கு மகுடாபிஷேகஞ் செய்து சிலநாள்சென்றபின்பு தமையன்மார் தானுமாக இரதகஜ துரக பதாதியோடு வெளிப்பட்டு முன்னம்தன்னால் அரசுபெற்றுத் தான் வந்தபோது பேசுகிறதற்குச் சாவகாசமில்லை என்று சொல்லிய அந்த இராஜனுக்கு தான் போருக்கு வந்திருக்கிற சங்கதியை ஒரு தூதனால் தெரியப்படுத்தினான். அந்தத்துராத்மா இந்தசேதியைக் கேட்டமாத்திரத்தில் சிங்காசனத்திற்றானே உயிரைவிட்டான். அதுகண்டு அங்குள்ள மந்திரி பிரதானிகளெல்லாம் எதிர்வந்து ஜெகதலப்பிரதாபனைக் கண்டு அரசன்

இறந்துவிட்ட சேதியைத் தெரிவித்தனர். ஜெகதலப்பிர தாபன் கேட்டு சிரித்து தம்மை யாதரித்துவந்த குடித் தனக்காரனுக்கு அந்த அரசுரிமையைக்கொடுத்து அரசு செய்யச்சொல்லி மந்திரி மூதலான பேருக்கும் கட்டுதிட் டஞ்செய்து தன் பிதாவின் நகரத்துக்குப்போய் தான் வந்த செய்தியைத் தெரிவித்தான். அவ்வரசன் நகரத் தைவிட்டு ஓடிப்போயினன். அந்நகரத்தைத் தன் சேனு பதிவசம்ஒப்புவித்துவிட்டு அங்கிருந்து தன் புதுநகரம் போய் நாககன்னிகைகளோடு கூடிக்கலந்து தன் தாய் தந்தை தமையன்மாரோடும் களித்திருந்தனன். அவ்வ ளவு வல்லமையுடைய இராஜகுமாரனல்லவோ உன்னை மணம்புரிய வேண்டுமென்றுகூறிக் கதையை முடித்த னன். சூரியன் உதயமாயினன் மந்திரி குமாரனும் இராஜ குமாரத்தியும் அரண்மனைக்கு வந்து நித்தியகடனை முடி த்துக்கொண்டு புசித்திருந்தார்கள்.

ஐந்தாம்நாள் கதை-முற்றிற்று.

---

## ஆறும்நாள்கதை
## மாங்கனியால் அரசுபெற்ற கதை

ஆறும்நாளிரவில் மந்திரிகுமாரன் உண்டு தாம்பூ லந் தரித்து ஆடையாபரணாலங்கிர்தனுகிப் பரிமளமிகு ந்த நறுமலர் மாலைசூடி பள்ளியறையைச் சேர்ந்தான். இராசகுமாரத்திகளில் இளையாள் உண்டு தாம்பூலந் தரி த்து ஆடையாபரணாலங்கிர்தளாகி நித்தம் வருகிற கிர மப்படி பள்ளியறை சேர்ந்து சற்றுநேரம் நல்லசங்கீதம் பாடி கூடிக் கலந்தணையக் கருத்துகொண்டாள். மந்திரி குமாரன் இராசகுமாரத்தியின்முகக்குறியைக்கண்டு கதை யால் இவள் காதலைத் தணிக்கவேண்டுமென்று கருதிச் சொல்லுகிறுன்: ஓ பெண்கள் நாயகமே! நானொரு சிறிய கதை சொல்லுகிறேன். அது முடிந்தவுடன் கூடுவோ மென்றுசொல்ல, இராசகுமாரத்தி அக்கருத்துக்கிசைய மந்திரி குமாரன் சொல்லுகிறுன்: கேளும் மாதுசிரோ மணி! பிருந்தநகரமென்று ஒரு ஊரில் பிருந்தநகரரா ஜன் என்னும் அரசனுண்டு. அந்த அரசனுக்கு நெடு நாளாகப் புத்திரன் இல்லாமலிருக்க, அவ்வரசன் மன



வருத்தமுற்றுத் தானம் தருமம் பரோபகாரம் செய்து வந்தனன். அந்நாளில் ஒரு பெரியவர் அந்த அரசனுடைய சமுகத்துக்கு வந்தார். அரசன் கண்டு மனமகிழ்ந்து எதிர்சென்று அழைத்துவந்து பொற்பீடத்திலிருத்திச் சோடசோபசாரஞ்செய்து ஓ சுவாமி! அடியேன் மாதவமோ! எங்கள் முன்னோர் செய்த தவப்பயனோ! அல்லது இந்த க்ஷேத்திரஞ்செய்த பூசாபலனோ! தாங்கள் இங்கு எழுந்தருளினதென்று பலவாறு புகழ்ந்து சுவாமியவர்களுடைய கிருபாகடாட்சத்தில் சகலபாக்கியமும் நிறைந்து புத்திரசந்தானம் இல்லாமையால் மனமகிழ்ச்சி குறைந்திருக்கிறேன் அதற்கு ஒருவழி ஏற்படுத்தவேண்டியதென்று வேண்ட, அந்தப்பெரியவர்கிருபை கூர்ந்து சொல்லுகிறார்: மகாராசனே! உமக்கு இக்காலத்தில் புத்திரசந்தானமில்லை இன்னும் சிலநாள் சென்றபின் சனிதிசைவரும், அச்சனிதிசையில் இப்போதிருக்கிற பாக்கியமெல்லாவற்றையும் வேறுராசன் கைக்கொண்டு உம்மை அனாதியாக்கப்போகிறான். அப்போது நீர் நாடு நகரம் முதலியவற்றில் ஐயமெடுத்து சீவனஞ்செய்யும்படி நேரிடும். அந்த வருத்ததிசையில் உமக்கு இரண்டு புத்திரர்கள் பிறப்பார்கள். அவர்களால் இந்தப்பாக்கியத்தை அடைவதுமன்றி பெருஞ்சிறப்புப் பெறுவாயென்று கூறிப்போயினர். அரசன் பாக்கியம் போவதற்கு வருத்தமுறாமல் புத்திரர்கள் உண்டாகுமென்கிறதற்குக் களிப்பையுட்கொண்டு சகலத்தினையும் விட்டுத் திடச்சித்தனாகவிருந்தான். சிலகாலத்துக்குள் ஒரு வேற்றரசன் படையெடுத்து அவ்வரசனுடைய நாடு நகரம் முதலியவற்றைப் பறித்து அரசனைப் பனாதியாக்கினான். அரசன் தன் மனைவியோடு தன்னுடைய நாட்டையும் விட்டு முகமறியாத நாட்டிற்குச் சென்று கூலிகுத்திப் பிழைப்போமென்று கருதி ஒரு செட்டியினுடைய வீட்டிற்குச் சென்றார்கள். அந்தச் செட்டியினுடைய மனைவி இருவரையும் வைத்துக்கொண்டு பிரதிதினம் அவர்களிடத்தில் வேலைவாங்கிக்கொண்டு உழக்கரிசி கொடுப்பாள். அதனைச் சமையல்செய்து சீவனஞ்செய்து வந்தனர். சிலகாலஞ்சென்றபின்பு முனிவர்சொற்படி இராசபத்தினி கெற்பவதியாயினள். அரசன்பார்த்துமகிழ்ந்து



நமக்கு நல்லகாலம் வந்ததென்றெண்ணி குருவி கூடுகட்டுவதைப்போல அவ்வூரில் குடியில்லா ஒருவீட்டுத்திண்ணையில் காட்டிலிருக்கிற கொம்பு கொடிகளைக்கொண்டு நிரைச்சல்கட்டி அதில் கஞ்சி காய்ச்சிக் குடித்து வருவார்கள். தன்னுடைய மனைவிக்கு மாதம் உயர உயர இளைப்பு மேலிடவே அரசன்கண்டு துயரங்கொண்டு மனைவியை வேலைசெய்யவொட்டாமல் நிறுத்தி தான் போய் கூலிக்குக் குத்திவந்தகூலியை இருவரும் புசித்து வந்தனர். பத்துமாதம் நிறைந்தபின்பு மனைவி பிரசவவேதனைப்பட்டு ஒருபுத்திரனை நல்ல சுபலக்கினத்தில் பெற்றாள். அரசன்கண்டு ஒருவிதத்தில் மகிழ்வுண்டாயிருந்தாலும் காயமுதலியவை யில்லாமையாலும் தன்னந்தனியே மனைவி பரதவித்து புத்திரனைப் பெறும்படி காலம் நேரிட்டதைக்குறித்து கனவருத்தமுற்றுத் தெருவில் கிடந்த பானைகளில் ஒரு நல்ல பானையையெடுத்து வந்து அதில் சலம்வைத்துக் காய்ச்சி வெந்நீரால்மனைவியை ஸ்நானஞ் செய்வித்துத் தான் உடுத்தியிருந்த ஆயிரம் பொத்தலுடைய வஸ்திரத்தை கட்டிக்கொள்ளச்செய்து செட்டிவீட்டிற்சென்று முன்போலக் குத்து நெல் குத்தும்போது அரசனுக்குத் தன்னையுமீறித் துக்கமேலிட்டுக் கண்ணிலிருந்து நீர்த்துளிபோல் விழுந்த கண்ணீரைக் கண்டு செட்டிச்சி ஐயா! ஏன் அழுகிறாயென்றனள்? அரசன் கேட்டு ஓ அம்மணி! என்னுடைய மனைவியானவள் பிள்ளைபெற்றாள். அன்னவளுக்குக் காயமுதலியவையில்லா திருப்பதோடும் பிறந்தபிள்ளைக்கும் எண்ணையில்லை. நமக்கும் இவ்வகைப்பட்டவிதி வாய்த்தது. தெய்வமே! என்று நினைத்து அழுதேனென்றான். செட்டிச்சி தன் மனமிரங்கி அந்த அரசனுடைய மனைவிக்கு யாதொரு குறைவுவராமல் வேண்டியவற்றையுதவி பாதுகாத்து வந்தாள். அன்றுமுதல் அரசன் அந்தசெட்டிச்சி காலாலிட்ட வேலையைக் கையால் செய்து அவளால் சொற்பசீவனஞ் செய்துக்கொண்டு வந்தான். குழந்தையும் யாதொரு குறைவு மில்லாமல் வளர்ந்து மூன்றுவருஷத்திற்குப்பின்பு மறுபடியும் அரசனுடைய மனைவியானவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். அக்குழந்தையையும் செட்டிச்சியானவள் பாதுகாத்துக்

கொண்டு வந்தாள். பின்பு அரசன் குழந்தைக்கும் மனை
விக்கும் சீவனம் நடக்கவேணுமென்று அதிக முயற்சி
யையெடுத்துக் கொண்டுசெட்டிச்சி வீட்டுக்குவந்து அங்
குள்ள வேலையைச்செய்து அக்கம்பக்கங்களி லிருக்கும்
வீடுகளிலும் மற்ற வீதியிலிருக்கும் வீடுகளிலும் யாசகஞ்
செய்து வந்ததை சீவனத்துக்கு வைத்துக்கொண்டு புத்
திரர்களை வளர்த்துவந்தாள். புத்திரர்கண்டு நாம்புத்தி
ரராக விருந்து இவ்வளவு துன்பம் மாதாவுக்குக் கொ
டுப்பது தகுதியல்லவென்று கருதி இளையபுத்திரன் தமை
யனைப்பார்த்து, அண்ணா! நாமவீட்டிலிருக்க மாதாபிதா
வைக் காப்பாற்றவேண்டும். இதற்கென்ன சொல்லுகிறீ
ரென்று கூற, மூத்தவன் அவ்வகைப்பட்ட முயற்சிதான்
செய்யவேண்டும். மிகுந்த யோசனைசெய்து சொல்லெ
ன்றுகூற, இளையவன் சொல்லுகிறான்: கட்டுசாதத்திற்
குக்கூட வீட்டில் அரிசியில்லை. நாமும் முன்னம் ஒருபடி
அரிசி சம்பாதிக்க வேண்டுமென்றுகூறி, இருவரும்வெ
ளிப்பட்டு அந்நகரத்திலுள்ள குடிகளிடத்து யாசித்து
ஒருபடியரிசி சம்பாதித்துக்கொண்டு, தாய்கையில் கொ
டுத்து அம்மணி! இந்த அரிசியைச்சமைத்துக் கட்டுசா
தங் கட்டிக்கொடுங்கள்; நாங்கள் எங்கேயாவது சென்று
மூன்றுமாதத்திற்குள் கொஞ்சந்திரவியஞ் சம்பாதித்துக்
கொண்டுவந்து சேருகிறோமென்று கூறினர். மாதா
பிதாக்கள் கேட்டு மனவருத்த முற்றுப் போகக்கூடா
தென்று தடுத்தார்கள். இரண்டு புத்திரர்களும் வணங்கி
ஓ மாதாபிதாக்களே! எத்தனைநாள் உங்களுடனிருந்தா
லும் தரித்திரமிசையேயல்லாமல் வேறில்லை. ஆதலால்
நாங்கள் வெளிப்பட்டால் எவ்விதத்திலாவது கிஞ்சிற்று
சௌக்கியப்படும்படியான நற்குணநற்செய்கை நமக்குக்
கிடைக்கும். ஆதலால் தாங்கள் சந்தோஷமாகவே எங்க
ளுக்கு விடை கொடுமென்று கூறினர். பின்பு தாய்தந்
தையர்கள் அக்கருத்துக்கிசைந்து அமுதுசமைத்துஒரு
கந்தையிற் கட்டிக்கொடுத்து அன்று இராப்பொழுது
துலைந்து போனவுடன் மக்களை யனுப்பினர். இந்தராஜ
புத்திரர் இருவரும் அந்நகரத்தைக்கடந்து முன்பின
சென்று வழியறியாதவர்களாகையால் முகம்விட்டவாக்
கிலால் நடந்து சந்திரர் சூரியரும அறியாத பெரியஇரு



ண்டகாட்டில் வந்துவிழுந்து நடந்து வருகின்றார்கள்.
அக்காட்டில் தெய்வ நிர்ணயத்தால் ஒருமாமரமுண்டு.
அது நூறு வருஷத்திற்கு ஒருகனி பழுக்கிறது. அம்
மாங்கனியைப் புசிக்க ஒருமாமுனிவர் பார்த்து தவத்தி
லிருந்தனர். ஆதலால் ஸ்நானஞ்செய்துவந்து புசிக்க
லாமென்று கருதிப்போயினர். அத்தருணத்தில் இருவ
ரும் அவ்வழியிற் சென்றார்கள். அந்த மாங்கனி இவர்
கள் கண்ணுக்குப்புலப்பட்டது. இளையவன்ஓடோடியும்
வந்து அந்தப்பழத்தைப்பார்த்து மாணிக்கம்போலிருப்
பதையறிந்து அட்சணம் எடுத்து கட்டுசாதம் நடுவில்
வைத்துத்தெரியாமற்கட்டித் தோளிற்போட்டுக்கொண்டு
ஒரு காதவழி நடந்தனர். அதற்குள் ஸ்நானஞ்செய்யப்
போன முனிவர் வந்துபார்த்து மாம்பழத்தைக் காணா
மல் தான்குதிக்கும் ஓடிப் பார்க்கும்போது ஒரு திக்கில்
போகிறவர்களைக்கண்டு பிடித்து, அப்பா! நீங்கள் மாம்
பழத்தைக் கண்டது உண்டோ? என்றார். இளையவன் ஓ
ஐயா! மாம்பழமிருந்தால் எங்களிடத்தில்தானே யிருக்க
வேண்டும் பாரும் வேறே கந்தை கூட யிருக்கவில்லை
யென்றான். முனிவன் மிகவும் வருத்தமுற்று அழு
தான்; இளையவன் பார்த்து ஐயா! உம்மைப்பார்த்தால்
முழுதும் துறந்தவரா யிருக்கிறீர்கள். ஒரு மாங்கனிக்கு
அழுகிறதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாயிருக்கி
றது. அந்த மாங்கனியைப்போல் மாங்கனி அகப்படா
தாவென்றான். முனிவன் சொல்லுகிறான்; அப்பா! அந்
தக்கனி தேவர்கனி. அதன் தோலைப்புசித்தவன் ஏகசக்
ராதிபதியாவான்; கொட்டையை விழுங்கினவன் சிரிக்
கும்போதெல்லாம் நவரத்தினங்கள் சிந்தும் என்று
கூறிப் புலம்பிப் போயினன். இளையவன் தமையனை
யழைத்துக்கொண்டு காதவழி நடந்து அதன் பின்பு
காலால் நடவாமல் கற்றாய்ப்பறந்து நெடுந்தூரம் வந்து
ஆற்றைக்கடந்து அங்கு இறங்கி ஸ்நானஞ் செய்து
பூசை முடித்து மாம்பழத்தையெடுத்து தோலைத் தமை
யனுக்குக்கொடுத்துகொட்டையைத்தான்விழுங்கிக்கட்டு
சாதத்தைச் சாப்பிட்டு ஒருமரத்தடியில் வந்திருந்தனர்.
வீரகண்டாமணி நகரத்துக்கதிபதியாகிய வீரமார்த்தண்
டன் இறந்துபோகிறநாளில் தெரிந்து குடிகள் மந்திரி

பிரதானி முதலானவர்களை அழைத்து வைத்துக்கொ
ண்டு பட்டத்து யானையைச் சிங்காரித்து வரச்சொல்லி
அதன்கையில் பூமாலையைக்கொடுத்து இந்தயானை யார்
கழுத்தில் போடுகின்றதோ? அவர்களை இந்நகரத்து
அரசனாக்கிக்கொண்டு என்னைப்போலப் பாதுகாத்துவா
ருங்களென்றுசொல்லி பிராணனை விட்டான். மந்திரி
கள் ராஜனுக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து
அடக்கஞ் செய்து யானையை எதிர்பார்த் திருந்தனர்.
யானை அந்நகரங்கடந்து மற்ற தேசங்களை யெல்லாஞ்
சுற்றிக் காட்டில்சென்று திரிந்து முடிவில் மரத்தடியி
லிருக்கிற இராஜகுமாரனிடத்துவந்து மூத்தவனை வாரி
யெடுத்து மாலைபோட்டுத் தன் அம்பாரியில் வைத்துக்
கொண்டு வீரகண்டாமணி நகரத்துக்குவந்தது. மந்திரி
கள் கண்டு எதிர்சென்று அழைத்துவந்து அந்தப் பிள்
ளைக்கு அபிஷேகம் ஆடையாபரணாலங்கிர்தஞ் செய்து
இராஜபூஷணமாகிய மகர குண்டல ஆர கேயூர கடக
கங்கண முதலியவை யணிந்து நாட்டார் முதலானவர்
களை வைத்துக்கொண்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் மகு
டாபிஷேகஞ்செய்து யானைமேல்வைத்து திருக்கோலம்
வந்து எல்லாரும் இராஜகுமாரன் கட்டளைப்படிக்குக்
கீழ்ப்படிந்து நடந்துவந்தார்கள். இராசகுமாரன் சத்தி
யந்தப்பாமல் செங்கோல் செலுத்தி தம்பியையும் தாய்
தந்தையரையும் இரவில் நினைத்துத் துக்கிக்கிறது; பக
லில் அரசுசெய்கிறது; இவ்வண்ணமாக அந்த மூத்தப்
பிள்ளை ஏகசக்ராதிபதியாய் இருந்தான். மரத்தடியி
லிருந்த இளையவன் யானையானது தமையனைத் தழுவு
வதைப்பார்த்து மிகவும் பயந்து ஓடி நெடுந்தூரத்திலே
நின்று, ஓ! ஓ! நமது தமையனை யானையானது விழுங்
கிற்று;இன்னும்என்னசெய்வோமென்று துக்கித்து வெ
குவாகப் புலம்பி தெய்வத்தை நினைத்து ஐயோ! தெய்
வமே! நாம்நமது தாய்தகப்பன்மாரை சவரட்சனைசெய்
யவந்து இங்கே நமது தமையனைப் பறிகொடுத்தோம்.
இதென்ன ஆச்சரியமென்று காடு மலை வனம் வனாந்தி
ரங்களை யெல்லாம் சுற்றி ஒருநகரத்திற்குவந்து ஒருதாசி
வீட்டில் நுழைந்து, அம்மா! தாகத்துக்குக் கிஞ்சித்து
சலம்கொடுங்கள்; நெடுநாள் அன்னமில்லாமலிருக்கிறே



னென்றான். வேலைக்காரி எஜமானாகிய தாய்க்கிழவிக்குச்
சொல்லினள். தாய்க்கிழவி வந்துபார்த்து இவன்சோட
சகலையோடு பிரகாசிக்கின்ற சந்திரனைப்போலிருக்கிறான்;
மேலும் உருவத்தைநோக்கினால் ராஜவடிவாயிருக்கின்
றது; பின்னாலே இவனால் நலமுண்டாகுமென்று கருதி
உள்ளே யழைத்துப்போய் ஸ்நானஞ்செய்வித்து நல்ல
போஜனமளித்து, அன்றுமுதல் பிள்ளையை இணைவிடா
மல் இனிய வசனஞ் சொல்லிப் பாதுகாத்து மகளை
யழைத்து இந்தவாலிபனோடு விளையாடி அவனுடைய
பூர்வோத்திரத்தை யறிந்துக்கொள்ளென்று கூறினள்.
தாசிப்பெண் இராசகுமாரனிடத்திலே வருகிறதும்விளை
யாடுகிறதும் இப்படி நேசஞ்செய்து ஒருநாள் பரியாசத்
திற்குப் பக்கத்திலே கையைவைத்து சிரித்தனள். இரா
ஜகுமாரனுஞ் சிரித்தான். மாம்பழத்தினுடைய மகத்து
வத்தால் சிரித்தவுடனே நவரத்தினங்கள் குபீல் குபீ
லென்று விழுந்தன. தாய்க்கிழவிகண்டு அப்பா மகனே!
இதென்ன விந்தையென்றாள். ஒருமுனிவனால் எனக்கு
ஒரு மாம்பழங் கிடைத்தது. அக்கனியினுடைய கொட்
டை என்னுடைய வயிற்றிலே யிருக்கின்றது. அதின்
மகத்துவமென்று உண்மையைச் சொல்லிவிட்டான்.
தாய்க்கிழவி அப்படியாவென மகிழ்ந்து அன்றுமுதல்
பின்னும் உபசாரஞ்செய்து சிரிப்புண்டாக்கி வீடுவாசல்
மாடகூடமெல்லாம் இரத்தினராசிகள் குவித்துக்கொ
ண்டு மகளை யழைத்து இவன் வயிற்றிலிருக்கிற மாங்
கொட்டையை வெளிப்படுத்திக்கொண்டால் வெகுநல
மாயிருக்கிறதென்று ஆலோசித்துக்கொண்டு ஒருநாள்
ராஜகுமாரனிடத்துவந்து அப்பா மகனே! நீ பேதிக்
குச்சாப்பிட்டு வெகுநாளாயிற்று. ஆகையால் பேதிக்குச்
சாப்பிடுமென்றுகூற ஒருநாளுதயத்திலேபலமான்பேதி
மாத்திரை வைத்துக் கொடுத்தார்கள். இராஜகுமாரன்
அதைக்குடித்தான். அந்த மாத்திரை வாந்திபேதியைத்
தருவதாகையாலே தன்னுடைய வல்லமையைக் காட்
டிற்று. அதனால் வயிற்றிலிருந்த மாங்கொட்டை வெ
ளிப்பட்டது. தாசியதனையெடுத்துக்கழுவி பக்குவப்படுத்
தித் தான்விழுங்கிவிட்டாள். தாய்க்கிழவி கண்டு தூக்கி
வந்து தெருத்திண்ணையில் போட்டுவிட்டுக் கதவைச்

சாத்திக்கொண்டாள். இராஜகுமாரனைவன் தன்மலத்
தில்தானே கிடந்து ஆண்டவன் கிருபையினால் பேதி
நின்று தன்னறிவு வந்தது. பசி யதிகமானபடியினால்
தாசி வீட்டினுடைய கதவைத் தட்டினான். வீட்டுக்கு
டையவள் வந்துபார்த்து தட்சணம் கஞ்சியைக்கரை
த்துப் புகட்டினாள். அதனை யருந்தினமாத்திரத்தில்
களைத்து ஸ்மரணைதப்பி யிருந்தான். அவள்பார்த்து
அச்சமுற்று கதவைமூடிக்கொண்டு வீட்டிலிருக்க ராஜகு
மாரன் சற்றுநேரங் கழித்து இரவில் ஒருஜாமத்திலெ
ழுந்து குளக்கரைக்குவந்து கைகால்களை நன்றாய்ச் சுத்தி
செய்துக்கொண்டு தன்னைவஞ்சித்துமோசஞ்செய்ததாசி
யை நினைத்து வருத்தமுற்று அக்கரையிலிருக்கிற புளிய
மரத்தடியில் படுத்திருந்தான். அத்தருணத்தில் நாலு
பேர் சீஷரோடு ஒருபெரியவர் அந்தக்குளத்திற்கு வந்து
தானிறந்துபோவதையறிந்து தன்கையிலிருந்த பாகை
ஜோளி தண்டு கமண்டலம் பாதக்குறடு இதைநாலுபே
ரும் எடுத்துக்கொள்ளுங்கள்; பாகையானது கோட்டை
மாளிகைமுதலியவற்றைக் கொடுக்கும்; ஜோளி நினைத்த
படி போஜனந்தரும்; தண்டுபகைவரைவெல்லும்; பாதக்
குறடு நினைத்தவிடத்திற் கொண்டுபோய்விடும்; என்னை
அடக்கஞ்செய்துவிட்டு நால்வரும் நாலையும் எடுத்துக்
கொள்ளுங்களென்றுகூறிப் பிராணனைவிட்டார். இந்த
நால்வரும் இந்தநாலுபொருளை எனக்கு உனக்கென்று
வழக்குநேரிட்டு முடிவில் காளிவுத்திரவினால் பெற்றுக்
கொள்ளுவோம்; அதுபரியந்தம் இந்தப்புளியமரத்தின்
பொந்தினில் வைத்துவிட்டு ஆசானையடக்கஞ்செய்து
அதன்பின்பு வழக்குத் தீர்த்துக்கொள்வோமென்றுஒரு
மித்து அந்நான்கையும் புளியமரத்தின் பொந்தினில்
வைத்துவிட்டு குருவுக்குச் செய்யவேண்டிய விதியைச்
செய்து எடுத்துப்போகலாமென்றனர். மரத்தடியிலிருந்த
இராஜகுமாரன் அதைக் கேட்டிருந்தவனாதலால் நமக்
குத் தெய்வங்கூட்டிவைத்ததென்றுகருதி, அவர்கள்பத்
தடிதூரம் போகப்பார்த்து மரத்திலேறிபொந்திலிருந்த
நான்கையும் எடுத்துக் கொண்டு, மற்றொரு விடத்தில்
அடையாளமாகப் புதைத்துவிட்டு ஊரில்வந்து படுத்தி
ருந்தான். நாலுசீஷரும் ஆசானை யடக்கஞ்செய்து



பொந்திலிருந்ததைக் காணமலேங்கி ஒருவர்போனவழி
ஒருவர் போகாமற் போயினர்.

பின்பு இராஜகுமாரன் அறிவுணர்ந்து புதைத்து
வைத்த நான்குபொருளையு மெடுத்துக்கொண்டு பெரிய
வரை யடக்கஞ்செய்தவிடத்தில் வந்து சுவாமி! உமது
சீஷர் போர்செய்து பொருளை யிழந்தனர். அடியேன்
கைக்கொண்டேன். எனக்குப் பலிக்கும்படி கிருபைபுரிய
வேணுமென்று துதித்து ஸ்நானஞ்செய்து பாகையை
சிரசில் சுத்திக்கொண்டு பாதக்குறட்டைக் காலில்மாட்டி
கையில் தண்டு கமண்டலமெடுத்து ஜோளியை கழுத்தி
லிட்டு ஒருசெடியினருகில்வந்துஉட்கார்ந்துநல்லபோஜ
னம் வேண்டுமென்று நினைத்தான். அப்படியே ஜோளி
போஜனமளித்தது. இராஜகுமாரன் உண்டு முன்போல
தாசிவீட்டுத் திண்ணையின்பேரில்வந்து உட்கார்ந்தான்.
வேலைக்காரிகண்டு எஜமானுக்குத் தெரிவித்தாள். தாய்க்
கிழவி வந்துபார்த்து ஓ! மகனே! நான்செய்த குற்ற
மல்ல நான் கொடுத்த அந்தமாத்திரை உன்னுடம்புக்கு
ஒத்துக்கொள்ளாமல் பிராணசங்கடத்திற்குஇடமுண்டா
யிற்று. பெண்பாலாதலாலும் அதிலும் தாசியாதலாலும்
பயந்து உன்னை விசாரிக்கவில்லை. விரோதம்வைக்காமல்
எழுந்துவந்து முன்போல இருமென்றுகூறினள். இரா
ஜகுமாரன் எழுந்து முன்போல சிலகாலமிருந்து ஒரு
நாள் அவன் புறக்கடையில் இராப்பொழுதில் தன்கை
யைவைத்து ஒரு மேடையாகவேணுமென்று நினைத்
தான். ஒருமேடையாயிற்று. அதில்போய் அம்சதூளிகா
மஞ்சம் வுண்டுபண்ணி அதின்மேல் படுத்துக்கொண்
டிருந்தான். சூரியன் உதயமானமானவுடன் தாசிகண்டு
தாயிடம்வந்து அம்மணி நமது புறக்கடையில் அகஸ்
மாத்தாய் ஒருமேடையுண்டா யிருக்கின்றது. அதில்
நுழைந்துபார்த்தால் நமது வீட்டிற்கு வந்திருக்கிறவன்
படுத்திருக்கின்றானென்றாள். கிழவி ஓடிவந்து பார்த்து
மருமகனைத் தட்டியெழுப்பி இதென்ன ஆச்சரியம் மே
டை எப்படியுண்டாயிற்றென்றாள்? இராஜகுமாரன் மே
டையுண்டாக்கினதற்கு மூலப் பொருள் இதுவென்று
பாகையையும் மற்றமூன்றுபொருளையுங்காட்டி அதுவந்
தவழியையும் அதன் மகத்துவத்தையுஞ் சொன்னான்

கிழவி சந்தோஷப்பட்டு அழைத்துஉபசரித்துவந்தாள். சிலநாள் சென்றபின்பு இந்நான்குபொருளையுங் கிரகிக்க விரும்பி இராஜகுமாரனிடத்துவந்து அப்பா மருமகனே! என்மகள் நாளுக்கு நாள் வாடிப்போகிறாள்; அதுதெய்வகுறை அத்தெய்வம் கடலுக்குப்புறத்திலிருக்கின்றது; உன் புண்ணியத்தால் அத்தெய்வத்திற்குபூசை போட்டு வரவேண்டும்; நீ மனம்வைத்தால் அது நிறைவேறுமென்று கூற, இராசகுமாரன் அதற் கிசைந்து பூசை திரவியங்களோடு வரச்சொல்லி அவர்களோடு தானும் பாதக்குறட்டில் காலைவைத்துக் கடற்கரையிற் போகவேண்டுமென்று நினைத்தான். அப்படியே யாவரும் கடற்கரைபோய்ச்சேர்ந்தார்கள். தாய்க்கிழவி இராஜகுமாரனைப் பார்த்து அப்பா மருமகனே! பொங்கலிடவேணும்; விறகு சம்பாதித்துக்கொடென்றாள். இராசகுமாரன் விறகுக்குப்போயினன். அத்தருணத்தில் கிழவி சோளி தண்டு கமண்டலம்கிரகித்துக்கொண்டு பாதக்குறட்டின்மேல் காலைவைத்துத் தானும் தன் பெண்ணும் வீடுவந்து சேர்ந்தார்கள். இராசகுமாரன் வந்துபார்த்துத் தன்னைத்தானே நிந்தித்து அந்தக்காட்டில்திரிகிறபோது அங்கொரு மாமரந் தோன்றிற்று. அதில் நாலுகிளையும் கிளைக்குப் பழங்களும் நிறைந்திருந்தது. மரத்தின் கிளையி லொருகிளையிலிருக்கிறகனியைத்தின்றுகருங்குரங்கானான். மற்றொரு கிளைக்கனியைத்தின்றான்; விருத்தாப்பிய கிழவனானான். மற்றொரு கிளைக்கனியைத் தின்றான்; முன்போல பாலகுமாரனானான். மற்றொரு கிளைக்கனியைத்தின்றான்; பருந்தானான். இந்நான்கு அதிசயத்தைப்பார்த்து மகிழ்ந்து கருங்குரங்காகிற கனிகளில் சிலது பறித்துமூட்டையாகக்கட்டிப் பருந்தாகிற கனியைத் தின்றுபருந்தாகி காலினிடமாக மூட்டையையேந்திக்கொண்டு தாசிவீட்டி லிருக்கும் தன்னா லுண்டான மேடையருகில்வந்து பாலகுமாரனாகுங் கனியைத்தின்று பால குமாரனாகி மேடையிலேறிப் படுத்திருந்தான். அன்று சாயங்காலத்தில் தாய்க்கிழவியும்தாசியும்மேடையிலுட்காரதந்தார்கள். இராசகுமாரனைக்கண்டு அச்சமுற்று இவன் மகாசூரன்; இவனை எவ்விதத்திலாவது விஷமிட்டுக் கொல்லவேண்டுமென்று கருதி, அருகில்



நெருங்கி, உபசாரஞ்செய்பவர்போல் தட்டியெழுப்பி ஓ மருமகனே! நீ எங்களைவிட்டு விறகுக்குப்போனபின்பு ஒருவேங்கைப்புலி துரத்திற்று. பயந்து நாங்கள் வந்துவிட்டோம்; கோபித்துக்கொள்ளாதே; தலையின்கீழ் மூட்டை யென்னவென்று கேட்க இராசகுமாரன் கோபிக்காதவன்போலிருந்து அதற்கென்ன அது குற்றமாமா? உங்களுக்கு நல்ல மாங்கனி கொண்டுவரப்போனேன்; போனவிடத்தில் நாழிகை சென்றது. ஆகிலும் நீங்களிருப்பிடத்துக்கு வந்து விடுவீர்களென்று நினைத்து வந்துவிட்டேன என்றுகூறி, இந்தமாம்பழந்தின்னுங்களென்று இருவருக்கும் குரங்கும் பருந்துமாகிற கனியைக் கொடுத்தான். அதனை அவர்கள் இருவருந்தின்றவுடன் பருந்துங் குரங்குமாயினர். இந்த இரண்டையும் பிடித்துக்கட்டி வீட்டில் வந்து தன்னுடைய ஜோளி பாகை தண்டு கமண்டல முதலாகியவையு மெடுத்துக்கொண்டு, மற்றதை வேதவேதியர்க்குத் தானதர்மஞ் செய்து, அந்தக் கருங்குரங்கையும் பருந்தையும் பிடித்துக்கொண்டு குரங்காட்டியாக ஊர்தோறுந் திரிந்து தமையனிருக்கும் நகரம்வந்து அந்த நகரத்தின் வளப்பத்தையும் பார்த்து அங்கு கீரைவிற்கிற கிழவியைக் கண்டு இந்நகரத்தரசன் பேரென்ன வென்று வினவ, அக்கிழவி அப்பா! இந்நகரத்தரச னிறந்துபோய்விட்டான். பட்டத்துயானை காட்டிலிருந்து ஒரு அரசனைக் கொண்டுவந்து பட்டங் கட்டுவித்ததுதான் எனக்குத் தெரியுமென்றும் பெயர்தெரியாதென்றும் சொல்லினள். இராசகுமாரன்இதுதான் நமது தமையனிருக்கிற ஊரென்று குறிப்பி லுணர்ந்து, நாம் அக்கிரமித்துப் பிச்சைகள் வாங்கினால் அதனை அரசன் கேட்டு வருவான், அதனால் அரசனைக்காணலாமென்று யோசித்துக் கடைவீதியில்வந்து கடையிலுட்கார்ந்து ஒரு பொன்கொடுத்தால் நான் போவேன் இல்லா விட்டால் போகேனென்று மொண்டித்தனங்கள்செய்தான். வர்த்தகனானவன் கண்டு சேவகருக்குத் தெரிவித்தான். சேவர்க ளானவர்கள் வந்து சொல்லியுங் குரங்காட்டியானவன் கேளாதிருப்பதை அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் அர்க்கார் வந்தழைத்தால் பிச்சையெடுப்பவனுக்குஅரசனிடத்தில்

வேலையில்லைபோவென்று கோபமாகச்சொன்னான். அர்க்கார்கள் அந்தச்சேதியை அரசனுக்குத்தெரிவித்தார்கள். நாம்போகலாமென்று மந்திரி பிரதானிகளோடு வெளிப்பட்டு கடைவீதிக்குவந்துப்பார்த்தான். குரங்காட்டி தன்னுடைய தம்பியாயிருப்பதைத் துலைவிலிருந்து பார்த்து நல்லது இந்தக் குரங்காட்டி கேட்டபடி ஒருபொன் கொடுங்களென்று உத்திரவுசெய்ய, அந்தச் சேதியைச் சேவகர்களால் வர்த்தகருக்குத்தெரிவித்தான். தம்பியும் தமையனைப்பார்த்துக் களிப்புற்றான். பின்பு அரசனரண்மனை சேர்ந்தான். வர்த்தகர்கள் ஒருபொன் விழுக்காடு கொடுத்தார்கள். குரங்காட்டி அதை வாங்கித் தானதருமஞ்செய்து ஒருசத்திரத்தில்வந்து ஸ்நானஞ்செய்து சோளியை முன்னேவைத்து நினைத்தபோது போசனமது கொடுக்கத் தான்புசித்து அச்சத்திரத்தண்டையிலே படுத்திருந்தான். அரசனானவன் தீபம்வைத்தவுடன் மந்திரியையழைத்து தன்வரலாற்றையுந் தன் தம்பிவரலாற்றையும் மாதா பிதா வரலாற்றையுஞ் சொல்லிவிட்டுத் தான் நேராகக் கண்டுகொள்ள பகற்காலத்தில் வெட்கமாயிருக்கிறது. நீ சென்று என்சகோதரனை அழைத்து வாவென்றனுப்பினன். மந்திரி சத்திரத்திற் படுத்திருக்கிறவனைக் கண்டுபிடித்து எழுப்பி அரசன் கூறியதையெல்லாஞ் சொல்ல, அவன்கேட்டு மகிழ்ந்து மந்திரியோடுசென்று அரண்மனைக்குவந்தான். அவனைப்பார்த்திருக்கிற தமையனைக்கண்டுவணங்கினன். தமையன் தம்பியைத்தழுவி யோகக்ஷேமங்களைக் கேட்டுத் தாசிசெய்த மோசமும் பின்பு சோளி பாகை தண்டுகமண்டலம்பாதக்குறடு மாங்கனி இவை வந்தவரலாற்றைக் கூறி, இருவரும் ஸ்நானம்செய்து சோளிகொடுக்கும் போசனமுண்டு சிலநாளங்கிருந்து இருவருந் தாய்தந்தையரை யழைப்பித்துவரக் கருதி நகரத்தை மந்திரி வசத்தில் ஒப்புவித்து மிதியடியிலேறித் தாய்தகப்பன்மாரிருக்கிறவிடத்துக்குவந்தார்கள். அத்தருணத்தில் மாதாபிதாக்களிருவரும் கூலிக்குக் குத்திவந்த உழக்குநொய்யை உலையிலிட்டுப் புத்திரர்களை நினைத்துப் புலம்பியிருந்தனர். அத்தருணத்தில் இவ்விருவரும் எதிர்சென்று வணங்கி உங்கள் புத்திரர் வந்தோம்; அஞ்சவேண்டாமென்று



கூறினர். மாதாபிதாக்கள் மகிழ்ந்து மக்களைத் தழுவி யானந்தமடைந்து, போனநாள்பரியந்தம் நடந்த வரலாற்றைக் கூறுங்களென்று வினவ, புத்திரர்கள் ஆதியோடந்தமாகச் சொல்ல, களிப்புற்று புத்திரர்களோடு வீரகண்டபுரம் வந்துசேர்ந்து அயல்தேசத்தார் குமாரத்திகளை அழைப்பித்து இருவருக்கும் மணம்புரிவித்தார்கள். இராசகுமாரன் சபையில் குரங்கையும் பருந்தையும் கொண்டுவந்து ஓ சபையோர்களே! இந்தப் பருந்து தாய்க்கிழவி; இந்தக் குரங்கு தாசி; இவ்விருவரும் என்னையாதரிப்பதுபோலே ஆதரித்து என்வயிற்றிலிருந்த மாங்கொட்டையைப் பேதிக்குக் கொடுத்து வெளிப்படுத்தி எடுத்துக்கொண்டதுமன்றி சோளி பாதக்குறடு பாகை முதலியவற்றையும் சூது செய்து கிரகித்துக்கொண்டு கடற்கரையில்விட்டு வந்துவிட்டனர். நான் அலைத்துதிரிந்து அங்கு இந்த மாம்பழங்களைக்கண்டு ஒன்றைத்தின்று பருந்தாகி இங்குவந்து ஒருகனியைத் தின்று முன்னுருவாகி இவர்களிருவருக்கும் இரண்டுவிதக் கனிகளைக் கொடுத்து இருவரையும் குரங்கும் பருந்துமாக்கி வைத்துக்கொண்டேனென்று சொல்லி, சபையாருக்குமுன் மாம்பழத்தைக்கொடுத்து முன்னுருவாக்கித் தாசிக்குப் பேதிக்குக்கொடுத்து மாங்கொட்டையை வெளிப்படுத்தி அக்கொட்டையை சபையாருக்குக்காண்பித்து யாவருக்கும் விடைகொடுத்து தாசிகளைத் துரத்திவிட்டான். பிதா கண்டு போரானந்தங்கொண்டு மகிழ்ந்து மந்திரியிடத்தில் ஒப்புவித்துவந்த அந்நகரத்தையே மூத்த குமாரனுக்குக் கொடுத்துத் தன்னரசை இளைய குமாரனுக்குக் கொடுத்தான். இளையகுமாரன் பிதுரார்ச்சிதமாக பிறந்த நகரம் வந்து சத்துருவைப் பறக்கவடித்து குடியேற்றி மகுடாபிஷேகனாகி ஏகச்சக்கிராதிபதியாயிருந்தான். மாதா பிதா தமையனிவர்கள் சுகத்தை யனுபவித்தார். அவ்வகைப்பட்ட புருஷனல்லவோ உன்னை மணம்புரியவேண்டும் என்று கூறினன். சூரியனுதயமானான். மந்திரி குமாரன் அந்தப்புரம் சென்றான. ராசகுமாரத்தியும் அந்தப்புரம் சேர்ந்தாள்.

ஆறாம்நாள்கதை-முற்றிற்று.

ஏழாவதுநாள் கதை

## ஆமையாயிருந்த ராஜகுமாரன்கதை

ஏழாநாளிரவில் மந்திரிகுமாரன் உண்டு தாம்பூலந் தரித்து சோமனுடுத்தி ஆபரணமணிந்து கலவைச்சாந் தணிந்து பள்ளியறைவந்து சேர்ந்தான். ராசகுமாரத்தி களில் மூத்தாள் உண்டு தாம்பூலந்தரித்து ஆடையாபர ணலங்கிர்தளாகி நிதம் வருகிறபடி பள்ளியறைசேர்ந்து சற்றுநேரம் கேளிவிலாசமாகயிருந்து, காமமீறி மந்திரி குமாரன் மஞ்சத்திலேறினாள். மந்திரிகுமாரன் கண்டு அவள் காதலைக் கதையால் தணிக்கவேண்டுமென்று கரு திச்சொல்லுகிறான்: கேளும் மாதுசிரோன்மணி! நான் ஒரு கதை சொல்லுகிறேன்; அது முடிந்தவுடன் கலந் தணைவோ மென்றனன். ராசகுமாரத்தி அக்கருத்துக் கிசைய, மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: கேளும் மாது சிரோன்மணி! அமராவதி யென்றொரு நகரமுண்டு. அதில் அமரேசன் என்னும் ராஜன் தன் மந்திரியோடு நெடுநாளாக அரசுசெய்து வந்தான். ஆனால் அவர்க ளுக்குப் புத்திரசந்தானமில்லாதிருந்நது. ஒருநாள் அர சன் மந்திரியையழைத்துக்கொண்டு மற்றொரு விடுதியி லிருந்து சற்றுநேரம் உலககாரியங்களைப் பேசி பின்பு அரசன் சொல்லுகிறான்: ஓ மந்திரி! உனக்குமெனக்கும் புத்திரசந்தானமில்லாதிருக்கிறது, சுவாமிகிருபையினா லே நம்மிருவருக்குள் யாருக்காவது பெண்ணும் பிள்ளை யும் பிறக்குமாகில் ஒருவர்க்கொருவர் சம்பந்தஞ்செய்துக் கொள்வோம். இக்கருத்து உனக்கு சம்மதியாவென்ற னன். மந்திரி அக்கருத்துக்கிசைய இருவரும் உறுதிப் பாடு செய்துக்கொண்டு முன்போல் கொலுமண்டபத் திற்குவந்து அரசுசெய்திருந்தார்கள். தெய்வானுகூலத் தால் ராசன்மனைவியும் மந்திரிமனைவியும் கருப்பவதிக ளாகி முன்னம் அரசன்மனைவி ஆமையைப்பெற்றாள். இராசன்மனைவி ஆமைபிள்ளை பெற்றாளென்றும் மந்தி ரிமனைவி சௌந்தரியமுள்ள பெண்ணைப் பெற்றாளென் றும் பிரசித்தமாக உலகமெல்லாம் வழங்கியிருந்தது. இராசன்கேட்டு நாம் என்னபாவத்தைச்செய்தோமோ? அதனாலேதான் நமக்கு ஆமையாய்ப் பிறந்ததென்று



கருதி, புத்திர சோபத்தினால் ஆசைவிடாமல் ஆமை யைப்பாதுகாத்துக்கொண்டே வந்தான். மந்திரிகுமாரத் தியை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துக்கொண்டு வந்தான். பின்னும் மந்திரிக்கு இரண்டுகன்னிகள் பிறந்தனர்கள். ஆமைக்குப் பதின் மூன்று வயதாயிற்று. மந்திரிகுமாரத்தி பதினொரு வய தில் புஷ்பவதியாகிக் கன்னிகாமாடத்தி லிருந்தாள். ராசன் பள்ளியறைசேர்ந்து தானும் மனைவியுமாக சந் தோஷவார்த்தைகளைப்பேசிப்பின்பு புத்திரனைப்பார்த்து ஓ மாதே! ஆமையில்லாமல் புத்திரனாகப்பிறப்பானாகில் மந்திரிகுமாரத்தியை இந்தப்பிள்ளைக்கு மணம்புர்விக்க லாம். ஆதியில் எனக்கும் மந்திரிக்கும் அவ்வாறு வாக் குத்தத்தம், இது ஆமையாயிருக்கின்றமையால் நான் எவ்வாறு மந்திரியிடத்திற்குப்போய் பெண்கேட்பதென் றான். இவ்வார்த்தையைக் கேட்டிருந்த ஆமையாகிய இராசகுமாரன் கேட்டு ஒருநாளும் பேசாதவன் பேசக் கருதி அருகில் வந்து ஓ மாதா பிதாவே! மந்திரிக்கும் உனக்கும் சம்பந்தஞ் செய்துக்கொள்ளுகிறதென்றுவாக் குத்தத்தம் உண்டாயிருந்தால் நீங்களேன் சந்தேகிக்கி றீர்கள்? சந்தேகமற்று எனக்கு அந்த மந்திரிகுமாரத்தி யைக் கேட்டு வாருங்களென்றது. இந்தவாக்கியத்தைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு வியப்படைந்து ஓகோ! விசித்திரமாயிருக்கிறது நல்லது அதன் கருத்தின்படி மந்திரி குமாரத்தியைக்கேட்போம்; மந்திரிஎன்னசொல் லுகிறானோ அந்தச் சேதியையறிந்துவந்து இதற்குச் சொல்வோமென்று கருதி அரசன்மந்திரியரண்மனைக்கு வந்து மந்திரியைக்கண்டுஓ மந்திரி! என் பிள்ளைக்கு உன்குமாரத்தியைக் கொடுக்க வாக்குத்தத்தஞ்செய்ததை நிறைவேற்றுமென்றுகூறினன். மந்திரிகேட்டுச் சிரித்து ராஜனே! உமக்கும் நமக்கும் வாக்குத்தத்தம் நடந்தது உண்மையே. உமக்குப் பிள்ளையாயிருந்தால் நான் கொ டுக்கிறேன். நீர் ஆமையைப் பெற்றிருக்கிறீர்; அதற்கு என் பெண்ணைக் கொடுத்தால் உலகமென்னைப் பழிக் காதா? போ போ வென்றனன். அரசன்கேட்டு மறுவுத் திரவில்லாதிருந்தார். அந்தப்புரத்தி லிருந்த மந்திரி குமாரத்தி கேட்டுவந்து என்ன சங்கதி தெரிவியுங்க



ராஜனும் மந்திரியும் புத்திரோற்பத்திக்கு யோசித்தல்.

ராஜன் தன்குமாரனாகிய ஆமையை கடலிற்போடுதல்.

தேவகன்னிப்புடவையை எடுத்துக்கொண்டு பிள்ளையார்கோயிலுட் புகுதல்.



ளென்று வினவினள். மந்திரி ஆதியில் நடந்த வாக்குத்தத்தத்தையும் தற்காலத்தில் அரசன்வந்து வாக்குத்தத்தத்தை நிறைவேற்றச்சொல்லிக் கேட்பதையும் தெரிவித்தான்.

அந்த வார்த்தையை மந்திரிகுமாரத்தி கேட்டு, ஓ பிதாவே! உமக்கு சகலமுந் தெரிந்துந் தெரியாதவர்கள் போல் வசனிக்கிறீர்கள். வாக்குத்தத்தத்தின்படி நடந்தால் உலகம் புகழுமாதலால் இந்த ராஜகுமாரனல்ல இன்னும்யார்தானாகிலும் எனக்குப்பாரிசாதமலர்கொண்டுவந்து கொடுப்பார்களாகில் அவர்களுக்குத்தான் நான் மாலையிடுவேன். அதை இந்த ராசகுமாரனாகிய ஆமை கொண்டுவருமாகில் நான் அந்த ஆமைக்கு மாலையிடுறேனென்றாள். அரசன் அந்த வசனத்தைக் கேட்டுக் கொண்டுவந்து ஆமையை யழைத்து மந்திரி குமாரத்தி சொல்லிய வசனத்தைச் சொன்னான். ஆமை கேட்டு மகிழ்ந்து நல்லது அந்தமலர் கொண்டுவந்தால் மந்திரி குமாரத்தி மணம்புரிவாளா அதை உறுதியாய் அறிந்து வாருமென்றுகூறி, தானுந் தந்தையோடு சென்றான். தந்தை மந்திரியிடத்துக்குவந்து மலர்கொண்டுவந்தால் உன்மகளை மணஞ்செய்து கொடுக்கிறாயாவென்று வினவினன்? மந்திரி தன் மகள்கருத்தை யறிந்துக்கொண்டு உறுதியாக மணஞ் செய்விக்கிறேனென்று கூறினன். ஆமையுமரசனும்அரண்மனைவந்துசேர்ந்தனர். ஆமை பிதாவை நோக்கி,ஐயா! என்னைக் கடலில்கொண்டுபோய் போட்டு விடுங்களென்றது. அவ்வாறே இராஜனும் ஆமையை யெடுத்துவந்து கடலிற்போட்டுப் போயினர். ஆமை ஏழுகடலுங் கடந்து உதயகிரி பருவதத் தருகில் வந்து சூரியன் வருகிற வழியிற் படுத்திருந்தது. சூரியனுதயமானான். அருணன் குதிரையை யெச்சரித்தான். குதிரைகள் ஆமையைக் கண்டு நாம் செல்வோமாகில் ஆமை யிறந்துபோகுமென்று கருதி, பின்னிடைந்தன. அருணன் பார்த்து ஐயோ! ஏதோ ஆமை பூமியிலிருக்கின்றது! அதைக்கண்டு குதிரை பின்னிடைகிறதுகள். குதிரைகளை பலாத்காரமாகவிட்டால் பாவம் வரும்போலிருக்கிறதென்று கூறினன். சூரியன் இரதத்தைவிட்டிறங்கி ஆமையைக்கண்டு நீ ஏன் இங்குவந்து வழிமறிக்

கிறாயென்றான். ஆமை சொல்லுகின்றது: என்னைப்பிறப்பித்த ஐயனே! அடியேனைப் பிறப்பித்து ஆமையாக வைத்திருந்தால் உமக்கு ஞாயமா! எனக்கொரு வழி சொல்லவேண்டுமென்று துதித்தது. சூரியன் மகிழ்ந்து ஓ ஆமையே! நீ மூன் சென்மத்தில் ராசகுமாரன்; ஒரு முனிவர் தவஞ்செய்கிறபோது அவர்கையில்ஆமையை வைத்தாய்; அவர்கோபித்து நீ இனிஒருசென்மத்திற்கு ஆமையாய்ப்பிறப்பாயென்று சபித்தனர். அந்தச்சாபத்தால் ஆமையாகினை. இப்பவும் என்னைத் துதித்தமையால் இந்த ஆமையுருவம் நீங்கும்படி வரங்கொடுத்தது மன்றி, என்னைவிட தேககாந்தியுள்ளவனாகவும் ரூபமுள்ளவனாகவும் வரங்கள் கொடுத்தேன் எழுந்திரென்று கூறினன். ஆமையுருவமாகிய ராசகுமாரன் பாலமன்மதனைப்போல் எழுந்து நின்று வணங்கி நிற்க, நின்றவனைப் பார்த்து நினைத்தபோது ஆமையுருவம் வரும்படி வரங்கொடுத்துப் பாரிஜாத.புட்பமலர் இந்த வனத்துக்குச் சிலதூரத்திலொரு பெரியவரிருக்கிறார்; அவரிடத்தில் செல்வாயாகில் அவர் கொடுப்பாரென்று சொல்லி விடைபெற்று ரதத்திலேறிப் போயினன். ராசகுமாரன் தன்னுடையோட்டை யங்கிருக்கும் ஆலமரப்பொந்தில் வைத்துவிட்டுச் சூரியன் சொன்னபடி காட்டிற் சிலதூரம்நடந்துஅங்கு தவஞ்செய்யும் முனிவரைக்கண்டு சூரியன் கூறியது உண்மைதானென்று அங்கு நின்றிருந்தான். அம்முனிவர் ஜாமத்துக்கொருதரம் கண்விழிப்பவராதலால் கண்மூடிக் கொண்டிருந்தார். ராசகுமாரன் கண்டு அவர் முன்னிலையில் ஒரு அகடவிகடந்தான் தனக்குத்தானே செய்துக்கொண்டிருந்தான். முனிவன் கண்ணைத் திறந்துபார்த்து ஓ! ஓ! மனிதசஞ்சாரமில்லாத வனத்தில் வந்திருக்கிறான். இவன்செய்த வேலையைப்பார்த்தால் அகடவிகடமாயிருக்கிறதென்று கருதி நீ யாரப்பா? அகடவிகடஞ் செய்துக்கொண்டிருக்கிறாயென்றார்.

பின்பு ராசகுமாரன் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து ஓ சுவாமி! அடியேன் தாங்கள் வழக்கப்படி அகடவிகடஞ் செய்துக் கொண்டிருந்தேனே யல்லது வேண்டுமென்று செய்தவனல்ல தேவரீர் கிருபை



கூர்ந்து பாரிசாதமலர் கொடுக்கவேண்டுமென்று துதித்து சூரியனால் தானடைந்த பயனையும் அங்கிருந்து வந்ததையும் உரைத்தான். அம்முனிவன் மகிழ்ந்து அப்பா! எனக்குத் தெரியாது; எனக்குமுன் மற்றொருவர் தபஞ்செய்துக் கொண்டிருக்கிறார்; அவரிடத்தில் சென்றால் அவர் கொடுப்பார் போவென்றனுப்ப;ராசகுமாரன் அம்முனிவரைப்போய்க்கண்டான். அம்முனிவர் இரண்டுஜாமத்துக் கொருதரம் கண்விழிப்பவராக விருக்க, அதுபரியந்தம் அவர்முன்பு ராசகுமாரன் தனக்குத்தானே அகடவிகடஞ்செய்து நிற்கின்ற ராசகுமாரனையருகிலழைத்து ஆரப்பாவென்று வினவினர். ராசகுமாரன் தன் வரலாற்றையும்வந்தவரலாற்றையும் கூறிபாரிஜாதமலர்கேட்டான். முனிவர் மகிழ்ந்து எனக்குமுன்பு ஒரு முனிவரிருக்கிறார். அவர் மூன்று ஜாமத்துக்கொருதரம் கண்விழிப்பார். அவரிடத்துச்சென்றால் உன் கருத்தின்படி மலர்கிடைக்குமென்றுகூறினர். ராசகுமாரன் அம்முனிவரிடத்துச் சென்று நிற்க, அம்முனிவர் மகிழ்ந்து அப்பா! என்னாலாகாது. ஆனால் அதுகிடைக்குந் தந்திரஞ் சொல்லுகிறேன்: ஓ இராசகுமாரகா! இந்தந் திசையே சென்றால் ஒருமரமும் பிள்ளையார் கோயிலும் தோன்றும். அதன்பக்கம் அரைநாழிதூரத்தில்ஒருதிருக்குளமிருக்கின்றது. அதில் தெய்வகன்னிகைகள்வந்து நீராடுவார்கள். நீ மறைந்திருந்து அவர்களில் ஒருத்தியினுடைய ஆடையை எடுத்துக்கொண்டு அவர்களென்னசொன்னாலுந் திரும்பிப் பார்க்காமல் பிள்ளையார் கோயிலுக்குட் சென்று கதவைச்சாற்றிக்கொள். அவள் வந்து வஸ்திரங்கேட்டால் பாரிசாதமலர் கொடுக்கிறதாகச் சத்தியஞ் செய்துக்கொண்டு புடைவையைக்கொடு. அதன்பின்பு உன்னைப்பார்த்து மலர்கொடுப்பாள். வாங்கிவாவென் றனுப்பினர். இந்த ராசகுமாரன் அவ்வாறு சென்று அக்குளக்கரையிற் பதுங்கியிருந்தான். தெய்வகன்னிகைகள் ஆடைகளைந்து நீரிலிருந்து விளையாடியிருந்தனர். ராசகுமாரன் மெதுவாகவந்து ஒரு புடைவையையெடுத்துக்கொண்டு பிள்ளையார் கோயிலுக்காகவோடிவந்தான். அது மூத்தகன்னிகையின் புடைவையாதலால் தங்கைகளை நிறுத்தி என்னைப்பார்! என்னழ

கைப்பார்! என்றுசொல்லி தூக்கிக்கொண்டு வந்தனள். இராசகுமாரன் காரியவாதியாதலால் திரும்பிப்பார்க்காமல் ஓடிவந்து கோயிலுக்குட் பிரவேசித்துக் கதவை மூடிக்கொண்டான். கன்னிகையோ கதவைத்தட்டித் திறக்கச் சொன்னாள். ராசகுமாரன் கதவைத்திறக்கேன்; எனக்கொரு சத்தியஞ் செய்துக் கொடுத்து யான் நாடிவந்த பாரிசாதமலரைக் கொடுக்கிறேனென்று சொன்னால் கதவைத்திறந்து வஸ்திரங் கொடுப்பேனென்றுகூற, கன்னிகை யவ்வாறு சத்தியஞ்செய்தாள். இராசகுமாரன் கதவைத்திறந்து சந்தில் புடவையைக் கொடுத்து வஸ்திரமுடுத்திக்கொண்ட பின்பு கதவைத்திறந்துவெளியே வந்தான். கன்னிகைகண்டு ஆ! ஆ! இவ்வகைப்பட்ட சௌந்தரியமுள்ள புருஷன் எந்தலோகத்திலேயும் இதுபரியந்தம் கண்டதில்லை. அணைந்தாலிவனை யணையவேணுமென்று கருதி காடாலிங்கனஞ்செய்து, ஓ ராசகுமாரகா! இங்குதானேயிரு நான் பாரிசாதமலர் கொண்டுவருகிறேனென்றுகூறி, தங்கையரிடத்துவந்து அடி தங்கைமாரே! புடவையை எடுத்துக்கொண்டு போனவனைக் கல்லாகச் சபித்துவிட்டு வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு வந்துவிட்டேனென்றுகூறி, யாவரையும் ஒன்றாகக் கூட்டிக்கொண்டு சொர்க்கலோகம்போய்ச் சேர்ந்தார்கள். மூத்தகன்னிகைபோனவுடனே தேவதச்சனை யழைத்து ஒருவீணை சிருட்டித்துத் தரச்சொல்லி தன் பாரிசாதவனத்திற்குச் சென்று ஒருகுடலைமலரெடுத்துக் கொண்டு வந்தாள். வீணையை வாங்கிக்கொண்டு அவனுக்கு வேண்டியது கொடுத்தனுப்பிவிட்டு பலவகைபதார்த்தத்தோடு அமுது பொற்றட்டிலெடுத்துக்கொண்டு வீணையும் மலர்க்குடலையும் எடுத்துக்கொண்டு ராசகுமாரனிடத்திற்கு வந்தாள். அதற்குள் பொழுதஸ்மித்துப் பத்துநாழிகை யாயிற்று. ராஜகுமாரன் பசிதாகத்தால் சோர்ந்து நித்திரை போய்விட்டான். கன்னிகைகண்டு தட்டி எழுப்பிப் பசியாற அன்னமிட்டு நிலாவில் ஒரு புஷ்பப்பந்தலில் சேர்ந்து இருவரும் மனக்களிப்புடன் கூடிக்கலந்து படுத்திருந்து சூரியனுதயமாகுமுன்பு கன்னிகை யெழுந்து இராசகுமாரனை யெழுப்பி ராசனே! நீர் ஒரு மலர்கேட்டீர். நான் குடலைபூகொடுத்தேன் எடு



த்துக்கொள். வீணையைக் கையில்வைத்துக் கொள்ளும்; உமக்குப் பசியுண்டான போதெல்லாம் வீணையை மீட்டும்; நான்வந்து பசியைத் தணிப்பதுமன்றி காமப்பசியுந் தணித்துப் போடுகிறேனென்றுகூறி, விடைபெற்றுப் போயினள். ராசகுமாரன் மகிழ்ந்து வீணையும் புஷ்பக்குடலையு மெடுத்துக்கொண்டு மூன்றுஞ்சாமங் கண்திறக்கும் முனிவரிடத்தில் வந்து அவர் கண்விழிக்காதிருப்பதைக் கண்டு அங்கு வீணையை மீட்டினான்.

வீணைநாதங்கேட்டமாத்திரத்தில் தெய்வகன்னிகை முன்போல உண்டிகொண்டுவந்து விருந்திட்டுத்தானும் இராசகுமாரனும் லீலா விநோதமாகயிருந்தார்கள். அத்தருணத்தில் முனிவன் தான் விழித்துப்பார்த்து ஓ! ஓ! இந்த ராசகுமாரன் நல்ல வல்லமைசாலி; நாம் சொல்லியபடி சென்று காரியத்தை முடித்துக் கொண்டுவந்தான். மேலும் அந்தக் கன்னிகை இன்பந்துக்குத் தலைவியான கன்னிகை வருவதற்கு மூலம் வீணையாதலால் அதனை மாத்திரம் நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதியிருந்தான். தேவகன்னிகையை அனுப்பிவிட்டு முனிவரிடத்தில்வந்து வணங்கி ஓ சுவாமி! தாங்கள் சொன்னபடி சென்று மலரைப் பெற்றுக்கொண்டு வந்தேனென்று வணங்கினன். முனிவன் மகிழ்ந்து நல்ல ஆசிகள்கூறிச்சொல்லுகிறான்: இராசனே! நான் கூறியபடிசென்று மலர் கொண்டுவந்தாய்: ஆனால் நீயிங்கிருந்து போய்போது வெருங்கையனாய்ச் சென்றாய். வரும்போது வீணையோடுவந்திருக்கிறாய். நீயோ ராசன் உனக்கு இவ்வகைப்பட்ட வீணை யநேகஞ்செய்துக்கொள்வாய். நான் காட்டினில் தவத்திலிருக்கிறேன். எனக்கு இவ்வகைப்பட்ட வீணை அகப்படாததினால் அந்த வீணையை யெனக்குக் கொடுத்தால் ஒரு சுக்குமாந்தடியிருக்கின்றது; அதனை உனக்குக்கொடுத்து அதற்கொரு மந்திரமிருக்கின்றது அதை உனக்கு உபதேசிக்கிறேன்; அந்த மந்திரத்தை யுச்சரித்து யார்பேரில் விட்டாலும் அதமாக்குவதுமன்றி பெரும்படைகளெல்லாம் நாசமாக்கும். அது உனக்ககத்தியமிருக்க வேண்டியது. நான் கொடுக்கிறேன் உன் கருத்தென்னவென்றுவினவினன். ராசகுமாரன் அக்கருத்துக்கிசைந்து வீணையைக்கொடுத்

தான். முனிவன் சுக்குமாந்தடியைக் கொடுத்து அதின் மூலமந்திரத்தை யுபதேசித்தான். ராசகுமாரன் முனிவனிடத்து விடைபெற்று ஒருநாழிகைவழி சென்றான். சுக்குமாந்தடி பூமியில் குதித்து இராஜகுமாரனை வணங்கி ஓ ஐயா! என்னை வைத்திருந்த முனிவன் எனக்கு ஆகாரங்கொடாமல் வைத்திருந்தான். தாங்கள் கொடுத்த வீணையை இன்னுமரைநாழிகைக்குள் மீட்டப்போகிறான். அதற்குள் என்னை யனுப்பினால் அந்த முனிவனைக் கொன்றுவிட்டு வீணையைக் கொண்டுவருகிறேனென்றுகூறிற்றுராஜகுமாரன்அக்கருத்துக்கிசைசமுனிவன் மந்திரோச்சாடனஞ் செய்து வீணமீட்டப் பேராசைக் கொண்டு தன் விரகமெல்லாந்துலைய நீராடவந்து குளத்திலிறங்கி முழுகிவந்தான். தடிபேரொலியுடன் வந்து முனிவன்மண்டையை யொடித்துக்கொன்றுவிட்டு ராசகுமாரனிடத்தில் வந்தது. அரசன்மகன்கண்டுவீணைக்கு வீணையும் வந்ததல்லாமல் யாவரையும் வெற்றிகொள்ளுஞ் சுக்குமாந்தடி யகப்பட்டதென்று மகிழ்ந்து இரண்டுசாமத்துக் கொருதரம் கண்விழிக்கு முனிவனிடத்துச்சென்றான். அவர் கண் திறக்காமலிருப்பதையறிந்து அங்கொருவிடத்திற் சென்றிருந்து வீணையை மீட்டினன். அந்தட்சணந் தேவகன்னிகை பல பார்த்தத்தோடு உண்டி கொண்டுவந்து இராசகுமாரனுக்குதவி இருவருங்கூடிச் சுகித்திருந்தார்கள். அந்தவேளையில் முனிவன் கண்திறந்துபார்த்து ஓ! ஓ! இந்த ராசகுமாரன் கூறியபடிச்சென்று மலரைக் கொண்டுவந்துமன்றி கன்னிகையையுங் கொண்டுவந்தானென்று மதித்துப் பார்க்காததுபோல விருந்தான். இராஜகுமாரன் கன்னிகையை அனுப்பிவிட்டு முனிவனிடத்தில் வணங்கி ஓ சுவாமி! தங்கள் கிருபையினால் மலர்கொண்டு வந்தேனென்று கூறினான். முனிவன் மகிழ்ந்து இவன்கையிலிருக்கிற வீணையை உற்றுநோக்கி இந்த வீணையை மீட்டினால் அக்கன்னிகை வருகிறதாயிருக்கிறது; இந்த வீணையை நாம்பெற்றுக்கொள்ள வேணுமென்றுகருதி வணங்கிய இராஜகுமாரனுக்குப் பலஆசிகள்கூறி, அப்பா ராசகுமாரா! என்னிடத்தில் ஒரு சோளியிருக்கிறது; அது நினைத்ததையெல்லாம் கொடுக்கும்; அதனைக்கொ



டுக்கிறேன்; எனக்கு இந்த வீணையைக் கொடுவென்று வினவினன். இராசகுமாரன் ஓ! ஓ! இந்தமுனிவனுக்குக் காலம் முடிந்ததென்று மகிழ்ந்துகொண்டு நல்லது சுவாமி! தங்கள் கருத்தின்படியே வீணையைக் கொடுக்கிறேனென்று கூறினன். முனிவன் சோளியையெடுத்துக் கொடுத்து அதின்மூலமந்திரத்தையும் உபதேசித்தான். இராசகுமாரன் சோளியைவாங்கிக்கொண்டு வீணையைக் கொடுத்துவிட்டு ஒருநாழிகை வழிதூரஞ் சென்று ஓரிடத்திலிருந்து சோளியையெடுத்து மந்திரம் உச்சரித்துப் பலவகைப் பதார்த்தத்தோடு உண்டிவேணுமென்றான். சோளி தட்சணங்கொடுத்தது. இராஜகுமாரன் பார்த்து மகிழ்ந்து போசனமுண்டு சுக்குமாந்தடியை மந்திரப்பிரயோகஞ்செய்து முனிவனைக் கொன்றுவிட்டு வீணையை வருவித்துக்கொண்டு மற்றொரு முனிவரிடத்திற் சென்றான். அந்த முனிவன் ஒருசாமத்துக்கொருதரம் கண்விழிப்பவராதலால் முனிவன் கண்திறவாமல் தவத்திலிருந்தான். இராஜகுமாரன் கண்டு அங்கொருவிடத்திலிருந்து வீணையை மீட்டினான். தேவகன்னிகை உண்டி முதலியவற்றை யெடுத்துக்கொண்டு இராஜகுமாரன் இருக்குமிடம் வந்தாள். ராஜகுமாரனும் தேவகன்னிகையும் இச்சித்து, பிறகு இருவருங்கூடி சுகித்திருந்தார்கள். முனிவன் கண்விழித்துப்பார்த்து ஓ! ஓ! இந்த ராஜகுமாரன் நாம் சொல்லியபடி சென்று மலர்கொண்டு வந்ததுமன்றி அந்தக்கன்னிகையையுங் கொண்டுவந்துவிட்டான். இக்கன்னிகைபோகத்தைவிட மேலானபோகமென்ன? இருக்கிறதென்று மதித்துப் பாராதுபோலிருந்தான். இராஜகுமாரன்கண்டு கன்னிகையை அனுப்பிவிட்டுத் தான் முனிவனிடத்துவந்து வணங்கி நின்றான். முனிவன் பார்த்து ஓ! ஓ! இந்தராஜகுமாரன் கையிலிருக்கிற வீணையின் மகத்துவந்தான் அக்கன்னிகை வருகிறது; அவ்வீணை நமக்கிருந்தால் அதிக மேலான இன்பத்தை யடையலாமென்று தனக்குள் நினைத்துக்கொண்டு வணங்கிய ராசனுக்குப் பல ஆசிகள்கூறி, அப்பா! இராசகுமாரா! இங்கிருந்து போகும்போது வீணையில்லையே, இதேது வீணையென்று வினவினன். இராசகுமாரன் கேட்டு எல்லரம் உங்கள் கிருபைதா



னென்று ஒருபோக்காகச் சொன்னான். முனிவன்கேட்டு அப்பா! ராசகுமாரா! உனக்கு இவ்வகைப்பட்ட வீணை அனேகம் சம்பாதித்துக் கிடைக்கும். என்னிடத்தில் ஒரு பாதக்குறடிருக்கிறது. அது யெவ்வகைப்பட்டவர்க்குங் கிடைப்பது அரிது. அதனை நான் கொடுக்கிறேன். அதன்மேல் பாதத்தைவைத்து எங்கு செல்லவேண்டுமோ அந்தவிடத்தை நினைத்தால் அது கொண்டுபோய் விடும் அதனைக்கொடுக்கிறேன்; அந்த வீணையைக்கொடுவென்று வினவினன். இராஜகுமாரன்கேட்டு மகிழ்ந்து இந்த முனிவனுக்கும் விதிகிழிந்ததென்று மதித்துக் கொண்டு வீணையைக் கொடுத்தான். முனிவன் பாதக்குறட்டையுங்கொடுத்து மூலமந்திரத்தையும் உபதேசித்தான். அப்போது அந்த ராசகுமாரன் அதைப் பெற்றுக்கொண்டு பத்தடிதூரஞ் சென்று சுக்குமாந்தடியை விட்டு முனிவனைக்கொன்றுவிட்டு வீணையை யெடுத்துக் கொண்டு கடற்கரையிலிருக்கிற ஆலமரத்தடியில் வந்து வீணையை மீட்டினான். தேவகன்னிகை வழக்கப்படி பல பதார்த்தத்தோடு உண்டியெடுத்துக்கொண்டு இராசகுமாரனிடத்து வந்து உண்டியுதவி இருவருங் கூடிக்கலந்து சுகித்திருந்தார்கள். இராசகுமாரன் தேவகன்னிகையைப்பார்த்து ஓ! மாதுசிரோமணி! நானொரு விண்ணப்பஞ் சொல்லிக்கொள்ளுகிறேன். சற்று கவனமாகக் கேளும்: நான் அமராபதி அரசன் குமாரன் ஆனால் நான் ஆமையாகப் பிறக்குமுன் என்பிதாவும் மந்திரியும் இருவர்க்குள் யாருக்காவது பெண்பிறந்தாலும் பிள்ளை பிறந்தாலும் ஒருவர்க்கொருவர் சம்பந்தஞ் செய்துக் கொள்ளுகிறதென்று வாக்குத்தத்தஞ்செய்துக்கொண்டனர். மந்திரிக்கு மூன்று குமாரத்திகள் பிறந்தார்கள். நான் ஆமையாகப்பிறக்கவே மந்திரி பெண் கொடுக்கிறதில்லையென்றான். மந்திரிகுமாரத்தி அவ்வார்த்தையைத் தடுத்து யார் பாரிஜாதமலர் கொண்டுவருகிறார்களோ? அவர்களுக்கு நான் மாலையிடுவேனென்று பிரதிக்கினை செய்தாள். இதற்காக நான் கடலில் வீழ்ந்து சூரியபகவானை யடுத்து அவரால் ஆமைவடிவு நீங்கி இவ்வடிவு பெற்றுக்கொண்டு நடக்கும் வழியில் இந்த முனிவர்கள் மூவரைக்கண்டு அவர்கள்சொல்லியபடி உன்னையடுத்து

வீணையும் பெற்று மூன்று முனிவரையுங் கண்டு அவர்கள் பிராணதாரமாக வைத்திருந்தசுக்குமாந்தடி சோளிபாதக்குறடு கொடுத்து வீணையைக் கிரகிக்கவெண்ணினர். நான் வீணையைக் கொடுத்துச் சுக்குமாந்தடியால் மூவரையுங் கொன்றுவிட்டு மூன்று பொருளும் எனக்குச் சொந்தமாகப் பெற்றுக்கொண்டேன். இவ்வளவும் உன்னால் அடைந்தேன். இனி நான் என் நகரத்துக்குப் போய் மந்திரிகுமாரத்தியை விவாகஞ்செய்துக்கொண்டு சிலநாளைக்குள் வருகிறேன். அதுபரியந்தம் இதனை இந்த மரத்தடியில் வைத்துப்போகிறேன். நீ இதனைப் பாதுகாத்து எனக்கு ஒப்புவிக்கவேணுமென்று கூறினன். கன்னிகை கேட்டு மகிழ்ந்து அவ்வாறு செய்யுமென்று கூறினள். இராஜகுமாரன் வீணையும் சுக்குமாந்தடி சோளி பாதக்குறடு இவற்றை மரத்தடியில் வைத்துவிட்டு ஆமை யோட்டை யெடுத்து அதிற் புகுந்துகொண்டு தேவகன்னிகையின் விடைபெற்றுப் புட்பக்குடலையெடுத்து வாயிற்கடித்துக்கொண்டு கடலில் இறங்கினன். தேவகன்னி தனது நகரமாகிய சொர்க்கலோகம்போய் இடைவிடாமல் ஆலமரத்தடியில் காவலாகக் கருத்தை செலுத்தியிருந்தாள். கடலிலிறங்கின ராஜகுமாரன நீந்திக் கடலைக்கடந்து அமராவதி நகரத்திற்கு வந்து பிதாவைக்கண்டு வணங்கிப் புட்பக்குடலை முன்னம் வைத்து ஐயா! மலர் வந்தது. இதனைக் கொண்டுபோய் கொடுத்து மந்திரி குமாரத்தியை மணஞ்செய்ய முகூர்த்தமிட்டுக்கொண்டு வாருமென்றுகூறினன். அரசன் அதிக மகிழ்வடைந்து தட்சணம் புட்பக்குடலை எடுத்துக்கொண்டு மந்திரியிடத்துவந்து புட்பக்குடலையை வைத்து மந்திரிகுமாரத்தி ஒரு மலர் கேட்டதற்கு குடலைப்புட்பம்வந்தது. இனி தடையில்லாமல் முகூர்த்தம் வையுமென்று கூறினன். மந்திரி புட்பக்குடலையை குமாரத்திக்கனுப்பிவைத்து அவள் கருத்தின்படி அரசனுக்கு முகூர்த்தம் வைத்துக்கொடுத்து மற்ற விரண்டு குமாரத்திகளுக்கும் தகுந்த ராஜகுமாரர்களை வருவித்துக்கொண்டு நகரை யலங்காரஞ்செய்யக் கட்டளையிட்டு தேசத்தரசர்களுக்கெல்லாம் மணவோலைப் போக்கி கலியாண மண்டப மியற்றுவித்தனர். இராஜகுமாரனாகிய



ஆமையையும் மற்ற இரண்டு ராஜகுமாரரையும் மணவறையிலிருத்திவேதவேதியரால்கலியாணசடங்கெல்லாம் நடத்துவித்து மூத்தகுமாரத்தியின் கணவனாகிய ஆமையிடத்தொரு மங்கிலியமும் மற்ற இரண்டு கன்னிகையின் கணவர்களாகிய ராஜகுமாரர்களிடத்தில் ஒவ்வொரு மங்கிலியமும் கொடுத்தனர். அதனை அக்கன்னிகைகளின் கழுத்தி லணிந்தனர். ஆமையாகிய இராஜகுமாரன் நாமென்ன இவருக்கு இளைத்தவனாவென்று மங்கிலியத்தைக் கழுத்திலணிந்தான். சபையார் கண்டு ஆச்சரியமடைந்தனர். மந்திரிகுமாரத்தி கண்டு இது ஆமையல்ல, இராஜகுமாரன்தான்; ஏதோ காரணத்தால் இவ்வுரு வமைந்திருக்கிறதென்று மதித்துக்கொண்டாள். பினபு வேதியர் கலியாணச்சடங்கை நிறைவேற்றினர். மந்திரி யாவருக்குந் தகுந்த மரியாதை செய்து விருந்தளித்து தான தருமஞ்செய்து யாவருக்கும் விடைகொடுத்து, மூன்று குமாரத்திகளுக்கு மூன்று பள்ளியறை யலங்காரஞ் செய்து வைத்துக் கொடுத்தனன். மூன்று குமாரத்திகளில் இளையகுமாரத்திகளிருவருந் தம் கணவர்களோடு கூடிக்கலந்திருந்தனர். மூத்தகுமாரத்தி பள்ளியறைசேர்ந்து ஆமையாதலால் காமவிகாரமிருந்தாலும் மனதி லடக்கிக்கொண்டு நித்திரை செய்கின்ற ஆமையாகிய ராஜகுமாரன் மனைவி துயிலும்போது தானெழுந்து கடற்கரைக்குப்போய்ஸ்நானஞ்செய்து ஆலமரத்தடியிலிருந்த சுக்குமாந்தடியை யெச்சரித்து ஆமையோட்டை நீக்கிபொந்திலேவைத்திருந்த வீணையையெடுத்து மீட்டினன். தேவகன்னிகைவந்து உண்டி யுதவி கூடிக் கலந்திருந்து போயினள். ராஜகுமாரனும் முன்போல ஆமையுருவெடுத்து சுக்குமாந்தடி சோளி பாதக்குறடு வீணையை வைத்து முன்போலவே மந்திரிகுமாரத்தி பள்ளியறைக்கு வந்துவிட்டனன். இப்படி யிருக்குங்காலத்தில் மந்திரியின் மருமகன்மார் ரத கஜ துரக பதாதிகளோடு வேட்டைக்குப் போயினர். அச்சேதி ஆமைக்குத்தெரிந்து மனைவியைக்கூவி நானும் வேட்டைக்குப்போகவேண்டும். நீ உன்பிதாவிடத்திற்சென்று எனக்கொரு படைக்கலம்வாங்கிவாவென, அதுகேட்ட மந்திரிகுமாரத்தி மனவருத்தமுற்று ஓ நாதா! உயிருட

ணையிருந்தாற்போதும்; நீவேட்டைக்குப்போனால்எந்த ஜெந்துக்கள் கால்பட்டாலுங் கெடுதி யுண்டாகப்போகிறது; உத்தமமாக விருக்கவில்லை யென்று கூறினள். ஆமைகேட்டு நீகேட்டுவாங்கிவாவென்றால்வரவேண்டுமேயொழிய மறுவுத்தரஞ் சொல்ல வேண்டுமாவென்று மறுக்க மந்திரி குமாரத்தி அஞ்சி தகப்பனிடத்திற்குச் சென்று ஒருகுதிரையும் சேனையுங் கேட்டாள். மனவெறுப்புடன் ஒருநொண்டி அஸ்வமும் கூறில்லாத கத்தியும் சேனையுங் கொடுத்தான். அதனைக் கொண்டுவந்து கணவனிடம் காண்பித்தாள். கணவன் ஓ பெண்ணே! என்னை அஸ்வத்தின்மேல்கட்டி யனுப்புமென்றனன். மந்திரிகுமாரத்தி அவ்வாறு அஸ்வத்தின மேலேற்றி நாரால் யிறுக்கிக்கட்டி யனுப்பினாள். ஆமை அஸ்வத்தின்மேற் சென்று சேனையோடுகலந்து சகலபாடிகளைப் பார்க்க சிலதூரஞ்சென்று ஓர்சந்தில்வந்து கடலோரத்துக்குவந்து குதிரையோடு அக்கடலை மந்திரத்தாற் கடந்து ஆலமரத்தடியில் வந்து சுக்குமாந்தடியை எச்சரித்துச் சாம்பவமூர்த்திபோல் அங்கிருந்து சகலபாடிகளிருக்குமிடத்திற்குவந்து தரிசனந் தந்தான். சகலபாடிகள்கண்டு ஓ! ஓ! இவர் சாம்பவமூர்த்தியென்று மதித்து ஓடிவந்து வணங்கி பலவாறு துதித்தார். இராஜகுமாரன் கண்டு அவர்களை யாதரித்து ஓ தம்பிமாரே! உங்களைக் காணவேணுமென்று யாம் வந்தோம். அடையாளங் கொடுக்கவேணும். அதென்னவெனில் உங்கள் சுண்டுவிரல்தான் அதனைக் கொடுங்களென்றான். ராஜகுமாரர் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு அக்கருத்துக்கிசைந்து தங்கள் சுண்டுவிரல் கொடுத்தனர். அதனை வாங்கிக்கொண்டுமுன்போல் ஆலமரத்தடியில்வந்துசுக்குமாந்தடி சோளி பாதக்குறடு வீணையைவைத்து ஆமையோட்டில்புகுந்து சுக்குமாந்தடியை வசமாக்கி குதிரையின்மேலேறிக்கொண்டு மந்திரத்தால் கடலைக் கடந்து காட்டில்வந்துமுன்னே தான்வரும்போது தன்வொளியால் கண்ணொளிமயங்கிவிழுந்த பட்சிகளையும் மிருகங்களையும் சகலபாடிகள் வாரியெடுத்துக்கொண்டு வந்தார். அவர்களோடுகலந்து நகரம் வந்துசேர்ந்தான். மனைவி பட்சிகளைக் கொண்டுபோய் பிதாவுக்குக் கொடுத்தாள்.



பிதாபார்த்து உன்கணவனுக்கே இதைக் கறிசெய்துவையென்று வெறுப்பாய் உத்தரவு கொடுத்தான். மந்திரிகுமாரத்தி அவ்வாறு பட்சிகளைக்கறிசெய்து கணவனுக்களித்துத் தானும் புசித்திருந்தாள். சிலநாள் பொறுத்துத் தன் சகலபாடிகள் முன்போல வேட்டைக்குச்சென்றனர். அக்காலத்தில் தானும் பிரயாணமாகி முன்போல தரிசனங்கொடுத்து அவர்கள் கணையாழிமோதிரங்களைப் பெற்றுக்கொண்டு வந்துவிட்டனன். சிலநாள் பொறுத்து வேற்றரசர் படையெடுத்துத் தன் பிதாவின்மேல் போர்புரியவந்தனர். பிதாபார்த்து தனக்குஆமையொன்றே யல்லது புத்திரர் இல்லாமையால் மந்திரியிடத்து வந்து அப்பா மந்திரி! எனக்குப் புத்திரனில்லை; நீயும் உன்மருமகன்மாரும் உதவிசெய்து போர்க்குச் சென்று வெற்றிபெறுமென்று கூறினன். மந்திரி அக்கருத்துக்கிசைந்து மருமகன்மாரிடத்துவந்து போர்த்தொழிற் செய்தியைத் தெரிவித்தான். மருமகன்மார் களிப்புடன் எங்களுக்குக் கடவுள் பிரசன்னமாயினர். நாங்கள் வெற்றியடைவதற்கு ஐயமில்லை. நமது சேனையைப் போர்க்களத்தில் வரும்படி திட்டஞ்செய்யுங்கள். நாங்கள் வருகிறோமென்று அந்தப்புரஞ் சென்று ஸ்நானஞ் செய்து பூஜைமுடித்துக் கடவுளைத் தியானித்து உண்டு போர்க்கோலங்கொண்டு சமர்பூமிக்கு வந்தனர். மந்திரி அதற்குள் சேனைகளைக் கொண்டுவந்து நிறுத்தி அரண்மனை சேர்ந்தான். ஆமையாகிய இராஜகுமாரன் தன்மனைவியையழைத்து என் சகலபாடிகள் போர்க்குச் சென்றார்கள். நானும் உன்பிதாவுக்கு மருமகனானே; எனக்கு ஒரு குதிரையும் படைக்கலமும் உன்பிதாவைக் கேட்டு வாங்கிவா; நானும் போர்க்குச் செல்லுகிறேனென்று சொல்ல, தன்மனைவி பிதாவுக்குத் தெரிவித்தனள். பிதாவாகிய மந்திரி நகைத்து அடா! இதென்னவனியாயம். ஆமையாயிருந்தே இது எப்படியாகப் போர்செய்யும். அது செல்லுகிறேமென்றாலும் அனுப்பக்கூடாது; அனுப்பினாலும் அதற்குக் கெடுதியே யொழிய நமக்கொரு பயனில்லையென மதித்து மகளைப் பார்த்து சில புத்திசொன்னான். மகள்கேட்டு ஐயா! எனக்குச் சொன்னாற் பயனில்லை; வரும் விதியானது வழியில் நிற்கிற

தில்லை, என்கணவன் கருத்தின்படியாக நடக்கவேண்டும்; என்னைப்பற்றி நீர் செய்யவேண்டுவதைச் செய்யவேண்டுமென்றனள்.

ஆதலால் குதிரையும்படைக்கலமுங் கொடுத்தான். அவற்றைக் கணவனிடத்து ஒப்புவித்தாள். கணவனாகிய ஆமை சொல்லுகின்றது: ஓ பெண்கள் நாயகமே! என்னைக் குதிரையிலேற்றி யிருகக்கட்டி படைக்கலங்களை பத்திரமாக முதுகில் கட்டுமென்று சொன்னது. மந்திரி குமாரத்தி யவ்வாறு செய்தனள். ஆமை சொல்லுகின்றது. ஓ பெண்ணே! நான் வருகிறபோது நீ யொரு கொப்பரை வெந்நீர் காய்ச்சி வைத்துக்கொண்டிருவென்றுகூறி விடைபெற்று சேனையிருக்கிற விடத்திற்கு வந்தது. சகலபாடிகள் கண்டு ஓ ஈதென்ன விபரீதம்! இது ஆமை பூமியிலே நடக்க வகையறியாது; இதென்னத்திற்கு வந்தது; நமக்குத் தரிசனங்கொடுத்த கடவுளிடத்து இதனது பாபவிமோசனஞ் செய்விக்காமல் அக்காலத்தில் இது ஒருவழியாய்ப் போய்விட்டது. சீசீ இதுதான் அபேட்சை கொண்டது போவென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள். இந்த ஆமை அந்த வாக்கியத்தைக்கேட்டுங் கேளாததுபோல்சேனைக்குள் நுழைந்து போக்குக்காட்டி மந்திர வுச்சாடனஞ் செய்து குதிரையோடு கடலைக்கடந்து ஆலமரத்தடியில் வந்து சுக்குமாந்தடியை யெச்சரித்து கட்டவிழ்த்துக் கொண்டு பூமியி லிறங்கி ஆமையோட்டைப் போக்கி பாதக்குறடணிந்து சுக்குமாந்தடியை அழைத்துக் கையிலேந்தி ஓ சுக்குமாந்தடியே! உனக்கு இன்றைக்குப் போதுமான இரைகொடுக்கிறேன் வாவென்றுகூறி, மந்திர உச்சாடனஞ்செய்து தன்சேனைகளிருக்கின்ற யிடத்திற்கும் பகைவர் சேனை யிருக்கிற விடத்திற்கும் மத்தியில் சாம்பவமூர்த்திபோல் வந்து நின்றான். சகலபாடி இருவருங்கண்டு ஓடோடியும் வந்து வணங்கிப் பலவாறாகப் புகழ்ந்து ஓ சுவாமி! நல்லசமயத்தில் வந்தீர்கள்; எங்களுக்கு வெற்றிகொடுக்க வேண்டுமென்று வினவ, ராசகுமாரன்கேட்டு அப்பா தம்பியரே! உங்களுக்கு வெற்றி கொடுக்கத்தான் வந்தேன்; நீங்கள் சேனையி லிருங்கள்; இதோ அரைமாத்திரையில் பகைவரை நாசமாக்குகிறே



னென்று இராசகுமாரன் சுக்குமாந்தடியைப் பார்த்து மந்திர உபதேசஞ் செய்து எதோ உன் வல்லமையை யானறியவேண்டும்; பகைவரை அதமாக்கென்று கூறிவிட்டனன். சுக்குமாந்தடி மனக்களிப்புடன் சென்று பகைவர் சேனையிற்கலந்து யானைமத்தகங்களைப் பிளந்து கால்வேறு கைவேறு தொடைவேறு குடல்வேறுபடுத்தி எமனுடைய வண்டகசாலைப்போலாக்கி அரசரையெல்லாம் கொன்றது. செத்தவர்போக நின்றவர் சரிபார்த்து ஆ! இதென்ன விபரீதம்! முடித்த கடலைக் கலக்கினது போலும் நமது சேனாசமுத்திரத்தை நாசமாக்கியது. இனி தப்பி நமது பிராணனும் போமென்றுகருதி ஓடிப்போயினர். சுக்குமாந் தடியானது திரும்பிக் கடலில் ஸ்நானஞ் செய்து ராஜகுமாரனிடத்து வணங்கி ஓ! சுவாமி! இன்றையத்தினம் என்வயிறு கிஞ்சிற்றுகுறைந்தது; இதோயிருக்கின்ற சேனையின்மேல்விட்டால் அந்தக் குறையும் நீங்குமென, இராசகுமாரன் கேட்டு நகைத்து நமதுசேனை நீ அஞ்சாதே நானிருக்கிறபரியந்தம் உனக்குக் குறைவில்லை வாவென்றழைத்துக் கையிற்பிடித்துக்கொண்டு முன்போல் கடலைக்கடந்து ஆலமரத்தடியில்வந்து ஆமையுருவாகி அரண்மனைசேர்ந்து மனைவியால் கட்டவிழ்க்கப்பட்டு பூமியிலிறங்கி சற்றுநேரமிளைப்பாய் மஞ்சத்திலிருந்தனன். மந்திரி மருமகன்மார் வேற்றரசர்படை நாசமானதைக்கண்டு மகிழ்ந்து ஜெயபேரிகைமுழங்கி நகரம்வந்து சேர்ந்தார்கள். மந்திரி மருமகன்மாரைப் பார்த்து ஓ மகாத்துமாக்களே! எவ்வாறு போர்புரிந்து அளவற்ற அரசரை வெற்றியடைந்தீர்கள்; எனக்குச் சொல்லவேண்டுமென்று வினவினன். மருமகன்மார் சொல்லுகிறார்கள்:

ஓ ஐயா! நாங்கள் முன்னம் வேட்டைக்குப் போனபோது அங்கொரு சாம்பவமூர்த்தி தரிசனமாகி எங்களுக்குப் பக்கத்துணையா யிருக்கிறாரென்றனர். மந்திரி கேட்டு மகிழ்வடைந்தான். இங்கே ஆமையா யிருந்த இராஜகுமாரன் இளைப்பாரி வந்து தன் மனைவியையழைத்து ஓ பெண்கள் நாயகமே! வெந்நீர் வைத்தாயாவென்றனன். மனைவி வெந்நீர் வைத்திருக்கிறதென்றனள். இராசகுமாரன் கேட்டு நான் குளிக்கப்போகி

றேன்; கபாடபந்தனஞ்செய்துவை; ஒருவரும் வரக்கூடாதென்று கட்டளையிட்டுத் தான்மாத்திரம் புறக்கடையிலுட்கார்ந்து ஸ்நானஞ் செய்துக்கொண்டிருந்தான். மந்திரி குமாரத்தி ஆ! ஆ! ஆமையென்ன! ஸ்நானஞ் செய்கிறதென்ன! நாம் இதனை யறியவேண்டுமென்று கதவின் சந்தில் பார்த்தாள். கோடிசூரியப் பிரகாசம்போலிருக்கும் ராஜகுமாரனைப் பார்க்கவே தன் கண்ணொளி மழுங்க பூமியில் விழுந்து மறுபடியும் எழுந்து பார்த்து உள்ளம் பூரித்து ஆமையோடு எங்கிருக்கிறதோவென்று தேடி வெளியிலிருக்குமென்று மார்பால் நகர்ந்து அந்த ஆமையோட்டை யெடுத்து நறுக்கி அடுப்பில் போட்டு நீருக்கி விட்டாள். இந்த இராசகுமாரன் ஸ்நானஞ் செய்து ஆமையோடு எங்கே என்றனன். மந்திரி குமாரத்தி சொல்லுகிறாள்: ஓ சுவாமி! "பேதமை யென்பது மாதற்கணிகலம்" ஆதலால் தாங்கள் மணஞ்செய்த பரியந்தம் யாதொரு இன்பமும் அனுபவியாதலாலும் காமங் கெட்டதாதலால் அந்த ஆமையோட்டை எடுத்துக் கொளுத்திவிட்டேனென்றாள்.

அதுகேட்டு இராசகுமாரன் போ போ பயித்தியக்காரி! இன்னுஞ் சிலநாள் போகவேண்டும்; அதற்குள் என்னை வெளிப்படுத்தினையே; நல்லது; அதனால் தோஷமில்லை யென்று கூறிப், பூசை முடித்துக்கொண்டு, தாம்பூலந் தரித்து மஞ்சத்தில் படுத்துக்கொண்டனன். மந்திரிகுமாரத்தி பரமானந்த மடைந்தவள்போல் மகிழ்ந்து பிதாவிடத்திற் சென்று வணங்கி ஐயா! என் கணவனை ஆமையென்றீர்களே! மேலுக்கு ஆமையன்றி அவரைப்போல இப்பூவுலகில் ஒரு புருஷனிருப்பானா! வந்து பாருமென்று கூறி, ஆமையோட்டை யெரித்த சங்கதி தெரிவித்தாள். மந்திரிகேட்டு இதென்ன வாச்சரியம்! போய்ப் பார்ப்போமென்று நினைத்து வந்துபார்த்தான். இராசகுமாரன் தேககாந்தி அரண்மனை யெல்லாஞ் சொலித்தது. அதனைப்பார்த்து பிரமித்து ஓடோடியும் வந்து தன்மனைவிக்கும் அரசனுக்கும் தெரிவித்தான். அரசன் கேட்டு தன் மனைவிக்கும் தெரிவித்து யாவரும்வந்து பள்ளியறையில் ராஜகுமாரனைப்பார்த்து



மகிழ்ந்தனர். இராசகுமாரன்எழுந்து ஓடோடியும்வந்து மாதா பிதாக்களை வணங்கி நின்றனன். மாதாபிதாக்களிருவரும் புத்திரனைப் பார்த்து அப்பா! நீ ஆமையாயிருந்தனையே? நீ யிந்த பெரியவுரு வடங்கி ஒடுங்கி இருந்ததென்ன வென்று வினவ, இராசகுமாரன் வணங்கி ஓ ஐயா! என்வரலாற்றைச் சொல்லுகிறேன்; தாங்கள் சகலதேசத்தரசர்களையு மழைப்பித்துஎன்னைச் சொல்லச்சொன்னால் சொல்லுகிறேனென, மந்திரியின் மருமகன்மார் கண்டு ஓ! ஓ! இவர்தானே நமக்குத் தரிசனமாகிப் படைத்துணை செய்தவரென்று கருதி, நாணமுற்று முகம்வாடி யிருந்தனர். இராஜனும் மந்திரியும் சகல அரசர்களுக்கும் ஓலையனுப்பி அரசர்களை வருவித்தனர். இராசகுமாரன் மந்திரத்தால் கடலைக் கடந்து மரத்தடிக்குவந்து வீணை சோளி பாதக்குறடு சுக்குமாந்தடி இவைகளை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குவந்து ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டு மனைவியைப் பார்த்து ஓ பெண்கள் நாயகமே! இதுபரியந்தம் உன்னை நான் கூடவில்லை ஆதலால் இனியுன் கருத்தின்படி கூடி யின்பத்தைக் கொடுக்க விருப்பமுற்று என்வரலாற்றை யாவருக்குஞ் சொல்லுகிறேன். எனக்கொரு மனைவியுண்டு, ஆனால் அவள் தேவகன்னி. என்னைமறுபடியும் விவாகஞ்செய்து வைக்கச்சொல்லிபின்பு உன்னைச்சேருவேனென்று கூறி சபாமண்டபம்வந்துஒரு திரையிடச்சொல்லி யதிலிருந்து மாதா பிதா மந்திரி குமாரத்திகளில் மூத்தாள் ஒருபக்கம் வந்தனர்கள். ராசகுமாரன் சபையாரைப்பார்த்து, ஓ சபையாரே! யான் இந்த அமராபதிக்குத் தலைவனான அரசன் குமாரன். நான் பிறக்குமுன் என்பிதாவும் மந்திரியும்சேர்ந்து நம்மிருவருக்கும் புத்திரனில்லை யாருக்கு பெண்ணாவது பிள்ளையாவது பிறந்தால் ஒருவர்க்கொருவர் சம்பந்தம் செய்கிறதென்று வாக்குத்தத்தஞ் செய்துக்கொண்டிருந்தனர்கள். நான் ஆமையாயிருக்க மந்திரி பெண் கொடுக்கிறதில்லையென மறுத்தான். மந்திரிகுமாரத்தி பாரிசாதமலர்கொண்டுவருகிறவர்க்கே மாலை யிடுகிறேனென்று சொன்னாள். அதற்குநான் அப்பாரிசாதமலர்க்குச்சென்று சூரியனைக்கண்டு இவ்வுருவு பெற்று அவரால் மூன்று முனிவரிடத்துச்

சென்று அவர்கள் சொன்ன தந்திரப்படி தேவகன்னிகையைக் கண்டு அவளால் புஷ்பமும் இந்த வீணையும் பெற்று வருகிறபோது அம்மூன்று முனிவரும் இவ்வீணையின்மேல் விருப்பமுற்று தங்களுக்கு உயிராயிருக்கிற இந்தச் சுக்குமாந்தடி சோளி பாதக்குறடு இம்மூன்றுங் கொடுத்து வாங்கிக்கொண்டனர். நான் சுக்குமாந்தடியால் அந்த மூவரையுங் கொன்றுவிட்டு வீணையையெடுத்துக்கொண்டுவந்து கடற்கரையில் ஒரு ஆலமரத்தடியிலே வைத்துவிட்டு நான் ஆமைவடிவாகி யிங்கு வந்து மலரைக் கொடுத்து மந்திரிகுமாரத்தியை மணம் புரிந்தேன். என் சகலபாடிகள் இரண்டுதரம்வேட்டைக்குச்சென்றனர். நான் சென்று யிப்பாதக்குறட்டி லேறி சாம்பவமூர்த்திபோல் வந்து அவர்கள் விரலையுங் கணையாழி யோதிரத்தையும் வாங்கிக்கொண்டபின்பு, வேற்றரசர் வந்தபோது நான்வந்து சுக்குமாந்தடியால்வேற்றரசரை வென்று வீட்டிற்கு வந்து நீராடினேன். அப்போது என் மனைவியானவள் அந்த ஆமை யோட்டைக் கொளுத்தி விட்டாளென்று ஆதியோடந்தமாகச் சொல்லி, சகலபாடிகளின் விரலையுங் கணையாழியையும் எதிரில் வைத்து சோளி சுக்குமாந்தடி பாதக்குறட்டின் மகத்துவங்களைக் காட்டி வீணையின் மகத்துவத்தைப் பாருங்களென்று கூறி வீணையை எடுத்து மீட்டினான். தேவகன்னிகை பலபதார்த்தத்தோடு உண்டி கொண்டு வந்து ராசகுமாரனுக்கு உபசாரஞ்செய்து ஆலிங்கனஞ் செய்தாள். சபையார் பார்த்து பிரமித்தனர். மந்திரிகுமாரத்தி கண்டு இக்கன்னிகையோடு புணருகின்றவர் நம்மை மதிப்பாரோ! அதினால்தான் நம்மை விரும்பவில்லை. மேலும் இவளுடைய அனுமதியினாலே நாம் விவாகஞ் செய்துக்கொண்டு இக்கணவனைச் சேர்ந்தால் நம்மைவிட பாக்கியசாலிஒருவருமில்லையென்று மகித்திருந்தனள். தேவகன்னிகை ராசகுமாரனைப் பார்த்து ஓ ராஜகுமாரகா! உன் மனைவியை நான் பார்க்கவேண்டுமென்றனள்.

இவ்வாக்கியத்தைக் கேட்ட மந்திரி திரும்பிப் பார்த்து அருகி லிருக்கிறவருக்கு உத்திரவுசெய்தான். இதற்குள் மந்திரிகுமாரத்தி ஒருத்தி யோடிவந்துமுன்பு



நின்றனள். தேவகன்னிகை கண்டு மகிழ்ந்து நானறியவின்னுமொருதரம் இந்த மாதுசிரோமணியை இந்த ராசகுமாரனுக்கு மணம்புரிவிக்க வேண்டுமென்றனள். சபையார் அக்கருத்துக்கிசைந்து தட்சணம் கலியாண மண்டப மியற்றி வேதவேதியரை யழைப்பித்து ராசகுமாரனையும் மந்திரி குமாரத்தியையும் மணவரையிலிருத்தி முகூர்த்தஞ்செய்து யாவருக்குந் தகுந்த மரியாதை செய்தனர். ராசகுமாரனும் மந்திரிகுமாரத்தியும் தேவகன்னிகை கொண்டுவந்த உண்டியை உண்டு இஷ்டலாபமாக விருந்தனர். ராசகுமாரனைப் பார்த்து ஓ நாதா! உன்கருத்திற்கு நான்மாறுபட்டவளல்ல; அடிக்கடி யென்னை விரும்பாமல்எந்தக்காலத்திலாவது ஒருதரமென்னை நினை; நான்வருகிறேன்; உன்மனைவியும் நீயும் சுகமாக வாழுங்களென்று வாழ்த்தி விடை பெற்றுப் போயினள். மந்திரியின் மருமகன்மார் வெட்கி மனோவியாதிக்குள்ளாகினர். இராசகுமாரன் அவர்களை யாதரித்து வேங்கியமில்லாமற் சினேகித்துத் தன் பிதாவின் பட்டத்தைத் தான் தரித்து அரசு செலுத்தி வந்தான். அவ்வகைப்பட்ட அரசனல்லவோ உங்களை விவாகஞ் செய்யவேண்டுமென்று கதையை முடித்தனன். சூரியனுதயமாயினான். மந்திரிகுமாரன் அரண்மனை சேர்ந்தான். ராசகுமாரத்தியும் அந்தப்புரஞ் சென்றனள்.

ஏழாவதுநாள் கதை-முற்றிற்று.

---

## எட்டாவதுநாள் கதை

## சூதன் கதை

எட்டாநாளிரவில் மந்திரிகுமாரன் உண்டு தாம்பூலந்தரித்து ஆடையாபரணாலங்கிர்தனாகிப் பரிமளமிகுந்த நறுமலர்மாலைசூடி பள்ளியறை சேர்ந்தான். ராசகுமாரத்திகளில் இளையாள் ஸ்நானஞ்செய்து உண்டு ஆடையாபரணந் தரித்து பரிமளமிகுந்த நறுமலர்மாலை சூடி வழக்கப்படி பள்ளியறை சேர்ந்து சற்றுநேரம் பாடிக் காதல்மீறி கணவனை ஆலிங்கனஞ் செய்ய மஞ்சத்தி லேறினள். மந்திரி குமாரன் கண்டு இவள் காதலைக் கதையால் தணிக்கக்கருதி சொல்லுகிறான்: ஓமாது

சிரோமணி! நானொருகதைசொல்லுகிறேன். அதனைக்கேள் அது முடிந்தவுடன் நாமிருவருங்கூடலாமென்று சொல்லுகிறான்: கேளும் பெண்ணே! காவிரி சூழ்ந்த சோழதேசத்தில் ஒரு குடித்தனக்காரனுண்டு. அவனுக்குப் பூஸ்திதியில்லை. ஆனாலவன் சூதாடுகிறதில் அதிக வல்லமையுடையவன். அந்தச் சூதினால்சீவனஞ்செய்கிறது; சூரியனுதயமானால் எழுந்து நித்திய கடனைமுடித்துக்கொண்டு புராதனம் பொசித்துசொக்கட்டானெடுத்துக்கொண்டுயாரொருவர்தனக்கெதிராகவருகிறார்களோ அவர்களைப் பலாத்காரத்தாற் பந்தயம்வைத்து ஆடச் சொல்லி தானும் பந்தயம் வைத்து ஆடி முடிவில்எந்த விதத்திலாவது பிரட்டித் தான் கெலித்து எதிரிவைத்த பந்தயத் தொகையை யெடுத்துக்கொண்டு சீவனஞ் செய்து வருகிறது. இப்படித் தினந்தோறுஞ் செய்து வருகிறதினால் அவ்வூரிலுள்ளவர்கள் இச்சூதனைக் கண்டால் பயந்து உடனே வீட்டிற்குட் புகுந்து கபாடபந்தனஞ் செய்துக்கொள்ளுகிறது. இவ்வாறு ஊரிலுள்ள பிரஜைகள் யாவரும் ஓடி யொளிவதைக்கண்ட சூதன் கனவருத்தமுற்று ஓ! ஓ! நமக்கின்றையத்தினம் ஜீவனத்துக் கென்ன செய்வது? கோயிலுக்குட் சென்றால் அர்ச்சகனிருப்பான். அவனோடாவது சூதாடுவோ மென்று கருதி பெருமாள்கோயிலுக்குட் சென்றான்.

அர்ச்சகன் கண்டு அச்சமுற்று மூலஸ்தானத்திற் சென் றொளித்தனன். சூதன் கோயிலைச் சுற்றிப்பார்த்து அர்ச்சகனைக்காணாமல் இனிநமக்கு யாருமெதிர்ப்படுவாரில்லை. கடவுள்தா னிருக்கிறார். இவரோடு சூதாடி இன்றையபொழுது போக்கவேண்டுமென்றுகருதி மூலஸ்தானத்தில்வந்து கடவுளைக் கண்டு ஓசுவாமி! என்னைப் பிறப்பித்து சூதாடுகிற தொழில் ஒன்றல்லது மற்றொரு தொழிலைக் கற்பிக்காமல் அதனால் சீவனஞ் செய்துவரக் கடாட்சித் திருக்கிறபடியால் என்னோடு சூதாடுகிறவர் ஒருவருமில்லை. எனக்கு ஜீவனத்துக்கு ஒன்றுமில்லை. இன்றையத்தினம் நாம் சூதாடுவோம். நான் தோற்றால் நானொருபொன் கொடுக்கிறேன். நீர்தோற்றால் எனக்கொருபொன் நீர்கொடும்;உம்முடைய ஆட்டமும்நானே ஆடுகிறேனென்று சொல்லி சூதுப்பலகை எதிரில்வைத்



துக் காய்களை முறையுடன் கட்டி பாச்சிகையை எடுத்து முதலில் கணபதியைத்தியானித்து உருட்டிப் பின்பு பெருமாள் ஆட்டமிதுவென்று உருட்டித் தன்னாட்டமிதுவென்று உருட்டிக் காய்களை நடத்தி தன்னாட்டத்துக்கு பாச்சிகையை யுருட்டுகிறபோது பாச்சிகையைப் பிடித்துப்போட்டான். அது பந்தயம் விபரீதமாக விழுந்தது; பந்தயம் விழவே, கடவுளாட்ட மிளைத்தது. சூதனெழுந்து ஓ சுவவாமி! உம்முடைய ஆட்டம் தோற்றுவிட்டது; பந்தயப்படி பொன்னைக் கொடு என்றனன். பெருமாள் சும்மாவிருந்தனர். சூதன் பார்த்து ஓ பெருமாளே! உன் கையில் பொன்னை வருவிக்கிறது எனக்கு அருமையோ! இதோ உன் பாதத்தடியி லிருக்கிற பெண்ணை யெடுத்துப் போகிறேன் பார் என்று கூறி, அம்மனை யெடுத்துக்கொண்டு விரைவாய் நாலடிதூரஞ் சென்றான் அர்ச்சகன் கண்டு கைகால் நடுக்கமெடுத்து பார்த்தாயா சற்றேனும் அச்சமில்லாமல் அம்மனை யெடுத்துக் கொண்டு போகிறான். நான்என்ன செய்வேனென்று சும்மாயிருந்துவிட்டான். பெருமாள் சூதன் தைரியத்தைக் கண்டு மகிழ்ந்து அடா சூதா! நாளை யுதயத்தில் பொன் கொடுக்கிறேனென்று சொன்னார். அதைச்சூதன்கேட்டு திரும்பி பெருமாளிடத்தில் வந்து சுவாமி! "அடிமேலடி யடித்தால் அம்மியு நகரும்" என்பார்கள்; அது எனக்கு நிச்சயமாயிற்று; நாளை யுதயத்திற்குப் பொன் கொடுவென்றுகூறி, அம்மனைப் பெருமாள் திருவடியில் வைத்துப்போயினான். அர்ச்சகனும் நாளை யுதயத்திற்கு வந்து பார்க்கவேணுமென்று நினைத்துக்கொண்டு போனான். மறுநாள் நடுச்சாமவேளையில் சொற்கலோகத்திலிருந்து அரம்பை ஊர்வசி திலோர்த்தமை மேனகை முதலிய ஏழுகன்னிகைகள் பெருமாள்சந்நிதியில்வந்து தினநடிப்பதுபோல் நடித்துத் தங்களிடத்தில் செல்லத் துதித்தனர். பெருமாள் ரம்பையையாத்திர மிருக்கச் சொல்லி மற்றவர்க்கு விடை கொடுத்தனர். ரம்பையிருந்தனள். மற்றவர் போயினர். சூரியனுதயமாயினான். சூதனெழுந்து நித்தியக்கடனை முடித்துக்கொண்டு ஆலயத்திற்குவந்து பெருமாளை வணங்கி ஓ சுவாமி! எதோ பொன்னென்றான்? பெருமாள் ரம்பையை யழைத்து

ஓ பெண்ணே! பொன்னுக்குப்பதிலாக இச்சூதன் சொற்
கடவாமல் நடந்து அவனுக்குப் பாரியாயிருவென்று
கட்டளையிட்டனர். ரம்பை அக்கருத்துக்கிசைந்து சூத
னிடத்துவந்து வணங்கி, ஓ நாதா! உன்னைச் சேவித்
துக்கொண்டிருக்க ஆண்டவன் கட்டளையிட் டனுப்பி
னர், வாருமையாவென்றனள். சூதன் மகிழ்ந்து அவளை
யழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குவந்து பெண்ணே!
இதுதான் என்வீடு என்று குடிசையைக் காண்பித்தான்.
ரம்பைபார்த்து இதில் நாமிருக்கிறதுஅழகல்லவென்று
அம்மனையின் பக்கத்தில் கையால் கோடுகிழித்து திவ்ய
மான மாளிகை உண்டாகவேணுமென்று நினைத்தாள்.
தட்சணம் மாடமாளிகை யுண்டாயிற்று. அதிலிருவரும்
பிரவேசித்தனர். சூதன் மனைவியைக்காட்டி இவள்தான்
என் மனைவியென்று ரம்பைக்கு சொன்னன். ரம்பை
அவளைவணங்கித் தழுவி சரீரத்தைப் பொன்னிறம்போ
லாக்கி தேவபூஷண மழைப்பித்து அவளுக் கணிந்து
அடி அக்கா! நீ மூத்தாள்; நான் இளையாள்; நாம் இந்த
மகாபுருஷனுக்கு மனைவியானேம். நாமிருவரும் மன
மொத்து அவருக்குப் பணிவிடை செய்துவருவோம்;
நீ என்ன கட்டளையிடுகிறையோ அவ்வாறு நான் உனக்
குக் கீழ்ப்படிந்து நடக்கிறே னென்றாள். மூத்தாள்
பார்த்து அடி தங்காய்! உன்னால் சகலபாக்கியமும் பெற்
றேன். உனக்கு எதாவது ஒருவேலை யிடுகிறதுமில்லை,
நீ ஒருவேலையும் செய்யவேண்டாம் என்றுகூறி, இருவ
ரும் மனமொத்து சூதனுக்குப் பணிவிடைசெய்துசுகித்
திருந்தார்கள். ஒருவாரமாயிற்று. ரம்பை சொர்க்கலோ
கம்போய் இந்திரன் சபையி லாடவேண்டிய முறையாத
லால் சூதனைவணங்கி ஓநாதா! எட்டுநாளைக் கொருதரம்
இந்திரனுடைய சபையில் நடனஞ் செய்கிறது; அந்த
முறை இன்றையத்தினமாதலால் நான் சொர்க்கலோகம்
போய் நடனஞ் செய்துவிட்டு வருகிறே னென்றாள்.
சூதன் அதுகேட்டு அடிபெண்ணே! பெருமாள் கொ
டுத்த பெண் நீ உன்னை நான் சொர்க்கலோகத்திற்கு
அனுப்பிவைக்கிறது எனக்குச் சம்மதியில்லை, போகக்
கூடாதென்று மறுத்தான். ரம்பை வணங்கி ஓ சுவாமி!
நான் அங்கு இருக்கமாட்டேன்; வந்துவிடுவேன் விடை



கொடுமென்றனள். சூதன்சொல்லுகிறான்: நானும் உன்
னேடுகூட வருகிறேன்; அப்படி சம்மதமானல் போக
லாமென,ரம்பை அக்கருத்துக்கிசைந்து ஒருமாலையாகச்
சபித்து கழுத்தி லணிந்து சொர்க்கலோகம் போய்ச்
சூதனை முன்னுருவாக்கி ஒரு மரத்தடியில் இருக்கச்
செய்து தான் அரண்மனை சென்று ஆடையாபரணலங்
கிர்தளாகி இந்திரனுடைய சபைக்குவந்து நடித்தனள்.
ரம்பை ஒருநாளும் ஆடாத ஆட்டம் ஆடினள். தேவர்
கள் மகிழ்ந்தனர். ரம்பை மிகவும் சலித்தமையால் களை
த்து விழுந்துவிட்டாள். தேவர்கள் கண்டு ஓடிவந்
தெடுத்து களைதீர உபசாரஞ் செய்தனர். சூதன் ரம்பை
நடித்ததையுந் தேவர்களுபசாரத்தையுங் கண்டு மிகவும்
மகிழ்ச்சிகொண்டிருந்தான். ரம்பை களைதீர்ந்து இந்திர
னிடத்திற் சென்று விடை பெற்றுக்கொண்டு சூதனை
யழைத்துமாலையாக்கிக்கழுத்திலணிந்து பூலோகத்திற்கு
வந்து சூதனை முன்போலாக்கினள். சூதன் ரம்பையைப்
பார்த்து ஓ பெண்ணே! நீ முன்னம் வீட்டிற்குச்செல்லு
நானிவ் வாற்றில் நித்தியக் கடனை முடித்துக்கொண்டு
வருகிறேனென்றான். ரம்பை சூதனைவிட்டுப்போயினள்.
சூதனவன் அங்கு தோன்றிய ஆற்றில் ஸ்நானஞ்
செய்து நித்தியக் கடனை முடித்துக்கொண்டு அங்கு
ஸ்நானஞ் செய்கிறவர்களைப் பார்த்தான். அவர்களெல்
லாம் சொர்க்கலோகத்து தேவராகவுந்தன்மனைவியாகிய
ரம்பைக்குக் களைதீர உபசரித்தவர்களாகவு மிருக்கக்
கண்டு எனக்கு மரியாதையேன் செய்யவில்லை; நான்
அந்த ரம்பைக்கு கணவனல்லவா; இவர்கள் நம்மைப்
பார்க்கவில்லை யார்க்குந் தெரியாது தேவர்கள் நம்மைப்
பார்த்து மரியாதை செய்வார்களென்று கருதி ஆற்றங்
கரையில் சற்றுநேரம் உலாத்திக்கொண்டிருந்தனன்.

அவ்வாறு சூதன்உலாவிக்கொண்டிருந்தும் தேவர்
கள் இவனைக் கவனிக்கவில்லை. அதை சூதன்கண்டுஇந்
தத் தேவர்கள் இன்றிரவில் நமது மனைவிக்குப் பணி
விடைசெய்தனர்; நம்மை யெண்ணாம லிருமாப்புற்றி
ருக்கிறார்கள்; இத் தேவர்க்கு இவ்வளவு மமதையா
வென்று அங்கு முளைத்திருக்கிற ஆற்றலரிக்கொடியைப்
பிடுங்கிக்கொண்டு, ஓ தேவர்களே! நான் ரம்பையினு

டைய கணவனென்று தெரியாமற் போச்சுதல்லவா? இன்றிரவில் அந்த ரம்பைக்குக் களை தீர உபசரித்தீர்களே? அந்த ரம்பையின் கணவன் நான்வந்தால் எனக்கொரு மரியாதையுஞ் செய்யாமலிருக்கிற மதமென்னவென்று மாறுமாறென்றடித்தான். தேவர்கள் கண்டு இதென்ன வனியாயம்; ரம்பைக்குக் கணவனிருக்கின்றானே? நல்லது எல்லாம் நமது அரசனிடத்துச் சொல்லி ரம்பையை விசாரிப்போமென்று கருதி, அவனுக்குப் பயந்து சொர்க்கலோகம்போய்ச் சேர்ந்து, இந்திரனைக் கண்டு வணங்கி, ஓ! ஓ! மகாராசனே! இரவில் நடித்த ரம்பை சபையிலே களைத்துப்போனதற்காக நாமெல்லாரும் அவளுக்குஉபசாரஞ்செய்து களையைமாற்றினோம்; சூரியனுதயமாகிறதற்குமுன் பூலோகத்தில் புண்ணிய தீர்த்தத்தில் நாங்களெல்லாம் ஸ்நானஞ் செய்திருக்கும்போது யாரோ ஒருமூடன்வந்து ரம்பையினுடையகணவன் என்னைக்கண்டுஏன் மரியாதைசெய்யவில்லையென்று கோபங்கொண்டு ஆற்றலரிக்கொடியால் அடித்துத்துரத்தினான்; நாங்கள் ஓடி வந்துவிட்டோமென்றனர். இந்திரன்கேட்டு ஆச்சரியமடைந்து நல்லது அந்தரம்பையை விசாரிப்போமென்றனன். இங்கே சூதனானவன் தேவரை யடித்து துரத்திவிட்டு வீட்டுக்கு வந்தான். ரம்பையும் மனைவியும் யெதிரில்வந்து பாதந் தழுவி மலரா லர்ச்சித்து வணங்கி எழுந்தனர்கள். சூதன் ரம்பையைப் பார்த்து சிரித்தனன். ரம்பைகண்டு ஓ சுவாமி! ஒருநாளுஞ் சிரித்ததில்லை; இன்றையத்தினம் என்னைக் கண்டு நகைக்கவேண்டிய காரணமென்ன? என்றுவினவினள். மறுபடியும் சூதன் சிரித்தான். ரம்பைகண்டு அந்த ஆச்சரியத்தைச் சொல்லாமலிருக்கிறது தருமமல்ல; அவசியஞ் சொல்லவேண்டுமென்று வினவினள். சூதன் சொல்லுகிறான்: அடி பெண்ணே! நீ இரவில் நடித்தபோது களைத்துப் போயினையே; அப்போது தேவர்கள்கூடி உனக்கு உபசரித்தார்கள்; அத்தேவர்கள் பூலோகத்திலிருக்கிற ஆற்றில்வந்து ஸ்நானஞ்செய்தார்கள்; என்னைக்கண்டு மரியாதை செய்யாதிருக்கவே கோபங்கொண்டு அவர்களை யடித்து துரத்திவிட்டேன். அதுதான் சிரிக்கிறேனென்றனன். ரம்பை



கேட்டு திடுக்கிட்டு ஆ! மோசம்வந்தது. தேவர்களை நீர் தீண்டலாமா? அத்தேவர்கள் இந்திரனிடத்திற்சென்று என்ன ஆக்கினை செய்வாரோ? எனக்கு விடைகொடுமென்று வினவினள். சூதனும் பயந்துஓ பெண்கள் நாயகமே! நீசென்று இனியவசனஞ்சொல்லி எனக்கு ஒரு குற்றம் வராமல் காப்பாற்றிக்கொண்டு வாவென்றனுப்பினான். அரம்பை சொர்க்கலோகஞ்சென்று இந்திரனைக் கண்டுவணங்கினாள். இந்திரன்கண்டு கடுஞ்சின மடைந்து ஓ ரம்பா! என்னகாரியஞ் செய்தனை? பூலோகத்தானைக் கூடினதுமன்றி அவனைவிட்டு தேவர்களை அடித்தனையா? பிடிசாப மென்றனன். தேவர்கள் யாவருமெழுந்து இந்திரனை வணங்கி ஓ மகாராசனே! இவளால் வந்ததல்ல; அவன் மகாதுஷ்டன்; அவனால் நடந்ததற்கு இவள்மேல் கோபிக்காமல் இவளுக்கு மேலான சாபங்கொடுமென்று வேண்டினர். இந்திரன் கேட்டுமனமிரங்கி ஓரம்பா! உனக்காக தேவர்களெல்லாம் வேண்டிக்கொண்டமையால் காசியிலிருக்கும் பதினொருநிலை கோபுரமிடித்து குறுந்தூளாக்கி காற்றிற் பறந்து மேகமண்டலஞ் சேர்த்துவிட்டுமறுபடியும்முன் போலவே கோபுரமுண்டாகிற பரியந்தம் நீ அலகையாயிருக்கக் கடவதென்று சபித்தான். ரம்பையானவள் அச்சாபத்தை வாங்கிக்கொண்டு வணங்கி சுவாமி! அடியாளுக்கு ஒருவரங் கொடுக்கவேணும், அதென்னவெனில் அச்சேதி சூதனுக்குத் தெரிவிக்கிற பரியந்தம் அந்த அலகைரூபம் வாராதிருக்கும்படி கட்டளையிட்டருளுமென்று விடை பெற்று, ரம்பை பூலோகத்துக்கு வந்து கணவனாகிய சூதனை யழைத்து உன்னால் எனக்கு அலகை உரு வந்தது; நான் அலகையாகி காசிராஜன் குமாரத்தியைப் பிடித்துக்கொள்ளுகிறேன்; அனேகர் என்னைத்துரத்த வருவார்கள்; நானவர்களை துரத்திக்கொண்டு வருகிறேன்! நீவந்தால் அடங்கி ஒடுங்கியிருக்கிறேன்; அதை அரசனுக்குத் தெரிவிப்பார்கள். அதனால் நீ கோபுரத்தை யிடிக்கும்படி செய்து பிறகு கட்டிவிடும்படி ஏற்பாடுசெய். எனக்குச்சாப விமோசனமாகும். பின் நான் உன்னிடம்வந்து சேருகிறேனென்று சொல்லிவிட்டு, அலகையாகிக் காசிராஜன்குமாரத்தியை போய்ப்

பிடித்துக்கொண்டாள். அதனால் இராஜகுமாரத்தி தன் ஆடைகளைக் கிழித்தெறிந்துகொண்டு சுயபுத்தியில்லாமல் இருந்தாள். இதனை அரசன் கேட்டு யார் ஒருத்தர் எனது குமாரத்தியின்பேரிலிருக்கும்பேயை ஓட்டுவாரோ அவருக்கு என் குமாரத்தியை விவாகம் செய்துகொடுக்கிறேன் என்று பறைசாற்றி வைத்திருந்தான். சிலநாள் சென்றபின்பு சூதன் காசிதேசத்திற்குப் போய் அங்கு ஒரு ஔவையார் வீட்டிற்குச் சென்று ஔவையாரைப் பார்த்து, பாட்டி ! இவ்வூரில் என்ன அதிசயமென்று கேட்டான். அப்பா! இவ்வூர் ராசகுமாரத்திக்குப் பேய் பிடித் திருக்கிறது; அதனை யார் நீக்குகிறார்களோ! அவர்களுக்கு அந்தப்பெண்ணை விவாகஞ்செய்து கொடுக்கிறதுமன்றிப் பாதி பூமிகொடுக்கிறதாக அரசன் படமெழுதி கட்டியிருக்கிறான் அதனைக்கேட்ட மந்திரவாதிகள் வந்து அவமானப்பட்டுப் போயினர்; அதுதான் அதிசயமென்றனள். சூதன்கேட்டு ஓ அம்மணி ! நான் சிறுவனாக யிருக்கும்போது தேசசஞ்சாரஞ் செய்து மலையாள முதலியவை சுற்றி நல்ல மந்திரங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறேன் என்னை ராஜபேட்டிசெய் விப்பாரில்லை என்றனன். ஔவை சொல்லுகிறாள்: அப்பா இந்நகரத்தரசன் மந்திரவாதியென்று யார்சொல்லுகிறார்களோ அவர்களையழைத்துவரக் கட்டளையிட்டிருக்கிறான்; அப்படியழைத்துப்போகாமற்போனால்அவர்களை ஆக்கினைசெய்து விடுகிறது. ஆகையால் நான் என்பேரப்பிள்ளையென்று முறைகொண்டு ராஜபேட்டி செய்விக்கிறேன் வாருமென்று சொன்னாள். உடனே அக்கருத்துக்கிசைந்ததும் ஔவை விரைவில் சமையல்செய்து சூதனுக்கு உண்டியளித்து தானும் புசித்து சூதனையழைத்துக்கொண்டு ராசசமுகத்திற்சென்று வந்திருப்பதைத் தெரிவித்தாள். ராசாவரும்படி உத்திரவு கொடுத்தான்; ஔவை சூதனை ராஜசமுகத்திற் கொண்டுபோய் விட்டாள்; ராசன் சூதனைப்பார்த்து நீயார் ? எந்ததேசம் ? என் குமாரத்தியின் விகாரத்தை நீக்குவையாவென்றுவினவ, சூதன்சொல்லுகிறான்: ஓராசனே! நான் சிறுவயதாயிருக்கிறபோது எந்தவூரிலிருந்தேனோ தெரியவராது தேசசஞ்சாரியாகவே யிருந்தேன்;உன்குமாரத்



தியின் விகாரத்தை அடக்கவகையெனக்குத் தெரியும்; உத்திரவுகொடுத்தால் நான் வேலையிற் பிரவேசிக்கிறேனென்றான். அரசன்பார்த்து மந்திரியையெச்சரித்து ஓ மந்திரி ! இவனைப்பார்த்தால் ஒரு காட்டாளைப்போலவிருக்கிறான் இவனால் நமது குமாரத்தி விகாரம் நீங்குமாவென்றான் மந்திரி சொல்லுகிறான்: மகாராஜனே ! எந்தப் புற்றில் எந்தபாம்பு இருக்கின்றதோ தெரியவராது; ஏழையாக யிருக்கிறவர்களிடத்தில்தான் கிருபையிருக்கும் டம்பாசாரித்தனம் இருக்கிறவர்களிடத்து ஒன்றுமிருக்காது; இவனை நம்பலாம் இவனிடத்தில் உடன்படிக்கை பெற்றுக்கொண்டு நமது குமாரத்தியின் விகாரத்தைத் தீர்க்க உத்தரவளிக்கலாமென்று சொல்ல, அரசன் தன்மந்திரி கருத்துக்கிசைந்து சூதனைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ மந்திரவாதியே ! நீ என் குமாரத்தியின் விகாரத்தை நீக்குவையாகில் அக்கன்னிகையை உனக்கு மணம்புரிவித்து என்பூமியில் பாதிகொடுக்கிறேன்; நீ அவ்விகாரத்தை நீக்காவிட்டால் உன் தலையை வெட்டிவிடுவேன்; இக்கருத்துக்குச் சம்மதமானால் உடன்படிக்கை யெழுதிக்கொடு; நானுமெழுதிக் கொடுக்கிறேன் என்றான். சூதன் கருத்தின்படி உடன்படிக்கைகொடுத்தான். சூதன் அரசனைப்பார்த்து விளக்கு வைத்துப் பார்க்கவேணும். ஆகையால் அதற்குத் தாம்பூலம் தூபதீப நைவேத்தியத்திற்குப் பண்டுபலாதிகள் வரவேண்டுமென்றான். அரசனுத்திரவு செய்தான். இராஜகாரியஸ்தர் கொண்டுவந்து கொடுத்தனர். சூதன் ஒருவிடுதி விடச்சொல்லி அதில் திருவிளக்கிட்டு அரசன் மந்திரி பின்னுமங்கு வந்திருக்கிற மந்திரவாதிகளையும் அழைப்பித்து வைத்துக்கொண்டு அவரிடத்தில் வணக்கமாக வசனித்துஉத்திரவுகொடுத்தால்பூசைசெய்கிறேனென்றான். அரசன் முதலானவர்களும் விடைகொடுத்தனர். சூதன் திருவிளக்குப் பூசையை ஒருவாறாக யியற்றி திருமுகத்தில் திருநீறிட்டுசற்றுநேரம் அரியரி ! பரமேஸ்வரி ! அதாசூரி ! வீரபத்திரி ! அகோரருத்ரி ! சூலி ! கபாலி!சுடர்மழுதாரி ! துந்துபி ! முகாரி ! தூமகேதாயி ! தூர்த்தனந்த ருத்ரி ! காளி ! மாகாளி ! என்று உச்சரித்து அப்படி நில்லடா ! குட்டிச்சாத்தான்

ரத்தங்கக்கும் ரத்தகாட்டேரி! சத்தி சாமுண்டி! சந்திப் பிசாசே! மலையாளபகவதி! வைராட்சசியே! எல்லையில் நின்றிடுமென்று குறித்துத் திக்குபந்தனஞ் செய்துதிரு விளக்கை நோக்கி, ஓ அம்மணி! ஓய்ந்தபரமனை தூக்கி வந்தவிசையா லீதபோதயந்திரி! எனையாதரி! எனையாதரி விடைகொடுமென்றுகூறினன். ரம்பைதிருவிளக்கில்வந்திரங்கிசுடர்வளைத்துக்கொடுத்தவளவில்மந்திரவாதிகள் கண்டு ஆ! ஆ! இந்தமந்திரவாதி பலவான்; இராசகுமாரத்தி விரகந்தீரு மென்றார்கள். இராஜனும் மந்திரியும் சிரக்கம்பஞ் செய்தனர். உடனேசூதனெழுந்திருந்து விபூதியைக் கையி லேந்தி யாவரையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் இராசகுமாரத்தி யிருக்கிற இடத்துக்குப் போவோமென்றனன்.

பிறகு சிலர் அச்சமுற்றனர்; அரசனும் மந்திரியும் அச்சமுற்றவராயிருந்தாலும் சூதனிருக்கிறான் நமக்குப் பயமில்லையென்று பின் சென்றனர். மந்திரவாதியாகிய சூதன் மலையடிவாரத்திற்சென்று ஒருஅட்டகாசஞ்செய்தான். இராசகுமாரத்தி ஒரு பெரிய பாறையெடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு வந்து யிறங்கினள். மந்திரவாதி அரசன் மந்திரி இவர்கள் கண்டு நடுக்கமுற்றுப் பின்னின்றனர். மந்திரவாதியாகிய சூதன் அட்டகாசத்துடன் முன்சென்றான். இராசகுமாரத்தியின்மேலிருந்த ரம்பை கிஞ்சிற்று அச்சமுற் றடங்கினள். இராசகுமாரத்திபார்த்து ஓடி ஒருகுகையிற் புகுந்தனள். அரசன் முதலானவர்கள் கண்டு சபாஷ்! மந்திரவாதியென்றார்கள் இவன்தான் மந்திரவாதியென்று மதித்தார்கள். சூதன் குகையடிவாரத்திற்சென்று இனியென்னசெய்கிறதென்று வினவினன். இரம்பை இராசகுமாரத்திமேலிருந்து ஓ பிராணநாதா! இந்நகரத்து பதினொருநிலை கோபுரத்தை யிடித்துக் கருந்தூளாக்கிவிட்டுமறுபடியும் பதினொருகோபுரங் கட்டிவைத்து இவ்விடம் வந்தால் என் சாபவிமோசனமாகும்; நீயிந்தப் பெண்ணை விவாகஞ்செய்துக்கொண்டு வீடுவந்துசேர்; நான் நமது வீட்டிற்போய்ச் சேருகிறேனென்றனள். சூதன் அதனைக் கேட்டுக்கொண்டு மண்டபத்துக்கு வந்துவிட்டான். அரசன் சூதனாகிய மந்திரவாதிக்கு பலவுபசாரஞ் செய்து



புகழ்ந்தான். சூதன் சொல்லுகிறான்: ஓ மகாராசனே! என்கோரிக்கை ஒன்றிருக்கின்றது, அதுமிகலேசானது, அதை நிறைவேற்றினால் என்மேல்வைத்த விசுவாசம் உண்மையென்று நம்புவேனென்றான். அதென்னவென்று அரசன்வினவ, சூதன்சொல்லுகிறான்: கேளும் மகாராசனே! பதினொரு கோபுரத்துக்குத்தக்க கல்லுஞ் சுண்ணமுங் கொல்லத்துக்காரரும் கல்தச்சரும் வரவேண்டும்; இப்போதிருக்கிற காசிவிஸ்வநாதர் கோயில் கோபுரத்தைக் கட்டவேணுமென்றான். அரசன் அக்கருத்துக்கிசைந்து தன்பூமியெவ்வளவோ அவ்வளவிலுமிருக்கிறவேவுகாரர் ஆண்பிள்ளைகள் சகலரையும்அழைப்பித்து குறுந்தூளாக்கி காற்றில் தூற்றிவிடச் செய்து, ஒருமாதத்தில் பதினொருநிலை கோபுரங் கட்டுவித்தான். சூதன்கண்டு மகிழ்ந்து அரசனையும் அவ்வூரிலுள்ள குடிகளையும் அழைப்பித்து யாவரும்வாருங்கள் இன்றையத்தினம் ராசகுமாரத்தியை யழைத்து வருகிறேன் வாருங்களென்று கூறி, யாவரையும் அழைத்துக்கொண்டு இராசகுமாரத்திக்கு வஸ்திராபரணமும் முத்துச்சிவிகையையும் எடுத்துவரச்சொல்லித் தான் மலையடிவாரத்திற்சென்று, இராஜகுமாரத்தியைக் கண்டு வாவென்றழைத்து, வஸ்திரத்தைக் கொடுத்தான். இராசகுமாரத்தியின்மே லிருக்த அரம்பையாகிய அலகை அவளை நீங்கிச் சூதன் வீட்டிற்சேர்ந்தனள். இராசகுமாரத்தி நாணமுற்று நாமிருந்ததென்ன, இப்போது கட்ட வஸ்திரமில்லாமல் இப்படியிருக்கிறது என்னவென்று ஐயுற்று, சூதன்கொடுத்த வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு வெளியில் வந்தாள். சூதன்கண்டு அவளை யழைத்து வந்து ஒரு குளத்திலே நீராடச்செய்து வஸ்திராபரணங்களைத் தரித்துக்கொள்ளச்சொல்லி சிவிகையி லேற்றிக்கொண்டு வந்தான். அரசன் முதலான யாவரும் மகிழ்ந்து அரண்மனைக்கு அழைத்துப்போய் சூதனுக்கு விருந்திட்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் தன்குமாரத்தியைச் சூதனுக்கு விவாகஞ்செய்து பூமியிற்பாதியும் தத்தஞ்செய்தான். சூதன் அதனைப்பெற்று அங்கு சிலநாளிருந்து அரசனிடத்தில் விடைபெற்று இராச்குமாரத்தியோடு தன் வீடு சேர்ந்தான். அரம்பை சூதன் வரவறிந்து எதிர்

சென்று வணங்கி, கணவனையும் இராசகுமாரத்தியையும் அழைப்பித்துப் போயினள். சூதன் மூன்று மனைவியோடு சுகித்திருந்தான். ஒருநாள் அரம்பை சூதனை வணங்கி சாபவிமோசனமானது இந்திரனுக்குத் தெரியாது; நான் இந்திரன் சபைக்குப்போய் வருகிறேனென்றாள். சூதன் விடைகொடுத்து அனுப்பினான்.

பிறகு அரம்பை இந்திரன் சபைக்குவந்து இந்திரனை வணங்கினாள். இந்திரன் மகிழ்வடைந்து உன் சாபவிமோசனமானதற்குக் காரணமென்னவென்றான்? அரம்பை வணங்கி ஓ சுவாமி! எனக்கு கணவனாயிருக்கிற சூதன் கோபுரத்தை யிடித்துக் குறுந்தூளாக்கி மறுபடியுங் கோபுரங்கட்டினன். என் சாபம் நீங்கியது என, இந்திரன்கேட்டு சிலதூதரைவிட அவர்கள் உண்மையென இந்திரன்வியப்படைந்து அரம்பைக்குவிடை கொடுத்து விட்டான். அரம்பை சூதன் வீடுவந்து சேர்ந்து நடந்த சங்கதியைச் சூதனுக்குத் தெரிவித்துத் தானும் சக்களத்தி யிருவருஞ் சுகமாய்க் கூடிச் சுகித்திருந்தார்கள்.

இந்திரன் சூதனென்பவன் அதிக வல்லமையுடையவனாயிருக்கிறான்; அவனை நான் பார்க்கவேணுமென்று கருதிக்கொண்டு யமனை யழைத்து சூதனைக் கொண்டு வரக் கட்டளையிட்டான். பதிவிரதாதர்மம் அத்தூதரைச் சேரவொட்டாமற் செய்தது. அதனைச் சூதன் கண்டு பார்க்காததுபோல் மூன்றுசாமமட்டு மிருந்து பின்பு தூதர்களைப் பார்த்து நீங்களேன் வந்தீர்களென்று வினவினன்? தூதர் சொல்லுகிறார்: ஓ சூதா! உன்னை அழைத்துவரச்சொல்லி எங்களெசமானாகிய யமன் உத்திரவுசெய்தாரென்றார். சூதன்கேட்டுச் சிரித்து ஓ தூதர்களே? பழைய யமனா? அல்லது புதிய யமனா? அதனைத் தெரிந்து வாருங்களென்றான். தூதர் திரும்பி யமபுரத்திற்குவந்து யமனைக்கண்டு ஓய் சுவாமி! சூதனை யழைத்தால் பழைய யமனா உங்களை யனுப்பிவைத்தவன் அதனைத் தெரிந்துக்கொண்டு வாருங்களென்று கூறினன். தாங்கள் பழையயமனா? புதிய யமனா? என்று வினவியபோது சந்தேகமுண்டாகித் தன்பரிசனத்தோடு இந்திரனிடத்திற் சென்று தூதர்சொன்ன வார்த்தையைச்



சொல்லி நான் பழையயமனா? புதியயமனா? என்று வினவினன். இந்திரனுக்குச் சந்தேகமுண்டாகி எனக்கு தெரியாது; பிரமனைக் கேட்போம் வாருமென்று தன்பரிசனத்தோடு யமனை யழைத்துக்கொண்டு பிரமனிடத்திற் சென்று வணங்கி, இச்சேதியைச் சொல்லினர். பிரமனுக்கு சந்தேகமுண்டாகித் தன் பிதாவாகிய திருமாலிடத்து இவர்களை யழைத்துக்கொண்டு பிதாவைக்கண்டு வணங்கி சேதியைத் தெரிவித்தனர். திருமாலுக்குச் சந்தேகமுண்டாகி பரமசிவனிடத்திற் சென்று வணங்கி தங்கள் சந்தேகத்தைத் தெரிவித்தனர்.

அப்போது பரமசிவன் மகிழ்ந்து அவ்வகைப்பட்டவனை இங்கு வருவிக்கவேணுமென்று நினைத்து யமனை யழைத்துவாவென்று கட்டளையிட்டனர். யமன் தன்னாயுதத்தோடு கடாவிலேறி சூதன் வீட்டிற்குவந்தான்; சூதன் தன் மனைவிகளை யழைத்து நானிறந்தவன் போலிருப்பேன். நீங்கள் வருடம் பன்னிரண்டானாலும் என்னைத் தகனஞ்செய்யாமல் உடலுக்கு வாசனை கூட்டி ஒரு பேழையி லடக்கஞ்செய்து வையுங்கள். நான்கூப்பிடுவேன், அப்போது பேழையைத் திறவுங்களென்று கூறி யமனிடத்திற்கு வருவதுபோல் வந்தான். யமன் வாசலிலிருக்கும் பசுவின் கொம்பிலேறி பசுவை மிரட்டச்செய்தான். பசு சூதனைக் கொம்பால் குத்திற்று. சூதன் பூமியில்விழுந்தான். யமன்சூதனைப் பிடித்துவர, மனைவிகள் அவனைபேழையிலடக்கஞ்செய்தனர். அங்கே யமன் சூதனைத் திரிமூர்த்திகளிடத்திற் கொண்டுபோய் விடுத்தான். பரமசிவன் சித்திரா புத்திரனை நோக்கி இவன் பாபியா? புண்ணியவானா? என்று வினவினர். சித்திராபுத்திரன் சொல்லுகிறான்: ஓ சுவாமி! இவன் சுத்த பாவியென்றான். சூதன்கேட்டு கடுஞ்சினமடைந்து கைகொண்டமட்டும் ஒரு அறை சித்திராபுத்திரனை யறைந்தான். சித்திராபுத்திரன் தத்திக்கெட்டுத்தடுமாறி திப்பிரமையாகி சற்று மசைவில்லாமல் சித்திரப்பதுமை போலிருந்தான். மூவரும் பார்த்து அடா சூதா! நீயேன் சித்திராபுத்திரனை யடித்தாயென்றார்கள். சூதன் வணங்கிச் சொல்லுகிறான்: ஓசுவாமிகளே! உலகிலுள்ள ஞானிகள் திரிமூர்த்திகளி லொருவரை தரிசிப்பது அருமை.

பிரமா விஷ்ணு ருத்திரன் இந்த முப்பத்து முக்கோடி
தேவர் முதலானவரை யான் தரிசித்திருக்க மகாபாவி
யென்று இந்தத் திவ்விய சபையில் சொல்லியபடியால்
தான் அடித்தேனென்றான். மூவருங் கேட்டு மகிழ்ந்து
இவனுக்கு மூன்றேமுக்கால் நாழிகைபரியந்தம் பட்டங்
கொடுத்து யமபுரத்துக்கு அனுப்பினார்கள்.

சித்திராபுத்திரன்முதலான பரியசனத்தோடுசூதன்
யமபுரம் வந்து கணக்குப்பதியும் சித்திராபுத்திரனை
யழைத்து எனக்கு வயது சொல்லென்றான். ஐயா! உன
க்கு வயது இன்றையத் தினத்தோடு முடிவென்று சித்
திராபுத்திரன் சொல்ல, சூதன்சொல்லுகிறான்: சித்திரா
புத்திரா! எனக்கு இன்றுமுதல் நூறுவய திருக்கிறதெ
ன்று எழுதிவை என்றான். சூதன் பட்டத்து ஐயராவத
யானையை யழைத்து ஓ யானையே! என்னுடைய கிணைப்படி நீ
நடக்கவேண்டிய தாகையால் இந்தக்ஷணம் இந்நகர
த்து யமனைக் கொன்றுபோட்டு வாவென்றான். யானை
யமனைக் கண்டுபிடித்து கிழிக்கத்தலைப்பட்டது. யமன்
யானைக்குத் தப்பித்துக்கொண்டு இந்திரனிடத்திற்சென்
றான். இந்திரன் பிரமனிடத்திற் சென்றான். பிரமன்
திருமாலிடத்திற் சென்றான். திருமால் பிரமன் முதலா
னவரை யழைத்துக்கொண்டு பரமசிவனிடஞ் சென்றார்
கள். அதைக்கேட்டு யமனைத் தன்பக்கம் வைத்துக்கொ
ண்டிருந்தார். யானைவிடாமல் பின்றொடர்ந்து பரமசிவ
னிடத்திற் சென்றது. பரமசிவன் யானையைத் தணிவு
படுத்தி யாவரையும் அழைத்துக்கொண்டுயமபுரத்துக்கு
வந்தார். சூதன் அதையுணர்ந்து தனக்கு இன்னும்
அரை நாழிகை யிருக்கிறது; இனி நாம் இங்கிருந்தால்
கெடுதிவருமென்று நினைத்து கோபித்துக்கொண்டு வரு
கிறவர்போலே சாம்பமூர்த்தியை எதிர்சென்று வரு
வதுபோலும் எதிரில் வந்தான். சிவன்பார்த்து ஏன்
சூதா! அரசிருக்காமல் வந்துவிட்டாய் என்றுகேட்டார்.

சூதன் சொல்லுகிறான்: ஓசுவாமி! தேவர்களென்று
பெயர்மாத்திரமேயன்றி நீதியென்பது இல்லவேயில்லை.
அது எவ்வாறு விளங்குகிற தென்றால் யான் யமனைக்
கொல்ல யானையை அனுப்பிவைத்தால் யானை அப்படிச்
செய்யவில்லை; இனியார் எனக்குக் கீழ்ப்பட்டு நடப்பார்



கள்? எனக்கு உத்தரவுகொடுத்தால் நான் என்னிருப்பிட
த்திற்குப் போகிறேனென்றான். திரிமூர்த்திகளும் மகிழ்
ந்து சித்திராபுத்திரனைப்பார்த்து இந்தச்சூதனுக்கு வய
தென்ன யிருக்கிறதென் றுவினவ,சித்திராபுத்திரன் சொ
ல்லுகிறான்: நூறுவய திருக்கிறதென்றுகூற, திரிமூர்த்திக
ளுஞ் சூதனையழைத்து உன்னிருப்பிடத்திற்குப்போனால்
உன்னுடலழிந்துபோ யிருக்குமே என்ன செய்கிறதெ
ன்று கூற, சூதன் சொல்லுகிறான்: நானென்ன பயித்தி
யக்காரனா? என்னுடலைப் பேழையிற் பதனப்படுத்தி வை
த்தனன்; என்னை கொண்டுபோய் விட்டுவரக் கட்டளை
யிடுங்களென்றான். திரிமூர்த்திகள் மகிழ்ந்து ஓ சூதா!
இதுமுதல் உனக்கு 'யமபுரட்டன்'என்றுபெயர். இந்தப்
பெயருடன்உலகத்தில்வாழ்ந்து நமது பதவிசேரென்று
விடைகொடுத்துத் தூதுவரால் பூலோகத்தில் அனுப்பி
னார். சூதன் பூலோகம் வந்து பேழையிலிருக்கும் உட
லிற்புகுந்து மனைவிகளைக் கூவினன். மனைவிகள் பேழை
யைத் திறந்து உண்டு தாம்பூலந் தரித்துத் தான்போய்
வந்த சேதியை மூவர்க்குந் தெரிவித்து மூன்று மனைவிக
ளோடு சுகித்திருந்தான். இவ்வளவு வல்லமையுடைய
புருஷனல்லவோ உன்னை மணம்புரிய வேண்டுமென்று
கூறிக் கதையை முடித்தனன். சூர்யனுதயமாயினன்.
மந்திரிகுமாரன அரண்மனை சேர்ந்தான். இராஜகுமா
த்தி அந்தப்புரஞ் சென்றனள்.

எட்டாநாள்கதை-முற்றிற்று.

---

ஒன்பதாவதுநாள் கதை

குத்துவிளக்கென்ற ராஜகுமாரத்தி கதை

---

ஒன்பதாம்நாள் இரவில் மந்திரிகுமாரன் உண்டு
தாம்பூலந்தரித்து ஆடையாபரணாலங்கிர்தனாகிப் பரிமள
மிகுந்த நறுமலர் மாலைசூடிப் பள்ளியறை சேர்ந்தான்.
இராஜகுமாரத்திகளில் மூத்தாள் ஸ்நானஞ் செய்து
உண்டு கலவைச் சாந்தணிந்து ஆடையாபரணாலங்கிர்த
ளாகிப் பரிமளமிகுந்த நறுமலர் மாலைசூடி வழக்கப்படி
வருகிறதுபோல் பள்ளியறைக்கு வந்து சற்றுநேரம்

வீணையிற்பாடி காதல்மீறி கணவனை யணைய மஞ்சத்தி
லேறினள். மந்திரிகுமாரன் இராஜகுமாரத்தியின் காத
லைக் கதையால் தணிக்கக்கருதி சொல்லுகிறான்: ஓபெண
ணரசே! நானொரு சிறியகதை சொல்லுகிறேன் அக்கதை
முடிந்தவுடன் உன் கருத்தின்படி காமலீலை செய்யலா
மென்றனன். ராஜகுமாரத்தி அக்கருத்துக்கிசைய மந்திரி
குமாரன் சொல்லுகிறான்: கேளும் மாதரசே! செண்பகா
புரமென்றொரு நகரமுண்டு. அந்நகரத்தரசன் மந்திரி
பிரதானி தண்டத்தலைவர் யூகத்தலைவர் படைத்தலைவர்
அணித்தலைவரோடு மனுசாஸ்திர நீதி தவறாமல் செங்
கோல்செலுத்தி ஆறிலொருகடமை வாங்கிக்கொண்டு
குடிகளுக்கு யாதொரு குறைவுவராமல் பாதுகாத்து வந்
தான். நெடுநாள் சென்றபின்பு அவ்வரசனுக்கு இரண்டு
பெண்பிறந்தன. அவ்விரண்டு குமாரத்திக்கும் நாமகரண
மிட பலசோதிடரை யழைப்பித்து நல்ல சுபமுகூர்த்தத்
தில் மூத்தாளுக்கு தூங்காவிளக்கென்றும் இளையாளுக்கு
குத்துவிளக்கென்றும் பெயரிட்டு நாளொருமேனியும்
பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து மூத்தகுமாரத்
தியை மறுமண்டலத்தரசன் குமாரனுக்கு மணம்புரிவி
த்து வீட்டில்தானே வைத்துக்கொண்டான். இளையாளை
மற்றொரு மண்டலத்து அரசகுமாரன் மணந்து சில
நாள் அங்கிருந்து தேசாந்தரம் போய்விட்டான். இளை
யாளுக்கு ஐந்துவயது, மூத்தாளுக்கு ஏழுவயது, இந்த
இரண்டு பெண்களும் இணைபிரியாமல் மனமொத்துக்
கூடிக்குலாவி மலர்பறித்து நீராடிவிளையாடிவருவார்கள்.
இளையாளும் மூத்தாளுக்கு மனம்நோகாமல் ஏவற்பணி
விடைசெய்து மற்றவேளை சமமாக விளையாடிவருவாள்.
இவளும் புஷ்பவதியாயினள். அரசன் அதற்குத்தகுந்த
சடங்குகளை நிறைவேற்றி, இளைய மருமகன் வரவு எதிர்
பார்த்துக் கொண்டிருந்தான். இப்படி யிருக்கிறநாளில்
காற்று விசேஷமாக இளையமருமகன் இறந்து விட்டதா
கக் கேள்விப்பட்டு மனவருத்தமுற்று தீரவிசாரிக்க வே
ண்டுமென்று, அதற்குத் தகுந்த முயற்சியிலிருந்தான்.
மூத்தாளுக்கு இந்தச் சேதிதெரிந்து மனதுக்குள்ளே
வருத்தப்பட்டு வெளிப்படுத்தினால் தங்கைக்கு மன
வருத்தமுண்டாகுமென்று எண்ணி, நாள்தோறும் விளை



யாடிவருவதுபோல் விளையாடிவந்தார்கள். இப்படி சில
காலஞ்சென்றபின்பு ஒருநாள் இளையாள் ஸ்நானஞ்செ
ய்து நல்ல வஸ்திராபரணங்களை யணிந்து கலவைச்சா
ந்து பூசி பரிமளமிகுந்த நறுமலர்மாலை தரித்து காலில்
பாதசரம் ஒலிக்க அன்னம்போல கலீலென நடந்து வந்
தாள். மூத்தாள் கண்டு சிரித்தாள். இளையாள் தமக்கை
யருகில்வந்து அக்காள் இதுபரியந்தம் என்னைப்பார்த்து
நகைத்ததில்லை; இன்று நகைக்கவேண்டியதென்ன உண்
மையைச் சொல்ல வேண்டுமென்று வினவ; மூத்தாள்
நான் சும்மா சிரித்தேனே யல்லாமல் வேங்கியமாக சிரி
த்தவளல்லவென்று தங்கைக்குப் பலவிதத்திலுஞ் சொ
ல்லினாள். இளையாள் கேளாமல் ஏதோ ஒரு வேங்கியம்
உன் கருத்திலில்லாமல் உனக்குச் சிரிப்புவராது உண்
மையை வெளிப்படுத்தென்று வினவ; மூத்தாள் துணி
ந்து சொல்லுகிறாள்: ஓ அம்மணி! என்னிருகண்ணே!
நான், சொல்லுவதைக் கவனமாய்க் கேள்; உனக்கு
விவாகமாகிறபோது உனக்கு ஐந்துவயது; உன் கண
வன் சிலநாளிருந்து தேசாந்திரியாகி எங்கேயோ போய்
விட்டான். நமது பிதா உன் கணவன் வரவை எதிர்
பார்த்திருந்தான். காற்று விசேஷமாக உன்கணவன் இற
ந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு மனவருத்தமடைந்து
உண்மையானசேதி தெரிந்துக்கொள்ளும் முயற்சியிலிரு
க்கிறது எனக்குத் தெரிந்திருந்தமையால் நீ அலங்கார
மாக ஆடையாபரணந் தரித்துக்கொண்டு வரவே விதி
யிப்படி யிருக்கிறதென்று சிரித்தேனென்றாள். இளையாள்
இந்தச் சேதியைக் கேட்டமாத்திரத்தில் தான் அணிந்
துக்கொண்ட ஆடையாபரணங்களை யெல்லாங் களைந்
தெறிந்துவிட்டு வெள்ளை வஸ்திரம் உடுத்திக்கொண்டு
ஓ ஐயா; என்னைப்பெற்று அருமையாக வளர்த்து விவா
கஞ் செய்தீர்! என் துர்ப்பாக்கியத்தினால் என் கணவன்
இறந்துவிட்டான்; இனி கணவனில்லாமல் நான் இரு
க்கிறதில் என்னபலன்? இக்ஷணந் தீவளர்த்தும் அக்கி
னிப் பிரவேசமாகிறேனென்றாள். இராசா கேட்டு மன
வருத்தமுற்று ஓ அம்மணி! புருடன் தான் இறந்து
விட்டால் பிதாவாகிய நானிருக்கிறேன்; என்னுடைய
ஆஸ்தியெல்லாம் உன்னதுதான்; நீ உந்தன் கருத்துக்

கிசைந்தபடி தானதருமஞ்செய்துமறுமைலாபஞ் சம்பா
தித்துக்கொள். அக்கினிப் பிரவேசமாக வேண்டிய
தில்லையென்றுபலவாறு சொல்லியுங்கேளாமற்போகவே
அரசன் மந்திரிகளை யழைத்துக் குமாரத்தியின் கருத்
தைத் தெரிவித்து அக்கினி வளர்த்தும்படி ஆக்யாபித்
தான். மந்திரிகள் அரைமாத்திரையில் அக்கினி வளர்த்
துவித்தார். அரசன் இராசாக்களுக்குத் தெரிவித்து அர
சர்கள் வந்தவுடனே தன் இளையகுமாரத்தியை யழை
த்து ஓ அம்மணி! உன் கருத்தின்படி நீவளர்த்தியாயி
ற்று என்றனன்.

பிறகு இளையாள் கேட்டெழுந்து நேமநிஷ்டை
களை முடித்துக்கொண்டு அநேகதிரவியங்கொண்டு வரச்
சொல்லி வேதவேதியர் யாசகர் முதலானவர்க்குத்தான
தருமஞ்செய்து தீக்குழி சந்தனக்கட்டைகளால் நிறை
யப்பட்டு நெய்யதிகமாக இருக்கின்றமையால் தீ ஆகாய
மட்டு மளாவியிருக்கின்றது, இளையாள் அக்கினி வலம்
வந்து மூன்றுஞ்சுற்றுக்கு அரிகரி! கோவிந்தா! மாதவா!
என்று ஓங்கி குதித்தாள். அகஸ்மாத்தாய் மேகந்தோ
ன்றி யானைத் துதிக்கை யவ்வளவு நீர்த்துளியுண்டாகி
மழையைச் சொரிந்து தீயையவித்து ராசகுமாரத்தியை
அடித்துக்கொண்டு நெடுந்தூரம் கொண்டுபோயிற்று.
இராசகுமாரத்தி தட்டுகெட்டுத் தடுமாறி அவ்வாற்றில்
ஒருபக்கந் தோன்றியிருக்கின்ற நாணற்புல்லைப் பிடித்து
மெல்லென கறையேறினாள். அந்தயிடம் நந்தவனமாக
யிருக்கக்கண்டு அங்கு ஒருயிடத்தி லிருந்தாள். நந்தவன
த்தில் ஔவையார் மலர்கொய்து வீட்டுக்குப் போகிற
போது இராசகுமாரத்தியைக் கண்டு பிரமித்து ஓ! ஓ!
இந்த மாதுசிரோன்மணி வனதேவதையோ! என்று
ஐயுற்று, அருகில் நெருங்கி விசாரித்தாள். இராசகுமா
ரத்தி சொல்லுகிறாள்: ஓ அம்மணி! நானும் என் கண
வனுமாக ஆற்றிலிறங்கினோம் மேல்வெள்ளம்வந்தடித்
துக்கொண்டு போயின; என்கணவன் எவ்வாறாயினரோ
நான் இங்கு வந்து கறையேறி விட்டேன் என்றனள்.
ஔவைக்கேட்டு,ஓ அம்மணி! வீட்டிலிருந்தால் பெண்ணைப்
போல் பாதுகாப்பேனென்றாள். இராசகுமாரத்தி அக்
கருத்துக்கிசைய ஔவையார் ராசகுமாரத்தியை வீட்டு



க்கு அழைத்துப்போய் ஸ்நானஞ்செய்வித்து நல்லவஸ்
திரங் கொடுத்து உடுத்திக்கொள்ளச்சொல்லி உண்டி
யுதவி பாதுகாத்து வந்தாள். இந்த ஔவையார் தினந்
தோறும் நந்தவனத்துக்கு வந்து மலரெடுத்து மாலை
கட்டி அந்தநகரத்தின் இராசன் மனைவிக்குக் கொடுத்து
வருகிறது. அதனால் வந்த பொன்னை ஜீவனத்துக்கு
வைத்துக்கொள்ளுகிறது. இப்படி ஆறுமாதமானபின்பு
ஒருநாள் ஔவையார் நந்தவனத்துக்குவந்துமலரெடுத்
துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள். இராஜகுமாரத்தி ஔ
வையாரைப் பார்த்து ஓ அம்மணி! எனக்குஇன்றையத்
தினம் அதிக பசியாயிருக்கிறது; நீ சமையல் செய்ய
வேண்டுமென்றாள். ஔவை சொல்லுகிறாள்: அம்மணி!
பூவாடிப்போம்; பூதொடுத்துவிட்டு சுகமாய்ச் செய்கிறே
னென்றுகூற, இராசகுமாரத்தி அப்பூவை நான் தொ
டுக்கிறேன் நீ சமையல்செய்யென்றனள். ஔவை அக்
கருத்துக்கிசைந்து சமையல் செய்யச்சென்றனள். இரா
சகுமாரத்தி மலரை யாய்ந்து தினுசுவாரியாகப் பொ
றுக்கி வேறுவேறாக வைத்து விந்தை விந்தைகளாக
மாலைகள் கட்டிவைத்தாள். ஔவையார் சமையல்
செய்து இராசகுமாரத்திக்குத் தெரிவித்தாள். இராச
குமாரத்தி மாலைகள் நலங்காமல் புஷ்பக்குடலையில்
கட்டி வைத்திருக்கின்றது எடுத்துக்கொள்ளென்றனள்.
ஔவையார் உண்டு தாம்பூலந்தரித்துக்கொண்டு புஷ்பக்
குடலையெடுத்து மாலைகட்டியிருக்கிற அழகைப்பார்த்து
மகிழ்ந்து மாலையை அரசன் மனைவிகையில் கொண்டு
போய்க் கொடுத்தனள். அரசன்மனைவி பார்த்து மாலை
கட்டியிருக்கிற அழகைநோக்கி, அடிப்பாட்டி! நீ கட்டின
மாலையல்லவே, இதுயார் தொடுத்ததென்று வினவி
னள்? ஔவையார் சொல்லுகிறாள்: ஓ அம்மணி! என்
குமாரகத்திட்டினாளென்றாள். ஆனால் அவளையழைத்து
வாவென்று அரசன்மனைவி கூறினாள். ஔவை வீட்
டுக்குவந்து ராசகுமாரத்தியை யழைத்துப்போய் அர
சன் மனைவியிடத்தில் விட்டனள். அரசன்மனைவி பார்
த்து மகிழ்ந்து ஓ மாதுசிரோன்மணி! நீ என் அரமனை
மனையிலேயிரு, என் குமாரத்திகளிருக்கிறார்கள் அவர்க
ளோடு நீயுமொருத்தியாயிருந்து அவர்களுக்குப் புத்தி

சொல்லிக்கொண்டிருவென்றாள். இராசகுமாரத்தி அக்கருத்துக்கிசைந்தாள். அரசன்மனைவி ஔவையாருக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தனுப்பிவிட்டு ராசகுமாரத்திகளைப்போல பாதுகாத்து வந்தாள். இப்படிசில நாள் சென்றபின்பு இராசனும் இராசன்மனைவியும் ஒரு சிங்காதனத்திலிருந்து தானதருமஞ் செய்கிற நாள் வந்தது. அரசன்மனைவி சில முத்துச்சிப்பங்களை யெடுத்து தன்னிடத்தி லிருக்கிற வேலைக்காரர்களிடத்து இவ்வளவென்றளந்து கொடுத்து முத்தை வாங்கிக்கொண்டு கோத்திருந்தனர். இந்த ராசகுமாரக்தி அரசன் மனைவியிடத்துச்சென்று நானும் முத்துகோர்த்துத் தருகிறேனென்று கேட்டாள். ஒருபடிமுத்துகொடுக்க யெடுத்துக்கொண்டு ஓரிடத்தில் வந்து உட்கார்ந்து கோர்த்துக்கொண்டிருந்தாள்,

அதற்குள் தாதிகள் உண்ணக்கூப்பிட்டார்கள். முத்தையுங் கோர்த்த சரத்தையும் பிள்ளையார் மாடத்தில் வைத்துவிட்டு இராசகுயாரத்தி போய் உண்டுவந்து பார்த்தாள். அப்பிள்ளையார் மாடத்தின் மேலெழுதிவைத்திருக்கிற பதுமை அம்முத்தையும் முத்துசரத்தையும் எடுத்து விழுங்கிவிட்டு முன்போலிருந்தது. இது ராசகுமாரத்திக்குத்தெரியாது. முத்தைக்காணமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். இதற்குள் முத்துகோர்க்க எடுத்துப்போனவரெல்லாம் முத்துமாலைகொண்டுவந்து கொடுத்தனர். இராஜன் மனைவி முத்துசரங் கொடுக்கவேண்டியவர்களெல்லாங் கொடுத்து விட்டார்களா? வென்று விசாரித்துக்கொண்டிருக்கும்போது, நீங்கள் எங்களை உண்ணவழைத்தீர்கள்; நான் முத்துசரத்தையும் முத்தையும் பிள்ளையார்மாடத்தில் வைத்துவிட்டு உண்டானபின்பு வந்துபார்த்தேன், அதனைக் காணேனென்றனள். அரசன்மனைவி கடுஞ்சினமடைந்து என்வீட்டு சோறுதின்று எனக்கு இரண்டகம் நினைத்தாயாவென்று தாவிதனை யழைத்து தலையைச் சிரைத்து நடைவிளக்கேற்றிவைத்துயாவருக்கும்வெளிச்சமுண்டாக உலாவிக்கொண்டிருவென்று ஆக்யாபித்தாள். இராசகுமாரத்தி இதுவுந் தலைவிதியென்று நினைத்துக்கொண்டு அரசன் மனைவி கட்டளைப்படி குத்துவிளக்கென்று பெயர்தரித்த



இராசகுமாரத்தி நடைவிளக்காயிருந்தாள். இப்படி ஒரு வருஷகாலஞ் சென்றபின்பு இராசகுமாரத்தியின கணவன் தேசாந்திரம்போய்ச் சிலகாலமிருந்து வேற்றரசரை வெற்றிகொண்டு ஏகசக்ரேஸ்வரனாகி நமது மாமனாரும் மனைவியும் எவ்வாறிருக்கிறாரோ அதனை யறியவேண்டுமென்று நால்வகைச்சேனையோடுவெளிப்பட்டு வருகிறபோது மாமியாருக்குமூத்தவளிருக்கிற நகரமாதலால் இந்நகரத்துக்கு வந்தான்.

அந்நகரத்தரசன் எதிர்சென்று அழைத்துவந்து சேனைகளை விடுதிகளி லிருக்கச்செய்து மருமகனை அரண்மனைக்கு அழைத்து வந்தான். மாமிகண்டு மகிழ்ச்சிகொண்டு உபசாரஞ்செய்து விருந்திட்டு மருமகனைப் பள்ளியறைக்கு அனுப்பி இந்த ராசகுமாரத்தியைக் கண்டு அடி! நடைவிளக்கி! இன்றிராமுழுதும் என்மருமகன் பள்ளியறையி லிருமென்று கட்டளையிட்டுப்போயினள். இராசகுமாரத்தி அரசன்மனைவி கட்டளைப்படி விளக்கைத் தலையில் வைத்துக்கொண்டு பள்ளியறையில் ஒரு மூலையிலிருந்தாள். ராசகுமாரன் நடைவிளக்கெடுத்துவரும் பெண்ணைக்கண்டு உற்றுநோக்கி, இப்பெண் ராஜவம்சம்போ லிருக்கிறது; இக்கன்னிகையினுடைய பூர்வோத்திரத்தை யறியவேண்டுமென்று கருதி சொல்லுகிறான்: ஓ பெண்ணே! நீ யார்? உன் பிதாயார்? எந்த தேசம்? இங்கிருக்கிறவளா? வந்துசேர்ந்தவளா? உனக்கு இந்தக் கொடியதண்டனை வத்தகாரணமென்ன? விபரமாய்த் தெரியச்சொல்லுமென்று வினவ, குத்துவிளக்காகிய ராசகுமாரத்தி வாயைத்திறவாமல் மௌனமாகவிருந்தாள். ராசகுமாரன் எழுந்து தலையி லிருக்கும் விளக்கை யெடுத்துக் கீழேவைத்து மஞ்சத்திலிருந்து உன்வரலாற்றைச் சொல்லுமென்று வினவ; இரர்சகுமாரத்தி தலையைக் கவிழ்ந்து நாணமுற்றிருந்தாள். மறுபடியும் இராசகுமாரன் இனியவசனமாக உன் வரலாற்றைச் சொல்லுமென்றுவினவ, இராசகுமாரத்தி நாணத்தோடே சொல்லுகிறாள்: ஓ ஐயா! நான்பெண்பால்; அதிலும் முறிச்சிறுக்கிகளிலுந் தாழ்ந்தவள்; என்னைநோக்கிப் பலதரம் உன்வரலாற்றைச் சொல்லென்று மகாராசாக்கள் வினவுவது மரியாதையல்ல; அப்படித் தாங்கள்

கேட்டும் நான் சொல்லாமலிருப்பது தகுதியல்ல; தங்க
ளுக்கு மனவருத்தமுண்டாகும். ஆதலால் ஏதோ என்
வரலாற்றை ஒரு போக்காகச் சொல்லுகிறேன் கேளும்:
செண்பகாபுரமென்னும் நகரத்து அரசனுக்கு தூங்கா
விளக்கென்றும் குத்துவிளக்கென்றும் இரண்டு குமாரத்
திகளுண்டு. பிதா தூங்காவிளக்கை ஒரு ராசகுமாரனை
வரவழைத்து விவாகஞ்செய்து கொடுத்து அரண்மனை
யில்தானே வைத்துக்கொண்டான். குத்துவிளக்கென்ற
பெண்ணுக்கு ஐந்துவயதில்தானே ஒருராசகுமாரனுக்கு
மணம்புரிவித்தான். அந்தராசகுமாரன் சிலநாள் அங்கி
ருந்து பின்பு தேசாந்திரம் போய்விட்டார். தூங்கா
விளக்குங் குத்துவிளக்கும் இரண்டுபேரும் வளர்ந்து
எவ்வர்னபர்வம் வந்தகாலத்தில் தூங்காவிளக்கு தன்
கணவனோடு கூடிக்கலந்து வாழ்ந்திருந்தாள். குத்து
விளக்கு சித்திரப்பதுமைபோல்தன்னந்தனியேயிருந்து
தமக்கையோடு விளையாடி வந்தாள். இப்படி சிலகாலஞ்
சென்றபின்பு தேசாந்திரம்போன ராசகுமாரன் இறந்து
விட்டதாகப் பிதா கேள்வியுற்றான். அச்சேதி தூங்கா
விளக்கு கேட்டிருந்தாள். குத்துவிளக்கென்ற மாது ஒரு
நாள் ஸ்நானஞ்செய்து ஆடையாபரணலங்கிர்தளாகி
மயிலைப்போலசைந்து அன்னம்போல்நடந்துவந்தாள்.
தூங்காவிளக்காகியமாது அருகில்வந்து நகைத்ததற்குக்
காரணங் கேட்க, அவள் மறைத்ததை குத்துவிளக்கு
தடுத்து உண்மைசேதியாகிய கணவனிறந்ததைத்தெரிந்
துக்கொண்டு பிதாவிடத்திற் சென்று, தீவளர்க்கச்சொ
ல்லி அத்தீயில் சகலவரசர்களுமறிய விழுந்தாள்; அத்
தருணத்தில் அகஸ்மாத்தாய் மழையுண்டாகி வெள்ளங்
கண்டு அப்பெண்ணை யடித்துக் கொண்டுஆற்றிற்சேர்த்
தது, அப்பெண் ஆற்றில் சிலதூரஞ்சென்று தெய்வா
னுகூலத்தால் நாணலைப்பற்றிக் கரையேறி பூங்காவனத்
திலிருக்க பூவாண்டிச்சி கண்டு அழைத்துப்போய் தன்
மகளைப்போலப் பாதுகாத்து வந்தாள். அப்பெண் பூத்
தொடுப்பதில் வல்லவளாகையால் ஒருநாள் அரசன்தே
விக்கு மாலைகட்டிக் கொடுத்தாள். அம்மாலை லக்ஷணத்
தைப் பார்த்த அரசன்மனைவி அப்பெண்ணை யழைத்து
தன்பெண்களோடு ஒரு பெண்ணாக வைத்துக்கொண்டி



ருந்தாள். இவ்வூரரசன் மனைவியோடு ஆசனத்திலிரு
ந்து தருமஞ்செய்கிறதினம்வந்தது; அதற்காக அரசன்
மனைவி வேலைக்காரிகளை யழைத்து படி முத்துச்சரமுங்
கொடுத்து கோர்த்துக் கொடுக்கிறேனென்று சொல்லி
ஒருபடி முத்துச்சரமும் வாங்கிக்கொண்டுவந்து கோர்த்
துக்கொண்டிருக்கும்போது உண்ணவந்தழைத்தார்கள்.
அப்பெண் முத்துகளையும் சரட்டையும் ஒருமாடத்தில்
வைத்துவிட்டு உண்டுவந்து பார்த்தாள், முத்துச்சரங்
காணமற் போய்விட்டது, அதனாற் பெண் அச்சமுற்றி
ருந்தாள், ராசன்மனைவி கடுஞ்சினமடைந்து தலையைச்
சிறைத்து நடைவிளக்கேற்றினாள். அப்பெண் யாரோ
வென்று எண்ணவேண்டுவதில்லை; உமது சமூகத்தி
லிருந்தவள்தானென்று படர்க்கையாக வுரைத்துத் தன்
னைத்தூற்றித் தனதரசன்பாதிவரலாற்றிலே தன்மனைவி
யென்று தெரிந்துக்கொண்டு கனவருத்தமுற்று முழுதுங்
கேட்போமென்று திடச்சித்தனாகயிருக்கிறவனாகையால்
வரலாறு முடிந்தவுடன் மனவருத்தமுற்று ஓ மாது!
மனைவிக்கு இவ்விதியா விதித்திருந்தது. எல்லாம் கடவு
ளாக்கினையென்று தீர்மானித்தவனா யிருந்தபோதிலும்
மனைவியென்கிறமானத்தால் கிஞ்சிற்று கோபமுண்டாகி
இவ்வூரரசன் மனைவி இப்பெண்ணுக்கு பெரியதாயாக
யிருந்தும் மகள்குற்றத்தை முன்பின்யோசிக்காமல் கர்ன
கடூரமான தண்டனைவிதித்தது தகுதியல்ல, இனியரைட்
சணமு மிங்கிருப்பது நமக்கு அழகல்லவென்று மதித்
துச் சொல்லுகிறான்: ஓ பெண்ணே! நான்தான் உன்னு
டைய கணவன். ஐந்து வயதிலே விவாகஞ்செய்து தே
சாந்திரஞ் சென்றேன். எனக்கு நல்லதிசை யுண்டாகி
அதனால் அநேகதேசங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு
உன்னை யழைத்துப்போகவேணுமென்று கருதி என்தே
சத்தை மந்திரிவசம்ஒப்புவித்து வந்தேன். இத்தராசன்
தான் தனக்கு மூத்தாளை மணம்புரிந்தவ னாதலால்
பெரிய மாமியார் வீட்டுக்கு வந்தேன். வந்தவிடத்தில்
உன்னைக் கண்டதுமன்றி உன்சரிதத்தையுங் கேட்டேன்
எனக்கு இதைவிட என்ன துன்பமிருக்கிறது, ஆகிலும்
மிஞ்சிப்போனதற்கு வருத்தப்படுவது தகுதியல்ல. இனி
நடப்பது யோசிக்கவேண்டும் எழுந்திருவென்று கூறி

னன். குத்துவிளக்காகிய ராசகுமாரத்தி அரசன் முகக்குறியையும் அவன் கூறியவசனங்களையும் உற்றுநோக்கி யுண்மையாகவிருக்குமென்று உள்ளத்தில்மதித்து இனிமேல் விளைவதால் கிஞ்சிற்று சந்தேகத்தையுந் தீர்த்துக்கொள்ளலாமென்று கருதி எழுந்து நின்றாள். அரசன் அடப்பக்காரிகளை யழைப்பித்து இக்கன்னிகையை நீராட்டி நல்ல வஸ்திராபரணந் தரிப்பித்து என் முத்துச்சிவிகையி லிருக்கச்செய்து சுற்றிலுங் காவலா யிருங்களென்று திட்டஞ்செய்து பள்ளிகொண்டான். அடப்பக்காரிகள் அரசன் கட்டளைப்படி குத்துவிளக்காகிய இராஜகுமாரத்தியை ஸ்நானஞ்செய்வித்து ஆடையாபரணாலங்கிர்தளாச்கிமுத்துச்சிவிகையில்வைத்துக்காவலாயிருந்தார்கள். அரசன் பள்ளியறையில் நித்திரைசெய்து சூரியனுதயமாயும் எழுந்திருக்காமல் நித்திரையி லிருந்துவிட்டான். அந்நகரத்தரசன் மனைவி நமது மருமகன் இன்னும் பள்ளியறைவிட்டு எழுந்திருக்கவில்லை, அசந்து நித்திரைசெய்கிறானோ என்னமோ அறியலாமென்று வந்து பள்ளியறைக்கதவைத் தட்டினள். அரசனெழுந்து கதவைத்திறந்தான். மாமியார் ஒருபக்கமாக மறைந்து நின்றனள். அரசன் மாமியின்மேல் கோபங்கொண்டிருக்கிறவனாதலால் தட்சணம் பிரயாணமானான். மாமியார் உபசாரவார்த்தையாகயிருக்கச்சொல்லி வேண்டிக்கொண்டனள். மருமகன்கோபமீறி அதிக விரைவாக பிரயாணமாகியதை யறிந்து தன் கணவனுக்குத் தெரிவித்தனள். அரசன்வந்து மருமகனை நிறுத்தி ஒருவேளையிருந்து உண்டுபோகவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். மருமகனாகிய அரசன் அருவருப்பும் கடுஞ்சினமுமடைந்து உம்முடைய வீட்டில் சலபானஞ் செய்யமாட்டேன். ஏனென்றால் ஏதாவது ஒரு குற்றஞ் செய்தால் குற்றத்துக்குத்தக்க தண்டனை செய்யவேண்டுமேயொழிய அதிக தண்டனை செய்யக்கூடாது. ஆகிலும் பெண்பாலைத் தண்டிக்கிறதா போபோ வென்று கூற, அதென்னவென்று அரசன் கேட்க, மருமகனாகிய அரசன்சொல்லுகிறான்; உமதுமனைவிக்குத் தங்கை செண்பகாபுரத்தரசனுக்கு மனைவியாக விருக்கிறாள். அவளிளைய குமாரத்தியை நான் மணம்புரிந்தேன், சிலநாள் தேசாந்



திரஞ் சென்றபின்பு என் மனைவியை அழைத்துப்போக இங்குவந்தேன். என்மனைவி தலைமயிரிழந்து தலையிலே விளக்கைசுமந்துயிருந்தால் இங்கெனக்குவேலையென்னவென்று கூறினன். இவ்வாக்கியத்தைக்கேட்ட அரசன் திடுக்கிட்டு நடந்த வரலாற்றைச்சொல்லி எனக்குத்தெரியாது; தெரிந்தால் அவ்வாறு செய்வேனோ வென்று வருத்தப்பட்டான்; மருமகனாகிய அரசன் மிஞ்சிப்போனதற்கு வருத்தப்படுவதில் பயனில்லை, எனக்கு விடைகொடுங்களென்று பெற்று தன் சேனையோடுவந்து முத்துச்சிவிகையில் தன்மனைவியாகிய குத்துவிளக்கைவைத்துக்கொண்டு தன்மாமனார் நகரமாகிய செண்பகாபுரத்திற்குச்சென்று தன்வரவைத் தூதுவரால் மாமனாருக்குத் தெரிவித்தான். மாமனார் கேட்டு மிகவும் மனமகிழ்ந்து தன் மந்திரி பிரதானி பட்டத்தலைவர் முதலானவரோடு வந்து மரியாதைசெய்து அழைத்துப்போனான். மருமகனாகிய அரசன் சபாமண்டபத்தில் வந்து யாவரையும் பார்த்து ஒருவசனஞ்சொல்லுகிறான்: கேளுங்கள் சபையாரே! என் மனைவி நானிறந்துவிட்டதாக எண்ணித் தீப்பாய்ந்தாளாம். அப்போது மழை பொழிய தெய்வானுகூலத்தால் ஒருதிக்கில் கறையேறிப் பூவாண்டிச்சிவிடுசேர்ந்து அவள் தன் பெரிய தாயாரிடஞ்சேர்ந்தாள். அத்தாய் முத்துகோர்த்து வரச்சொன்னாள். அப்பெண் அம்முத்தில் பாதிகோர்த்துப் பாதிவைத்துவிட்டு உண்டு வந்து பார்க்கும்போது காணாமற்போகவே பயந்திருந்தாள்; நானவ்விடத்தில்வந்து உண்டு அன்றிரவில் படுக்கைவீட்டிற் சென்றேன்; அப்போது அந்தப்பெண் தலையில் விளக்கை வைத்துக்கொண்டு என்பள்ளியறைவந்து ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள்; அவள் சரித்திரத்தைச் சொல்லக் கேட்டு எல்லாந் தெரிந்துக்கொண்டு அந்தவீட்டில் சலபானஞ் செய்யாமல் மறுநாள் உதயத்திற்குப்பிரயாணமாகி வந்துவிட்டேனென்று கூறினன். மாமனார் மற்றவருங்கேட்டு மகளிற்காக மகிழ்வும் அவன் செய்யத்தகாத தண்டனைக்காக வருத்தப்பட விருந்ததென்று மனந்தேறி மகளை யழைத்துப்பார்த்து வாரித் தழுவி நீராட்டி சுபமுகூர்த்தத்தில் சாந்தி நிறைவேற்றினர். குத்துவிளக்காகிய ராசகுமாரத்தியுந் தேசாந்திரம்

போயிருந்து வந்த அரசனும் கூடிக்கலந்து வாழ்ந்தி
ருந்தார்கள். இப்படி சிலகாலஞ் சென்றபின்பு குத்து
விளக்கின் கணவன் தன் மாமனாரிடத்துவந்து எனக்
கொரு விடுதி வேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.
அரசன் அக்கருத்துக்கிசைந்து மருமகன் கருத்தின்படி
விடுதியும் உண்டி முதலியவற்றிற்குக் குறைவு வராமல்
திரவியங்கொடுத்தான் மருமகனாகிய அரசனும் தன்மனை
வியும் அந்த விடுதியில் சேர்ந்து வாழ்ந்திருக்கிற காலத்
தில் குத்துவிளக்காகிய ராசகுமாரத்தியின்கணவன் வேசி
யின்மீது விருப்பமுற்றவனாக அந்நகரத்திற் கடுத்த ஒரு
தாசியைக் குத்தகையாக வைத்துக்கொண்டான். அவ்
வாறு யிருந்தாலும் தன் கணவன் மீது கருத்தைச்
செலுத்தி ஒரு குறைவுமில்லாமல் கூடி வாழ்ந்திருந்
தாள். இதனை அத்தாசிகண்டு ராஜன் போஜனஞ்செய்கிற
வேளைதவிர மற்றவேளை நம்மைவிட்டு நீங்காமலிருக்க
வேண்டுமென்று கருதி, அரசனுக்கு மருந்திட்டாள். அர
சன் மருந்தின்பலத்தால் மனைவியாகிய குத்துவிளக்கை
விரும்பாதவனாகி உண்கிறதுதவிர மற்றவேளையெல்லாம்
தாசி வீட்டில்தானே யிருக்கத் தலைப்பட்டான். குத்து
விளக்காகிய இராசகுமாரத்தி பார்த்து நமக்கு பிரமன்
விதித்தவிதி எப்படியோ அப்படிக்கெல்லாம் அவஸ்
தைப்படவேண்டியதுதான் என்றுகருதி திடச்சித்தமாக
யிருந்தாள். மூன்றுவருஷமான பின்பு அடுத்த வீட்டி
லிருக்கிற ஔவையார் குத்துவிளக்காகிய ராசகுமாரத்தி
யிடம்வந்து ஓ அம்மணி! நீ நல்ல வாலிபதிசையாயிருக்
கிறாய்; உன் புருஷன் தாசிமார்க்கனாக யிருக்கிறான்; கண
வனைக் கைவசப்படுத்தாத ஸ்திரீ என்ன ஸ்திரீ யென்ற
னள். இராசகுமாரத்தி சொல்லுகிறாள்: ஓ அம்மணி!
நான் என்னசெய்வேன், என்னை பிரமன் சிருஷ்டித்தது
இப்படி யிருந்தால் யார்தான் என்ன செய்யலா மென்ற
னள். ஔவை சொல்லுகிறாள்: ஓ அம்மணி! உன்னைப்
பிரமன் சிருஷ்டித்ததற்கென்ன? உன்னால் வகையில்லா
மல் துன்பத்துக்காளாயினாய்; இப்பவும் நான் சொன்ன
படி கேட்டால் சுகித்திருப்பாயென்றனள். இராசகுமா
ரத்தி அக்கருத்துக்கிசைய ஔவையார் சொல்லுகிறாள்:
ஓ அம்மணி! இந்த அவிழ்தத்தை ரசத்தில்கலந்து உன்



புருஷனுக்கு மாத்திரங் கொடு; உன்னைவிட்டுப் பிரியா
னென்று உரைத்துப்போயினள். இராசகுமாரத்தி அச்ச
முற்று இந்த மருந்தால் என்ன நேரிடுமோ? எப்ப
டியாமோ? கணவன்சுகமாயிருந்தால்எக்காலத்திலாவது
நாம் சுகத்தையடையலாம்; கெடுதி நேரிட்டால் அதன்
பின்பு நாம் என்னசெய்கிறதென்று அந்த ரசத்தைப்
புறக்கடையில் கவிழ்த்துவிட்டுவேறே ரசத்தைச்செய்து
கணவனுக்கு வார்த்தாள். அந்த ரசத்தில் கிஞ்சிற்று
புறக்கடையில் புற்றிடங்கொண்டிருக்கும் ஐந்துதலைநா
கத்தின்மேல்விழுந்தது;அந்நாகம் அம்மருந்தின் பலத்
தினால் குத்துவிளக்காகிய இராசகுமாரத்தியின் கணவன்
தாசிவீடு சென்றபின்பு வந்து கதவைத்தட்டிற்று; ராச
குமாரத்தி யாரென்று ஐயுற்று கதவைத் திறந்துபார்த்
தாள்; கணவனாகவேயிருக்க மகிழ்ந்து கிழவி மருந்து
தான். ஆனால் நாம் கொடுக்கவில்லை நம்மை யறியாமல்
ஒட்டியிருந்த அவிழ்தபலத்தால் நம்மைக்கு கருதாதகண
வன் நம்மை நாடிவந்தான்; முழுதுங் கொடுத்தால் நம்
மைவிட்டகலான்; இதுவும் நான்செய்த பாக்கியந்தா
னென்று நினைத்து சர்ப்பராசனோடு கூடிக்குலாவி யிருந்
தாள். இப்படி சிலகாலஞ் சென்றபின்பு சர்ப்பராசனால்
இராசகுமாரத்தி கற்பந்தரித்தாள். சர்ப்பராசன் கண்டு
இனிநாம் நமது வரலாற்றைத் தெரிவித்து முழுதுந்
துணைப்பட்டு இவளோடு சுகித்திருக்கவேண்டுமென்று
கருதி ஒருநாள் இராசகுமாரத்தியைப் பார்த்து ஓ பெண்
ணே: நான் கொஞ்சம் திருநீறுகொடுத்துஒரு ஆச்சரிய
மான ரூபந்தரித்துவருகிறேன் நீ யென்னைக்கண்டு பயப்
படாமல் திருநீற்றை யென்மேலேபோடு நான் அடங்கி
யிருந்து பின்பு ஒரு வடிவெடுத்து சிலசேதி சொல்லுகி
றேனென்றுகூறி, கொஞ்சம் திருநீறு கொடுத்துப்பத்தடி
தூரம்வந்து தன் சயரூபத்தையெடுத்து சீறிக்கொண்டு
வந்தது. ராசகுமாரத்தி பார்த்துப் பயந்து திருநீற்றில்
கொஞ்சம் தூவினள். சர்ப்பமடங்கி சற்றுநேரமிருந்து
மறுபடியும் அரசனாகிவந்து மஞ்சத்திலிருந்தான். இரா
சகுமாரத்தி ஆசரியப்பட்டு ஓ பிராணநாதா! இதுபரி
யந்தம் உமது வல்லமையை யறியேன்; இன்றறிந்தே
னென்று பலவாறு புகழ்ந்தாள். சர்ப்பராசன் சொல்லு

கிறான்: ஓ பெண்ணே! நான் உன் கணவனல்ல. உன்கணவன் தாசிவீட்டிலிருக்கிறான்; இம்மனையிலிருக்கிற ஐந்துதலைநாகம் அடுத்த வீட்டுக்கிழவி உன்கணவன் கைவசமாக உனக்குக்கொடுத்த அவிழ்தபலத்தினால் நான் வந்தேன்; அதெப்படியெனில் நீயந்த அவிழ்தத்தை ரசத்தில் ல்ரைத்துப்பார்த்து புறக்கடையி லூற்றிவிட்டனை; அதிலொருதுளி என்மேற்பட்டது, அதனால் உன்கணவனுருவைப்போல நான்வந்து புணர்ந்தேன்; நீயும் உன் புருஷனும் கூடிக்கலந்து வாழவும் உன் சக்களத்தியாகிய தாசி உனக்கு முறியாகவுஞ் செய்விக்கிறேனென்று உறுதிவார்த்தை சொல்லிக் கூடிக்கலந்து போயிற்று. இப்படியிருக்கிறநாளில் தாசிகாந்தனாகிய அரசன் தன் மனைவி கர்ப்பவதியாக இருப்பதையறிந்து மாமனாரிடத்திற் சென்று நானிரண்டு வருஷகாலம் பேசாதிருக்க உமது இளையகுமாரத்தி எவ்வாறாகவோ கர்ப்பவதியாக இருக்கிறாள். இதனை விசாரிக்கவேண்டுமென்று வினவ, அரசன் சில தாதிகளை விடுத்து மகளை யழைத்து வரச்சொன்னான். சிலதாதிகள்வந்து குத்துவிளக்காகிய ராசகுமாரத்தியை அழைத்தார்கள். ராசகுமாரத்தி சற்றாலோசித்து என்பிதா அழைத்து வரச்சொன்ன காரணமென்னவென்று வினவ, தாதிகள் அச்சேதியை யரசனுக்குத் தெரிவித்தார்கள்; அரசன் மருமகனை நாளையுதையத்திற்கு வாவென்றுகூறி அனுப்பிவைத்தார்மருமகனாகிய அரசன் தாசிவீட்டிற்குப் போயிருந்து வீட்டுக்குவந்து கண்டு கையீரம் உலருகிறதற்குள் தாசிவீடுசேர்ந்தான். சர்ப்பராசன் ராசகுமாரத்தியோடுமஞ்சத்திலிருந்தான். ராசகுமாரத்தி சொல்லுகிறாள்: ஓ சர்ப்பராசனே! இன்றையத்தினம் நான் கர்ப்பவதியானசேதி என்கணவனுக்குத் தெரிந்து என்பிதாவிடத்திற்சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க நாளையதினம் உதயத்தில் நான் அவ்விடம்போகவேண்டும். உடனே இதற்கென்ன செய்கிறதென்று வினவ, சர்ப்பராசன் நகைத்து இப்போதுதான் உனக்கு நல்லகாலம்பிறந்தது; இராசசமுகத்திற்போனால் இராசன் கர்ப்பம்வந்த வரலாறுஎன்னவென்று வினவினால் நீ அஞ்சாமல் என் கணவனுக்கே கர்ப்பமாக யிருக்கிறேனென்று சொல்லு, ஐயமுறுவாரா



கில் அப்போது அஞ்சாமல் சபையைப்பார்த்து ஓசபையாரே! என் கணவனுக்கே நான் கர்ப்பமா யிருக்கிறேனென்று சொல்லும், என் பிதாவும் கணவனும் ஐயங்கொண்டிருக்கிறார்கள், ஆதலால் அந்த ஐயம் நீங்க கோயிலிலாவது இன்ன மெவ்விடத்திலாவது சத்தியஞ் செய்யவேண்டும். அது ஒரு சர்ப்பத்தைக் கொண்டுவந்து குடத்திலிட்டுவைத்து குடத்திலொரு பூவராகன் போட்டுவைத்தால் நான் தலைமுழுகிவந்து குடத்தில்கைவிட்டு அந்த வராகனை எடுத்துக்கொடுக்கிறேன், அதனால் யாவருக்குஞ் சந்தேக மில்லாமற் போகுமென்று சொல்லு, அக்கருத்துக்கு இசைவார்கள், நீ அவ்வாறு சத்தியஞ் செய், நானே அக்குடத்தில் வந்திருக்கிறே னென்று கூறிப்போய்விட்டது. இராஜகுமாரத்தி சூரியனுதயமானவுடன் எழுந்து ஆடையாபரணாலங்கிர்தளாகி தந்தையிருக்குஞ் சபாமண்டபத்துக்குள் வந்தாள். தான் மருமகனை வரவழைத்து உனக்கென்ன கேட்கவேண்டி யிருக்கிறதோ அதனைக்கேட்டுக்கொள்ளென்று சொல்லினான். மருமகனாகிய அரசன் சொல்லுகிறான்: ஐயா! நான் இந்தப் பெண்ணுடன்பேசி இரண்டு மூன்று வருஷகாலமாயிற்று. தற்காலத்தில் கர்ப்பவதியா யிருக்கிறாள். இதன் வரலாறு நான் கேட்க மனமுள்ளவனாக விருக்கிறேன் என, இதை ராஜகுமாரத்தி கேட்டு சொல்லுகிறாள், ஓ சபையாரே! நான் கர்ப்பவதியானது என்கணவனாலேயே யல்லாமல் வேறல்ல, இதற்குச் சந்தேகமுண்டாயிருந்தால் எல்லா சத்தியத்திலும் கண்கண்ட சத்தியமாய் சர்ப்பசத்தியஞ் செய்துகொடுக்கிறேனென்று கூறினாள். அரசனும் அரசன்மருமகனும் சபையாரும் அக்கருத்துக்கிசைந்து குடுமியை யழைத்து நல்ல சர்ப்பங்கொண்டு வரச்சொன்னார்கள். குடுமி குழலூதிக்கொண்டு திக்குபந்தனஞ் செய்துவந்தான். இந்த ஐந்துதலைநாகம் சர்ப்பங்களையெல்லாம் அடக்கி தான் முன்னம் வந்தாடிற்று. குடுமி கண்டு பிடித்துக்கொண்டு அந்தச் சபைமுகத்திற் கொண்டுவந்தான். அரசனும் சபையோரும் பார்த்து ஆச்சரியமடைந்து இந்நாகத்தைப்போல் நாங்கள் எக்காலத்திலும் பார்த்ததில்லை யென்று சொல்லிக் குடுமிக்கு வெகுமதிசெய்து ஒரு புதுகுடங் கொண்டுவரச்

சொல்லி அதிலொரு பூவராகனையும் போட்டு இப்பாம்பையும் அக்குடத்தில் வைத்தனர். ராசகுமாரத்தி ஸ்நானஞ்செய்து சபையாரைப் பார்த்து வலம்வந்து நமஸ்காரஞ்செய்து அன்று தொட்ட கணவனே கணவன் இன்று தொடப்போகிற நாகமேநாகம் என்றுசொல்லிக் குடத்தில் கையைவைத்து பாம்பையெடுத்து மாலையாகப் போட்டுக்கொண்டு பூவராகனை எடுத்துப் பொற்றட்டில் வைத்து சபையைச் சுற்றிவந்து நாகத்தை யெடுத்து குடத்தில் விட்டாள். சபையாரும் கணவனும் பிதாவும் பார்த்து மகிழ்ந்து இவள் மகா பதிவிரதை யென்று புகழ்ந்து யாவரும் மரியாதை செய்தார்கள். இராசகுமாரத்தி தன் அரண்மனைசேர்ந்தாள்; பிதாவும் கணவனும் சந்தேகமற்று அரண்மனை சேர்ந்தார்கள். சிலநாள் சென்றபின்வு ராசகுமாரத்தி பத்துமாதமும் நிறைந்து கோடி சூரியப் பிரகாசமாகிய புத்திரனைப் பெற்றாள். அதற்கு மருத்துவம் சர்ப்பமே பெண்வடி வெடுத்து வந்து பார்த்து பிள்ளை பிறந்தபின் சகல வுபசாரஞ் செய்து நல்ல ரத்தினாபரணங்கள் புத்திரனுக்குக் கொடுத்து அப்பெண்ணின் பிதாவிடத்தில் இதோ உன்குமாரத்தி வருத்தமில்லாமல் புத்திரனைப்பெற்றாள்; இனிவுபசாரஞ்செய்து தேகத்தை செம்மைப்படுத்திக்கொள்ளுங்களென்று மருத்துவச்சிபோல சொல்லிப் போய்விட்டது. அரசன் குமாரத்தியை ஒருமாதத்துக்குள் சுகப்படுத்தினான். ராசகுமாரத்தி மகனைப்பாதுகாத்துவந்தாள். மூன்றுவயதாயிற்று; அக்காலத்தில் நல்ல ஆபரணந் தரித்து தொட்டிலில் வளர்த்திவைத்தாள். கணவன் தாசிவீட்டிலிருந்துவந்து போசனஞ்செய்துக்கொண்டிருந்தான், அந்தவேளையில் இந்தப்புத்திரனுடைய தேககாந்தி அவள் கணவனுக்கு மின்னல்போல் தோன்றிற்று. அதனை அரசன் பார்த்து பாராததுபோல் உண்டு கைகழுவி தாசிவீட்டுக்குச் சென்று அத்தாசியுடன் தன் புத்திரனைப் பார்க்கவேண்டுமென்று சொல்லி தாசி தாதிகளை அனுப்பினாள். தாதிகள் ராசகுமாரத்தியைக் கண்டு ஓ அம்மணி! உங்கள் புத்திரனைப் பார்க்க வேண்டுமென்று எசமானி கேட்கிறாள்; கொடுங்களென்றாள். ராசகுமாரத்தி சொல்லுகிறாள்: நாளையதினம் வந்



தால் கொடுக்கிறேன் போவென்றாள். தாதிகள் தங்கள் எசமானியிருக்கு மிடம்போய் ராசகுமாரத்தி சொல்லிய சேதியைத் தெரிவித்தார்கள். தாசி அரசனுக்குத் தெரிவித்தாள். அரசன் என்புத்திரனை நான் பார்க்கவேணுமென்றால் அனுப்பா திருந்தாளல்லவா நல்லதாகட்டுமென்று கருவி மாமனாருக்குச் சேதியைந்தெரிவித்தான். இங்கே ராசகுமாரத்தி அன்றிரவில் சர்ப்பராசனை நோக்கி உன்புத்திரனைத் தாதியெடுத்துவரச்சொன்னாள்; உம்முடைய உத்திரவின்றி கொடுக்கக்கூடாதென்றுஎண்ணி நாளைக்கு அனுப்பிவிடுகிறேனென்று சொன்னேன், அனுப்பிவிக்கிறதா என்னவென்று வினவினள். சர்ப்பராசன்கேட்டு மகிழ்ந்து நல்லகாலம்வந்தது உன்கணவனைப் பெறுகிறதுமன்றி அத்தாசி உனக்கு முறியாகிற காலம் வந்தது; உன்புத்திரனை இராசசமுகத்திற் கொண்டுபோய் பிள்ளையை ஒருதட்டிலும் ஆபரணத்தை ஒருதட்டிலும் வைத்து நிறுத்தனுப்பு அது குறைந்தால் அவளுடைய ஆஸ்தியெல்லாம் கொடுக்கிறதுமன்றி முறியாகிறதென்று எழுதி வாங்கிக்கொண்டு புத்திரனைக் கொடு நான்சென்று உடைமையை எடுத்துவருகிறேன்; அவ்வுடைமைக்கு உன்பிதாவிடத்துப்பொருளில்லை; நகையெல்லாம் நாகரத்தினமாதலால்தாசிமுறியாவாள்; அஞ்சாமலனுப்புமென்று சொல்லிப் போய்விட்டான். உதயத்தில் பிதா தாதியையழைத்து என் இளையகுமாரத்தியை அழைத்துவாவென்றான். தாதிகள் வந்தழைத்தார்கள்; ராசகுமாரத்தி குமாரனை யெடுத்துக்கொண்டு பிதாவிடத்தில் வந்தாள். பிதாசொல்லுகிறான்: ஓ அம்மணி! உன்புருஷன் புத்திரனைப் பார்க்கவேண்டுமென்று கேட்டனுப்பிவைத்தால் கொடுத்தனுப்பலாகாதா வென்று வினவினன். ராசகுமாரத்தி சொல்லுகிறாள்: ஐயா! தாசி வீட்டுக்கு என்புத்திரனை யனுப்பிவைத்தால் குழந்தை ஆபரணத்தை எடுத்துக்கொண்டால் என்னசெய்கிறது? குழந்தையை ஒருதட்டிலும் ஆபரணத்தை ஒருதட்டிலும் வைத்து இச்சமூகமறிய நிறுத்துக்கொடுக்கிறேன்; அவள் நிறுத்துக்கொடுத்தால்வாங்கிக்கொள்ளுவேன்; குறைவானால் அவளை முறியாகக்கொள்வேன். அப்படி சம்மதித்து தாசி உடம்படிக்கை கொடுத்தால்

அனுப்பிவைக்கிறேனென்றாள். பிதா மருமகனையுந் தாசியையுமழைத்துத் தன் குமாரத்தியின் கருத்தைத் தெரிவித்தான். தாசியும்மருமகனும் அக்கருத்துக்கிசைந்தார்கள். தாசி உடன்படிக்கை எழுதிக் கொடுத்தாள்; இராசகுமாரத்தி நகையை ஒரு தட்டிலும் நிறுத்துக்கொடுத்தாள். தாசி அப்புத்திரனையும் நகையையும் வாங்கிக்கொண்டு தன்வீடுசேர்ந்து அதனுடன் விளையாடி ஒரு பால்காரியை யழைப்பித்துப் பால் கொடுக்கச்சொல்லி அன்றிரவில் வைத்திருந்தாள். நாகம் நடுச்சாமத்தில் வந்து ஒருவருக்குந் தெரியாமல் சிலநகைகளை எடுத்துக்கொண்டு வந்துவிட்டது. அது தாதிக்குத் தெரியாது, சூரியன் உதயமானவுடன்குழந்தையைஇராசசமுகத்திற் கொண்டுவந்தாள். இராசகுமாரத்தியும் வந்தாள், பிதா முதலான யாவரும்வந்து சேர்ந்தார்கள், தாசி குழந்தையை கொடுக்கப்போயினள், இராசகுமாரத்தி வாங்காமல் நிறுத்துக் கொடுவென்றாள், முன்னிருந்தபடி பிள்ளையையும் நகைகளையுந் தட்டுகளில் வைத்து நிறுத்தினார்கள், பிள்ளைதட்டு தாழ்ந்து நகைத்தட்டு உயர்ந்தது, சபையார்பார்த்து ஓஓ! தாசி மோசஞ்செய்து விட்டாள், நகை குறைகின்றது உடம்படிக்கைபடி தாசிநடக்க வேண்டுமென்றனர். யாவரும் அப்படி சொல்லக்கேட்டு தாசி மறுவுத்திரவுசொல்லாமல் உடன்படிக்கையின்படி தான் இராசகுமாரத்திக்கு அடிமையாயினள். தாசி அடிமையாகமே கணவனும் வீடுவந்து சேர்ந்தான். ராசகுமாரத்தி அதிக மகிழ்வடைத்து தானுங் கணவனுங் கூடிக்கலந்துதாசி ஏவல்செய்துக்கொண்டு மிகுந்தகளிப்பையடைந்தார்கள். ராசகுமாரத்தி இந்த மகிழ்ச்சியால் சர்ப்பராசனை மறந்துவிட்டாள். சர்ப்பம் பார்த்து ஓஓ! நம்மால் இராசகுமாரத்தி சுகத்தையடைந்து நம்மை மறந்துவிட்டாள். நாமவளைக் கடித்துக் கொல்வோமாகில் மரத்தைவைத்துக்கொண்டு களிகூறவேண்டும், நாம் இராச குமாரத்தியை சேரக்கூடாது, இதுவெல்லாந் தகுதியல்ல; நமது பிராணனைவிடுகிறதே நல்லது; அதிலும் அவள் குழல்மயிர் நாணிக்கொண்டு மரணமடைவோமென்று மதித்து, ஒருநாளிரவில் பள்ளியறைக்கு வந்து இராசகுமாரத்தியின் உச்சிமயிரில் நாணிக்கொண்டு உயிரைவிட்டது. சூரியனுதயமானவுடன் அரசனெழுந்து மஞ்சத்தை விட்டிழிந்தான். நாகம் இறந்திருக்கிறதைக் கண்டு பயந்து மனைவியை யெழுப்பினான், மனைவி எழுந்தாள், நாகம் மயிரிலே நாணிக்கொண்டிருக்கின்றமையால் கனத்தால் தலையெடுக்கக்கூடாமலும் அவளும் பயந்தாள். இராசன் அருகில் நெருங்கி மயிரை வாங்கிவிட்டான், இராசகுமாரத்தி யெழுந்து பார்ர்த்து ஓ!ஓ! நாம் நினையாததன்மையினாலல்லவா நம்மிடத்தில் சீவனைவிட்டது என்று மனதில் மதித்துப் புலம்பினாள்; கணவன் ஓ பெண்ணே! ஏன் அழுகிறாயென்றான். அதற்குப் பெண் ஓ பிராணநாதா! இது மனைப்பாம்பு இதற்கு நீர்வந்து சேர்ந்தவுடன் பூசை நைவேத்தியஞ் செய்கிறேனென்று பிரார்த்தனை செய்துக்கொண்டிருந்தேன்; நீர் வந்தவுடன் மறந்துவிட்டேன்; அதனால் என்னிடத்தில்வந்து இறந்தது, இந்தக் குழந்தையைக் கொண்டு நாகத்துக்குசெய்யுங் கருமஞ்செய்து தகனம் செய்வித்துவிடும் என்றனள். அரசன் அக்கருத்துக்கிசைந்து தன்புத்திரனைக்கொண்டு நாகத்திற்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச்செய்து தகனஞ் செய்து வீட்டுக்குவந்துவிட்டான். குத்துவிளக்காகிய இராசகுமாரத்தியும் அரசனும் புத்திரனும் மூவரும் சுகமாக வாழ்ந்தனர். ஆகையால் உலகத்தில் பெண்சாதியை நம்பக்கூடாது; சூது நிறைந்த பாண்டமென்று கூறினன்; சூரியனுதயமானான்; மந்திரிகுமாரன் அரண்மனைக்குச் சென்றான், இந்தராசகுமாரத்தி அந்தப்புரஞ்சென்றாள்.



ஒன்பதாநாள் கதை-முற்றிற்று.

---

பத்தாவதுநாள் கதை

## இராசகுமாரனை மந்திரிகுமாரன் வஞ்சித்து முடிவில் அவமானப்பட்ட கதை

பத்தாம்நாளிரவில் மந்திரிகுமாரன் உண்டு தாம்பூலந்தரித்து ஆடையாபரணாலங்கிர்தனாகி கலவைச்சாந்தணிந்து வழக்கப்படி பள்ளியறை சேர்ந்தான். இராசகுமாரத்திகளில் இளையாள் உண்டு ஆடையாபரணாலங்



மந்திரிகுமாரன் நரிக்கூட்டம் தாண்டிபோகல்.

சேற்றிலழுந்தியிருந்த புலியை இராஜகுமாரன் எடுத்துவிடுதல்.

இராஜகன்னியை எடுத்துவந்த யானை நித்திரையிலிருக்க அரசன் ...

மந்திரிகுமாரன் மந்திரவாளைப் போட்டுவிட்டு குப்புறப்படுக்க ...



கிர்தளாய்ப் பரிமளமிருந்த நறுமலர் மாலைசூடி கலவைச்சாந்தணிந்து வழக்கப்படி பள்ளியறை சேர்ந்து, சற்றுநேரம் கீர்த்தனைபாடி காமமீறி மந்திரிகுமாரனைத் தழுவவந்தனள். மந்திரிகுமாரன் இவள் காதலைக் கதையால் தணிக்க யெண்ணிச் சொல்லுகிறான்: ஓ மாதுசிரோமணி! நான் ஒரு சிறியகதை சொல்லுகிறேன்; அக்கதை முடிந்தபிற்பாடு நாம் கூடுவோமென்று சொல்லினன். இராசகுமாரத்தி அக்கருத்துக்கிசைய மந்திரிகுமாரன் ஒரு சிறியகதை சொல்லுகிறான்: ஓ பெண்கள் நாயகமே! திருமண்டலமென்றொரு நகரம் உண்டு. அந்நகரத்துக்குத் திருராசனென்றொரு மந்திரியுண்டு; இவ்விருவருக்கும் நெடுநாளாய்ப் புத்திரனில்லாமல் அரிய தவத்தால் இருவருக்கும் புத்திரசம்பத்துண்டாயிற்று. அரசன் புத்திரனுக்கு ஐந்துவயதானபின்பு பள்ளியில் வைத்தனர்; வயதுவுயர புத்தியதிகப்பட்டு நாலுவேதம் - ஆறுசாஸ்திரம் - அறுபத்துநான்கு கலைக்யானம் - மனுவிக்யானம் - முதலியவற்றை யுணர்ந்து யானையேற்றம் - குதிரையேற்றம் - வில்வித்தை - கதாயுத்தம் - மல்யுத்தம்- முதலியவற்றில் சிறந்தவராகி வாலைப்பருவமடைந்தார்கள். இவ்விருவரில் இராசகுமாரன் தைரியமும் வீரமுடையவன்; அன்றியும் அழகிற்சிறந்தவன்; ஆண்மையிலுயர்ந்தவன்; மந்திரிகுமாரன் பயங்கரனென்ற பெயர்க்குத் தக்கபடி போர்முகத்துக்கு உதவாத சிந்தையையுடையவனு மிருந்தான். கல்வி கேள்வியிற் சிறந்தவனான ராசகுமாரன் மந்திரிகுமாரனையழைத்து மந்திரி! என்பிதாவும் உன்பிதாவும் அரசுசெய்து வருகின்றார்கள்; நமக்கு என்னவேலை? நாம் பாக்கியசாலியாயிருந்தும் நாம் சும்மாயிருப்பதிற் பயனில்லை; நாம் தேசாந்திரியாகி தேசசஞ்சாரஞ்செய்து அந்த நமது வல்லமையைக்காட்டி, பாக்கியத்தை சம்பாதித்துவந்தால் நலமாக விருப்பதுமன்றி, தாய்தந்தையர் மகிழ்வார்கள்; உன் கருத்து என்னவென்று வினவினன். மந்திரி அது நலமாக விருக்கிறதென்று சொல்ல, இராசகுமாரன் அதற்குத்தக்க திரவியமெடுத்துக்கொண்டு ஆயுதத்தோடு வெளிப்படென்று கட்டளையிட்டான். வீட்டுக்குவந்து ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டு ஆடையாபரணலங்

கிர்தனுகி வேண்டிய திரவிய மெடுத்துக்கொண்டு ஆயுத பாணியாகி பஞ்சகல்யாணி குதிரையேறி வெளிப்பட்டான். இருவருஞ் சேர்ந்துக்கொண்டு நகரத்தைவிட்டு காடு மலை வனம் வனாந்திரங்கடந்து முப்பதுயோசனை சென்று கலிங்கபட்டணத்திற் சேர்ந்து, ஒரு ஔவை வீட்டிலிறங்கி நாளொன்றுக்கு ஒருவராகன் கொடுத்து மூன்றுநாள் தாங்களும் குதிரைக்குப் புல் கொள்ளு முதலிய யுதவி செய்து சுகித்திருந்தார்கள். நாலாம்நாள் இராசகுமாரன் ஔவையாரைப்பார்த்து ஓ அம்மணி! இந்தநகரத்தில் ஏதாவது அதிசயமுண்டாஎன, ஔவை சொல்லுகிருள்: அப்பா! இந்த நகரத்தரசன் குமாரத்தி அமிர்தவல்லி; அவள் அதிகரூபவதி; அவள் நாலு தாதிகளோடு சிங்காரவனத்திற் சென்று நீராடினுள், ஒருயானைவந்து அவளை யெடுத்துக்கொண்டு போய்விட்டது, அதுசேதி அரசனுக்குத் தெரிந்து தேடிப் பார்க்கும்போது அந்த யானை ராசகுமாரத்தியைக் கொண்டு போய் இருண்டபெரிய ஆரண்யத்தில் வைத்து முதல் மணிக்கு நரிக்கூட்டங்களையும், இரண்டா மணிக்குக் கோட்டான் புலிகுறத்திகளையும் மூன்றுமணிக்கு யானைகளையும் காவல்வைத்துக்கொண்டு அரசனைச் சேரவொட்டாமற் செய்தது, அரசன் நகரத்துக்கு வந்து இந்த யானையை வெற்றிபெற்று என்குமாரத்தியையார்கொண்டுவந்து கொடுக்கிருரோ அவருக்கே என்குமாரத்தியை மணம்புரிவிப்பதுமன்றி என் அரசையுங் கொடுக்கிறேனென்று சுயம்வரஞ்சாட்டியிருக்கிருன், இதுதான் ஒரு புதுமை: வேறொரு புதுமையில்லையென்று சொல்ல, இராசன்கேட்டு மந்திரிக்கு இந்தச்சேதியைச் சொல்லி, அந்த இராஜ குமாரத்தியைக் கொண்டு வருவதுதான் நமதுவல்லமை; இந்தச் சேதியைக் கேட்டு நாம் சும்மாயிருப்பது தகுதியல்லவென்று சொல்லி, தானும் மந்திரியும் ஸ்நானஞ்செய்து பூசைகள்முடித்து உண்டு தாம்பூலந் தரித்து ஆயுதபாணிகளாகிக் குதிரையின்மேலேறி அரசனைக்கண்டு நான் உன் குமாரத்தியை க்ஷணத்திற் கொண்டுவருகிறேனென்று சொல்ல, அரசன் அக்கருத்துக்கிசைந்து தாம்பூலங்கொடுக்க, ராசகுமாரனவன் தாம்பூலம்பெற்றுக்கொண்டு மந்திரியும் தானுமாகக் காடு



மலைவனம் வனாந்திரங்கடந்துயானையிருக்கிற இருண்ட ஆரணியம் வந்து நரிகள் காவலாகிய முதலணியிற் பிரவேசித்தார். நரிகள்கண்டு ஊளையிட்டு மேல்விழுந்து கடிக்கத்தலைப்பட; மந்திரி பார்த்து நடுங்கித் தன்னை மறந்து குதிரைமே லிருந்துவிட்டான். இராசகுமாரன் பார்த்து மந்திரிக்குத் தைரியஞ்சொல்லித் தன்னுடைய வாளையுருவிக் கையிலேந்திக் கடவுளைத் தியானித்துஒவ்வொரு வீச்சுக்குப் பத்திருபது நரிகளை வெட்டி ஒரு முகூர்த்தத்தில் நாசமாக்கினுன். இறந்த நரிகள்போக மற்ற நரிகள் பார்த்து ஓ! இந்த அரசன் பராக்கிரமசாலி; இவனுக்கு அக்கன்னிகை கிடைக்குமென்றுகருதி ஓடிப்போயின. இராசன் இரண்டாமணியிற் பிரவேசித்தான், கோட்டானும் புலிக்குறத்திகளுந் தலைப்பட்டு கடிக்கவாரம்பித்தன. மந்திரிகண்டு திகிலடைந்து குதிரையின்மேலிருக்க சக்தியற்றவனுகிப் பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்தான்; அரசன் கண்டு மந்திரியை யெடுத்து மூர்ச்சை நீக்கித் தைரியஞ்சொல்லி ஒருயிடத்திலிருத்தித் தான்வந்து கோட்டான்களையும் புலிக்குறத்திகளையும் அதமாக்கினுன்; மாலைப்பொழுதாயிற்று.

அரசன் மந்திரியிடத்து வந்து அழைத்துக்கொண்டு ஒருதடாகத்துக்கு வந்து ஸ்நானஞ்செய்து நீரருந்தி ஓ! மந்திரி! இதோ ஒரு ஊர் தோற்றுகின்றது; இன்றிரவில் அவ்வூரி லிருந்து போசனஞ் செய்துகொண்டு நாளையதினம் வருவோம் வாவென்று அழைத்துக்கொண்டு குதிரையிலேறி அவ்வூருக்கருகாக வருகிறபோது வழியிலொரு புலி சேற்றி லகப்பட்டுக்கொண்டு எட்டுநாளாக ஆகாரமின்றி தவித்துக்கொண்டிருந்தது. அப்புலி யரசனைப்பார்த்து ஓ! ராசகுமாரகா! என்னை இந்த சேற்றினின்று எடுத்து விடுவாயாகில் உனக்கு நான் மிகுந்த வன்புடையவனுக யிருப்பே னென்று சொல்லிற்று. அதுகேட்டு ஓ புலிராசனே! துஷ்ட மிருகத்துக்கு உபகாரஞ் செய்யக்கூடாதென்று வேத முறையிடுகின்றதே; எனக்கொரு நம்பிக்கை செய்துக்கொடுத்தால் நான் உன்னைக் காப்பாற்றுகிறேனென்றுன். புலியானது அரசன் கருத்தின்படி நம்பிக்கை செய்து கொடுத்தது. அரசன் குதிரையைவிட்டிறங்கி ஆயுதத்தோடு

சென்று புலியையிழுத்து வெளியே விட்டனன். புலி
கரையேறி களைநீங்கிற்று. அரசன் புலிராசனே! நீ
எனக்கோருபகாரஞ் செய்யவேண்டும்; கலிங்க நகரத்தர
சன் குமாரத்தியை யானை யெடுத்துவந்து ஒருகாட்டில்
வைத்து நரிகளையும்யானைகளையும்காவல் வைத்திருக்கி
றது; நீ உன்னினத்தை மாத்திரம் அங்கு காவலிருக்க
வொட்டாமற் செய்வாயாகில் யானைகளை அதமாக்கி ராச
கன்னிகையைக் கொண்டுபோகிறே னென்றான். புலி
அதற்கிசைந்து ஓ மகாராசனே! என் இனத்தையெல்
லாம் நான் அழைத்துக்கொண்டுபோகிறதுமன்றி, இன்
னும் நீ நினைக்கும்போதெல்லாம் நான்வந்துமனவருத்
தத்தை நீக்கிப்போகிறேனென்றுசொல்லி,விடைபெற்று
யானையின் கட்டளைக்குட்பட்டு காவலிருப்பதில் நமது
பிராணனுக்கழிவேயன்றி வேறில்லை, ஆதலால் தற்கா
லத்தில் ஒருராசகுமாரன் அக்கன்னிகையைக்கொண்டு
போக வந்து நரிகளையுந் தோண்டான்களையும் புலிக்
குறத்திகளையும் நாசஞ்செய்து மாலைப்பொழுதாகவே
நாளையதினம் வரக்கருதி எங்கேயோ போயிருக்கிறான்;
நாளையுதயத்திற்கு வருவான்; நமக்கிங்கு வேலையென்ன
வென்றுசொல்லி யாவற்றையும்அழைத்துக்கொண்டோ
டிற்று.

அரசன் மந்திரியோடு அவ்வூரிற் சென்று அங்
கொருவீட்டில் ஒருவராகன் கொடுத்து புசித்து அன்றி
ரவு நீங்கினவுடனே எழுந்து நித்தியகடனை முடித்துக்
கொண்டு உண்டு ஆயுதபாணியாகி மந்திரியைப் பார்
த்து ஓ மந்திரி? நீ இங்குதானே யிரும்; நான் சென்று
யானையைக்கொன்றுவிட்டு கன்னிகையைக்கொண்டுவரு
கிறேனென்று சொல்லி விடைபெற்றுத்தன்னந்தனியே
குதிரைமேலே இருண்ட ஆரண்யத்தில் வந்து பார்த்
தான். புலி காவலில்லாதிருக்கவே மகிழ்ந்து அண்ட
கடாகம் வெடித்திடக் கடுகடுத்துகர்ச்சனைக்கொண்டுஇடி
போல் யானைத்திரளில் பிரவேசித்து வெட்டியும் குத்தி
யும் கால்வேறு துதிக்கைவேறு தலைவேறு வால்வேறாக
வெட்டித்தள்ள, யானைகள் சற்றுநேரம் போராடி அர
சன் போருக்குத் தாளாமல் வீறிட்டோடின. அரசன்
கண்டு களிப்புற்று அவ்வழியிலே செல்லும்போது அங்



கொரு மலை தோன்றிற்று; அம்மலையில் ஒன்றுமில்லா
திருக்கவே அதனைச் சுற்றி வலம்வந்தான். அங்கொரு
குகைபோல் தோற்றப்பட்டு அவ்வழியாகச் செல்லும்
போது அங்கு அந்தராசகன்னியை எடுத்துவந்த யானை
படுத்து அதிக நித்திரையி லிருந்தது. அரசன் கண்டு
தன் கைவாளினால் இரண்டு துண்டாக வெட்டினான்.
யானை யிறந்தது. அப்புறஞ் செல்லும்போது அங்
கொரு மேடையில்சந்திரோதயம்போன்றஅக்கன்னிகை
யிடத்திற் சென்று, அஞ்சாதே! உன்பிதாவின் சம்மதி
யின்மேல்வந்து யானையையும் இந்தயானை வைத்திருந்த
காவல்மிருகங்களையும் அதமாக்கினேன்; எழுந்திரு; போ
வோமென்றனன். ராசகன்னிகை எழுந்துவந்து வணங்
கினள்.அரசன் ராசகன்னிகையை தன் குதிரையின்மேல்
வைத்துக்கொண்டு மந்திரியிடத்துவந்து அன்றிராப்
பொழுது நீங்கினவுடன் உதயத்துக் கெழுந்து ஸ்நா
னஞ் செய்து பூசைமுடித்து மூவரும் உண்டு தாம்பூலந்
தரித்துக்கொண்டு பிரயாணமாகி ராசகன்னிகையை தன்
குதிரைமேல் வைத்துக்கொண்டு அவ்வூரைவிட்டுக் காடு
மலை வனம் வனாந்திரங்கடந்து கலிங்கப்பட்டணத்தில்
வந்து அங்கிருவருஞ் சோலையி லிறங்கி ஓ மந்திரி! இந்த
இராசகன்னிகையை மடியில் வைத்துக்கொண்டு இந்த
மந்திரவாளைக் கையிலே வைத்துக்கொண்டிரு; இதோ
காலப்பிரவர்த்திக்குச் சென்று வருகிறேனென்று சொல்லி
விட்டு அரசன் சென்றான். மந்திரி அரசன் கட்டளைப்
படி இராசகன்னிகையை மடியில் வைத்துக்கொண்டு
பாதுகாத்து வந்தான். அத்தருணத்தில் பாதாளலோக
த்தி லிருக்கிற ஒரு ஜடாமுனி அச்சோலையில் வந்து
கன்னிகை ரூபவதியாயிருக்கவே உக்கிரங்கொண்டு அண்
டத்துக்கும் பூமிக்கும் சரியாக வளர்ந்து கிட்ட நெருங்கி
ற்று.மந்திரிபார்த்து நடுங்கி ராசகன்னியை அந்த முனி
க்கு முன்னந் தள்ளிவிட்டு மந்திரவாளை பூமியில் போட்
டுவிட்டு குப்புறப்படுத்துக்கொண்டான். சடாமுனி ராச
கன்னியை தூக்கிக்கொண்டு பாதாளலோகத்துக்குவந்து
முனிவனெடுத்துவந்த காளகண்டபுரத்துக் கன்னிகை
யோடு கொண்டுபோய் வைத்துக்கொண்டது. அரசன்
வந்து மந்திரி குப்புறப் படுத்துக்கொண் டிருப்பதை

யும் மந்திரவாள் பூமியில் கிடப்பதையும் ராசகன்னிகையில்லாதிருப்பதையும் பார்த்து மனவருத்தமுற்று மந்திரவாளையெடுத்துக்கொண்டு மந்திரியிடத்தில்வந்து மந்திரியை யெடுத்து மார்போடணைத்துத் தைரியப்படுத்தி என்னசேதி? தெரியப்படுத்துமென்று கூறினன். மந்திரி கண்களைத் திறந்து பார்த்து தன் அரசனாக விருக்கவே எழுந்து உட்கார்ந்து சொல்லுகிறான்:—

ஓ ஆண்டவனே! தாங்கள் இவ்விடம்விட்டுப் போனவுடன் அண்டத்துக்கும் பூமிக்கும் ஒரே யுருவா யொன்று வந்தது; அதனைப் பார்த்தவுடன் இராசகன்னியைத் தள்ளிவிட்டு மந்திரவாளை எறிந்துவிட்டுப் பூமியில் குப்புறப்படுத்துக்கொண்டேன்; நீர்வந்து என்னைத் தேற்றினபின்பு நான் விழித்தேன்; ராசகன்னிகை எவ்வாறானாளோ ஒன்றுந்தெரியாதென்றனன். ராசன்கேட்டு மனவருத்தமுற்று ஆதெய்வமே! நான் இதுவரைக்கும் பட்டவருத்தம் விழலுக்கிறைத்த நீரைப்போலவும், காட்டினில்காய்ந்த நிலவைப்போலவும் வியர்த்தமாயிற்றே. கூட்டிவைத்த தெய்வம் மறுபடியும் கொள்ளைகொண்டதே! இந்த அனியாயம் எங்கு நடக்கும்! ஆ தெய்வமே! என்று புலம்பி, மறுபடியும் தைரியம்விடாமல் மந்திரி! இவ்வளவுதான் கஷ்டப்பட்டு வியர்த்தமாயிற்று; இனி கலிங்கராஜனிடத்திற் செல்வதிற் பயனில்லை; ஏறு குதிரையில் கருத்துக்கிசைந்தபடி செல்லுவோமென்று மந்திரி குதிரையின்மே லேறினன். அரசனுங் குதிரைமேலேறி முகம்விட்ட வாக்கில் குதிரையை நடத்தி பாலைநிலத்தில் வந்தனர். அங்கு முன்னம் நண்புற்ற புலியிருந்தது; அரசன் குதிரையைவிட்டிறங்கி அதனருகிற் சென்று தான் ராசகன்னிகையைக் கொண்டுவந்து பின்பு அந்த ராசகுமாரத்தி போனவழி தெரியாமல் ஒரு முனியெடுத்துப்போனதுஞ் சொல்லினான். புலி ஓ அரசனே! நீ அஞ்சாதே; ராசகன்னிகையைக் கொண்டுபோனது சடாமுனி; அது இருக்கிறது பாதாளலோகம்; முன்னம் காளகண்டபுரத்து ராஜன் குமாரத்தியையும் இவ்வாறு தூக்கிக்கொண்டுபோய் வைத்திருக்கிறது; நீ காளகண்டபுரத்து அரசனிடத்திற் போய் உன் குமாரத்தியைக் கொண்டு வருகிறேனென்று கூறு; அவ்வரசன் தாம்பூ



லம் கொடுப்பான்; அதனை வாங்கிக்கொண்டு அந்த ராஜனிடத்தில் நூறுலட்சம் யோசனையுள்ள இரும்புச்சங்கிலி வாங்கிக்கொண்டு அந்தயிடத்தில் வந்து என்னை நினை; நான்வந்து உபாயஞ் சொல்லுகிறேனென்று கூறிப்போயிற்று.

அரசனும் மந்திரியும் காளகண்டபுரத்திற் சென்று அரசனைக் கண்டு ஓ மகாராசனே! உன் குமாரத்தியைக் கொண்டுவருகிறேனென்று கூறினன். அரசன் கேட்டு மகிழ்ந்து இருவருக்கும் விருந்தளித்து தாம்பூலங் கொடுத்தனன். ராஜகுமாரன் ராஜனைப்பார்த்துச்சொல்லுகிறான்: ஓ அரசனே! எனக்கு ஒரு உபகாரஞ் செய்யவேணும்; அதென்னவென்றால்: நூறுலட்சம் யோசனையுள்ள இரும்புச்சங்கிலி செய்துகொடு வென்றனன். ராசன் அதுபோல் செய்துக்கொடுத்தான்; ராசகுமாரன் பாலைநிலத்தில் சேர்ந்து புலிராஜனை நினைத்தனன்; புலி வந்து ஓணானை யழைத்து அதன் கழுத்தில் சகல மிருகங்களும் வரவேண்டுமென்று ஒரு சீட்டெழுதி யனுப்பிற்று. ஓணான் நடுகாட்டிற்குச் சென்று மிருகங்களைக் கண்டு தலையையாட்டிற்று; அதனை மிருகங்கள் கண்டு நமது நண்பன் புலியரசன் நம்மை யாவரையும் வரவழைக்கச் சொன்னானென்று சகல மிருகங்களும் ஒருமித்து வந்தன; புலியரசன் பார்த்து ஓ மிருகங்களே! இந்த இடத்திற்கும் பாதாளலோகத்திற்கும் பூமிக்கும்வழியுண்டாக பூமியைத் தோண்டுங்களென்று கட்டளையிட்டது. மிருகங்களெல்லாம் ஒருமுகூர்த்தத்தில் தோண்டிபாதாளலோகத்திற்கும் பூமிக்கும் வழியுண்டாகிப்போட்டுப் போய்விட்டதுகள். புலி ராஜகுமாரனை யழைத்துச் சங்கிலியைப் பிலத்துவாரத்திற்கும் பூமிக்கும் சரம்போலச் செய்து மந்திரிகுமாரனைப் பத்திரமாக நிறுத்தி அந்தச் சங்கிலியை வலிக்கக் கற்றுக்கொடுத்து இராசகுமாரனை யழைத்து ஓ அரசனே! இந்தச்சங்கிலிவழியாகப் பாதாளலோகஞ் செல்லும்; அங்கு ஒரு ஆலமரம்தோன்றும்; அதின்பொந்தில் ராசகுமாரத்திகள் இருவருமிருப்பார்கள்; உன் வல்லமையால் அந்தச்சடாமுனியை கொன்றுவிட்டு இவ்வழியாக ஒவ்வொருவராகச் சேர்ந்து சுகமாயிருங்களென்று கூறிப்போயிற்று. ராசகுமாரன் மந்திரி

குமாரனை பத்திரமாக யிருக்கச்சொல்லித் தான் பிலத்து
வாரத்தி லிறங்கிப் பாதாளலோகம்போய் அங்குசுற்றிப்
பார்க்கும்போது அங்கு ஒரு ஆலமரம் இருக்கக்கண்டு,
அந்த ஆலமரத்தடியில் வந்து ஏறிப்பார்க்கும்போது
பொந்தில் அமிர்தவல்லியும்காளகண்டபுரத்தரசன்குமா
ரத்தியு மிருக்கிறதைக் கண்டான். ராசகுமாரத்திகள்
கண்டு மகிழ்ந்து தட்சணம் தங்கள் இருப்பிடத்தில் ஓரி
டத்தில் ஒளித்துவைத்து சற்றுநேரமிரும்; சடாமுனி
வரும்; அது வந்தவுடன் சற்றுநேரம் படுத்திருக்கும்;
அது தூங்கும்போது அதனைவெட்டி தலைமாற்றிப்
போட்டுவிட்டால் அம்முனி சாகும். அதன்பின்பு போ
வோமென்று கூறினர். இராசகுமாரன் அக்கருத்துக்
கிசைந்தனன். சடாமுனியும் வந்துவிட்டது; இராசகன்
னிகைகள் ஒன்றுந் தெரியாதவர்போ லிருந்தனர்; முனி
கொண்டுவந்த கனிகளைக் கொடுத்து நித்திரைபோய்
விட்டது; நல்ல நித்திரையில் இராசகுமார னெழுந்து
வீராவேசங்கொண்டு சடாமுனியை இரண்டுதுண்டாக
வெட்டி தலைமாற்றி கிழித்தெறிந்துவிட்டான்.

முனி இறந்தபிறகு ராஜகுமாரத்திகளை அழைத்துக்
கொண்டு பிலத்துவாரத்தின் அருகில்வந்துஒவ்வொருத்
தியாக முன்னம் அனுப்பிவிட்டு முடிவில் தான் சங்கிலி
யைப்பற்றி வரும்போது மந்திரிகுமாரன் இரண்டு ராச
குமாரத்திகளின் ரூபத்தைக்கண்டு அவர்களைத் தானனு
பவிக்க காதல்கொண்டு அரசனைக் கருதி தவறிவிட்ட
வனைப்போல சங்கிலியை யறுத்துவிட்டான். மந்திரி
குமாரன் ராசகன்னிகைகள் இருவரும் தன்னை நம்ப,
தான் நிலத்தில் விழுந்து புரண்டு புரண்டு அழுது என்
ஆண்டவனே! இறந்தாயோ! என்னசெய்வேனென்று
புலம்பித் தேறியவன்போலத் தேறி ஓ மாதர்களே;
நான் என்னசெய்வேன்? என்னரசனுக்கு விதிகிழிந்த
மையால் இரும்புச் சங்கிலி யறுந்தது; இனி இங்கிருப்
பதிற் பயனில்லை; நாம் போவோம் வாருமென்று கூட்
டிக்கொண்டு வழியில் தன்னைப் புணர இரண்டுபேரை
யும் இனியவசனத்தால் கரைத்து கலிங்கப் பட்டணத்
திற்குவந்து அங்கு ஒரு இளஞ்சோலையி லிறங்கிச் சோ
லைக்காவலாளிகளை யழைத்து அடா காவலாளிகளே!



உமது குமாரத்தியும் ராசகுமாரனும் வந்திருக்கிறா
ரென்று உங்கள் அரசனுக்குச் சொல்லுங்களென்று
கூற, காவலாளிகள் ஓடிவந்து அரசனிடத்திற்சொல்லு
கிறார்: ஓ சுவாமி! உங்கள் குமாரத்தியோடு ஒரு ராசகுமா
ரன்வந்து இளஞ்சோலையிலிருக்கிறார்; அந்தச்சேதி தங்
களுக்குத் தெரிவிக்கிறேனென்றுகூற, அரசன் கேட்டு
மகிழ்ந்து மந்திரி பிரதானிதண்டத்தலைவர் யூகத்தலைவர்
அணித்தலைவர் நட்டுமுட்டி நாடகசாலையோடுவந்துமந்
திரிகுமாரனைக்கண்டு ஆனந்தங்கொண்டு மந்திரிகுமார
னைப்பார்த்து ராசகுமாரன்தானென்று தீர்மானித்துக்
கொண்டு சொல்லுகிறார்: ஓ ராசகுமாரகா! இந்தக்கன்னி
யாரென்றுவினவ, இந்தக்கன்னி காளகண்டத்தரசன்
குமாரத்தி; உன்குமாரத்தியைக் கொண்டுவரும்போது
சடாமுனி இந்தப் பெண்ணையும் பாதாளலோகத்தில்
ஆலமரத்து பொந்தில் வைத்திருந்தது; நான் பாதாள
லோகஞ்சென்று அந்தச்சடாமுனியைக் கொன்றுவிட்டு
பொந்தில் பார்க்கும்போது இருவராக யிருந்தனர்கள்;
இருவரையும் அழைத்துக்கொண்டுவந்தேன் என்றான்.
அரசன்பூரித்து மந்திரிகுமாரனை பட்டத்து யானையின்
மேலேற்றி இரண்டுகன்னிகைகளையும் முத்துச்சிவிகையி
லேற்றிக்கொண்டு நகர்வலம் வந்து அரண்மனைக்கு
அழைத்துப்போய் ஸ்நானஞ் செய்வித்து நல்லவுண
விட்டு தன் பட்டணத்தை மந்திரிகுமாரனுக்குக் கட்டி
அரசு செய்யச்சொல்லி சிலநாள் சென்றபின்பு மந்திரி
குமாரனையும் கன்னிகைகளையும் அழைப்பித்து விவாகம்
நடப்பிக்கவேணும்; உன்கருத் தென்னவென்று கேட்
டார். அதற்கு மந்திரிகுமரரன் உமது கருத்தின்படிசெய்
யுங்களென்று கூறினான். கன்னிகைகள் எங்களுக்கு
ஆறுமாதம் நோன்பு உண்டு; அந்த நோன்பு முடிந்த
வுடன் விவாகத்துக்கு நாளிட்டுக்கொள்ளலாமென்றார்.
மந்திரி அக்கருத்துக்கிசைந்தான்; ராசகன்னிகைக ளிரு
வரும் அந்தப்புரஞ்சேர்ந்து சுவாமியைத் தியானித்துக்
கொண்டிருந்தார்கள். அங்கே பாதாள லோகத்தில்
விழுந்த ராசகுமாரன் மூர்ச்சைதெளிந்து எழுந்து தெய்
வத்தை நினைத்துப் புலம்பி ஓ சாம்பவமூர்த்தி! இப்படி
யும் என்தலையில் விதித்தாயா! அண்ட நிழலில்லையே!



மூனி நித்திரையிலிருக்க கன்னிகைகளால் ராஜகுமாரன்வெட்டல். சங்கிலி மந்திரிகுமாரனுக்கு ராஜன்விழ இரண்டுபெண்களும் அழல்.

புலியினால் ராஜகுமாரனுக்கு கையும்காலும்பழையபடி வருதல். மந்திரிகுமாரனையும் இரண்டு பெண்களையும்யானைமீது ஏற்றி திருக்கோலம்வரல்.



நான் என்னசெய்வேன்! என்றுகூறி பஞ்சேந்திரியங் களை யடக்கி யோகத்தி லிருப்பவரைப்போ லிருந்தான். ஒருமாதமாயிற்று; இதற்குள் இராஜகுமாரனும் பசிமே லிட்டு களைவந்து மூடுகிறதருணமா யிருக்கிறவேளையில் பரமசிவன் பார்வதிசமேதராய்ப்பிரசன்னமானார்.ராஜகு மாரன் கண்டு சாம்பவமூர்த்தி வந்துவிட்டார்; இனி நமக்கு ஒரு பயமில்லையென்று மகிழ்ந்து ஆனந்தக்கூத் தாடி, ஹர! ஹர! சம்போ! என்று துதித்தான். சாம்ப சிவமூர்த்தியும் மகிழ்ந்து ஓராசகுமாரகா! உனக்கு வேண் டிய வரம் என்ன? கேட்டுக்கொள்ளென்று கூற, ராசகு மாரன் சொல்லுகிறான்: ஓ சுவாமி! அடியேன் பூலோ கம் போகவேண்டும்; அதற்குக் கருடரூபங் கொடுக்க வேண்டுமென்று. கேட்டான். சாம்பசிவமூர்த்தி அவ் வாறு கொடுத்து மறைந்தனர். இராசகுமாரன் அவ்வ ரத்தைப் பெற்றுக்கொண்டு பிலத்துவாரத்தடியில்வந்து கருட ரூபங்கொண்டு பாதாளலோகத்தைக் கடந்து பூலோகத்துக்குவந்து தன் சுயரூபத்தை யெடுத்துக் கொண்டு காளகண்டபுரத்துக்குவந்து அன்றிரவில்ஒரு ஔவையாரை யழைத்து, ஓ அம்மணி! இந்த ஊரில் அதிசயமென்னவென்று கேட்க, ஔவையார் சொல்லு கிறாள்: அப்பா! இந்த ஊர் ராசனுக்கு ஒரு பெண் உண்டு; அந்தப் பெண்ணை சடாமுனி எடுத்துப்போய் பாதாளலோகத்தில் வைத்துக்கொண்டது; அதனைக் கொண்டு வருகிறேனென்று ஒரு ராசகுமாரன் வந்து நூறுலட்சம் யோசனை நிகளம் இருப்புச்சங்கிலி யெடுத் துக்கொண்டு போனார். அதுதான் !நான் அறிவேன்; அதன்பின்பு ராசனையுங்காணோம், ராசகன்னிகையும் வர வில்லை; இதுதான் அதிசயமென்று சொல்ல, ராசகுமா ரன்கேட்டு ஓ! ஓ! மந்திரிகுமாரன் கலிங்கப்பட்டணஞ் சேர்ந்தானென்று மனதில் மதித்து அன்றிரவில்தானே பிரயாணமாகி எங்கும் நிற்காமல் காடு மலை வனம் வனாந் திரம் கடந்து அன்னம் ஆகாரமில்லாமல் பத்துநாளை யில் கலிங்கப்பட்டணத் தருகிலிருக்கும் அக்கிராரத்தில் ஓர் பிராமணன் வீட்டுத்திண்ணையின்மேல் விழுந்து களைத்துப்போனான். அவ்வீட்டு வேதியன் கண்டு ஓ! ஓ! இவன் ராஜகுமாரன்போ லிருக்கிறது, ஏதோ காலவித்தி

யாசத்தினால் பதிபனாதியாகவந்து பசியால் களைத்தா
ரென்று மதித்து, உடனே தன் மனைவியை யழைத்து
வீட்டிற் செய்திருக்கின்ற பாயசத்தைக் கொண்டுவரச்
சொல்லி அதில் கொஞ்சம் ராசகுமாரனுக்குக் குடிப்பித்
தான். ராசகுமாரன் களைதெளிந்து உட்கார்ந்து பிராம
ணனா யிருக்கவே அஞ்சலிசெய்து தான் பொசித்து பத்
துநாளாச்சுதென்று சொல்ல, வேதியன் பலபதார்த்தத்
தோடு அன்னமிட்டான். ராசகுமாரன் உண்டு களையாறி
னான். வேதியன் அருகில் உட்கார்ந்து யோகக்ஷேமங்
களை விசாரித்தான். ராஜகுமாரன் தன்சேதியை தெரிவிக்
காமல் ஓ ஐயா! இந்தக் கலிங்கப்பட்டணத்தில் ஏதாவது
அதிசயம் உண்டோ? என்றான். வேதியர் சொல்லுகின்
றார்: ஓ ராசகுமாரகா! இவ்வூர் ராசகுமாரன் குமாரத்தி
யை ஒரு யானைகொண்டுபோயிருந்தது; ஓர் ராசகுமாரன்
அந்த யானையைக்கொன்று கன்னிகையைக் கொண்டுவந்
தான். இவ்வூர் ராசன் அவனுக்குத் தன் பட்டத்தைக்
கட்டி கல்யாணத்துக்கு எத்தனஞ்செய்ய அக்கன்னிகள்
ஆறுமாதத்திற்கு நோன்புண்டென்று தடுக்கிறார்கள்;
ராசகுமாரன் அரசுசெய்து வருகிறான்; இதுதான் அதி
சயம் வேறொன்று மில்லையென்று கூற, இராசகுமாரன்
அதுகேட்டுஇன்னம்மீறிப்போகவில்லை; இதற்குள் நாம்
வெளிப்படலாமென்று கருதி, இரண்டு மூன்றுநாள்
அங்கிருந்து ஓர்நாள் மகர குண்டல ஆர கேயூர மகுட
முதலியவற்றை வேதியரிடத்து ஒப்புவித்துத் தன்னந்த
னியே கலிங்கப்பட்டணத்துக்கு வந்தான்.

பிறகு நகர்முகவாசலில் காவலாளிக்கு மந்திரிகுமா
ரன் யாராவது ராசவடிவாக பாதசாரிவந்தால் அவனைப்
பிடித்துக் காட்டிலே கொண்டுபோய் ஒருபக்கத்துக்காலை
யும் கையையும் வாங்கிப்போட்டு வாருங்களென்று கட்
டளையிட்டிருக்கிறான். ஆதலால் காவலாளிகள் இந்த ரா
ஜகுமாரனைபபார்த்து யாவருமொன்றாகக்கூடி சேர்த்துப்
பிடித்து காட்டில்கொண்டுபோய் எள்ளளவேனும் யோ
சிக்காமல் ஒரு காலையும் கையையும் வாங்கிவிட்டார்கள்.
ராசகுமாரன் மனவருத்தமுற்று ஓ! ஓ! சாம்பசிவா! என்
தலைவிதி இன்னும் தீரவில்லையா! நான் யாரை அநியா
யஞ் செய்தேனோ எனக்கு இந்த அவதி வந்ததென்று



புலம்பி முடிவில் தனக்கு நேசமாகிய புலிராசனை
நினைத்தான். ஏதோ நமது அன்பனுக்கு ஆபத்துவந்த
தென்று அதுஓடோடியும்வந்து ராசனிருக்கிறகெதியைக்
கண்டு என்னவென்று வினவிற்று. ராசகுமாரன் சொல்
லுகிறான்: ஓ புலிராசனே! நானொரு பாவமு மறியேன்;
கலிங்கப் பட்டணத்திற்கு போகும்போது காவலாளிக
ளென்னை இக்கோலமாக்கினாரென்று கூறி, முன்வரலாற்
றையும் எடுத்துரைத்தான். புலிராஜன்கண்டு ஓ ராசகுமா
ரகா! நீ ஒன்றுக்குமஞ்சாதே; இங்கேதானேயிருமென்று
சொல்லிவிட்டு, புலி அக்காட்டில்தவஞ்செய்துக்கொண்
டிருக்கிற தனது குருவாகிய முனிவரிடம் சென்று ராஜ
குமாரனுக்கு நேர்ந்த ஆபத்தைச் சொல்லி, ராஜகுமார
னுக்குக் கையும் காலும் வளரும்படி கிருபை செய்ய
வேண்டுமென்று பலதரம் வணங்கிற்று. அம்முனிவர்
கிருபைகூர்ந்து ஒரு மந்திரத்தை யுச்சரித்து கால்வரவே
ண்டுமெனறால் வரும், போகும்; இதனை உன் சினேகித
னுக்குப்போய்ச் சொல்லுமென்று யனுப்பினார். புலி
அந்த மந்திரத்தை ராசகுமாரனுக்கு உபதேசித்து கை
கால் வரவேண்டுமென்று சொல்லு; கைகால்வரும், போ
வென்றால் போகும்; இதனைப் பத்திரமாக வைத்துக்
கொள்ளுமென்று சொல்லிப் போய்விட்டது.

இராசகுமாரன் சந்தோஷத்தையடைந்து அம்மந்
திரத்தை யுச்சரித்துக் கைகால் வரவேண்டுமென்றான்.
கைகால்வந்தது; பார்த்து மகிழ்ந்து மறுபடியும் கைகால்
போவென்றான் போய்விட்டது; அந்த நொண்டியாகத்
தன் உருவத்தை மாறுவேஷமாக்கித் தன்னுடைய ஆப
ரணத்தையெல்லாம் ஒருவிடத்தில் புதைத்துவிட்டு குப்
பையில் கிடக்கும் கந்தைகளைப் பொறுக்கி தலைக்கும்
இடைகளுக்கும் உடுத்திக்கொண்டு மாற்றுருவமாகப்
பட்டணத்துக்குள் பிரவேசித்து ஒரு பூவாண்டிச்சி வீட்
டிற்சேர்ந்து அவளிடத்தில் நான் தோட்டவேலையைப்
பார்க்கிறேன், அன்னமிடுவாயாவென பேசிக்கொண்டு
அவள் அமுதிட, அதையுண்டு அவள் பூந்தோட்டவே
லையைப் பார்த்துவந்தான். இரண்டுமூன்று நாளானவு
டன் ஒருநாள் பூவாண்டிச்சி பூத் தொடுக்கும்போது

இந்த ராசகுமாரனாகிய நொண்டி வந்தனம் செய்து யாருக்கு பூத்தொடுக்கிறாயென்றான்.

பூவாண்டிச்சி சொல்லுகிறாள்: அப்பா! இந்நகரத்தரசன் மகளை யானை யெடுத்துப்போயிருந்தது; யாரோ ராசன் அந்த யானையைச் சங்கரித்து அந்த ராசகுமாரத்தியைக் கொண்டுவந்தான்; இவ்விருவருக்கும் இந்தப் பூமாலையைக் கட்டிக்கொண்டுபோய்க்கொடுத்தால் அவர்கள் ஏதாவது பொருளுதவி செய்வார்கள்; அதனால் சீவனஞ் செய்கிறதென்று சொன்னாள். ராசகுமாரன் நல்லதம்மணி நான் ஒரு பூமாலை கட்டிக் கொடுக்கிறேன்; அதையுங் கொண்டுபோவென்று சொல்லி, இரண்டு ராசகுமாரத்திக்கும் இரண்டு ரவிக்கைபோல் பூவால் தொடுத்துக்கொடுத்தான். கன்னிகைகள் கண்டு விந்தையாயிருக்கவே, இதேது இன்றையத்தினம் நூதனமாகப் பூத்தொடுத்து வந்தாயென பூவாண்டிச்சி, ஓ அம்மணி! யாரோ ஓர் முடவன் என் பூந்தோட்டத்துக்கு வேலைக்கு வந்திருந்தான். அவன் கட்டினானென்றாள். அப்படியாவென்று இரண்டு கன்னிகைகளும் நூறுபொன் கொடுத்தனுப்பினார். பூவாண்டிச்சி மகிழ்ந்து வீட்டுக்கு வந்தவுடன் முடவன்மேல் அன்புடையவளாகி பாதுகாத்து வந்தாள். மற்றாநாள் முடவன் இரண்டு கன்னிகைகளுக்கும் பாவாடை ரவிக்கை பூவால்தொடுத்து கைச்செண்டு இரண்டு செய்து அதில் ஒரு செண்டில் தன் கணையாழியை வைத்து அதனைப் பொட்டளமாக்கி பூவாண்டிச்சி கையில் கொடுத்தனுப்பினான். பூவாண்டிச்சி அதனை தன்எஜமானியாகிய அமுர்தவல்லியிடங் கொடுத்தனள். அமிர்தவல்லி பொட்டளத்தை எடுத்துப்பார்த்து அதில் கணையாழியைக் கண்டு ஓ! ஓ! இதென்ன ஆச்சரியமென்று எழுந்து தனியே ஓரிடத்திற்போய் நன்றாகப் பார்த்தார்கள். தன்னைச் சிறைமீட்டின இராசனுடைய கணையாழியாக யிருக்கவே கண்ணில் ஆனந்தபாஷ்பம் பொங்க ஆனந்தமாகிப் பரமனைத் தியானித்து காளகண்ட நகரத்தரசன் குமாரத்தியை யழைத்துக்கொண்டு அந்தரங்கமானவிடத்தில் வந்துகணையாழியைக் காட்டி, அடி தங்காய்! நமது சிறைமீட்டின ராசகுமாரன் பூவாண்டிச்சி வீட்டி லிருக்கிறான்; நாம் செய்தநோன்பு



நமக்குப் பலித்தது; இனி குறைவில்லையென்று சொல்லி இருவரும்வந்து பூவாண்டிச்சியை யழைத்து உன்வீட்டிலிருக்கிற முடவனுக்கு யாதொரு குறைவும் வராமல் உண்டி முதலியவை யுதவி என்ன கேட்கிறானோ அதனை வாங்கிக்கொடு செலவுக்கு வேண்டியதைத் தருகிறேனென்று கூறி, அவள் சுமக்கத்தக்க திரவியங்கொடுத்தனுப்பினர். பூவாண்டிச்சி முடவனுக்கு வேலையிடாமல் சுகமாக வைத்திருந்தாள். அங்கே கலிங்கதேசத்தரசன் தன்குமாரத்தி யிடத்துவந்து, ஓ அம்மணி! நீ சொல்லிய கெடுவின் ஆறுமாதமாயிற்று, இனி கலியாணத்துக்கு விடைகொடென்று வினவ, கன்னிகைக ளிருவரும் கலியாணத்திற்கு விடை கொடுத்தனர். ராசன் சபைக்குவந்து வேதியரை யழைப்பித்துஒருமுகூர்த்தம் வைத்து நகரத்தை அலங்கரிக்க உத்திரவு செய்து கலியாணமண்டப மியற்றி வைத்து ராசர்களுக்கு மணவோலை அனுப்பினான். மணவோலையைக்கண்டு சகலதேசத்தரசர்களும் வந்தனர். இந்த மந்திரிகுமாரன் தந்தையாகிய திருவிலாசமந்திரியும் ராஜகுமாரன் தந்தையாகிய காளகண்டத்தரசனும் வந்தார். கலிங்கத்தரசன் மந்திரிகுமாரனை அலங்கிர்தஞ் செய்து யானையி லேற்றி காளகண்டத்தரசனை யழைத்துக்கொண்டு அபூர்வபுரத்திற்கு வந்து மந்திரியைக் கண்டான்.

காளகண்டத்தரசன் களிப்புற்று மகளைத்தழுவி எல்லாம்இந்தஅரசன் நடத்துகின்றமையால்அதுவேஎனக்கிசைந்ததுதானென்று பெண்களிருவரையும்அலங்கிர்தஞ்செய்து மந்திரிகுமாரனையானையிலேறச்சொல்லினர். இரண்டு கன்னிகைகளும் எங்களுக்கும் யானை வேறே வேண்டுமென்றனர். சகலராஜர்களும் பிதாக்களுந் திடுக்கிட்டு இது ஏதோ ஒருவிபரீதத்திற்கு இடமாயிருக்கிறதென்று மனதில் நினைத்துக்கொண்டு பெண்கருத்தின்படி வேறே யானையைச் சிங்காரித்துக் கொண்டுவந்தனர். பெண்ணிருவரும் அதிலேறி முன் மந்திரிகுமாரனும் பின்பு தாங்களுமாகத்திருக்கோலம் கலியாணமண்டபஞ் சேர்ந்து திறையிடச்சொல்லி இரண்டு கன்னிகைகளுமிருந்தனர். வேதியர் மந்திரிகுமாரனை மணவரையிலிருத்தி கலியாணச்சடங்குகளெல்லாம் முடித்து மங்கி

லியத்தையெடுத்து மந்திரிகுமாரன்கையில் கொடுத்தனர். அத்தருணத்தில் பூவாண்டிச்சி வீட்டிலிருக்கிறராசகுமாரன் சரிகை உறுமாலே தலையிற்கட்டி பாசிபந்து மகரகண்டி கையிலணிந்து நல்லவஸ்திரமுடுத்தி தொண்டிக்கொண்டு கலியாண சபைவந்து சேர்ந்தான். வேதியர் ராசகன்னிகைக ளிடத்துவந்து மங்கிலியந்தரிக்க உத்திரவுதாருமென்றார். அமிர்தவல்லி கடுஞ்சினமடைந்து ஓ பிராமணா! சற்று நிதானி; நான் ஒருவிண்ணப்பம்பண்ணிக்கொள்ளுகிறேன்; அதைக் கவனமாகக் கேளும் என்றுவினவ, பிராமணன்சபையார்க்குத் தெரிவித்தான்.

சபையோர் கேட்டு அதென்ன விபரீதம் விளைகிறதோ தெரியவில்லையென்று கருதி, இராசகுமாரத்தியின் விண்ணப்பத்துக்கு எதிர்பார்த்திருந்தனர். ராசகுமாரத்திக ளிருவரில் அமிர்தவல்லி சொல்லுகிறாள்: ஓ அரசர்களே! வந்தனம்; அடியேன் பெண்பால்; என் சொல்லை குற்றமாக்கொள்ளாமற் கேட்கவேண்டுமென்று சொல்லுகிறாள்: என்னைச் சிறைமீட்டின ராசகுமாரன் இந்த மணவரையி லிருக்கின்றவ ரல்லர். அவருக்கு மந்திரி. அந்தராசகுமாரன் என்னைச் சிறைமீட்டி இந்தநகரத் தோப்பில் கொண்டுவந்து இவர் மடியில் என்னை வைத்துத் தன் மந்திரவாளை இவர் கையில் கொடுத்துவிட்டு சந்தியானுஷ்டானஞ் செய்யப் போயினர்; இதற்குள் முனி வந்து அண்டத்துக்கும் பூமிக்கும் வளர்ந்து என்னை எடுக்கவந்தது, இந்த வீரர் அதைப்பார்த்து பயந்து என்னை அந்த முனியிடத்தில் தள்ளிவிட்டு வாளை எறிந்துவிட்டு குப்புறப் படுத்துக்கொண்டார்; அந்த முனிபகவான் என்னை எடுத்துப்போய் பாதாளலோகத்தில் ஒரு ஆலமரப்பொந்தில் வைத்துக்கொண்டது; அதன்பின்பு அவரெவ்வாறாயினரோ அதுசேதி குறுக்கப்போகிறவரைக்கேட்டால் தெரியும்; சிலநாளில் அந்தராசன் பாதாளலோகத்திற்குவந்து அச்சடாமுனியைச் சங்கரித்து என்னுடன் சிறையிருந்த இந்தக்கன்னிகையும் அழைத்துக்கொண்டு பிலத்துவாரத்தடியில் வந்து முன்னம் என்னையனுப்பிப் பின்பு தான்வந்தார்; இந்த மணவரையி லிருக்கிற புண்ணியவான் அவரை மோசஞ்செய்து சங்கிலியை அறுத்துவிட்டான்.



பின்பு இந்தப் புண்ணியவான் எங்களைக் கலியாணஞ் செய்துக்கொள்ளச்சொல்லி போதித்தான்; இங்கு வந்தவுடன் நாங்களிருவரும் அவர் வருவதற்காகஆறு மாதம் நோன்புநோற்றோம்; ஆண்டவர் கிருபையால் நமது பூவாண்டிச்சி வீட்டில் அவர் ஒருகாலும் ஒருகையும்போய் வந்திருக்கிறார்;அவரை யழைத்துக்கேட்டால் மற்றசேதி விபரமாய்த் தெரியுமென்றாள். அரசன்கேட்டு வியப்படைந்து தட்சணம் தூதரை பூவாண்டிச்சி வீட்டுக்கு அனுப்பினான்; பூவாண்டிச்சிவீட்டில் ராசகுமாரன் இல்லாமையால் தூதர் மறுபடியும் கலியாண மண்டபம் வந்து ராசகுமாரனைக்கண்டு தழுவி சிங்காதனத்திலிருத்தி நடந்த வரலாற்றைச் சொல்ல வினவினன், மணவறையிலிருந்த மந்திரிகுமாரன் நடுக்கமுற்று மூர்ச்சையாயினன். அவனை அரசன் ஒரு அறைவீட்டிலடைத்துவைக்கக் கட்டளையிட்டான். ராஜகுமாரன் சிங்காதனத்திலிருந்து ஓ! அரசர்களே! இதோயிருக்கிற திருவிலாவரசனுடைய புத்திரன் நான். அவன்மந்திரியின் குமாரன் நாங்க ளிருவரும் தேசாந்திரியாகி இந்த ராஜனைக்கண்டு இந்தக் கன்னிகையை அழைத்துவர உத்திரவுபெற்று யானையைக் கொன்றுவரும்போதுசடாமுனி இந்தக் கன்னிகையை எடுத்துப்போக, அதனை யான் கேட்டு ஒருபாலை நிலத்திற் சென்று முனியைக்கொன்று இரண்டு கன்னிகைகளையும் பூலோகத்திலேற்றி நான் வரும்போது சங்கிலியை மந்திரி யறுத்துவிட்டான், அதனால் விழுந்து பரமனைத் தியானித்து அவரால் கருடரூபந் தரித்து பூலோகத்துக்குவந்துமுன்னம் காளகண்ட நகரம்வந்து பத்துநாளாய் அன்ன ஆகாரமில்லாமையால் இந்நகர் அக்கிராரத்தில்வந்து வேதியரால் உபசரிக்கப்பட்டு இரண்டு மூன்றுநாள் பொறுத்து இந்நகரத்துக்குள் வரலாமென்று வரும்போது இம்மந்திரிகுமாரன நான் வருவேனென்கிற நிச்சயந் தெரிந்து சேவகருக்கு என் குறிப்புச்சொல்லி ஒருகாலையும் கையையும் வாங்கிவிடச்சொல்லி யிருந்தான, சேவகர்கள் அவ்வாறு என்னை பங்கப்படுத்தினார்கள். நான் அழுது புலம்பி என் சினேகிதனாகிய வேங்கைராஜனை நினைத்தேன். அதுதன் குருவினிடத்துச் சென்று ஒரு மந்தி





ரத்தைக் கற்றுவந்து எனக்கு உபதேசித்து அதனால் கைகால் வாவென்றால் வரும் கைகால் போவென்றால் போகும் அதையும்பெற்றுக்கொண்டு முன்போல் முடவனாகி ஆபரணங்களையெல்லாம் ஓரிடத்தில் புதைத்துவிட்டுப் பிச்சைக்காரனைப்போல் வேடந்தரித்து மற்றொருவழியாய் பூவாண்டிச்சி வீடுசேர்ந்து ஒரு மாலைகட்டி அதில் என் கணையாழியை வைத்தனுப்பினேன். அமிர்தவல்லி புத்திசாலியாகையால் அக்குறிப்பு அறிந்து நல்ல சமயத்தில் இச்சமுகத்தில் என்வரலாற்றைச் சொல்லினள். நானும் அதற்கு பின் நடந்தவற்றைக் கூறினேன். இனிநான் நொண்டியானேன் என்ன பிரயோசனம் போவென்று கூறினன்.

பின்பு இரண்டு கன்னிகைகளும் திரையைவிட்டு வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து ஓ ஸ்வாமி! நீங்கள் எவ்வாறிருந்தாலென்ன? எங்களுக்கு நாயகனாயிருக்கிறதுதான் பிரதானம்; மற்றவையெல்லாம் எங்களுக்கு வேண்டியதில்லை. ஆதலால் அடியோமீது கிருபைகூர்ந்து விவாகத்துக்கு இசைய வேண்டுமென்று கூறினர். பிதா ஒருபக்கம் வந்து அப்பாமகனே! என்னை விட்டுப் பிரிந்து இவ்வளவு வருத்தத்தை யடைந்தாயோ? நல்லது; இக்கன்னிகைகள் மனதின்படி விவாகத்துக்கிசைய உனக்குக் குறையென்ன யிருக்கிறதென்று சொல்ல; இராசகுமாரன்கேட்டு என்சினேகிதனொருவன் இருக்கிறான். அவனோடு யோசிக்கவேண்டியது அவனை இங்கனுப்பிவைக்கிறேன் நீங்கள் அஞ்சாதிருங்களென்று சொல்லிப் புலியை நினைத்தான்; புலி நகரத்துக்குவந்து கலியாணமண்டபத்துக்கு வந்துசேர்ந்தது. ராசகுமாரன் தட்சணம் இரண்டு கன்னிகைகளையும் வரச்சொல்லி தானும் அந்தப் புலியை வணங்கி உன்னால் பெருமையடைந்தேன்; நீ எப்படி உத்திரவு கொடுக்கின்றனையோ அப்படி நடக்கிறேனென்று சொல்ல, புலி நகைத்து ஓ இராசகுமாரகா! ஒருவராலும் அறியக்கூடாத சாம்பசிவ மூர்த்தியைத்தெரிசித்தவன் உனக்குக்குறைவு என்னயிருக்கின்றது? மந்திரிகுமாரனை அவன் பிதாவிடத்திற் சேர்த்துவிட்டு கன்னிகைகளை நீ மணந்து சுகித்திருவென்று சொல்லிப் போய்விட்டது. ராசகுமாரன் மந்திரி

குமாரனை அழைத்துவந்து அவன் பிதாவிடத்திலே ஒப்
புவித்துவிட்டு கருடரூபங்கொண்டு யாவரும் பார்க்கப்
பறந்து மறுபடியும் மந்திரோபதேசஞ்செய்து கைகால்
களையுண்டாக்கிக்கொண்டு மணவறையிலிருந்து இரண்டு
கன்னிகைகளையும் மணந்து தாய்தந்தையர்க்கும் வணங்
கித் தனக்குச் சகாயஞ்செய்த வேதியர்க்குச் சில பூமி
கொடுத்து சுகத்தில் வைத்துக் கலிங்கநகரத்திற்குத் தலை
வனாக அரசுசெய்து மனைவிகளோடு சுகித்திருந்தான்.
இவ்வகைப்பட்ட ராசகுமாரனல்லவோ உன்னை மாலை
யிட வேண்டுமென்று சொல்லிக் கதை முடித்தனன். சூரி
யன் உதயமானான்; மந்திரிகுமாரன் அரண்மனைக்குச்
சென்றான்; இராசகுமாரத்தி அந்தப்புரஞ் சென்றாள்.

பத்தாம்நாள் கதை-முற்றிற்று.

---

## பதினோராவதுநாள் கதை

### பிராமணப்பிள்ளை அன்னதானப்பலனை யறிந்தது

பதினோராநாளிரவில் மந்திரிகுமாரன் உண்டு ஆப
ரணாலங்கிர்தனாகிப் பரிமளமிகுந்த நறுமலர் மாலைசூடி
தாமபூலந்தரித்துப் பள்ளியறை சேர்ந்தான். ராசகுமா
ரத்திகளில் மூத்தாள் ஸ்நானஞ்செய்து உண்டு கலவைச்
சாந்தணிந்து ஆடையாபரணாலங்கிர்தளாகி பரிமள
மிகுந்த நறுமலர் மாலைசூடி வழக்கப்படி வருகிறதுபோல்
பள்ளியறைக்குவந்து சற்றுநேரம் வீணையைப் பாடிக்
காமமீறிகணவனையணையவந்தாள். மந்திரிகுமாரன்கண்டு
இவள் காதலைக் கதையால் தணிக்கக்கருதி ஓ பெண்கள்
நாயகமே! நான் ஒரு சிறியகதை சொல்லுகிறேன்; அது
முடிந்தவுடன் இருவருங் கூடலாமென ராசகுமாரத்தி
அக்கருத்துக்கிசைய மந்திரிகுமாரன் சொல்லுகிறான்:—

கேளும் பெண்கட் கரசியே! கலிங்கதேசமென்று
ஒரு பட்டணம் உண்டு. அதிலே ஒரு அக்கிராரம் உண்டு
அந்தக் கிராமத்திலே ஒரு பிராமணன் உபாதானமெ
டுத்து சீவனஞ்செய்துவந்தான். அந்தக்கிராமத்திலிருக்
கிறவர்கள் அந்தப் பிராமணனுக்குத் தங்கள் சத்தியா



னுசாரம் பொருளுதவிசெய்து படியரிசியைத் தன்னு
டைய ஜீவனத்திற்கு வைத்துச் சுகித்துவந்தார்கள். சில
நாள்போனபின்பு சுவாமியின் அனுக்கிரகத்தால் ஒரு
புத்திரனானவன் பிறந்தான். அந்தப் புத்திரனுக்குத்
தாய்தந்தையர் தங்களுடைய சத்தியானுசாரம் வேத
விதிப்படி பிராமணச் சடங்குகளை நிறைவேற்றி ஐந்து
வயதானபின்பு பள்ளிக்கு வைத்தார்கள். அப்புத்திரன்
பள்ளிசேர்ந்து நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறு
பத்துநாலு கலைக்கியானம் மனுவிக்கியானம் முதலியவற்
றை ஓதினான்; பதினொருவயதாயிற்று; அக்காலத்தில்
பிதா யிறந்துவிட்டார்; பிதாவுக்குச் செய்யவேண்டியகரு
மங்களையெல்லாம் நிறைவேற்றித் தானும் மாதாவுமாக
வீட்டிலிருந்தவர்மாத்திரம் கூலிகுத்தி அதிற்கிடைத்த
அமுதுபடியைக் கொண்டுவந்து சமையல்செய்துவேதி
யருக்கு அன்னமிட்டு மிச்சமிருந்ததைத் தானும் தன்
புத்திரனும் பொசித்துக் காலத்தைக் கழித்துவந்தாள்.

பின்பு ஒருநாள் இந்தப் பிராமணப்பிள்ளை அன்னை
கொண்டிருக்கிற விரதத்தை நினைத்துக்கொண்டு சற்று
நேரம் யோசித்து தனக்கொன்றுந் தோன்றாமற் போக
வே தாயிடத்துவணங்கி ஓ அம்மணி! நமதுஸ்திதியோ
கூலிகுத்தி அதில்வரும் அமுதுபடியல்லது வேறுஜீவ
னமில்லை; அப்படியிருக்க நீங்கள்தினம் ஒரு வேதிய
னுக்கு அன்னமிடாமல் பொசிக்கிறதில்லை; இந்த விர
தத்தினால்வரும் பயனென்ன? என்றுவினவ, தாயாருஞ்
சிரிப்புற்று அப்பாபுத்திரா! பெரியோர்கள் கூறப்பட்டி
ருக்கிறது சோடசதானத்திற் சிறந்தது அன்னதானமும்
நிதானமுமென்று சொல்லுவார்கள். அதில் அன்னதா
னம் அதிகதானமென்று எங்கள் தாதைமூதாதைகளால்
சொல்லகேட்டிருக்கிறேன், ஆதலால்தான் அன்னமிடுகி
றதை ஒருவிரதமாகக்கொண் டிருக்கிறேனென்று கூற,
புத்திரன் வணங்கி ஓ அம்மணி! அந்த அன்னதானத்
தின் பலன் என்ன? அதனை விளங்க உரைக்கவேண்டு
மென்று வினவ, தாய் சொல்லுகிறாள்: அப்பா! நான்
எங்கள் மூதாதை சொன்னதைக் கேட்டேனன்றி அன்
னதானத்தின் பலன் இன்னதென்று கேட்டதுமில்லை;
அன்னவர்கள் சொன்னதுமில்லை; மேலும் அன்னதா

னத்தின்பலன் சாஸ்திரங்களால் கூறத்தக்கது; இவ்வுல
கத்துக்குக் காரணனாகிய பரமனுக்கே தெரியும். ஆதலால்
அவரைத் தரிசித்துக்கேட்டால் விளங்குமென்று கூற,
புத்திரன்கேட்டு தாயைவணங்கி ஓ அம்மணி! நான் பர
மசிவத்தைக்கண்டு அன்னதானத்தின் பலனைக் கேட்டு
வருகிறேன் அம்மணியென்று தாயைப்பணிந்து விடை
பெற்று அக்ராரத்தைக்கடந்து நாட்டைவிட்டு காட்டிற்
புகுந்து அதிகதூரஞ் சென்றான். அக்காடோ மனித
சஞ்சாரமில்லாதது; கரடி புலி யானைகள் நிறைந்திருக்
கிற அவ்வனத்தில் நெடுந்தூரம் செல்லும்போது சூரி
யன் அஸ்தமிக்கிறவேளையாயிருந்தது; அக்காட்டிலிருக்
கிற வேடன்கண்டு, ஓ! ஓ! யாரோ ஒருமனிதன் செல்லு
கிறான் அவனை யுற்றுநோக்கினால் சிறுவனாகவும், பிராம
ணத்திருமேனியாகவு மிருக்கிறது; இன்னுஞ்சிலதூரஞ்
சென்றால் பொழுதஸ்தமாகும் காடோ பெருங்காடு;
மிருகதொந்தரை யதிகம்; இன்று இராப்பொழுதுக்கு
சிறுவனை நம்மிடத்தில் வைத்திருந்தால் சூரியன் உதய
மானவுடன் கருத்துக்கிசைந்தபடி நடக்கட்டுமென்று
கருதி அப்பிராமணப் பிள்ளையை வழிமறித்து ஓ ஐயா!
சூரியனோ அஸ்தமாகிற தருணம் இன்னும் போகப்
போக காடு, அதிக மிருக தொந்தரை யாதலால் இன்
றைய இராப்பொழுதை இங்கு தலைத்துவிட்டு அதன்
பின்பு உமது கருத்தின்படி செல்லுமென்றுகூற, பிராம
ணப்பிள்ளை அக்கருத்துக் கிசைந்தான். வேடன் பிராம
ணப்பிள்ளையை யழைத்துப்போய்த் தன் பரணின்மேல்
வைத்துக்கொண்டான்.

பிறகு மனைவியை யழைத்து அடிபெண்ணே! இவர்
யாரோ பிராமணர்; பொழுது அஸ்தமிக்கிறவேளை; தன்
னந்தனியே காட்டில் செல்லுகிறது தகுதியல்லவென்று
நினைத்து இன்றிராப்பொழுதுக்கு வைத்திருக்கவேண்டு
மென்று கருதி யழைத்துவந்தேன்; நாமிருவரும் பொ
சித்தந் தினைமாவில் கொஞ்சம் நெருக்கிக் கொடுத்தால்
அவர் பசியாறிப்போகும்; நீபடுக்கிறவிடத்திலும் நான்
படுக்கிறவிடத்திலும் இவருக்கிடம் பங்கிட்டுகொடுப்போ
மாகில் அதில் படுத்திருப்பாரென்று கூற, வேடன்
மனைவி கடுஞ்சினமடைந்து போனால்போரான் இடங்



கொடுக்கேன் என்பங்கு தேனையுந் தினைமாவையுங் கொ
டுக்கேனென்றாள். வேடன்பார்த்து அவ்வேதியனுக்குத்
தன்பங்கு இடத்தில் கொஞ்சமிடமுந்தன் பங்குதேனுந்
தினைமாவிலுங் கொஞ்சங் கொடுத்துத் தன் பக்கத்தில்
படுக்கவைத்துத் தானும்படுத்துக்கொண்டான். வேடன்
தூக்கத்தில் புரண்டு விழுந்துவிட்டான். ஒருமிருகம்
அவனைக் கொன்று தின்றுவிட்டது. சூரியோதயமான
வுடன் வேதியன் எழுந்துபார்த்தான். வேடனைக்கா
ணோம் எங்கு சென்றானோவென்று கருதி பரணைவிட்டி
றங்கி நடந்தான்; வேடன் மனைவி புருஷனைக்காணாதவ
ளாகி ஓ! ஓ! நமது கணவன் பிராமணனுக்கு இடங்கொ
டுத்து தான் கீழே விழுந்து மிருகத்துக் கிரையானா
னென்று உணர்ந்துகொண்டு தட்சணம் தானும் பரணை
விட்டிறங்கி ஓடோடியும்வந்து நடந்துபோகிற வேதிய
னைக் கைபிடித்துக்கொண்டு, ஓ பிராமணா! உனக்கு இடங்
கொடுத்த என்கணவனைத் தாவென்றனள். பிராமணன்
அடா! இதென்ன அநியாயம்! வேடனிறந்தால் நம்
மிடத்து வந்து இவள் அவனைக் கொடுவென்றுவினவு
கிறாள்? இதென்ன அனியாயமென்று மதித்து அடிவே
டுவச்சி? உன்னை நானறிந்து வரவில்லை; உன்கணவன்
என்னை வலிய அழைத்து வந்து அவன் பொசிப்பிலும்
அவனிடத்திலுங் கொஞ்சங் கொடுத்து அருகில் படுத்
திருந்தான். சூரியன் உதயமானவுடன் நான் அவனைக்
கண்டிலன்; போடி போவென்று கையைத்திமிறிப்பிடுங்
கிக்கொண்டு காடு மலை வனாந்திரங்களெல்லாங் கடந்து
ஒரு ஊரில் வந்தான். அவ்வூரில் ஒருபிராமணன், அவன்
நூறு ஏரி சமுசாரி, ஒருநாளுக்கு ஆயிரங்கலம் தானி
யவரவு; அவ்வளவா யிருந்தாலும் அவ்வூர் ஏரி மரா
மத்துக்கே சரியாயிருக்கும்; ஏனென்றால் நித்தம் அவ்
வேரி மராமத்துசெய்து வருகிறது; உதயமானால் அவ்
வேரி முன்போல் எடுத்துக் கொள்ளுகிறது; அதனால்
ஆள்களுந் தானியங்களுஞ் செலவாகிறது அந்தபிராம
ணன் போனான்; அவ்வேதியன் இப்பிராமணப்பிள்ளை
யைப் பார்த்து நீயார்? எங்கிருக்கிறது? என்னகாரியார்த்
தமாக வந்தீர்? எங்கு செல்லுகிறீர்? என்று வினவ, தன்
வரவாற்றைச்சொல்லி அன்னதானப்பலனை பரமசிவனா

லறிந்துகொள்ளப் போகிறேனென்று கூற, வேதியன் கேட்டு மகிழ்ந்து அப்பிள்ளைக்கு நல்ல விருந்தளித்து, ஓ ஐயா! நீர் பரமசிவனைக்கண்டு உன்குறை நிறைவேறினபின்பு என் ஊர்ஏரி தினம் உடைத்துக்கொண்டு போகிறது அது என்னகாரணமோ தெரியவில்லை; அதனையுந் தெரிந்துவாவென்று வேண்ட, வேதியன் அக்கருத்துக்கிசைந்து விடைபெற்று அவ்வூரைவிட்டு காட்டிற்புகுந்து செல்லுகிறான்; அவ்வழியில் ஒருமுடவன் கைகாலில்லாதவனாய் பசியால் மிகவும் வருத்தமுற்றிருந்தான். அம்முடவன் போகின்றவேதியனைப்பார்த்து, சுவாமி! தாங்கள் இந்த வெயிலில் எங்கு செல்கிறீர்? என்று கேட்க, வேதியன் அன்னதானப் பலனை பரமசிவனாலறிந்துகொள்ளச் செல்கிறேனென, முடவன் சொல்லுகிறான்: ஓ ஐயா! நான் கைகாலில்லாதவனாகிப் பசியால் வெயிலிற்படும் புழுப்போல் வருந்துகிறகாரணம் எனக்குத் தெரியவில்லை இக்காரணத்தையுங் கேட்டு அறிந்துவாருமென்றுசொல்ல, வேதியன் அக்கருத்துக்கிசைந்து விடைபெற்று சில்தூரஞ் சென்றான். அங்கு ஒரு நாகம் புற்றினின்றும் வெளியில்வரச் சக்தியில்லாமலும் கண் தெரியாமலும்பசியினாலும் கனவருத்தப்பட்டிருக்கிறது; இவ்வேதியனைக்கண்டு ஓ ஐயரே! நீர் எங்குசெல்லுகிறீரென்று வினவ, வேதியன் அன்னதானப் பலனையறிய பரமசிவனைக் காணப்போகிறேனென, நாகம் எனக்குக் கண் தெரியவில்லை; பசிக்கு இரை தேடுவோமென்றால் இரையின்பேரில் விருப்பமில்லை; புற்றைவிட்டு வெளியில் வரக்கூடவில்லை; அது எனக்குச் சந்தேகமாயிருக்கின்றது; அதனை விளங்கக் கேட்டுவாவென்று சொல்லிற்று. அதனையுங் கேட்டுக்கொண்டு அதைக் கடந்து சிலதூரஞ் சென்றான். அங்கு ஒரு மாமரம் குலுங்கப் பழுத்து ஒருவருக்கும் உதவியில்லா திருப்பதையும் தன்னிடத்தில் பறவை விலங்கு மனிதர் ஒருவரும் அணுகாதிருப்பதையும் நோக்கி வருத்தமுற்றிருக்கிறது; இந்தப் பிராமணப்பிள்ளையைப் பார்த்து ஓ பிராமணா! நீர் எங்கு செல்கிறீர்? என்று சொல்ல, பிராமணப்பிள்ளை தன்கருத்தை சொல்ல மாமரம் நான் குலுங்கப் பழுத்தும் என் பழம் ஒருவருக்கும் உபயோகமாகவில்லை என்னிடத்து



பறவைகளும் விலங்குகளும் வந்து அடைகிறதில்லை; இது எனக்குத் தீராச் சந்தேகமாயிருக்கிறது; இதனைக் கேட்டுத் தெரிந்துவாருமென்று சொல்ல, அதனையுங் கேட்டுக்கொண்டு அங்கிருந்து சில்தூரஞ் சென்று அங்கு தோன்றிய ஒருபெரியமலையைக்கண்டு இதுதான் நல்ல உபயோகமானவிடமென்றுகருதி அங்கு தவநிலை சேர்ந்து ஐப்பொறிகளையும் அடக்கி அருமையான தவத்திலிருந்தான். இப்படி ஒருவருஷமாகத் தவத்திலிருக்கவே தபாக்கினி கைலைக் கணுகிற்று. பரமசிவன் உணர்ந்து தட்சணம் பார்வதியாரோடு ரிஷபவாகனத்திலேறி அந்தரத்தியானமாகவந்து இந்தப் பிராமணப்பிள்ளையின்முன் பிரசன்னமானார். பிராமணப்பிள்ளை கண்விழித்துப் பார்த்து ஆனந்தக் கூத்தாடி பலவாறு துதித்தான். பரமசிவன் மகிழ்ந்து உன் தவத்துக்கு மகிழ்ந்தேன் உனக்கு வேண்டியவரத்தைக்கேள், தருகிறோமென்றனர். பிராமணப்பிள்ளை மகிழ்ந்து சுவாமி! சகலபாக்கியமும் தாங்கள் தரிசனமானவுடன்பெற்றேன் என்கருத்தில் ஒன்றிருக்கிறது; அதென்னவெனில் அன்னதானப்பலனை யறிவதுதான் அதனைத் திருவுளம்பற்ற வேண்டுமென்று வினவ, பரமசிவன் களிப்புற்று பிராமணா! அன்னதானப்பலன் அறியவேண்டிய கருத்து உனக்குள்ளிருக்கின்றமையால் விலாடதேசமென்றொரு தேசமுண்டு அந்ததேசத்துக்கு அதிபதியாகிய அரசனுக்குப் புத்திரனில்லை; அவன் வேதியரைப் பாதுகாத்து அவர்களுக்கு தினம் பூசைசெய்துஅவர்களால் அட்சதையுந் திருநீறும் தன் மனைவிக்குக் கொடுத்து வருகிறான்; அவ்வேதியர் கொடுக்கிற அட்சதையாலும் புத்திரனுண்டாக மாட்டாது; இந்த அட்சதையுந் திருநீறையுங் கொண்டுபோய்க் கொடு; இவற்றால் புத்திரனுண்டாகும் புத்திரன் உற்பத்தியாகும்போது நீ அங்கிருந்து பொற்றட்டில் ஈனாதவாழைக்குருத்தை அந்த தட்டில்வைத்து அப்புத்திரனைப் பூமியிற்படாமல் இதிலேந்தி அனனதானப் பலனைக்கேள்; அச்சிசு சொல்லுமென்ன; பின்னும் வேதியன்வணங்கி ஓ சுவாமி! நான் வரும்வழியில் ஒருவேதியன் இருக்கிறான், அவன் கனத்த சமுசாரியாக விருந்தும் அவன் ஊர் ஏரி தினந்

தோறும் கடை யெடுத்துக்கொண்டு போவதனால் கன
வருத்தப்படுகிறான்; ஏரி உடைகிறகாரணமும்; முடவன்
காலில்லாமையால் தவித்துக்கொண்டிருக்கிறான் அவ
னுக்கவ்வளவு வருத்தம் வந்ததற்குக் காரணமும், ஒரு
நாகங் கண்டெரியாதிருப்பதோடு இரையின்மேல் விருப்
பமில்லாமலும் இருப்பிடத்தைவிட்டு அசையாம லிருக்
கின்றது அதுகள் வரலாறும், மாமரம் குலுங்க பழுத்
தும் பிறருக்குப் பயன்படாம லிருக்கின்றது அது
விளங்க உரைக்கவேண்டுமென பரமசிவன் சொல்லுகி
றார்: ஓ பிராமணா! பிராமணன் ஏரியினால் கனவருத்தப்
படுகிறதற்குக்காரணம்: அவன் வீட்டில் இரண்டு பெண்
கள் பருவகாலமடைந்து அவர்களுக்கு மணம்புரிவிக்
காம லிருக்கின்றமையால் அந்த ஏர இவ்வித வருத்தத்
தைக் கொடுக்கின்றது; முடவன் தான்கற்ற கல்வியைக்
களங்கமில்லாமற் சொல்லாமையால் அவனுக்கு அவ்வ
ளவு வருத்த முண்டாயிற்று; நாகத்துக்குத் தலையில்
மாணிக்க மிருக்கின்றமையால் அந்நாகத்துக்கு அவ்வ
ருத்தமிருக்கின்றது; மாமரத்தடியில் ஏழுஜாடி தனமிருக்
கின்றமையால் அதனைப் பூதங்கள் காத்திருக்கின்றது!
அப்பூதத்தருகில் ஒரு ஜெந்தும் வராதென்றுகூறி, பின்
னுஞ் சொல்லுகிறார்: பிராமணக்கன்னிகைகளை மணம்
புரிவித்தால் ஏரிவுடையாது, முடவன் கற்றவித்தையை
ஒளியாமல் ஒருவருக்குச் சொல்வானாகில் அவனுடைய
வருத்தம் நீங்கும், பாம்பு மாணிக்கத்தை யாருக்காவது
கொடுத்துவிட்டால் அதன் வருத்தம் நீங்கும், மாமரந்
தன்னிடத்தி லிருக்கிற ஏழுஜாடிதிரவியத்தை யாருக்கா
வது கொடுத்துவிடுமாகில் அம்மாங்கனி பிறருக்கு உப
யோகமாகுமென்று கூறினர். பிராமணப்பிள்ளைவணங்கி
ஓசுவாமி! அடியேன்வருகிறபோது ஒருவேடன்எனக்கு
அங்கு பொசிப்புக் கொடுத்தான்; அவன் மிருகத்துக்கு
இரையாயினன். அவ்வரலாறு கூறவேண்டு மென்று
வினவ, பகவான் சொல்லுகிறார்: அப்பா பிராமணா!
அந்த வேடன் வரலாறு விலாடதேசத் தரசனுக்குப்
பிறக்கிற பிள்ளையால் விளங்குமென்று விடைகொடுத்து
அந்தரத்தியானமாயினார். பிராமணன் அந்நிலைவிட்டெ
ழுந்து மாமரத்தடியில்வந்து ஓமாமரமே! உன்னிடத்



தில் ஏழுஜாடி பொன்னிருக்கிறதென்றும், அதனைப் பிற
ருக்குக் கொடுத்துவிட்டால் உன்கனி பிறருக்கு உபயோ
கப்படுமெனப் பரமன் திருவுளம்பற்றினாரென்று சொல்
ல, மாமரங்கேட்டு ஓ பிராமணா! என்னிடத்திலிருக்கிற
திரவியத்தை பரமனால் கண்டு தெரிந்தமையால் உமக்கே
அத்திரவியத்தைக் கொடுத்துவிட்டேன்; நீர் எடுத்துக்
கொள்ளுமென்று சொல்ல, பிராமணன் நீ கொடுத்த
தை மறுபடியும் வந்து எடுத்துக்கொண்டு போகிறபரியந்
தம் உன்னிடத்தி லிருக்கட்டும் என்று சொல்லி விடை
பெற்றுக்கொண்டு நாகனிடத்தில் வந்து, ஓ நாகமே!
உன் தலையில் மாணிக்கமிருக்கிறதென்றும் அதனால்
உனக்கு வருத்தம் நேரிட்டதென்றும், அதனை யாருக்
காவது கொடுத்துவிட்டால் உன்வருத்தம் நீங்குமென்
றும் பரமன் சொல்லினார் என்று சொல்ல, நாகம் சொல்
லுகிறது என் தலையிலிருக்கிற நாகரத்தினத்தைப் பரமனா
லறிந்து வந்தமையால் நீரேயந்த ரத்தினத்தை வாங்கிக்
கொண்டுபோமென, அந்தநாகம் மாணிக்கத்தைக் கக்கி
கனவருத்தத்தை நீங்கிற்று. பிராமணன் மாணிக்கத்தை
வாங்கிக்கொண்டு முடவனிடம்வந்து ஓ ஐயா! நீ கற்ற
கல்வியைப் பிறருக்கு உரைக்காமல் ஒளித்தீரே அதனால்
உமக்கு வருத்தமுண்டா யிருக்கிறதென்று பரமன் திரு
வுளம் பற்றினாரென்றுசொல்ல, முடவன் என் உள்ளக்
கருத்தை பரமனா லறிந்து சொன்னமையால் உமக்கே
கற்பிக்கிறேன் வாருமென்று அழைத்துத் தான் கற்ற
வித்தையெல்லாம் கற்பித்து பஞ்சாட்சரத்தையும் நாவி
லெழுதி தன்வருத்தத்தை நீங்கினன். பிராமணப்பிள்ளை
வேதியன்வீட்டுக்குச்சென்று வேதியரைநோக்கி ஓ ஐயா!
நீ இரண்டுபெண்களுக்குக் கலியாணஞ்செய்யாமல் இன்
னும் வைத்திருக்கிறீராம் அதனாலே ஏரி உடைகிறது;
அக் கன்னிகைகளை யாருக்காவது மணம்புரிவித்தால்
ஏரி உடையாது; உமக்கு வருத்தமில்லையென்று பரமன்
திருவாய்மலர்ந்தருளினா ரென்று சொல்ல, வேதியன்
மகிழ்ந்து தட்சணம் தன்குமாரத்திகளை அப்பிராமணப்
பிள்ளைக்குக் கலியாணஞ் செய்து கொடுத்தான். அவ்
விடம் சிலநாளிருந்து ஒருநாள் வேதியன் மாமனாரை
நோக்கி, ஓ ஐயா! இந்தப்பெண்களை மறுபடியும் அழைத்

துப்போகிறேனென்று சொல்லி விடைபெற்று விலாட தேசம்வந்து அரசனைக் கண்டு, ஓ மகாராசனே! என்கையினால் அட்சதையும்திருநீறும் கொடுப்பேனாகில் உனக்குப் புத்திரனுண்டாகிறான்; அப்படி புத்திரனுண்டாகாமற்போனால் என்பிராணனை விடுகிறேன் என்று சபதங்கூற, ராசன் உத்திரவு பெற்று ராசபத்தினியை ஸ்நானஞ்செய்து ஈர்வஸ்திரத்தோடு வரும்படிசெய்து அட்சதையும் திருநீறுங்கொடுத்தான். இராசபத்தினி அதனையிட்டுக்கொண்டாள். உடனேகர்ப்பமுண்டாயிற்று. இராசன்மகிழ்ந்து பிராமணப்பிள்ளைக்கு உபசாரஞ்செய்தான். இராசபத்தினிக்குப் பிரசவகாலமாயிற்று. அக்காலத்தில் அவ்வேதியன் அரசனை நோக்கி, ஓ மகாராசனே! உமக்குப் பிறக்கும் புத்திரன் மகா மண்டலேஸ்வரனாயிருப்பான், அவனோடு சிலவசனம் நான் வசனிக்கவேண்டியிருக்கிறது; ஆகையால் அப்புத்திரன் பூமியிற்படாமலிருக்க ஒருபொற்றட்டு செய்து அதில் வாழைக்குருத்தை வைத்து அதில் புத்திரனை எடுத்துவர வேண்டுமென்று சொல்ல, அரசன் அக்கருத்துக்கிசைந்து தட்டு வாழைக்குருத்து சேகரஞ்செய்து பிரசவகாலத்தில் புத்திரனைத் தட்டிலேந்திவரக் கட்டளையிட்டு இராசாக்களை வரும்படி திருமுகமனுப்பினன். இராசாக்கள் திருமுகங்கண்டுவந்து சேர்ந்தார்கள். மருத்துவச்சிகள் புத்திரனைப் பூமியிற் படாமல் பொற்றட்டிலேந்தி இராசசமுகத்திற் கொண்டுவந்தார்கள். பிராமணப்பிள்ளை அப்புத்திரனை நோக்கி, அப்பா இராசபுத்திரா! அன்னதானப் பலனை எனக்கு விளங்கவுரைக்கவேண்டுமென்று கேட்க, அச்சிசு அந்த அன்னதானப்பலனை என்னாலுரைக்கத் தக்கதல்ல; ஆயினும் அனுபவமொன்று சொல்லுகிறேன்; முன்னே நான்வேடன்; உனக்கு ஒருநாள்ராத்திரி என்பங்கு தேனிலும்தினைமாவிலும் கிஞ்சிற்று உனக்குக் கொடுத்தேன்; அதனால் வேடரூபம் நீங்கி உலகாதிபதியானேனென்றான்; அன்னதானத்தின்பலன் நீரே மதித்துக்கொள்ளும்; என்மனைவி உமக்கு இடமும் தேனும் தினமாவுங் கொடுக்கேன் என்றாளே அவள் இந்தவூர் பறைச்சேரி வெட்டியான்வீட்டி லிருக்கும் பன்றிகுட்டி போட்டது அதில் நாலாவது குட்டியாக விருக்கிறாள்;



அதற்கு அடையாளம் கால்வெள்ளை நடுநெற்றி சுக்கனிருக்கும் பார்த்துக்கொள்ளுமென்று கூறி, வாயைமூடிக்கொண்டது. விலாடதேசத்தரசனும் மற்ற அரசருங் கேட்டு ஆச்சரியப்பட்டு பிராமணப்பிள்ளையை யாவரும் வணங்கி அந்த வரலாறு என்னவென்று வினவ, பிராமணப்பிள்ளை ஆதியோடந்தமாக வரலாற்றையும்சொல்லி விடைகொடுத்தனன். அந்தப் பிராமணப்பிள்ளை அரசனுக்கு ஆசீர்வதித்து மாமாத் தருகில்வந்து திரவியத்தை யெடுத்துக்கொண்டு வேதியரிடத்தில்வந்து இரண்டுமனைவியையும் அழைத்துக்கொண்டு தன் தாயிடத்துக்குவந்து வணங்கி போய்வந்த சேதி யெல்லாம் விளங்கவுரைத்துத்தாயும் தானும்தன்மனைவிகளும்சுகித்திருந்தார்கள். அவ்வகைப்பட்ட புருஷனல்லவோ உங்களை மணம்புரியவேண்டுமென்று கூறிக்கதையை முடித்தனன். சூரியன் உதயமானான். மந்திரிகுமாரன் தன்மனை சேர்ந்தான். இராசகுமாரத்தி அந்தப்புரஞ் சென்றாள்.

பதினோராநாள்கதை-முற்றிற்று.

---

பன்னிரண்டாவதுநாள்

## வாணியப்பெண் சபதத்தைமுடித்தகதை.

பன்னிரண்டாநாள் இராத்திரி மந்திரி குமாரன் உண்டு கலவைச்சாந்தணிந்து ஆடையாபரணாலங்கிர்தனாகிப் பள்ளியறைசேர்ந்து மஞ்சத்தில் சயனித்திருந்தான், இராஜகுமாரத்திகளில் இளையாள் ஸ்நானஞ்செய்து உண்டு கலவைச்சாந்தணிந்து ஆடையாபரணாலங்கிர்தளாகிப் பரிமள மிகுந்த நறுமலர் மாலைசூடி வழக்கப்படி பள்ளியறைச்சேர்ந்துவீணையிற்சற்றுநேரம் பாடிக் காமமீறிக் கணவனைக் கருதி மஞ்சத்தில் ஏறினள். மந்திரிகுமாரன்கண்டு இவள் காதலைக் கதையால் தணிக்கக் கருதிச் சொல்லுகின்றான். ஓ பெண்ணரசே! நான் ஒரு சிறியகதை சொல்லுகிறேன்; அது மிகவும் இனிமையாயிருக்கும்; கதைமுடிந்தவுடன் இருவருங் கூடிவிளையாடலாம் என்றனன்; இராஜகுமாரத்தி அக்கருத்துக்கிசைய மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: கேளும் பெண்ணே? கலிங்கதேயமென்று ஒரு தேசம்உண்டு அத்

தேசத்திற்கு கௌரவராஜன் என்று ஒரு அரசனுண்டு.
அவன் நீதிவழுவாமல் செங்கோல்செலுத்திவந்தான்.
சிலநாள் சென்றபின்பு அவ்வரசனுக்கு ஒரு சுகுண
முள்ள புத்திரன் பிறந்தான்; அரசன் மகிழ்ந்து தான
தருமங்கள் செய்து அப்பிள்ளையைப் பாதுகாத்துச் சக
லகலையும் ஓதுவித்து பருவகாலம் வந்தவுடன்மற்றொரு
தேசத்து ராஜகுமாரத்தியை விவாகஞ் செய்துவித்துத்
தனது பட்டத்தையும் அப்புத்திரனுக்குக்கட்டித் தான்
உதவியாயிருந்து எல்லாக்காரியங்களையும் புத்திரன்மூல
மாக நடத்திவந்தான். இப்படி சிலகாலஞ்சென்ற பின்பு
ராஜகுமாரன் வேட்டையாடக்கருதி வேடர் வில்லியர்
நாய்களோடு சென்று அக்காட்டிலே வேட்டையாடிநக
ரத்துக்குவந்தான். வரும்வழியில் வடவீதியில் ஒரு
வாணியன் உண்டு; அவனுக்கு ஒருபெண்; அப்பெண்
குலாசாரப்படி எள்ளை வெயிலிற் காயப்போட்டுத் தான்
காவலாகயிருந்தாள் இராசகுமாரன் அக்கன்னிகையைக்
கண்டு அவளுடைய சவுந்தரியத்துக்கு மகிழ்ந்து அரு
கில் நெருங்கி "எள்ளிலே பிறந்து எள்ளிலே வளர்ந்த
இளவாணியப் பெண்ணே எள்ளிலுஞ் சிறிய! இலை"
என்ன? என்றனன், வாணியப்பெண் கேட்டு அடா? இந்த
ராசகுமாரன் நமது குலத்தைக்குறித்து நிந்தித்தான்;
ஆயினும் அதனாற் குற்றமில்லை; நாமும் இவ்வாறுகுலத்
தைக்குறித்து விடைகொடுக்க வேண்டுமென்று கருதி
குஞ்சிரிப்புடனே "பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்து
பூலோகமாண்டராசாவே பூவிலு மிரண்டிதழ்ப்பூ" என
னப்பூ? என்றாள். அதை யரசன் கேட்டு ஆ! ஆ! இக்
கன்னிகை வாணிய ரூபமா யிருந்தாலும் புத்தி யுத்தி
யுடையவளாயிருககிறாள்; நாம்கூறியபடி நமக்குமறுத்து
அந்தக்கதையையேகூறி தனக்குப் பயனாக்கினாளென்று
மதித்து பெண்ணே! நீசொல்லியதுவட்டத்தாரி என்று
சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்: ஓவாணியப்பெண்
ணே? நீ என்னோடு விடுகதை புகன்றபடியால் உன்னை
மணம்புரிந்து சிறைச்சாலையில் வைக்கிறேன் பாரும்
என்று சொல்லினன். அதற்கு வாணியப்பெண் குஞ்சி
ரிப்படைந்து, ஓ ராசகுமாரகா! என்னை மணம்புரிவது
உண்மையாகில் நான் உமக்கே மனைவியாகி உன்னை யறி



யாமல் உனக்கே மைந்தனைப்பெற்று அம்மைந்தனால்
உன்னை அணைக்கயிற்றினால் கட்டி யடிப்பிக்கிறேன் பார்,
என்று மறுசபதங்கூறினாள். ராசகுயாரன் மனதில் வஞ்
சம்வைத்து அரண்மனைக்குவந்து ஒருவரோடும் பேசா
மல் போசனஞ் செய்யாமல் மஞ்சத்தில் சயனித்திருந்
தான். அரண்மனையி லிருக்கிறவர்கள் இராசகுமாரன்
போசனஞ் செய்யாமல் படுத்திருப்பதை அரசனுக்குத்
தெரிவித்தனர். அரசன் கேட்டுப் புத்திரசிகாமணியே!
வேட்டையாடி விடாய்த்துவந்தவன் போசனஞ் செய்யா
மல்படுத்திருப்பது என்ன சொல்லென்று வினவ, இரா
சகுமாரன் தந்தைக்கு யரியாதைசெய்து ஐயா! என்கருத்
தில் ஒரு கோரிக்கையிருக்கின்றது; அது நிறைவேறின
பின்புதான் பொசிப்பேனென்று கூற, பிதா கேட்டுப்
பயந்து, அப்பா புத்திரா! உன்கருத்திலிருக்கிற கோரிக்
கையை வெளியிடுவாயாகில் நான் நிறைவேற்றுகிறே
னென்று சொல்ல, இராசகுமாரன் சொல்லுகிறான்:
ஐயா! நமது நகர் மாடவீதியில் ஒருவாணியக்கன்னிகை
யிருக்கின்றாள்; அவளை நான் மணம்புரியவேணும்; அது
தான் என்கோரிக்கையென்று சொன்னான். இராசன்
கேட்டு, அப்பா புத்திரா! வாணியப்பெண்ணை இதுபரி
யந்தமும் எந்தராசாக்களும் மணம்புரிந்ததேயில்லை; மர
புக்கு இழிவான காரியஞ் செய்வது தகுதியல்ல என்று
சொல்ல, புத்திரன் அக்கன்னிகையை மணம்புரிந்தால்
இருப்பேன் இல்லாவிட்டால் இப்போதேநான் தேசாந்
தரம் போகிறேனென்று சொல்ல, ஓ! ஓ! நமக்கிருப்பது
ஒருபுத்திரன்தான்; தேசாந்திரியானால் நமக்குப் பயன்
ஒன்றுமில்லை; புத்திரனுக்குச் சமாதானப்பட நடப்பதே
நலம் எனக்கருதி சொல்லுகிறான்: ஓ புத்திரசிகாமணி
யே! உன்கருத்தின்படி நடக்கிறேன், நீபோசனஞ்செய்ய
எழுந்திருவென, புத்திரன் முகூர்த்தத்திற்கு நாளிட்டுக்
கொண்டு வந்தால்தான் பொசிப்பேனென்று கூற, உட
னே அரசன் அங்கிருந்து வாணியன்வீட்டுக்கு வந்தார்.
அதை வாணியன்பார்த்து ஓ! ஓ! ஏது மகாராசா நமது
வீட்டிற்குவந்தார் என்று பயந்து எதிர்சென்று அழைத்
துவந்து நாற்காலியி லிருக்கச்செய்து சாஷ்டாங்கமாக
நமஸ்காரஞ்செய்து, ஓ சுவாமி! அடியேன் மனைக்கு

எழுந்தருளியது முன்னோர்கள்செய்த மாதவமே என்று
வேண்டினான். அரசன்மகிழ்ந்து சொல்லுகிறான்: வணி
கர் குலதிலகனே! யான் உன் குமாரத்தியை என் புத்திர
னுக்கு மணம்புரிவிக்கக்கருதி வந்தேன், அக்கருத்துக்
கிசைந்து முகூர்த்தத்திற்கு நாளிட்டுக் கொடுவென்று
வினவ, வாணியன்கேட்டு திடுக்கிட்டுச் சொல்லுகிறான்:
ஓ சுவாமி! அடியேன் எண்ணைவிற்கும் வாணியன்; தாங்
களோ உலகாதிபதி; தாங்களிழிவு பாராட்டாமல் என்
குமாரத்தியை மணம்புரிவிக்கக் கருதினால் அடியேன்
சொல்லப்போகிறது ஒன்றுமில்லை; ஆதலால் தங்கள்
கருத்துக்கிசைந்தபடியாக நடக்கக் காத்திருக்கிறேனெ
ன்று சொல்லி நாள்வைத்துக்கொடுக்க, அரசன் வாணி
யனிடத்து விடைபெற்று அரண்மனைசேர்ந்து புத்திர
னைக்கண்டு நாள்வைத்துக்கொண்டுவந்ததைத் தெரிவித்
தான். புத்திரன் எழுந்து ஸ்நானஞ்செய்து உண்டு முன்
போல் சபாமண்டபத்தில்வந்து ராசகாரியங்களை நடத்தி
வந்தான். அரசன் மந்திரிகளையழைத்து நகரத்தையலங்
கரிக்கப் பறைசாற்றிவையுங்கள்; இராஜராசாக்களுக்கு
மணவோலை யனுப்பிவையுங்கள்; கலியாண மண்டபம்
விரைவில் போட்டுவிடுங்கள் என்று சொல்ல, தன் மந்தி
ரிகள் அவ்வாறு நகரத்தை யலங்கரித்து ராசாக்களுக்கு
மணவோலை யனுப்பினான். ராசாக்கள் மணவோலையைக்
கண்டு யாவரும் வந்து சேர்ந்தார்கள்; முழுது மலங்கார
மாயிற்று; அரசன் வாணியனுக்குச் சேதி தெரிவித்தான்.
வாணியன் பெண்ணை யழைத்துவந்தான். அரசன் தன்
புத்திரனையும் வாணியப்பெண்ணையும் நல்ல சுபமுகூர்த்
தத்தில் மணவரையில் உட்காரவைத்தனன். வேதியர்
வேதவிதிப்படி சடங்குகள் நிறைவேற்றி வாணியப்
பெண் கழுத்தில் இராசகுமாரனால் மங்கிலியந் தரித்து
மற்ற விதிகளைமுடித்தனன். அரசன யாவருக்குந் தகுந்த
மரியாதை செய்து யுண்டி உதவிசெய்து அவரவரிடத்
திற்கு அனுப்பிவைத்தனன். ராசகுமாரனும் வாணியப்
பெண்ணும் அரண்மனைசேர்ந்தனர். ராசகுமாரன் தான்
கூறிவந்தபடி அரண்மனைக்கருகில் சிங்காரமாக ஒரு
அரண்மனை புதுக்கி அதில் வேண்டிய சமான்களுஞ்
சேகரித்து அந்த அரண்மனையில்வைத்து வாணியப்



பெண்ணை யதிற்குடியேற்றி ஒருதாதியை இவ்வாணியப்
பெண்ணுக்குத் துணைவைத்து அரண்மனையைச் சாற்றி
முத்தரித்து அச்சாவியைத் தன்சொந்த பொக்கிஷத்தில்
வைத்துக்கொண்டான். அந்த வாணியப்பெண் தாய்
வீட்டி லிருக்கும்போது அரசன் தன் பிதாவிடத்தில்
வந்து பெண்கேட்டபோது தன பிதாவைக்கண்டு இராச
குமாரனுக்கும் தனக்கும் நடந்த சபதத்தைச் சொல்லி
விவாகமானவுடன் என்னை எந்தவிடத்தில் வைத்திருக்
கின்றானோ அந்தயிடத்திற்கும் உன்வீட்டிற்கும் சுரங்க
முண்டாக்கிவை; அதன் பின்பு நடக்கவேண்டியது
சொல்லுகிறேனென்று சொல்லியிருந்தாள். ஆதலால்
வாணியன் சில சிற்பிகளிடத்துவந்து நயமாகவே பேசி
அவர்களுக்குவேண்டிய திரவியத்தைக் கொடுத்துத் தன்
வீட்டுக்குந் தன்மகளிருக்கிற அரண்மனைக்கும் ஒருவருக்
குந் தெரியாமல் சுரங்கம் செய்வித்தான். வாணியப்
பெண் சுரங்கத்தைக்கண்டு மகிழ்ந்து இனி நமது கோ
ரிக்கை நிறைவேறிற்றென்று கடவுளைத் தியானித்து
உடனே தாதியை யழைத்து அடிமாதே! நான் எப்
போது கதவைத்திறந்து கூப்பிடுவேனோ; அந்தவேளை
யில் எனக்குப் பணிவிடை செய்யவேண்டியதைச் செய்
அதுவரையிலும் உன்கருத்துக்கிசைந்தபடியிருவென்று
கட்டளையிட்டுத் தான் இருக்கு மறைக்குட் சென்று கத
வைத் தாளிட்டு சுரங்கத்தின் வழியாகச் சென்று பிதா
வைக்கண்டு, ஓ ஐயா! எனக்காக கனவருத்தம் எடுத்துக்
கொண்டு சுரங்கஞ் செய்தீர்கள்; இனி என்சபதம் சிலநா
ளில் நிறைவேறும்; இதற்கு ஐயமில்லை; ஆனால் இன்
னும் ஒருவேலை உம்மால் ஆகவேண்டியிருக்கிறது; என்
னவென்றால் கழைக்கூத்தாடிகளாகவும் மந்திரவாதிக
ளாகவும் கழைக்கூத்தில் அதிகவினோதமுள்ளவனாகவும்
ஒருவனைத் தகுந்த கருவியோடு யழைத்துவர வேண்டு
மென்று கூறி அரண்மனைக்கு வந்து தாதியை எச்ச
ரித்து உண்டு சுகித்திருந்தாள். வாணியன் சிலதேசங்க
ளிற் சென்று தன்குமாரத்தி சொல்லிய மந்திரத்தாலும்
வல்லவனாயிருக்கின்ற ஒருகழைக்கூத்தாடியை யழைத்து
வந்து வீட்டில் வைத்தான். வாணியப்பெண் சுரங்கத்
தின்வழியாகப் பிதாவிடத்திற்சென்று பிதாவைக்கண்டு

கொண்டுவந்தீராவென்று வினவ, தந்தை கழைக்கூத்தாடியை யழைத்துவந்து முன் விட, வாணியப்பெண் சொல்லுகிறாள்: ஓ கழைக்கூத்தாடி! உன் பெண்ணைப் போல் என்னைப்பாவித்து நீ கற்றிருக்கிற கழைக்கூத்து முதலிய யாவற்றையும் கற்பித்துக்கொடு; உனது குடும்பமெல்லாம் வருத்தமுறாமற் பொசித்திருக்க அளவற்ற திரவியம் இப்பொழுதே கொடுக்கிறேனென்று வினவ, கழைக்கூத்தாடி அம்மணி! "கோடிவித்தை கூட்டிற்கு" என்ற பழமொழி யிருக்கின்றது; எல்லாவித்தையும் பொசிப்புக்குத்தான்; அதற்குக்குறைவுவராமல் தாங்கள் கொடுக்கிறபோது நான் கற்ற கல்வியெல்லாம் உனக்குப் பூரணமாகக் கற்பிக்கக் காத்திருக்கிறேனென்று கூற, வாணியப்பெண் அளவற்றதிரவியத்தைச் சிப்பங்கட்டி அவன் வீட்டுக்கனுப்பிவிட்டு அவனிடத்திலுள்ள வித்தையைக் கற்கத்தொடங்கி போசனம் செய்கிறபோது அரண்மனைக்குவந்து மற்றவேளையில் தந்தைவீட்டில் ஒருகொட்டடிகட்டி அதிலிருந்து மந்திரங்கள் தந்திரங்கள் கழைக்கூத்து முதலியவையெல்லாம் மூன்றுவருஷத்தில்கற்றுதேர்ந்தாள். கழைக்கூத்தாடியும் இப்பெண்ணுக்குச்சமானமானவர்க ளில்லையென்று மகிழ்ந்தான். வாணியப்பெண் எல்லாவித்தையுங் கற்று வேண்டிய திரவியத்தை கழைக்கூத்தாடிக்குக் கொடுத்துச்சொல்லுகிறாள் ஓஐயா! வித்தை கற்பித்தது பெரிதல்ல மற்றொரு உபகார மிருக்கின்றது; அது யென்னெனில்: இவ்வூர் ராசகுமாரனிடத்தில் கழைக்கூத்தாடவேண்டும்; அதற்குத் தாங்கள் உங்களினத்திற் கலந்து யாவரையும் அழைத்துக்கொண்டுவந்து ராசகுமாரனிடத்தில் கழைக்கூத் தாடுகிறதற்கு தாம்பூலம் பெற்றுவந்து என்னையும் அழைத்துக்கொண்டுபோய் ஆட்டிவையுங்கள்; என் சாமார்த்தியத்தால் அந்த இராசகுமாரனை மயக்கி என்மேல் காதல் கொள்ளும்படி செய்கிறேன்; ராசகுமாரன் உன்னை யழைப்பித்து என்னை நிற்கச்சொல்லுவான்; அக்கருத்துக்கு ஒத்துக்கொள்ளாமல் உனக்குவேண்டியவற்றைப் பெற்றுக்கொள்; அதன்பின் அரண்மனைக்கு அனுப்பமாட்டேன் நகர்ப்புறத்திருக்கின்ற சிங்காரவனத்திலிருக்கும் பளிங்குமர்மண்டபத்திலிருந்தால் அழைத்துவருகி



றேனென்று சொல்லி என்னை இராசகுமாரனிடத்தில் சேர்த்து நான்வந்தவுடன். அழைத்துவந்து இவ்விடத்தில் விட்டுப்போவென, கழைக்கூத்தாடி அக்கருத்துக்கிசைந்து விடைபெற்று அவ்வீட்டிற்குவந்து தன்னினத்தோர் முதலிய கழைக்கூத்தாடிகள் சகலரையும் அழைத்துக்கொண்டு ஓசுவாமி! நாங்கள் அருமையான வித்தை கற்றுக்கொண்டு வந்தோம்; அதனைத் தாங்கள் பார்க்கவேண்டுமென்று வேண்ட, இராசகுமாரன் அக்கருத்துக்கிசைந்து நாளையதினத்தில்வாருமென்று தாம்பூலங் கொடுத்தான்.

கழைக்கூத்தாடி தாம்பூலம்பெற்று ராசகுமாரன்நேமித்த இடத்தில் கம்பம்நாட்டி தன்னினத்தாரை அங்கு ஆட்டஞ் செய்துகொண்டிருக்கும்படி திட்டஞ்செய்து வாணியப்பெண் கழைக்கூத்தாடிகளின் மேளம் காதிற்பட்டமாத்திரத்தில் தானிருக்கும் அறையைச் சாற்றிவிட்டு சுரங்கத்தின் வழியாகச் சென்று தகப்பன் வீடுவந்து தன்னுடைய ஆபரணங்களை யணிந்து தட்டிசல்லடம்பூண்டு கச்சையணிந்து ஒருலேஞ்சிகுட்டைவல்லவாடிட்டு தலையைவாரி பின்னல்போட்டுக்கொண்டு மூக்குத்தி நத்து அணிந்து காதில் கம்மலிட்டுக் கையில் நிறைய வளையலை யணிந்து கழைக்கூத்தாடும் ஸ்திரீகளைப்போல் வேடம்பூண்டு சாக்கிரதையா யிருந்தாள்; நோக்கனும்வந்தான்; இருவரும் கம்பம்நாட்டியிருக்கிறவிடத்திற்கு வந்தார்கள்; வாணியப்பெண் யாராருக்கு எவ்விதமாக மரியாதை செய்யவேணுமோ அவ்வாறு மரியாதை செய்து திரையிடச்சொல்லி திரை மத்தியிலிருந்து சிங்காரப்பதம்பாடி திரையைவிட்டு வெளியில் வந்து ராசகுமாரனுக்கு வந்தனஞ்செய்து யாவரு மகிழும்படி பூமியிலாடும் வித்தைகளையெல்லாம் ஆடி கம்பத்திலேறி யாவரும் மகிழவும் ஆச்சரியப்படவும் ஆடினள். ராசகுமாரன்கண்டு மகிழ்ந்து ஆடையாபரண முதலியவையும் வெகுமதிசெய்து அக்கன்னிகையின்மேல் மோகங்கொண்டவனாய் அவள் வருத்தப்பட்டு ஆடும் ஆட்டத்தைப்பார்த்து தான் வருத்தமுற்றவனாகி போதும் போதும் ஆட்டத்தை நிறுத்து என்றுகூறினன். வணிாயப்பெண் ஆட்டத்தை நிறுத்தி கம்பத்தை விட்டிறங்கி

வந்து ராசகுமாரனை வணங்கினள். மோகத்தைகொண்
டவனாதலால்தட்சணந்தானணிந்திருந்த முத்தாரத்தை
யெடுத்து அவள் கழுத்திலிட்டு சபாஷ் பட்டங்கொடுத்
தனுப்பினான். கழைக்கூத்தாடிகள் ராசகுமாரனிடத்து
உத்திரவு பெற்றுக்கொண்டு தமதுகூடாரத்திற்குச்சென்
றார்கள். வாணியப்பெண் முன்போல்அரண்மனைவந்து
சேர்ந்தாள். இராசகுமாரன் அரண்மனைசேர்ந்து தன்
னடப்பக்காரர்களை யழைத்து அடப்பக்காரா? நீபோய்
கழைக்கூத்தாடியின் எசமானனை அழைத்துவாவென்ற
னன்.அடப்பக்காரனுடன்கழைகூத்தாடி தட்சணம்இரா
ஜகுமாரனைக்கண்டு வணங்கினான்; இராசகுமாரன்கழைக்
கூத்தாடியை ஓரறையிலழைத்துப்போய் அந்தக்கூத்தா
டிப்பெண் உனக்கு என்னமுறையாகவேண்டும்? சொல்
லும் என்றனன். கழைக்கூத்தாடி என் மகளையாவென,
இராசகுமாரன் சொல்லுகிறான்: ஐயா! எனக்கொரு
நாளைக்கு அப்பெண்ணை இசைவிக்க வேண்டுமெனச்
சொல்ல, அதற்கு கழைக்கூத்தாடி சொல்லுகிறான்:
ஐயா! எனக்கிருப்பது ஒருபெண்தான்; அதுவும் ருது
வாகி மூன்றுவருஷமாகின்றது; இன்னும் புருஷன்
முகத்தில் விழித்தறியாது; நீங்கள் இப்படி சொல்லுகி
றது தகுதியல்லவென்று மறுக்க,இராசகுமாரன் மிகவும்
வேண்டிக்கொண்டு ஆயிரம்பொன்கொடுத்து எப்படியும்
அவளை நான் சேரவேண்டுமென்று சொல்ல, கழைக்கூத்
தாடி அக்கருத்துக்கிசைந்து ஐயா! நான் அழைத்து
வருகிறேன்; நகர்ப்புறத்துச் சிங்காரவனத்தி லிருங்க
ளென்றுசொல்லி பொன்னை வாங்கிக்கொண்டுகூடாரத்
துக்கு வந்து பொன்னைஅங்குவைத்து வாணியன்
வீட்டிற்குவந்தான். வாணியப்பெண் முன்னமே ஸ்நா
னஞ்செய்து உண்டு ஆடையாபரண அலங்கிர்தளாகிப்
பரிமளமிகுந்த நறுமலர் மாலைசூடி கழைக்கூத்தாடி வர
வை எதிர்பார்த்திருந்தனள். ஆதலால் கழைக்கூத்தாடி
வந்தவுடன் பொழுதுபோன பத்துநாழிகைக்குமேல்
இருவரும் நகர்ப்புறத்திலிருக்கும் சிங்காரவனத்திற்கு
வந்து பளிங்குமாமண்டபத்தி லிருக்கிற சப்ரகூடமஞ்
சத்தி லிருந்தான்; கழைக்கூத்தாடி பெண்ணைக்கொண்டு
போய் இராசகுமாரனிடத்து விட்டுத் தானொருவிடத்தி



லிருந்தான்; வாணியப்பெண் மஞ்சத்திலிருந்து சற்று
நேரஞ் சென்றபின்பு இராசகுமாரனைப்பார்த்து, ஓராச
னே! நீர் என்னை யழைத்தகாரணமென்னவென்றுவின
வினள். இராசகுமாரன் கிட்டநெருங்கித் தழுவி பெண
ணே! உன்னைக் கூடவேணுமென்றே கருத்து எனக்
குண்டாயிருக்கின்றது; அதனாலே உன்னுடைய பிதா
வின் சம்மதியின்மேல் அழைப்பித்தேனென்றான். அத
ற்கு அந்த வாணியப்பெண்கேட்டு குஞ்சிரிப்புகொண்டு
உமது கருத்தின்படி கூடுகிறேன்; ஆனால் எனக்கு ஒரு
எண்ண மிருக்கிறது; அதென்னவெனில், நீர்தான்
என்னை முன்னம் கலக்கிறீர் உமது கியாபகமிருக்கும்படி
உமது ரத்தினகண்டி கணையாழி வயிரப்பதக்கம் கொடுக்
கவேணுமென்றாள். இராசகுமாரன் அக்கருத்துக்கிசை
ந்து வாவென்று அந்த நான்கு பூஷணத்தையுங் கொ
டுத்தான. வாணியப்பெண் மகிழ்ந்து ராசகுமாரன் கருத்
துக்கிசைந்தபடி கூடிக்குலாவி சேர்ந்து விடியற்காலத்தி
லெழுந்து ராசகுமாரனிடத்து விடைபெற்று வந்து
கழைக்கூத்தாடியை யழைத்துகொண்டு தன் வீட்டிற்கு
வந்துவேண்டிய திரவியத்தைக்கொடுத்து என்னுடைய
எண்ணமும் நிறைவேறிற்று; இனிமேல் அரைக்ஷண
மாகிலும் இந்நகரத்திலிருக்காமல் உன்னுடைய கருத்
திற்கிசைந்தவிடத்தில்போவென்றுவிடைகொடுத்தாள்.
கழைக்கூத்தாடி கூடாரத்தில்வந்து தன்பரிசனத்தோடு
தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தான். வாணியப்பெண்
அரண்மனைசேர்ந்து ஸ்நானஞ்செய்து உண்டு சுகமா
யிருந்தாள். இப்படி சிலநாள் சென்றபின்பு வாணியப்
பெண்ணுக்குக் கர்ப்பந்தரித்து காலத்தில் சுகுணபுத்திர
னைப்பெற்றாள், அப்புத்திரனைத் தன்னுடைய தாய்வீட்
டில்தானே வைத்துப் பால்கொடுத்துவிட்டு தாதிக்குங்
கூட எள்ளளவேனுந் தெரியாமல்சாக்கிரதையாகவிருந்
தாள். புத்திரனானவன் நாளொருமேனியும் பொழுதொ
ருவண்ணமுமாக வளர்ந்து ஐந்துவயது பாலகுமாரனா
னான். அந்தப்புத்திரன் சகல கல்விகளையுங் கற்று வில்
வித்தை முதலியதும் கற்று சகல வித்தையிலும்
கைதேர்ந்தவனாகி யாவரையு மதியாமல் மகா இரு
மாப்புடன் திரிவான். இவனை அவனோடொத்த பிள்ளை

கள்பார்த்து, ஓ! ஓ! இதென்னமகாகெர்வங்கொண்டவனா யிருக்கிறான்; வாணியப்பயல்; அதிலும் தகப்பனில்லாப் பிள்ளையென்று நிந்தித்தார்கள். இவன்கேட்டு தன்னுடைய பாட்டனிடம்வந்து என்தகப்பன் எங்கே? என; வாணியன்பயந்து சுரங்கங்காண்பித்து இதன்வழிசென்றால் உன்னுடைய மாதா விருக்கிறாள்; அவளைக்கண்டு கேட்டால் பிதா இன்னானென்று விரிவாகுமென்றனன். புத்திரன் சுரங்கத்தின் வழியாகச் சென்று மாதாவைக் கண்டு வணங்கி எனக்குத் தாயார் யார்? என்று வினவ, மாதா வாரித்தழுவி அப்பா! மகனே! இன்னாள்சென்றதா? என்னைத் தேடிவர; இனிநான் நினைத்த சபதம் நிறைவேறிற்று; உன்னுடைய பிதா யாரென்றால்இந்நகரத்தின் இராசகுமாரன்தான்; நான் சிறுபோதாயிருக்கும்போது எள் உலர்த்திக்கொண்டிருந்தேன் அந்த ராசகுமாரன் என்னைப்பார்த்து மோகங்கொண்டு விடிகதைபோட்டான், அதற்குநான் பதில் விடிகதைபோட்டேன்; அதின்மேல் ராசகுமாரன் கோபங்கொண்டு உன்னை மணம்புரிந்து சிறையில்வைக்கிறேனென்றான், நான் நீரப்படிச் சிறையில் வைத்தால் அக்காலத்தில் உம்மையறியாமல் உமக்கேபிள்ளைபெற்று அப்பிள்ளையால் அணைகயிற்றால் கட்டியடிக்கிறேனென்று சபதங் கூறினேன்; இராசகுமாரன் என்னைமணம்புரிந்துஇந்த அரண்மனைக்கட்டிச்சிறையில்வைத்தார்;நான்இதிலிருந்துகொண்டு கழைக்கூத்து கற்றுக்கொண்டு ராசகுமாரனைக்கலந்து உன்னைப்பெற்றேன்; என்சபதத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்ல, புத்திரன் அக்கருத்துக்கிசைய, தாய்தாங்கற்ற வித்தையும்உருமாறுவித்தையும் இன்னும் அதிசயமான வித்தைகளையெல்லாங் கற்றுக்கொடுத்தனுப்பினள். புத்திரன் தாயிடத்து விடைபெற்று பாட்டன் வீடுவந்து சில திரவிய மெடுத்துக்கொண்டு நாட்டுப்புரத்திலிருக்கும் ஔவையார் வீடுசேர்ந்து அந்த ஔவையாரைக்கண்டு அம்மா! நான் தாய் தந்தையர்மேல் வெறுப்புற்று வந்துவிட்டேன்: என்னை யாதரிக்கவேணுமென்று சொல்ல, ஔவையார் கேட்டு, அப்பா! எனக்குப் பத்து எருமையிருக்கின்றது; அதன் மேய்த்துக் குளிப்பாட்டிக் காப்பாற்றிவந்தால்



உன்னைப் புத்திரனைப்போல் பாதுகாத்துக்கொண்டிருக்கிறேனென, வாணிச்சிபிள்ளை அக்கருத்துக் கிசைந்து தினம் மாடுகளை மேய்த்துத் தண்ணீர்காட்டிப் பாதுகாத்துவந்தான். ஔவையாரும் அவனைப் பாதுகாத்துவந்தாள். இப்படி பத்துநாள் சென்றபின்பு ஒருநா ளிரவில் உருமாறமையிட்டு சொக்குபொடியையெடுத்துக்கொண்டு நாலு வாழைத்தண்டு சேகரித்துக்கொண்டு தன்பிதாவாகிய இராசகுமாரன் பள்ளியறைசேர்ந்து சொக்குப்பொடியைத்தூவி இவர்மேலுள்ள ஆபரணங்களையெல்லாம் பறித்துக்கொண்டு கட்டிலில் பூட்டிருக்கிற பவழக்கால்களைக் கழட்டிக்கொண்டு வாழைத்தண்டை முட்டவைத்துவிட்டுவெளியில்வந்து அந்நகர்ப்புறத்துவரும் ஆற்றில் நகைகளையும் பவழக்கால்களையும் புதைத்துவிட்டு ஔவையார் வீடுசேர்ந்து நித்திரைசெய்து சூரியோதயமானவுடன் வேலையைப்பார்த்திருந்தான். இங்கே இராசகுமாரன் துயிலெழுந்து எழுந்திருக்கப்போனான். கட்டில் தலைகீழாக விழுந்தது. ராசகுமாரனும் மனைவியும் பூமியில்விழுந்து உடனே எழுந்துபார்க்கும்போது ஆபரணமில்லா திருப்பதோடு கட்டிலின் பவழக்கால்களு மில்லாதிருந்தது பார்த்து, ஓ! ஓ! யாரோ திருடன் வந்து நுழைந்து கொள்ளையிட்டா னென்று மதித்தவுடனே காவலாளிகளைத் தண்டித்து தன் பிதாவுடனே சொன்னான். பெரியவரசன் கேட்டு வருத்தமுற்று இவ்வளவு காவலாக இருக்கிற விடத்தில் களவுபோனால் இனியென்ன நமதரசென்று மந்திரிபிரதானிகளின்மேல் கோபித்துக்கொண்டு தலையாரியைக் கூப்பிட்டு அரண்மனையில் களவுபோயிருக்கின்றது; அதனை நாளை யுதையத்தில் பிடித்துக் கொடுக்க வேணுமென்று மிகவும் ஆக்கியாபித்தான். தலையாரி தன்வீடுவந்து தனக்குள்ளிருக்கிற காவற்காரரை யழைத்து திருட்டுப் போனதைத் தெரிவித்து விரைவில் கள்ளனை பிடியுங்களென்று கட்டளையிட்டு அதிக சாக்கிரதையாக விருந்தான்; வாணியப்பிள்ளை மறுநாளிரவில் நடுச்சாமவேளையில் உருமாற மையிட்டு சொக்குப்பொடியைத்தூவி மந்திரிகுமாரன் ஆபரணமும் மனைவியின் ஆபரணமும் பரித்துக்கொண்டு அதனை யாற்றில் புதைத்துவிட்டு முன்போல ஔவை

யார் வீடுசேர்ந்து தன்வேலையைப்பார்த்துவந்தான். அங்கே மந்திரிகுமாரன் எழுந்து தன் ஆபரணமும் மனைவி ஆபரணமுங் கொள்ளைகொண்டு போனதைக்கண்டு விசனங்கொண்டு பெரிய அரசனுக்குத் தெரிவித்தனன். பெரிய அரசன் கொலுமண்டபத்துக்குவந்து தலையாரியை யழைத்து, ஓ காவற்காரா! உனக்கு எங்கள்மேலே ஏதோ கிஞ்சித்து வஞ்சமிருக்கிறாப்போல் தோன்றுகிறது; இல்லாவிட்டால் உன்னையல்லாமல் வேறே கள்ளன் வருவானோ? நாளைய தினத்துக்குள் அக் கள்ளனைப் பிடித்துக் கொடுக்காவிட்டால் உன்தலைபோகும் என்றும் கண்டிப்பான கட்டளை இதுதானென்றும் கூறினான். அதைத் தலையாரி கேட்டுக்கொண்டு ஏக்கமுற்று வீட்டுக்குவந்து தன் காவலாளிகளை யழைத்து இராசா கொடுத்த தீர்ப்பைக்கூறி இனி அரைமாத்திரையாவது சும்மா யிருக்காமல் தகுந்த முயர்ச்சி செய்யுங்களென்றுகட்டளையிட்டுத் தானும் முயர்ச்சியிலிருந்தான். இங்கே வாணியப்பிள்ளை உள்ளூரானதால் அந்தத் தலையாரி மருமகன் சிலநாளிருந்து தேசாந்திரம்போனதுந் தலையாரியின்மரபும் வரலாறும் பேரும் சில அனுபவமும் அக்கம்பக்கங்களில் உபாயமாய் விசாரித்துக்கொண்டு மருமகனைப்போல வேடங்கொண்டு மாமனாருக்குத் துப்பட்டியும் பாகையுந் தோவத்தியும் மாமியாருக்குப் புடவையும் பெண்சாதிக்கு சில புடவையும் வாங்கிக்கொண்டு அன்றிரவில் தீபம்வைத்தவுடன் தலையாரி வீட்டிற்கடுத்த வீட்டிற்கு வந்து மாமனார் பேரையும் மாமியார்பேரையுஞ் சொல்லி யோகக்ஷேமங்களை விசாரித்தான். அவ்வீட்டுக்காரி தலையாரியின் மனைவிக்குத் தெரிவித்தாள். மனைவி வந்து பார்த்து மருமகனா யிருக்கவே மகிழ்ந்து தன்னுடைய வீட்டுக்கு அழைத்துப்போயினள். தலையாரி வந்தனன்; மருமகனிருவருக்குந் தோவத்தி புடவை கொடுத்துத் தன் யோகக்ஷேமங்களைச் சொன்னான். தலையாரி மெய்தானென்று நம்பி மருமகனுக்கு விருந்துகளிட்டு படுத்துக் கொள்ளச் சொன்னான். வாணிச்சி பிள்ளை பள்ளியறை சேர்ந்து தலையாரி மகளுக்குப் புடவை ஆபரணங் கொடுத்து அவளைக் கூடிக்கலந்து சற்றுநேரமிருந்து பின்பு வெளியில் வந்து தலையாரி திருடனைப் பிடிக்க ஆயுதத்



தோடு வெளிப்பட்டான். இவன்பார்த்து ஓமாமா! ஏது நடுச்சாமவேளையில் ஆயுதத்தோடு வெளிப்பட்டீர்களென்றான். தலையாரி இந்நகரத்தில் கள்ளர்கள் ரொஷ்டு அதிகமா யிருக்கிறது, சூரியோதயத்துக்குள் திருடனைப் பிடிக்காவிட்டால் என்தலைக்கு ஆக்கினைவரும் அதற்காகச் செல்கிறேனென்ன, மருமகன் நானும் வருகிறேனென, தலையாரி மருமகனை யழைத்துக்கொண்டு இராசவீதியிற் சென்றான். அங்கு தொழுமரங்கிடந்தன; மருமகன் பார்த்து ஓமாமா! இதென்னவென்று வினவ தலையாரி இது திருடனையடிக்கிற தொழுமரமென்றனன். இதிலெப்படி யடிக்கிறதென தலையாரி கையையும் காலையு மாட்டி அப்படி யடிக்கிறதென, மருமகன் ஆனால் நான் கையையுங்காலையும் போடுகிறேன் அடித்துப்போடென, மாமனார் நீர் மாட்டிக்கொள்ளவேண்டாம்; நான் மாட்டிக்கொள்ளுகிறேன்; நீர் ஆப்படித்துப் பாருமென்று சொல்லித் தலையாரி காலையுங் கையையும் மாட்டிக்கொள்ள, வாணிச்சிபிள்ளை ஆப்பைப் பலமாக அடித்துவிட்டு ஓமாமா! ஆப்பைப் பிடுங்கக்கூடலையே என்னசெய்கிறதென, தலையாரி அப்பா மருமகனே! வீட்டில் கொட்டாப்புளி உளியிருக்கிறது வாங்கிவா; இலேசாக ஆப்பைப் பிடுங்கிவிடலாம் என, மருமகன் வீட்டுக்குப்போய் மாமியாரை யழைத்து, ஓ மாமி! மாமா குற்றவாளியானாராம்; அரசன் தொழுமரத்தி லடித்திருக்கிறான்; பொழுதுவிடிந்தால் என்னசெய்தி நேரிடுமோ தெரியாது ஏதாவது இருந்தால் என்னிடத்து கொடுங்கள்; பத்திரப்படுத்திவருகிறேனென்று சொல்ல, மாமியார் மெய்தானென்று நம்பி வீட்டிலுள்ள ஆஸ்தியையெல்லாம் எடுத்துக்கொடுத்தாள். மருமகனாகிய வாணிச்சிபிள்ளை அதனை வாங்கிக்கொண்டு ஆற்றிற்போய் அகனைப் புதைத்துவிட்டு முன்போலவே ஔவையார்வீடுசேர்ந்து தன்வேலையைப் பார்த்திருந்தான். இங்கே தலையாரி அன்றிராத்திரிமுழுதும் கனவருத்தமுற்று சூரியோதயமானவுடன் ஓவென்று கூவிக்கொண்டிருந்தான். இச்சேதி இராசாவுக்குத் தெரிந்து யாவரும் வந்துபார்த்துத் திருடனை மெச்சித்தலையாரியைத்தொழுமரத்திலிருந்து நீக்கிஓதலையாரி! என்னசேதியென்றனர்? தலையாரிவணங்கி, ஓஐயா!

என்ன சொல்லுகிறது; எனக்கு மருமகனானது மன்றி
என்னைத் தொழுவில்மாட்டிவிட்டு என்பொருளையும் அப
கரித்துக்கொண்டு போனானென்று சொல்ல, மந்திரிகுமா
ரனுக்குக் கோபமுண்டாகி நானே அவனைப் பிடிக்கிறே
னென்று சபதங்கூறி அன்றிரவில் நடுச்சாமவேளையில்
நூறு குதிரைகளோடு வெளிப்பட்டு சோதனை வரும்
போது வாணிச்சிபிள்ளை இதை யறிந்து ஓர் சாலில் சில
கந்தைத் துணிகளை எடுத்துக்கொண்டு ஆற்றிலோர் பக்
கத்திலே தோய்த்துக்கொண்டிருந்தான். அதை மந்திரி
குமாரன் கேட்டு சந்தடிசெய்யாமற் சென்று அவனைப்
பார்த்து அடா! இந்நேரத்தில் எந்த துணியை வெளுக்
கிறாய் என, வாணிச்சிபிள்ளை ஐயா! நான் ஏகாலி; இவ்
வழியில் கள்ளர்வந்து நகரத்துக்குள் போவார்கள்; நான்
அவர்களுக்குத் துணி வெளுத்துக்கொடுத்தால் ஒரு துட்
டுக்குப் பத்துதுட்டு கூலியாதலால் இந்நேரத்தில்வந்து
தப்புகிறேன் என்றான். மந்திரிகுமாரன்கேட்டு ஏகாலி!
அந்தக் கள்ளனை எனக்குப் பிடித்துக்கொடுத்தால் நூறு
வராகன் கொடுக்கிறேனென வினவ, ஏகாலி சொல்லுகி
றான்: ஓ ஐயா! குதிரையோடிங்கிருந்தால் முதல் என்
பிழைப்பில் மண்விழுந்துபோகுமே; நான் எப்படி பிடித்
துக்கொடுக்கப் போகிறேனென்றான். தாங்கள்மாத்திரம்
இங்கே நானிருக்கச் சொன்னபடியிருந்து குதிரைக்கார
ரை தூலவிலிருக்கச் செய்தால்பிடித்துக்கொடுப்பேனெ
ன்றுசொல்ல, மந்திரிகுமாரன் குதிரைக்காரரைத் தூலவி
லிருக்கச்செய்து நானெப்படி யிருக்கிறதென்று வினவ,
ஏகாலி சொல்லுகிறான்: ஓ ஐயா! தாங்கள் ஆடையாபர
ணங்களை வைத்துவிட்டு இச்சாலுக்குள்ளிருந்தால் திரு
டர்கள் வந்தவுடன் கஞ்சிபோடச் சாலை யெடுப்பது
போல் அச்சாலை யெடுக்கிறேன் தாங்கள் திருடனைப்
பிடித்துக்கொள்ளு மென்றனன். மந்திரிகுமாரன் அக்
கருத்துக் கிசைந்து குதிரையைத் தூலவில் விட்டு
விட்டு ஆடையாபரணங்களைக் களைந்து உட்கார்ந்தான்.
ஏகாலி சாலையெடுத்து மேலேவைத்துவிட்டு சற்றுநேரம்
துகிலைத் தோய்த்தவுடனே மந்திரிகுமாரனது ஆடையா
பரணங்களை எடுத்துக்கொண்டு மற்றொருவழியாகச் செ
ன்று ஆடையாபரணங்களை ஆற்றில் புதைத்துவைத்து



ஔவையார் வீடுசேர்ந்து முன்போலத் தன்வேலையைத்
தான் பார்த்திருந்தான். மந்திரிகுமாரன் நெடுநேரஞ் சா
லுக்குள்ளிருந்து கைகால் திமிரேறி அப்படியிப்படி அ
சைகிறதற்குக்கூட சக்தியற்றவனாய்க்கனவருத்தமுற்றிரு
ந்தான். குதிரைக்காரர் என்ன இந்த மந்திரிகுமாரனைக்
காணோமென்று ஐயமுற்றுத் தேடி ஏகாலியிருந்த விடத்
தில் வந்துபார்த்து ஒருவரையுங் காணமல் மந்திரிகுமா
ரனைக் காணோமேயென்று ஒருவர்க்கொருவர் பேசிக்
கொண்டிருப்பதை மந்திரிகுமாரன் கேட்டு சாலுக்குள்
ளிருக்கிறேனென்று கூறினன். சேவகர்கள் திடுக்கிட்டு
ஓடோடியும்வந்து சாலை யெடுத்து மந்திரி குமாரனை
எழுப்பி கைகால்களைப் பிடித்து செம்மையாக நிறுத்தி
என்னசேதியென்றனர்? மந்திரிகுமாரன் நாணமடைந்து,
ஓசேவகரே! நான் என்னசொல்வேன்? ஏகாலியாயிருந்
தவனே திருடன்; நான்மதிமயங்கி அவன் சொற்படி
என்னுடைய ஆடையாபரணங்களைக் களைந்துவைத்து
சாலுக்குள்ளானேன்; இச்சேதி ஒருவரோடுஞ்சொல்லா
தீர்கள்; உங்களிடத்துள்ள ஒரு வஸ்திரத்தைக்கொடுங்க
ளென்று வாங்கி உடுத்திக்கொண்டுகுதிரையின்மேலேறி
ரகசியமாய் அரண்மனை சேர்ந்தான். சேவகர்கள் தங்க
ளிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். ராசகுமாரன் மந்திரி
குமாரனிடத்து வந்து, ஓஓ மந்திரிகுமாரகா! திருடனைப்
பிடிக்கிறேனென்றையே; பிடித்தாயா வென்றனன். மந்
திரிகுமாரன் நான் இன்றிரவில் அசந்து நித்திரைபோ
யினேன் என்றான். இராசகுமாரன்தானே அந்தத்திருட
னைப் பிடிக்கிறேன்பார் என்று சபதஞ் சொல்லிவந்து,
அன்றிரவில் தான் ஆயிரங்குதிரையோடு வெளிப்பட்டு
நகர்சோதனைவந்து நகர்ப்புறம் வந்தான். வாணிச்சி
பிள்ளை இன்றையத்தினந்தான் நமது மாதா சபதம்
நிறைவேறுமென்று கருதி தட்சணங்கோமுட்டிவேடம்
பூண்டு பலசரக்குகளை வாங்கிக்கொண்டு திராசு படிகட்டு
முதலியவை சேகரித்து பாயும் கம்பளி கோணியுஞ் சம்
பாதித்து எல்லாவற்றையு மெடுத்துக்கொண்டு நகர்ப்பு
றத்திலடுத்து கெட்டியாகச் சிறிய காடாயிருக்கிற விடத்
தில்வந்து ஒருவிளக்கேற்றிவைத்து கடைபரப்பிகொண்
டிந்தான். இராசன் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு

குதிரைக்காரரை யெச்சரித்துத் போய் வளைத்துத தான் அருகில் நின்றனன். கோமுட்டி கண்டு பயந்தவனைப் போலே ஓடிவந்து வணங்கி, இராசாவே! நான் கோமுட்டி; இந்தவிடத்தில் கடைவைத்திருப்பதற்குக் காரணம் என்னவென்றால்; இந்நகரத்தில் சிலதிருடர்கள் எங்கையோ போயிருக்கிறார்கள்; அவர்களெல்லாம்வரும் போது ஒருபணத்துச் சிலவுக்கு பத்துபணங் கொடுத்து வாங்கிக்கொள்ளுவார்கள்; அதற்காகவே வந்திருக்கிறேனென்றான். இராசாகேட்டு மகிழ்ந்து, ஓ செட்டி! எனக்கு அந்தத் திருடரைப் பிடித்துத் தருகிறாயா? என்றனன். கோமுட்டி வணங்கிச் சொல்லுகிறான்:—

ஓ ஐயா! தாங்கள் இப்படியிருந்தால் திருடர்கள்வர மாட்டார்கள். நீங்கள் சேனையை தூரயிருக்கச்சொல்லிப் பயல்போட்டால் உடனே வரும்படி திட்டஞ் செய்துவிடும்; இங்குவந்து நான்சொன்னபடிகேட்பீராகில் திருடனைப் பிடித்துத்தருகிறேனென்றான். அந்தக் கருத்துக்கிசைந்து சேனைகளை துலைவிலிருக்கச்செய்து பயல்போட்டவுடனே வரும்படி திட்டஞ்செய்து கோமுட்டியினிடத்தில் வந்து, ஓ செட்டியாரே! நானிருக்கிறது எப்படியென்றான்? கோமுட்டி சிறுநகைகொண்டு சொல்லுகிறான்: ஓ ஐயா! உங்களுடையஆபரணங்களைக் களைந்துவைத்துவிட்டு கோணிப்பையில் தாங்கள் புகுந்துக்கொண்டிருந்தால் நான் புகையிலை எடுப்பதுபோல் அவிழ்த்து விடுகிறேன், அப்போது நீர் திருடனைப் பிடித்துக்கொள்ளுமெனகூறினான். இராசா அக்கருத்துக்கிசைந்து ஆடையாபரணங்களைக் களைந்துவிட்டு கோணியிற் புகுந்துக்கொண்டான். கோமுட்டி இதுதான் சமயமென்று கம்பிளிக்கயிற்றால் கட்டி உருட்டிவிட்டு ஆடையாபரணங்களெல்லாம் தான் அணிந்துக்கொண்டு குதிரைமேலேறி சவுக்கைப்பிடித்துக்கொண்டு ஒருபையல்போட்டான். சேனைகள் வந்து விழுந்தன. வாணிச்சிபிள்ளையானவன் சேவகனையழைத்து இதோ திருடன் அவனை யெடுத்துக்கொண்டுநடவுங்களென்று தன்சவுக்கத்தினால் தட்டுவதுபோல ஒரு அடியடித்து தொந்திரவு செய்யாமல் எடுத்துக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டு அவர்கள் எடுத்துவரத் தானும்



கூடச்சென்று அங்கங்கு புதைத்து வைத்திருக்கிற ஆடையாபரணங்களை யெடுத்துக்கொண்டு இராசசமுகத்திற்கு வந்தான். இதற்குள் நகரிலுள்ளவர்கள் கள்ளனை ராசகுமாரன் நகையோடு பிடித்து வந்தானென்று அக்காலத்திலோர் கூச்சலுண்டாயிற்று; சூரியன் உதயமானான். பெரியராஜா மந்திரிமார் தண்டத்தலைவர் முதலானவர் கள்ளன் அகப்பட்டானெனச் சேதிகேட்டு கொலுமண்டபத்திற்கு வந்தவரை வாணிச்சிபிள்ளை கள்ளனை ராசசமுகத்தில் வைத்து இதோ கள்ளனைக் கையோடுங் கொண்டுவந்தேன் பாருங்களென்று ஆடையாபரணங்களையும் முன்னே வைத்தான். பெரியராசாகண்டு மகிழ்ந்து தவப்புத்திரன் தானென எண்ணிப் புகழ்ந்து தழுவிக்கொண்டார். சபையிலிருக்கிறவரும் இராசகுமாரன்தானென்றெண்ணிப் புகழ்ந்தார்கள். கோணிக்குள்ளிருக்கிற இராசகுமாரன் மிகவும் வெட்கமுற்று நாமே கள்ளனானோம்; இந்தக் கள்ளன் செகப்புரட்டனென்று சும்மாயிருந்தான். பெரியராசா கோணிக்குள் கள்ளனைக் கூவி அடா திருடா! நீ எங்கிருக்கிறது? இங்கு எப்படி வந்தாயென்றான். இராசகுமாரன் ஓ ஐயா! நான் கள்ளனல்ல; உன்புத்திரன்தான்; என்னருகில் நிற்கிறவன் கள்ளனென்றான். அரசனும் சபையாரும் திடுக்கிட்டு விரைவில் வந்து கட்டவிழ்த்து கோணிப்பையை வாங்கிவிட்டார்கள். இராசகுமாரன் எழுந்து கட்டையாக நின்றான். பெரியராஜன் கண்டு இதென்ன ஆச்சரியம்! நமது குமாரனும் இந்தப் பிள்ளையுஞ் சரியாயிருக்கிறார்; எல்லாம் விசாரிப்போமென்று நினைத்து முன்னந் தன்பிள்ளைக்கு ஆடையாபரணங்கொடுத்து ஒரு பக்கத்தில் உட்காரவைத்து, தன் பிள்ளைபோலிருக்கிற வாணிச்சிபிள்ளையைப் பார்த்து, நீ யாரப்பா! உண்மையைச்சொல்லென வாணிச்சிப்பிள்ளையானவன் பெரியராசாவை வணங்கி, ஓ என்னையனே! எனக்குத் தெரியாது; இதோயிருக்கிற உன்புத்திரன் சிறையில் வைத்திருக்கிற வாணிச்சி யம்மாளை அழைத்துக்கேட்டால் என்வரலாறு தெரியுமென்றனன். பெரியராசாகேட்டு ஆச்சரியப்பட்டுபுத்திரனைப்பார்த்து, அப்பா புத்திரா! என்ன சங்கதியோ? வாணிச்சிப் பெண்ணை அழைப்பியும் கேட்டுத் தெரியலாமென்றனர்.

இராசகுமாரன் மந்திரிகளை யனுப்பி பொக்கிஷத்தி லிரு
க்கிற திறவுகோலை யெடுத்துக்கொண்டு வரச்சொல்லி அத்
திறவுகோலை சில தாதிகள் கையில் கொடுத்து வாணிச்சி
யை யழைத்துவரச் சொன்னான். தாதிகள் சிங்காரவன
த்திலிருக்கிற அரண்மனைக் கபாடத்தைத் திறந்து உட்
புகுந்து தாதியையும் வாணிச்சியையுஞ் சிங்காரித்து
அழைத்துவந்தனர். அப்போது வாணிச்சி சபைக்கு
வந்து திரையிடச்சொல்லி அதிலிருந்து மாமனாராகிய
பெரியராசாவுக்கு நமஸ்காரஞ்செய்து, ஓ மாமா! என்னை
யழைப்பித்த காரியம் என்னவென்று வினவினள்? பெ
ரியராஜா சொல்லுகிறார்: ஓ அம்மணி! நீ மணம்புரிந்த
வுடன் நடந்தசேதி என்னவென்று வினவ, வாணிச்சி
இராசகுமாரன் தன்னைக்கண்டு மோகித்ததுமுதல் தன்
னைச் சிறையில்வைத்துத் தான் கூறிய சபதமும் சபதப்
படி கழைக்கூத்து வேடந்தரித்து இராசகுமாரனைக்கூடி
பிள்ளை பெற்றதும் ஆதியோடந்தமாகச் சொல்லினாள்.
மற்றசேதி வாணிச்சி பிள்ளை சொல்லி என்மாதா சொல்
லிய சபதப்படி என்பிதாவை யணைக்கயிற்றினால் கட்டி
அடித்துவிட்டேன். இதோ எடுத்துக்கொள்ளுங்கள்;
என்பிதா சொத்து எனதாகையால் இந்த ஆடையாபர
ணங்கள் நான் தரித்துக்கொண்டேனென்றான். அந்த
சமாச்சாரத்தைச் சபையிலுள்ளவர்கள் சகலருங்கேட்டு
சந்தோஷமுடன் மகிழ்ந்தனர். பெரியராஜன் பேரனைத்
தழுவி மகிழ்ந்து, அப்பாபுத்திரா! நீகோபிக்காதே; உன்
பிள்ளைதானே அடித்தது; அதற்காக வருத்தப்படாதே
என்றனன். இராஜகுமாரன் சொல்லுகிறான்: ஓ ஐயா!
என்பிள்ளை என்பதற்கு அடையாளமென்ன? அந்த வா
ணியப்பெண் திருஷ்டாந்தங் கொடுப்பாளாகில் ஒத்துக்
கொள்ளுங்கிறேனென்றான். அந்த வாக்கியத்தைக்கேட்ட
வாணியக்கன்னிகை தான் பெற்றிருந்த முத்துமாலை
கணையாழி முதலிய நான்கு பூஷணத்தையுஞ் சபையில்
வைத்தாள். இராஜகுமாரனும் மற்றவரும் மகிழ்ந்து
வாணிச்சியையும் அவள் புத்திரனையும் ஆதரித்துப் புக
ழ்ந்து பெரியராசா தன் குமாரனுக்குவேண்டிய புத்தி
சொல்லி வாணியக்கன்னியைக் கூடிவாழச்செய்து புத்
திர பௌத்திரரோடு சுகமாக வாழ்ந்திருந்தான். அவ்



வகைப்பட்ட புருஷனல்லவோ உன்னைக் கூடவேண்டு
மென்று சொல்லிக் கதையை முடித்தனன். சூரியன்
உதயமானான். மந்திரிகுமாரன் தன் அரண்மனை சேர்ந்
தான். இராசகுமாரத்தி அந்தப்புரஞ் சென்றாள்.

---

## மதனகாமராஜன்கதை பிற்பாதி

பதின்மூன்றாம்நாள் உதயத்தில் மந்திரிகுமாரன்
நித்தியக்கடனைமுடிக்க அந்தப்புரஞ்சென்று மஞ்சனச்
சாலையில்வந்து பல்விளக்கிக் கொண்டிருந்தான். இராஜ
குமாரத்திகளிருவரும் பணிவிடைசெய்ய வந்தார்கள்;
வரும்போது மூத்தாள் இளையாளைநோக்கி, ஓ தங்காய்!
நமது கணவன் நித்தியம் கதைசொல்லிப் பொழுது
விடிய வைத்தாரேயன்றி மோகலீலைசெய்து களிக்கச்செ
ய்யவில்லை; மேலும் அக்கதைமுடிகிற தருணத்தில் அவ்
வகைப்பட்ட புருஷனல்லவோ உங்களை விவாகம்செய்ய
வேண்டுமென்றுகூறி முடிக்கிறார்; இச்சொல்லை யுற்று
நோக்கினால் இவர் நம்மை விவாகம் செய்யாதவர்போல்
நினைத்திருக்கிறார்; நாமும் இதுபரியந்தம் கேட்காமலிரு
ந்துவிட்டோம்; இன்றையத்தினம் நாமிருவரும் பணி
விடைசெய்து கேட்போம்; அதற்கவர் என்ன சொல்லு
கிறாரோ அறிவோமென்று ஒருவர்க்கொருவர் பேசிக்
கொண்டு வந்து மந்திரிகுமாரனுக்கு செய்யவேண்டிய
பணிவிடைகளெல்லாஞ்செய்து மந்திரிகுமாரன் போச
னஞ் செய்த பிறகு பளிங்குமாமண்டபத்திற்குப் போயி
னன். அப்பளிங்குமாமண்டபத்தில் ராஜகுமாரத்திகளிரு
வரும் வந்து வணங்கி, ஓ நாதா! நாங்கள் தங்களைக் கண
வனாகப்பெற்றிருக்க, தாங்களிராப்பொழுதெல்லாம் கதை
யால் தொலைத்துவிட்டீரேயன்றி எங்கள் காதலைத் தணி
க்கவில்லை; மேலும் கதை முடிக்கும்போதெல்லாம் இவ்
வகைப்பட்ட புருஷனல்லவோ உங்களை மணம்புரிய
வேணுமென்று உரைத்தீர்; எங்களுக்கு மங்களம் புனை
ந்தபோது தாங்கள் மங்கிலியந் தரிக்காமல் பிராமண
ஸ்திரீகளைக்கொண்டு மங்கிலியந்தரிப்பித்தீர்கள்; இவை

யெல்லாம் உற்றுநோக்கினால் எங்களுக்குக் கணவன்தாங்களல்லவென்று சந்தேகங் கொள்ளவேண்டி யிருக்கின்றது; இச்சந்தேகத்தை நிவர்த்திசெய்ய வேணுமென்று வினவினர். மந்திரிகுமாரன் மகிழ்ந்து தான் நினைத்த கருமம் இன்று நிறைவேறிற்றென்று மதித்து குஞ்சிரிப்புகொண்டு சொல்லுகிறான்: ஓ மாதர்களே! இன்றுதான் உங்களுக்கு விளங்கிற்று; இந்தப்புத்தி உங்களுக்கு உண்டாகவல்லவா நான் கதைகள் சொல்லிவந்தேன்; இனி யுங்களுக்கு நல்லகாலம் பிறந்தது; சொல்வதைக் கியாபகமாகக் கேளுங்கள்: நான் மயேந்திரபுரி அரசனுடைய மந்திரிகுமாரன்; அவ்வரசனுடைய புத்திரன் என்ராஜகுமாரன்; அவ்வரசனுக்கு இளவரசு பட்டமாயிற்று; அக்காலத்திலே எங்களிருவருக்கும் விவாகஞ்செய்தார். நாங்களிருவரும் ஒருவேளையாகிலும் இணைபிரியாமல் திருக்குளத்திற்கு வந்து உண்டைவில் கொண்டு இராஜகுமாரன் நீர்க்குடங்களைத் துவாரஞ்செய்வார்; நான் பச்சைமண் குண்டுகள்விட்டு அத்துவாரத்தை அடைத்துவிடுவேன். இதுதான் எங்களுக்கு விளையாட்டு; ஒருநாள் அரசனை நான் தனியே வைத்துவிட்டு போசனஞ்செய்ய அரண்மனைக்கு வந்துவிட்டேன்; அந்தச்சமயத்தில் இராசனுடைய ஆசாரியர் குமாரத்தி வந்து இராஜன்மேல் மோகங்கொண்டு தழுவ எத்தனித்தாள். இராசன் வெறுத்து நீக்கிவிட்டார். அதனால் ஆசாரியர்மகள் தகப்பனிடத்து வந்து இராஜகுமாரன் என்னைக் கற்பழித்தானென்று அபாண்டமான வார்த்தையைச்சொன்னாள்; பெரிய அரசனுக்கு அறிக்கையிட அவர் முன்பின் யோசிக்காமல் குமாரனைக் கொல்லும்படி கொலையாளிகளுக்கு உத்திரவுசெய்தனர். அக்கொலையாளிகள் இராசகுமாரனிடத்திற்கு வந்தனர். இராசகுமாரர் அவர்களிலொருவரால் எனக்குச் சேதி தெரிவித்தனர்; நான்போய் கொலையாளிகளுக்கு நல்ல வார்த்தை சொல்லி இராஜகுமாரனை யழைத்துக்கொண்டு தேசாந்திரம் வந்து இருவரும் ஒருமித்து ஒரு நகரஞ் சேர்ந்திருக்கிறபோது அந்நகரத்தில் ஓர் ஆலயமிருந்தது; அதனைத் தெரிசிக்கப்போனோம்; இராசகுமாரர் அக்கோயில் வலம்வந்தார்; அந்தமதிலில் ஓர் திசையில் உங்களிருவ



ரையும் ஓர்படத்திலெழுதி அங்கு கட்டியிருந்தது; ராசகுமாரன் கண்டு மோகித்து என்னவுபசாரஞ்செய்தபோதிலும் களை நீங்காமலிருந்தான்; அதன்மேல் நான்படமெழுதின சிற்பியிடத்தில்வந்து விசாரித்தேன்; அவன் நான் அக்கன்னிகைகளைக் கண்டு எழுதினேனென்றான்; பெரியபோயி யாரென்றேன் உன் பிதாவின் பெயர் சொல்லி அவரிடத்திலிருக்கிற போயியென்றான்; அங்கிருந்து பெரியபோயிவீட்டிற்கு அவன் மைத்துனன்போல் உறவுகொண்டு வந்து உங்களைப்பார்க்கக்கருதி உங்களரண்மனை யருகில் வந்து எண்ணை யிட்டுக்கொண்டேன்; நீங்கள் சன்னலைத் திறந்து பார்த்தீர்கள்; நான் உங்கள் சாயலை எண்ணையிற் கண்டுபோய் உங்கள் பிதாவிடத்து வரலாமென்றால் பெண்கேட்பவரைக் கொல்லுதல் உங்கள் பிதாவுக்கு விரதமாயிருந்ததை அறிந்து பயந்து மேற்கடலில் விழுந்திறக்கப்போனேன். அப்போதுபரமசிவன் வந்து என்னையாதரித்து உன் கருத்தின்படி பெண்ணைக் கலியாணஞ்செய்விக்கிறேன்வாவென்று அழைத்துவந்து இங்குவிட்டு தான் ஒரு பெரியவராய் உங்கள் பிதாவிடஞ்சென்றுபெண்வேணுமென்றுவினவிஉண்டு புசிக்கும்போது உங்களை வரவழைத்து நீங்கள் கன்னிகழியாமலிருப்பதைக்கண்டு சலபானம்செய்யாமற்சென்றார்; உன்பிதாவுடனே விவாகஞ் செய்விக்கக்கருதி மந்திரிகளைவிட்டு என்னைக்கண்டு என் கருத்தின்படி ஒத்து மணஞ்செய்வித்தார்; நான் உங்களை யழைத்துப்போகக் கருதிப் பன்னிரண்டு கதைசொன்னேன்; நீங்கள் இன்றையதினம் வந்து என்கருத்து வினவினமையால் உங்களை என் அரசனிடத்து அழைத்துப்போய் அவருங்களில் யாரை முன்னர்தொடுவாரோ அவரை அரசனுக்கு மணம்புரிந்து மற்றவளை நான் மணம்புரியக்கருதியிருக்கிறேன்; உங்கள் கருத்து என்னவென்று வினவ, இராசகுமாரத்திகள் கேட்டுமகிழ, ஓ மாதர்களே! நீங்கள் உங்கள் பிதாவிடத்து விடைபெற்று வாருங்களென்று கூற, ராஜகுமாரத்திகள் பிதாவிடத்திற்சென்றுவணங்கி, ஓ ஐயா! நாங்கள்சொந்ததேசம் போய்ச்சேரவேண்டும்; எங்களுக்கு விடைகொடுக்க வேணுமென்றுவினவ, அரசன் அக்கருத்துக்கிசைந்து மருமகனுக்குந் தன்குமாரத்

திகளுக்கும் விருந்திட்டு நால்வகைச் சேனைகளையுங் கூட்டி வரிசைகொடுத்தனுப்பினான். மந்திரிகுமாரன் இரண்டு இராசகுமாரத்திகளையும் அழைத்துக்கொண்டு வெளிப்பட்டு காடு மலைவனம் வனாந்தரங்களைக்கடந்து சிற்பியிருக்கிற இடத்துக்குவந்து சிற்பியைக்கண்டு அவனைப்புகழ்ந்து அவனுக்குத்தக்க வெகுமானஞ்செய்து அங்கிருந்து வெளிப்பட்டு நாலைந்துநாட்களில் இராஜகுமாரனிருக்கிற நகரம் வந்து ஔவையாருக்குத் தானபோய் வந்தசேதியைத் தெரிவித்துராசகுமாரனுடைய க்ஷேமாதிசயங்களை விசாரித்து இராசகுமாரத்திகளை அவ்வீட்டிலிருக்கச்செய்து குடிகளுக்கும் ராசகுமாரனுக்கும் விஷயம் தெரிவித்தான. இராசகன்னியை அழைத்துக்கொண்டு கோயிலுக்குச்சென்று சுவாமிக்கு அபிஷேக நைவேதனஞ்செய்து கற்பூரதீபாராதனை செய்வித்துஇராசகன்னிகளை தரிசிக்கச்செய்து ஆலயப்பிரதட்சணஞ்செய்ப அழைத்துக்கொண்டு வந்து படம் எழுதியிருக்கிறவிடத்தில் இரண்டு இராசகன்னிகளை நிறுத்தி ராசகுமாரனை வணங்கி, ஓ சுவாமி! நீர் கோரியகன்னிகைகளைக் கொண்டுவந்தேன் பாரும் என்று சொன்னான். இராசன் கேட்டுதிடுக்கென்றெழுந்து படத்தில் மறைந்துநிற்கும் இராசகன்னிகைகளில் மூத்தாள் கரத்தைப்பற்றினான். இளையாள் இடைந்தாள்; மந்திரிகுமாரன் ராசகுமாரனை வணங்கி, ஓ ஐயா! நாமிருவரும் நமது நகரம் சென்று இம்மாதர்களை மணம்புரிந்த பின்பு கூடவேண்டும். ஆதலால் நாம் நமது தேசம்செல்வோம் வாருமென்றழைக்க, இராசகுமாரன் அக்கருத்துக்கிசைய,மந்திரிகுமாரன் யாவரையும் அழைத்துக்கொண்டு ஔவையார் வீட்டுக்கு வந்தான்.

அப்பால் இராசகுமாரன் முதலானவர்கள்யாவரும் ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து உண்டனர். இராஜகுமாரன் மந்திரிகுமாரனைப்பார்த்து ஓமந்திரி! இந்தக்கன்னிகைகளை எப்படி கொண்டுவந்தாயென்று வினவ, மந்திரிகுமாரன் ஆதியோடந்தமாகச்சொல்ல, இராசகுமாரன்கேட்டு மிகவும் மகிழ்ந்து, ஓ! ஓ! மந்திரிகுமாரகா! முன்னம் என் தலைபோகத் துன்பமுண்டாயிற்று. அப்போது காப்பாற்றித் தற்காலம் காமத்தீயினால் வெந்து



சாம்பலாகப்போன என்னைக் காப்பாற்றினையே நீயே வல்லவன் எனக்குப் பிதாவென்று உன்னைச் சொல்லப்படும் என்று பலவாறு புகழ்ந்தான். மந்திரிகுமாரன் கேட்டு, ஓ ஐயனே! மந்திரியாயிருக்கிறவர்கள் அரசனுக்கு இடையூறுவாராமல் பாதுகாக்கவேணும். அப்படிக் காத்தவன் எவனோ அவனே பட்டியாதலால் பட்டி தன்மைக்கிசைந்து நானிருப்பதனால் என்னால் கூடுமட்டும் முயற்சிசெய்து வருகிறேன்;இதற்குத் தாங்கள் அற்பனாகிய என்னைப் புகழாமலிருக்கும்படி கோருகிறேனென்று சொல்லுகிறான்:—

ஓ ஐயா! நமது சொந்ததேசத்துக்குப் போகவேணும் பிரயாணமாகுங்கள். இந்நகரத்தரசர் குடிகள் சகலமானவர்க்குந் தகுந்த மரியாதைகள் செய்து ஔவையார் விஷத்தையும் அதமாக்கி விடைபெற்று இராசகன்னிகைகள் ராசகுமாரன் இவர்களை அழைத்துக்கொண்டு தான் நால்வகைச்சேனையோடு காடு மலை வனம் வனாந்திரங்கள் முதலியவற்றைக்கடந்து ஒரு சிங்காரவனத்துட்சென்று அங்கிறங்கி ஓர் ஆலமரத்தடியில் இராஜனுக்குக் கூடாரம்போட்டு வேறே தனியாக ஒரு கூடாரமிட்டு ராசகுமாரத்திகளைச் சுற்றிக் காவல்செய்து தனக்கொரு கூடாரமிட்டு அதில் தான் படுத்திருந்தான். அன்றிரவில் நடுச்சாமவரைக்கும் மந்திரிகுமாரனுக்கு நித்திரை பிடிக்காமல் படுத்திருந்தான்; மற்ற ராசகுமாரன் முதலானவர்களும் நித்திரைசெய்தனர். அத்தருணத்தில் இராசகுமாரன் கூடாரமிருக்கிறயிடத்திலிருக்கும் ஆலமரத்தடியில் ஆணும் பெண்ணுமாய் இரண்டு ஆந்தையிருந்துகொண்டு ஒன்றுக்கொன்று விளையாடிப் பின்பு ஆணாந்தை பெண்ணாந்தையைப் பார்த்து, ஓ மாதே! ஆச்சரியமான சிலவசனஞ் சொல்லுகிறேன் கேள் என, பெண்ணாந்தை அதென்னெ? ஆணாந்தை சொல்லுகிறது: கேளும் பெண்ணே! இந்த மரத்தடியில் படுத்திருக்கிற இராசகுமாரன் தலைக்குச் சரியாகவிருக்கும் கிளை முறிந்துவிழப்போகிறது; இராசகுமாரன் இறந்துவிடுவான் என, பெண்ணாந்தை அதற்குத் தப்பினாலோ என்று மறுத்துவினவ, ஆணாந்தை சொல்லுகின்றது: அதற்குத்தப்பினால் ஆற்றிற்கூடாரமிட்டுப் படுக்கப்போகிறான்;

வெள்ளம் வந்து இராசகுமாரனை அடித்துக்கொண்டு போமென, அதற்குத் தப்பினாலோ என்று பெண்ணாந்தை மறுக்க, ஆணாந்தை சொல்லுகின்றது: இராசகுமாரன் வீடுசேர்ந்தவுடன் அவன் மனைவியாலிறந்துவிடுவானென, பெண்ணாந்தை அதற்குத் தப்பினாலோ என்று மறுக்க, ஆணாந்தைசொல்லுகின்றது: பெண்ணே! அது தப்பாது; தப்பினால் இராசகுமாரனுக்கு அழிவில்லை; உலகமெல்லாம் வணங்கச் செங்கோல்செலுத்திச் சுகமாக வாழ்ந்திருப்பாரெனக் கூறிப் பின்னுஞ் சொல்லுகின்றது: இந்த ரகசியத்தை யாராவது வெளியிடுவார்களாகில் அவர்தலை வெடித்துச் சாகக்கடவதென்று சாபமிட்டது. அந்த வாக்கியங்களை 'எல்லாம் மந்திரிகுமாரன் கேட்டு, ஓ! ஓ! இதென்ன அனியாயம்! நாம் இவ்வளவு வருத்தப்பட்டும் விழலுக்கிறைத்த நீர்போலாகுதே! என்றேங்கித் தகுந்த முயற்சி செய்யவேண்டுமென்று கருதி தட்சணம் எழுந்து இராசகுமாரன் படுத்திருக்கிற கூடாரத்தில் வந்து நித்திரைசெய்கிற இராசகுமாரனை அசையாமல் மஞ்சத்தோடெடுத்துவந்து ஒருபக்கத்தில் வைத்தான். கிளையும் மளமளவென்று முறிந்து விழுந்தது. இந்தச் சப்தத்தால் இராசகுமாரனும் மற்றசேனைகளும் விழித்துப்பார்த்துப் பயப்பட்டனர். இராசகுமாரன் மந்திரிகுமாரனைப் பார்த்து, ஓ மந்திரி! நான் ஆலமரத்தடியில் படுத்திருந்தேன்; இப்போது இங்கிருக்கிறதென்ன என்று வினவ, மந்திரி கிளைமுறிகிற சத்தங்கேட்டு நான் எடுத்துவந்தேன் என, இராசகுமாரன்கேட்டு யகிழ்ந்து மந்திரியைப் புகழ்ந்தனன். இதற்குள் சூரியன் உதயமானான்; யாவரும் வெளிப்பட்டு அவ்விடத்தைவிட்டு சிலதூரஞ்சென்று அங்கொருவிடத்திலிறங்கிச்சமையல் செய்து உண்டு மறுபடியும் பிரயாணமாகி சிலதூரஞ்சென்று அங்குதோன்றிய ஆற்றைக்கண்டு இராசகுமாரன் மந்திரிகுமாரனை அழைத்து இங்கு இறங்கி ஆற்றில் கூடாரம்போடுமென்று கூற, மந்திரிகுமாரன் அரசன் கட்டளைப்படி அரசனுக்கு ஆற்றில் கூடாரம்போட அதில் அரசன் படுத்துக்கொண்டான். மந்திரிகுமாரன் நித்திரை செய்யாமலிருந்து வெள்ளம் வருவதைப்பார்த்து இராசகுமாரனை மஞ்சத்தோடு எடுத்துவந்து கரையில்வைத்தனன்.



வெள்ளத்தின் ஓசையால் இராஜகுமாரன் விழித்து மந்திரியைப்பார்த்து ஓ மந்திரிகுமாரகா! நான் ஆற்றிலிருந்தேன்: இப்போது கரைமேலிருக்கிறேன்; ஆற்றிலே வெள்ளம் வருகிறது; இது என்ன ஆச்சரியம்! என்று வினவ, மந்திரிகுமாரன் கேட்டு, ஓ ஐயா! வெள்ளம் வருவதையறிந்து நான் மஞ்சத்தோடு எடுத்துவந்து கரையில் சேர்த்தேனென்றான். இராசகுமாரன்கேட்டு மகிழ்ந்து புகழ்ந்தான். சூரியன் உதயமானான்; பிரயாணமாகி நகரத்துக்குக் காதவழியிலிருக்கும் ஓர் கிராமத்திலிறங்கி ஒருவிடுதி வாங்கி அதில் இராசகுமாரத்திகளை வைத்து வெளியில் சிலவீரரைக் காவல்வைத்து மற்றவர்க்கு விடைகொடுத்து வீமாபுரத்துக்கு அனுப்பிவிட்டு அன்றிரவில் ராசகுமாரத்திகளையழைத்துக்கொண்டு நீங்கள் இருவர் இருபதுநாள் சென்றபின்பு எங்கள் தாய்தந்தையர் உங்களையழைத்துக்கொண்டுவந்து எங்களுக்குக் கலியாணஞ்செய்விப்பார், பத்திரமாக இருங்களென்று கூறி, இருவரும் குதிரையேறி நகரம்வந்து இராஜா அரண்மனை சேர்ந்தார்கள். இராஜனும் இராஜன் மனைவியும் புத்திரனைப் பார்த்தார்கள். ஆசாரியின்மகளை கற்பழித்த குற்றத்தையும் மனதில்வைத்து வெறுப்பாயிருந்தனர். அரண்மனையிலுள்ளவர் இராசகுமாரனுக்கும் மந்திரிகுமாரனுக்கும் உண்டி முதலியவை உபசரித்தனர். இராசகுமாரன் மந்திரிகுமாரனைப் பார்த்து, ஓ மந்திரிகுமாரகா! இதுபரியந்தம் என்னைவிட்டு நீங்காமல் பாதுகாத்துவந்தாய்; என்வீடு சேர்ந்தேன்; இனி உன் அரண்மனைக்குச் செல்லென்று கூற, மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: ஓ ராசகுமாரகா! இதுபரியந்தம் உம்மிடத்திலிருந்தேன்; இன்றையப்பொழுது உங்களுடைய பள்ளியறையில் உன்னுடைய மனைவியறியாமல் நானிருக்கவேண்டுமாதலால் தாங்கள் அந்தவரங்கொடுக்கவேண்டுமென்று கூற, ராஜகுமாரன் அக்கருத்துக்கிசைய, மந்திரிகுமாரன் பள்ளியறை வீட்டிலிருக்கிற மஞ்சத்தின்கீழ் பதுங்கியிருந்தான். ராசகுமாரனுடைய மனைவி வந்ததையறிந்து சோரபுருஷனோடு உறவாயிருப்பவளாதலால் கணவன்மேல் வெறுப்புள்ளவளாகி ஸ்நானஞ்செய்து உண்டு ஆடையாபரணாலங்கிர்தளாகி

அறுசுவையோடுங்கூடிய இனிய உண்டியையும் உண்டு பலகாரங்களையும் எடுத்துக்கொண்டு பள்ளியறைக்கு வந்து பார்த்தாள்; கணவன் தூங்குவதை யறிந்து இவன் கெட்டான் போவென்றுகூறி, வழக்கப்படி செல்வது போல் பள்ளியறையிலிருக்கும் சுரங்கத்தின் கற்பாறையை எடுத்து வைத்துவிட்டு உள்ளே நுழைந்து சென்றாள். மந்திரிகுமாரன் அச்சுரங்கத்தின் வழியாக அவளுக்குத் தெரியாமல் பின்சென்றான்; ராசகுமாரன்மனைவி அவ்வூருக்கு மேற்காகவிருக்கும் ஒரு மண்டபத்துக்கு வந்து அங்கிருக்கிற முடவனிடத்தில் தான் கொண்டுவந்த உண்டி முதலியவற்றை கொடுக்கப்போயினாள். அந்த முடவன் அதனை விரும்பாமல் அவளையும் பலவாறு தூஷித்து நின்றான். அப்போதுஇராசகுமாரத்தி, ஓ நாதா! ஏன் என்மீதில் இத்தனைகோபம், இன்று என் கணவன் வந்தான்; அதனால் இவ்வளவு நேரமாயிற்று; நாளைக்கு விரைவில் வருகிறேனென்றாள். அது எப்படி வருவாயென முடவன்கேட்டான். அதற்கு அவள் என் புருடனைக் கொலைசெய்துவிட்டு வருகிறேனென்றனள். முடவன்கேட்டு திடுக்கிட்டு, அடிசண்டாளி! மரம்வைத்துக்கொண்டல்லவோ களிகூறவேண்டும்; நீ அவனைக் கொன்றுவிட்டால் அதன்பின்பு நீயிங்குவரலாமா? வந்தாலும் உன்னை நான் சேர்வேனோ? பயித்தியக்காரி! அப்படி சொல்லாதேயென்று புத்திசொல்லி அவள் கொண்டுவந்த உண்டி முதலியவற்றைப் பொசித்துக் கூடிக்கலந்தான். சுரங்கத்தின் வழியாகச்சென்று மந்திரிகுமாரன் மண்டபத்திலெழுதிவிட்டு முன்போல சுரங்கத்தின்வழியாக வந்து மஞ்சத்தின் கீழிருந்தான். இராசகுமாரன் மனைவி அம்முடவனோடு கூடிக்கலந்துவிட்டுத் தன்கணவனைக்கண்டு கடுஞ்சினமடைந்து ஒரு கத்திகொண்டு கழுத்தை யறுத்துவிட்டாள். உடனே மந்திரிகுமாரனெழுந்து அப்பெண்ணின் கையைப்பிடித்தான். அதற்குள் கழுத்தறுந்து இராசகுமாரன் உயிர் நீங்கிற்று. மந்திரிகுமாரன் பிர்மைகொண்டவன்போலாயினான். இராசகுமாரன்மனைவி ஓவென்று கூவினள். பெரியராசா முதலான வந்தவர்களைப்பார்த்து, ஓ மாமா! என்கணவனைக் கொன்றுவிட்டு என்னைப்பெண்டாள இந்த மந்திரிகுமா



ரன் எண்ணினான். பெரியராசன் கண்டு என்னசேதி என்று மந்திரிகுமாரனை வினவ; மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: ஓ ஐயா! இதுபரியந்தம் நாங்களிருவரும் அனேக தேசாந்தரஞ்சென்றோமே; அந்த ராசகுமாரனைக் கொல்ல சமயங் கிடைக்காமல் கொல்லவந்தேனென்றான். ராசன்கேட்டுத் திடுக்கிட்டு இந்தமந்திரிகுமாரன் கூறிய வாக்கியத்தை யுய்த்துநோக்கினால் மந்திரிகுமாரன் கொலைசெய்ததாகத் தோற்றவில்லை;மேலும் ஆதியில் குருத்துரோகஞ் செய்து கொலைக்குட்பட்டவன்; நமது தாட்சணியத்தால் கொலையாளிகள் விட்டுவிட்டனர். தற்காலத்தில் அப்பாவத்தா லிறந்தானேயன்றி வேறல்லவென்று புத்திரன்மேல் வெறுப்புற்று அரசன் சீராக விசாரிக்காமல் சிலரையழைத்து இழந்த என்மகனை சுடுகாட்டில்விட்டெறிந்து வாருங்களென்று கூறி, அந்தப் பிரேதத்துக்குச் செய்யுங் கடனை நிறைவேற்றி எடுத்தனுப்பி வைத்தான். சிலர் எடுத்துப்போயினர். மந்திரிகுமாரன் அவர்களுடன் மறைவாகச் சென்று அங்கிருந்தவர்கள் பிரேதத்தை வைத்துப்போனபிற்பாடு தான்சென்று கட்டைமுட்டைகளை விலக்கி ராசகுமாரனை எடுத்துவேறே ஓரிடத்தில்வைத்து அங்கு கிடக்கிற மார்பெலும்பு தலையோடு காலெலும்புகளைப் பொறுக்கி அந்தக்கட்டையிட்டு நெருப்பைவைத்துவிட்டுத் தான் அப்பிரேதத்தை யெடுத்துக்கொண்டு தன் அரண்மனைசேர்ந்து பள்ளியறையிலிருந்த பெரியபேழையைத் திறந்து அதில் பிரேதத்தைவைத்துச் சாவிபோட்டு அச்சாவியை தன் அரையிற் கட்டிக்கொண்டு மஞ்சத்திற் படுத்திருந்தான். மந்திரிகுமாரன் மனைவி தன்கணவன் சுகமாகவந்தால் காளிக்குத் தனது வலதுகையைப் பலிகொடுக்கிறேன் என்று பிரதிக்கினை செய்து வந்தாள். ஆகையால் கணவன் வந்ததுதெரிந்து முன்னம் மாகாளி பூசைசெய்துவிட்டு கணவனைக் காணவேண்டுமென்று கருதித் தானும் பூசைதிரவியமும் பொங்கலிடும் சாமான்களை சேகரித்துக்கொண்டுகாளிகோயிலுக்குட்சென்று தான்கொண்டுவந்தவையெல்லாம் சந்நிதானத்துக்கு முன்னே வைத்துவிட்டுத் திருக்குளத்துக்கு வந்து ஸ்நானஞ்செய்து ஈரவஸ்திரத்தோடு பொங்க

விட்டு காளிக்கு அபிஷேகஞ்செய்து அலங்கரித்துபடையல்போட்டு நைவேத்தியஞ்செய்து தனது வலதுகையைப் பலிகொடுக்கக்கருதி எதிரினில்நின்று ஓம் நமோ பகவதி! உத்தண்டகாளி! மண்ணுப்பிடாரி! மழுவேந்துங்காளி! எனப் பலவாறு துதித்து உனக்குநான் வாக்குத்தத்தஞ் செய்தபடி வலதுகையைப் பலி கொடுக்கிறேன்; ஏற்றுக்கொள்ளுந்தாயே! எனக்கூறிவாளை கையிலெடுத்தாள். மந்திரிகுமாரன் தனது மனைவி செய்ததெல்லாம் ஒரு மரத்தடியிலிருந்து பார்த்திருந்தான். அவ்வேளையில் காளி மகிழ்ந்து தன்னுடைய சுயரூபத்தோடு பிரசன்னமாகி, ஓ மாதே! சற்று நிதானியென்று சொல்லிக்கொண்டே வந்தாள், அம்மணி என்னுடைய கணவன் சுகமாய் வந்துசேர்ந்தால் உனக்கு என்னுடைய வலதுகையைப் பலிகொடுக்கிறேனென்று வாக்குத்தத்தஞ் செய்திருந்தேனாதலால் அவ்வாக்குத்தத்தப்படி நான் கொடுக்கிறேன் ஏற்றுக்கொள்ளும் அம்மாவென்றுகூற, காளி சொல்லுகிறாள்: ஓ மாதுசிரோன்மணி! உன்னுடையகை பலி எனக்குக் கொடுத்தாற்போலதான் உன்னுடைய வலக்கை வெட்டவேண்டாம் திருத்து; உனக்கு வேண்டியவரத்தைக்கேள் தருகிறேனென்று சொல்ல, மந்திரிகுமாரன் மனைவி வணங்கிச் சொல்லுகிறாள்: ஓ அம்மணி! உனக்குப்பலிகொடுக்கிறேமென்ற வலக்கையில் பட்டமரத்தைத் தொட்டாலும் உயிருண்டாகி இலையும் பூவும் காயுமாகவேண்டும்; அதுதான் எனக்கு வேண்டியதென்று வினவ, காளி பிரசன்னமானதும் வரங்கொடுத்ததுங்கண்டு மகிழ்ந்து பின்சென்றான். மனைவி முன்சென்றாள். வழியில் ஒருமரம் பட்டுப்போயிருந்தது; மனைவிகண்டுகாளிகொடுத்தவரத்தை நாம்அறிவோமென்று அந்த மரத்தின்மேல் வலதுகையை வைத்தாள்; அம்மரம்உடனே துளிர்த்து பூத்து காய்த்தது; மந்திரிகுமாரன் கண்டு மகிழ்ந்து மனைவியைப்பார்த்து சந்தோஷித்து வீடுபோய்ச் சேர்ந்தான். மந்திரிகுமாரன் பள்ளியறை சேர்ந்து இராசகுமாரன் பிழைப்பானென்று மகிழ்ந்து சஞ்சலம் நீங்கினவனாதலால் உண்மையாக நித்திரைபோய்விட்டான். மந்திரிகுமாரன் மனைவி ஸ்நானஞ்செய்து ஆடையாபரணலங்



கிர்தளாகி அறுசுவைகூடிய உண்டியும் காளிக்கு நைவேத்தியஞ்செய்த பொங்கலும் பண்டு பலகாரங்களும் பொற்றட்டிலேந்தி பள்ளியறைக்குவந்தாள். கணவன் நித்திரைசெய்வதையறிந்து தட்டைப் பூமியில்வைத்து தட்டி யெழுப்பினள். மந்திரிகுமாரன் ஏன் பெண்ணே! வாவென்றழைத்தான். மனைவிவணங்கி, ஓ நாதா! இதுவரைக்கும் தேசாந்திரஞ் சென்றிருந்தீர்களே எனக்கென்ன கொண்டுவந்தீர்களென்றுவினவ, மந்திரிகுமாரன் மகிழ்ந்து சொல்லுகின்றான்: ஓ மாதே! உனக்கு வேண்டியதைக் கொண்டுவந்தேன்; இதோ யிருக்கிற பெரியபேழையி லிருக்கிறது இந்தா சாவிதனைப்போட்டுத் திறந்து இடதுகையால் மேல்மூடியைப் பிடித்துக்கொண்டு வலதுகையைப் போடென்றான். மந்திரிகுமாரன் மனைவி கர்ளி வரப்பிரசாதம் பெற்றவளாதலால் வலதுகையை விட்டாள்; அந்த ராசகுமாரன் மேற்பட்வே கைபட்டமாத்திரத்தில் இராசகுமாரன் நித்திரை தெளிந்து எழுந்தவனைப்போல் எழுந்தான். மந்திரிகுமாரன் மனைவி திக்கெனப்பயந்து ஓடிவந்து, ஓ நாதா! என்னமோ பெட்டியில் மனிதர் உடம்புபோ லிருக்கின்றது; அதென்னவென்று வினவ, பின்னொன்றுமல்ல, நமது ராசகுமாரன்தான் அஞ்சாதேயென்று தணிவுசொல்லி எழுந்து பெட்டியிலிருக்கும் இராசகுமாரனைப் பார்த்து மகிழ்ந்து வெளியில் வரச்சொல்லி அவருக்கு உபசாரஞ் செய்தான். இராசன், மந்திரிகுமாரா! என் அரண்மனை பள்ளியறையில் படுத்திருந்தேன் நானேன் இங்கிருக்கிறேன் இதென்னவென்று வினவ, மந்திரிகுமாரன் சொல்லுகிறான்: ஐயா! அந்தச்சங்கதி இன்றைய பதினோராம்நாள் சொல்லுகிறேன்; அதுபரியந்தம் வெளியில் வரவேண்டாம் நானும் என் மனைவியும் பணிவிடை செய்து வருகிறோம்; அப்பணிவிடையை ஏற்று இப்பேழையில்தானே இருக்கவேண்டுமென்று கூற, இராசகுமாரன் அக்கருத்துக்கிசைய மந்திரிகுமாரன் மனைவியையழைத்து, ஓ பெண்கள் நாயகமே! என்னைவிட எண்மணங்கதிகமாய்ப் பாதுகார்த்து வாவென்று கட்டளையிட்டான். மந்திரிகுமாரன் மனைவி கட்டளைக்குட்பட்டு ராசகுமாரனுக்கு உண்டி முதலியவற்றை யுதவி பணிவிடை



பிரேதமாயிருக்கும் இராசகுமாரன் மந்திரிகுமாரன் மனைவியின் வலதுகைபட்டதும் உயிர்பெறல்.

மந்திரிகுமாரன் சபையில் தங்களுடைய விருத்தாந்தம் சொல்ல ஆக்ஞையின் சாபப்படி தலைவெடித்தல்.

இராசகுமாரன் மூத்தாளை விவாகஞ் செய்துகொள்ளல்.

மந்திரிகுமாரன் இளையாள் விவாகஞ் செய்துகொள்ளல்.



செய்துவந்தாள். அங்கே பெரியராசன் தன்புத்திரனுக்கு மறுநாள் சஞ்சயனஞ்செய்து பதினோராம்நாள் கருமாதி செய்ய ராசாக்களுக்கு ஓலையனுப்பி கருமாதிக்கு வேண்டியவைகளை மந்திரிகுமாரனாலேயே சேகரித்துக்கொண்டு பதினோராம்நாள் ஆற்றங்கரையில் பெரிய ஒருபந்தல் போடுவித்து விதிப்படி கருமாதியை நிறைவேற்றினன். இராசாக்களும் வந்தனர். வந்த இராசாக்களுக்கும் குடிகளுக்கும் உணவளித்து அந்திப்பொழுதில் சுபஸ்வீகாரம் செய்துக்கொள்ள எத்தனித்தார்கள். அந்தவேளையில் மந்திரிகுமாரன் தன் மனைவியை யழைத்து பெண்ணே! நான் ஒன்று சொல்லுகிறேன், அவ்வாறு நீ செய்யவேண்டும்; அதென்னவெனில்: ஆற்றங் கரையில் இந்த ராசகுமாரனுக்குக் கருமாதி நிறைவேறிற்று; இனி சுபஸ்வீகாரம் செய்துகொள்ளப் போகிறார்; நீசென்று ஒரு கூடாரத்திலிரு; நானும் இராசகுமாரனும் வந்து பந்தியிலுட்கார்ந்தவுடன் நான்போய் சிலசேதி சொல்லப்போகிறேன்; உடனே என்தலை வெடித்திறப்பேன்; நீ அஞ்சாமல் வந்து உனது வலதுகையால் என்தலையைச்சேர்த்துப் பிடிப்பாயாகில் நான்பிழைப்பேன்; அவ்வளவு உறுதி உன்னிடத்தி லிருக்கவேண்டுமென்றுகூற, மனைவி யக்கருத்துக்கிசைந்து உடனே பிரயாணமாகி ஆற்றங்கரைக்கு வந்து தனது மாமியிருக்கும் கூடாரத்திலிருந்தனள். மந்திரிகுமாரன் நல்ல பஞ்சகல்யாணி குதிரை இரண்டு சிங்காரித்து இராசகுமாரனை அலங்கிர்தஞ்செய்து குதிரைமேலேற்றித் தானும் ஆடையாபாரணலங்கிர்தனாகிக் குதிரையேறி இருவருஞ் சவாரிவந்து ஆற்றங்கரையருகாகச் சென்றனர். இராசகுமாரர்களும் குடிகளும் பார்த்து ஓ! ஓ! இதோ ராசகுமாரனென்று அந்தக்காலத்தில் யாவருங்கூடி எழுந்தனர். பெரியராசாகேட்டு எழுந்துவந்து பார்த்து பிரமைகொண்டவனாகிச் சற்றுநேரம் நிதானித்துத் தன்னறிவு தனக்கு வந்து இருவரையும் அருகிலழைத்துச் சபையிலுட்காரவைத்துச் சொல்லுகிறார்: அப்பா புத்திரா! இன்றைய பதினோராம்நாள் கழுத்தறுப்புண்டு இறந்தனையே; இன்றெப்படி வந்தாயென்று வினவ, இராசகுமாரன் சிரித்து ஓ ஐயா! என்ன? கழுத்தறுப்புண்டதென்ன? அதென்னமோ என்க்குத் தெரியவராது; நானுமோர் அறையில்

படுத்திருந்தவன். மந்திரிகுமாரன் பெரியபேழையி லிரு
ந்துவந்தேன்; மந்திரிகுமாரனைக்கேட்டால்தெரியுமென,
பெரியராசா மந்திரிகுமாரனைப் பார்த்து, அப்பா! என்ன
சேதி விவரமாகச் சொல்லவேண்டுமென்றுவினவ, மந்தி
ரிகுமாரன் சொல்லுகிருன்: ஓ ஐயா! நான் உண்மையா
கச் சொல்லுவேனுகில் என் தலை வெடித்திறப்பேன்;
அதற்குச் சம்மதியாகில் சொல்லுகிறேனென, அந்தச்
சபையார் சொல்லுகிருர்கள்: ஓ மந்திரிகுமாரகா! இராச
குமாரனிறந்திருந்ததும் மறுபடியும் உயிர்பெற்று வந்த
தையும் இச்சேதிகளை யெல்லாம் ஆதியோடந்தமாகத்
தெரிவித்தால் தலைவெடித்துச் சாவேனென்று நீசொல்
லுகிறதையுங் கேட்ட நாங்கள் அடைந்த ஆச்சரியத்
துக்களவில்லை. ஆதலால் இச்சபையிலிருக்கிறவர் அற்
பரல்ல மகாமண்டலேஸ்வரர்தான் வாய்பிறப்புக் கேட்க
ஆவல்கொண்டிருக்கிருர்; நீ அவசியஞ் சொல்லவேண்
டும், ஆகிலும் ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு சாவுக்குப்
பயப்படுகிறபேர் அற்பனல்லவோ? நீ மகா பலவான்;
சாவுக்கஞ்சாமல் சொல்லுமென்றுசொல்ல, மந்திரிகுமா
ரன் சொல்லுகிருன்: கேளுங்கள் இராசாக்களே! இந்த்
நகரத்தரசனுடைய மந்திரியாக யிருந்தேன்; நாங்களிரு
வரும் இணைபிரியாமல் கல்விப்பயிற்சி வில்வித்தை யானை
யேற்றம் குதிரையேற்றம் முதலானவைகளைக் கற்று
பால்யபருவத்தினையும் அடைந்தோம். மாதா பிதாக்கள்
எங்களிருவருக்கும் விவாகஞ் செய்தனர்; நாங்க ளிருவ
ரும் சகோதரரைப்போல்ஒத்துமைப்பட்டு நாள்தோறும்
குளக்கரையிலிருந்துஉண்டைவில்வித்தைகொண்டுஉலர்
ந்த உண்டையால் தண்ணீர் குடங்களில் துவாரமுண்
டாக ராசகுமாரன்செய்வான்; நான் பச்சைமண் குண்டு
மாட்டி துவாரத்தை யடைப்பேன்; இது ஒருவருக்குந்
தெரியாது. ஒருநாள் இராசகுமாரனைத் தனியேவிட்டுப்
போசனஞ்செய்ய நான் அரண்மனைசேர்ந்தேன்; அந்த
வேளையில் குருகுமாரத்தி இராசகுமாரனைக்கண்டு அவன்
மேல்விழுந்து அணையப்போனுள்; ராசன் சம்மதிக்கா
மல் கடிந்துகொண்டான்; குருகுமாரத்தி தன்பிதாவிடத்
தில்வந்து இராசகுமாரன் கற்பழித்ததாகச் சொன்னுள்.
குரு கோபங்கொண்டு இராசனுக்குத் தெரிவித்தார். அவ்
வரசன் முன்பின் யோசிக்காமல் வாக்குமூலமறியாமல்



வெட்டிவிடஉத்திரவுசெய்ய,கொலையாளிகள்எனக்குத்தெரி
வித்தார்கள். நான் இரண்டு குதிரையோடுசென்று கொ
லையாளிகளுக்கு இனியவசனங்கூறி, அவர்களை யனுப்பி
விட்டு நாங்களிருவரும் குதிரைமீதேறித் தேசாந்திரஞ்
சென்ருேம்.

பிறகு அங்கு ஒரு நகாம் தோன்றிற்று; அந்நகரை
யறிந்து ஒரு ஔவையார் வீட்டிலிறங்கிப் போசனஞ்
செய்து இரண்டு மூன்றுநாள் சென்றவுடன் அந்நகரத்
திலிருக்குங் கோயிலுக்குட் சென்ருேம்; இராசகுமாரன்
அக்கோயிலை வலம் வருகிறபோது மதிலில் இரண்டு
படங்கட்டி இருப்பதைப்பார்த்துமோகித்துவிழுந்தான்.
நான் கண்டு வேண்டிய உபசாரஞ்செய்தும் அச்சோகம்
தீராமையைக்கண்டு அவ்வூராரிடத்திலே இராசகுமா
ரனை ஒப்புவித்து அப்படம் எழுதின சிற்பியைத்தேடிக்
கண்டு அவனுல் பெரியபோயியைக்கண்டு இராசகுமாரத்
திகளைப் பார்த்து, அந்த ராசகுமாரத்தியின் பிதாபெண்
ணுக்கு விவாகஞ்செய்யாமல் யார் பெண் கேட்க வருகி
ருரோ அவர்களைக் கொன்று விடுகிறது; அச்சேதி
யறிந்துகொண்டு நாம் போவதில் பயனில்லை; உயிரை
நீக்குவதே நலமென்று கருதி, நானும் குதிரையுமாகச்
சமுத்திரத்தில் விழுந்தோம்; சமுத்திரம் என்னைக்கொல்
லவில்லை, நான் நடுக்கடலிலிருந்து புலம்பிக்கொண்டிரு
ருக்கும்போது பரமசிவன்வந்து என்னை யாதரித்து அக்
கன்னிகையை மணம்புரிவிக்கிறேன் கரையேறி வீமாபு
ரஞ்சேர் என்று சொல்ல, பரமசிவன் கட்டளைப்படி ராச
குமாரத்திகளிருக்கும் வீமாபுரத்தைச் சேர்ந்தேன்; பரம
சிவன் தபசியாக பெண்களுக்கு பிதாவாகிய வீமாபுரத்
தரசனிடஞ் சென்று சாதங்கேட்க, அவர் சாதமிட உட
னே பரமன் ராசகுமாரத்திகளை யழைத்து திருநீறளித்து
இப்பெண்கள் விவாகத்தைப்பற்றி வினவ, பிதா யில்லை
யென, பரமன் கோபித்துக்கொண்டு சாதமெடுக்காமல்
மறைந்து என்னை ஜாக்கிரதையாயிருக்கச் சொல்லி ஜெய
கண்டியை யடிக்க நான் அலங்காரமாகத் தெருவில் வந்
தேன்; அரசன் மிகவும் வருத்தமுற்று மந்திரிகளை
யனுப்பி யாரையாவது அழைத்துவாருங்கள், என்குமா
ரத்தியை மணம்புரிவிக்கிறேனென்று சொல்ல, மந்திரி
கள் என்னைக்கண்டு அழைக்க நான் பயந்தவனைப்போல்

அக்கருத்துக்கிசையாமலிருக்க, இராசன் இச்சேதி தெ
ரிந்து என் கருத்துப்படியே கலியாணஞ்செய்துக் கொடு
க்கிறேனென்று வாக்குத்தத்தஞ் செய்து அழைத்துப்
போய் விவாகஞ்செய்தார். நான் அப்பெண்களுக்கு மங்
கிலியந்தரிக்காமல் பிராமணஸ்திரீகளால் மங்கிலியந் தரி
ப்பித்துக்கலியாணச்சடங்குகள் நிறைவேறினபின்பு பள்
ளியறைசேர்ந்து இரண்டு ஸ்திரீகளுக்குங் கதைசொல்
லிப் பொழுதுபோக்கினேன். அதன்மேல் அம்மாதர்கள்
என்னைவணங்கி எங்களுக்கு இன்பங்கொடுக்காமல் கதை
சொல்லிப் பொழுதுபோக்கவேண்டிய தென்னவென்று
வினவ, நான் என்கருத்தை வெளியிட, அம்மாதர்கள்
மனமகிழ்ந்து பிரயாண மாகினர். நான் அவர்களை
அழைத்துக் கொண்டுவந்து இராசகுமாரன் முன்விட்
டேன். இராசகுமாரன் மூத்தஸ்திரீயைத் தொட்டனன்,
இளையாள் திரும்பி இடைந்தனள். அந்த இரண்டு ஸ்தி
ரீகளை இங்கு கொண்டுவந்து மணம்புரிய விருப்பமுற்று
இராசகுமாரனும் நானும் வெளிப்பட்டு பெண்களை
யழைத்துக்கொண்டுவந்து ஒருசோலையி லிறங்கி இராச
குமாரனுக்கு ஒரு ஆலமரத்தடியிற் கூடாரம்போட்டு
அதில் அரசன் நித்திரையானபின் நான் வேறே கூடா
ரத்தில் படுத்துக்கொண்டிருந்தேன்; அந்தவேளையில்
இரண்டு ஆந்தை ஆணும் பெண்ணுமாய் மரத்திலிரு
ந்து ஆணாந்தை பெண்ணாந்தையோடு அந்த ராசகுமா
மாரன் தலையில் ஆலங்கிளை முறிந்துவிழுந்து இன்ன
மொருமுகூர்த்தத்தி லிறக்கப்போகிறானென, பெண்ணாந்
தை அதற்குத் தப்பினாலோவென்றுமறுக்க, ராசகுமாரன்
ஆற்றி லிறங்கப் போகிறான் அவ்வாற்றில் வெள்ளம்
வந்து அடித்துப்போம் அதற்குத்தப்பினால் தன் பெண்,
சாதிகையினா லிறக்கப்போகிறான் அதற்குந்தப்பினால் சுக
மாக வாழ்வானென்றது.

இந்த வாக்கியத்தை நான் கேட்டு ஆலமரத்தடியி
லிருந்த இராசகுமாரனை அவருக்குத்தெரியாமல் வேறோ
ரிடத்தில் வைத்தேன். உடனே ஆலங்கிளை முறிந்தது.
ராசகுமாரன் ஆற்றில் படுத்துக்கொண்டான்; அதற்கு
நான் சாக்கிரதையாயிருந்து எடுத்துவைத்தேன்; உட
னே ஆற்றில் வெள்ளம் வந்தது. அதனபின் யாவரும்
பிரயாணமாகி இரவில் இராஜன் அரண்மனை சேர்ந்து



இராசகுமார னென்னைப்பார்த்து நீ உன் அரண்மனை
சேரென்றார்; என்றதற்கு ஒத்துக்கொள்ளவும் அவர்பள்
ளியறையிலிருக்கிற மஞ்சத்தின்கீழேயிருந்தே னிராஜன்
நித்திரைபோய்விட்டார் இராசகுமான் மனைவிவந்து
பார்த்துப் பலவாறாக நிந்தித்து சோரநாயக னிடத்து
உணவோடு சுரங்கத்தின்வழியாகச் சென்றாள்; நானும்
பின்னே போனேன்; அப்படிச் சாவடிக்குவந்து அங்கி
ருக்கு மூடவனிடத்தில் கொண்டுவந்த வுணவை வைத்
தாள்; மூடவன் நேரஞ்சென்றுவந்த தென்னென கண
வன்வந்தா ரதனாலே நேரமாயிற்று நாளைக்கு விரைவில்
வருவேனென்றா ளதெப்படிவருவாயெனமூடவன்கேட்
டானதற்கவள் நாளையதினப் பொழுதுக் கணவனைகொ
ன்றுவிடுகிறேனென மூடவன் கேட்டு பயந்து சில நியா
யங்கள் சொன்னா னவள்கேளாமல் அவனுடன் கூடிக்
கலந்து பள்ளியறைசேர்ந்தாள். அங்கே நடந்த சேதி
யை கரியால் அந்த மண்டபத்தி லெழுதிவைத்து முன்
னம் பள்ளியறை வந்து சேர்ந்தே னிராச குமாரன்
மனைவி உடனே ஒரு சூரியை எடுத்துக் கழுத்தையறுத்
தாள் நான்விரைவி லெழுந்து பிடித்தேன் துணிஞ்சி
யறுத்து ஓ கொள்ளையென்றுகூவி யென்பேரில் பழுது
சொன்னாள் இராசா அதனைத்தீரவிசாரியாமல் அப்பிரே
தத்தை தகனஞ்செய்துவிட உத்திரவுசெய்தார் ராசன்
பரிசனம் இராச குமாரனைச் சுடலையில் வைத்துவிட்
டார்கள்.

நான் அதை எடுத்துவந்து அரண்மனைக்குச் செ
ன்று பள்ளியறையி லிருக்கிற பேழையில் சவத்தை
வைத்து சாவிபோடப் பார்த்திருந்தேன் என் மனைவி
என்னது வரவைநோக்கி காளிகோயிலுக்குப்போய் பொங்
கலிட்டு நைவேத்தியஞ்செய்து, ஓ அம்மணி என் கண
வன் சுகமாகவந்தால் வலதுகையை பலிகொடுக்கிறே
னென்ன இதோ கொடுக்கிறேன் ஏற்றுக்கொள்ளென்று
கையைவெட்டப்போயினள். அந்தவேளையில் காளிபிர
சன்னமாகி கையை வெட்டிக்கொள்வதை நிறுத்தி அக்
கையினால் பட்ட மரத்தைத் தொட்டால் உயிர்வந்து
துளிர்க்கும்படி வரங்கொடுத்துமறைந்தாள் நானதனைக்
கண்டு முன்போலவே பள்ளியறை சேர்ந்தேன் என்
மனைவி வீடுவந்து ஆடையாபரணாலங்கிர்தாளாகிப் பள்

ளியறைவந்து, ஓ நாதா நீரித்தனைநாள் தேசாந்திரம் போய் எனக்கென்ன கொண்டுவந்தாயென கேட்டாள் நானதற்கு சாவியைக் கொடுத்திதோ பெட்டியிலுனக்கு வேண்டியதெல்லா மிருக்கிறது எடுத்துக்கொள்ளென எடுக்கிறபோது வலதுகையை முன்போட்டாள் காளி வரப்பிரசாதத்தில் ராசகுமாரனுயிர்பெற்று நித்திரையி லிருந்தவர்போலெழுந்தார் என் மனைவிகண்டு அஞ்சி ஓடிவந்தாள் அவளையாதரித்து இராசகுமாரனை இதுவரைக்கும் எனதுவீட்டில் வைத்திருந்துஇன்றையதினம் யாவருங்காண அழைத்துவந்தேனென்றுசொல்ல, ஆந்தைதான்சொல்லிய மூன்றுவாக்கியத்தையும்யார்வெளிப் படுத்துகிறார்களோ தலைவெடித்துச் சாகுவார்களென்ன உடனே மந்திரிகுமாரன் தலைவெடித்திறந்தான்.

பிறகு சபையிலுள்ள யாவரும் பெரியராசாவும் மந்திரியும் ராசகுமாரனுந் துக்கசாகரத்தில் ஓவென்று புலம்பி மேல்விழுந் தழுதுபிராணனை விடக்கருதினர் அவ்வேளையில் மந்திரிகுமாரன் மனைவி ஓடோடிவந்து யாவரையும் அழாதிருக்கச்செய்துஆற்றில்ஸ்நானஞ்செய்து ஈரப்புடவையோடுவந்து பரமசிவனையும் மாகாளியையும் தியானித்து தனதுகையால் கணவன்தலையைசேர்த்துப் பிடித்தாள் உடனே மந்திரிகுமாரன் மனைவியை வணங்கி லோகமாதாவென துதித்தார்.சபையார் பெரியராசாவைப்பார்த்து, ஓ மகாராசனே இனிநடக்கவேண்டியதென்னவென்றுவினவ பெரியராசா சபையாராகிய நீங்களும் மந்திரிகுமாரனும்தான் இனி நடப்பதற்கு உத்திரவு கொடுக்கவேண்டுமையாவென சபையார் மந்திரிகுமாரனைப் பார்த்து இனிநடப்பதற்கு உத்திரவுசெய் யென்றுசொல்ல மத்திரிகுமாரன் சொல்லுகிறான் இராசகுமாரன் மனைவியை சுண்ணாம்பு கால்வாயில் வைக்க வேண்டியது முடவனையழைத்து வரவேண்டியதென்றனர் அரசனப்படியே தனதுமருமகளைச்சுண்ணாம்புகால் வாயில் வைத்துவிட்டு குருனை விலக்கிவிட்டு முடவனை அழைப்பித்தார்முடவன்ராசமுகம்வந்துசேர்ந்தான்மந்திரிகுமாரன் சொல்லுகிறார் ஓ சபையாரே இம்முடவன் இராசகுமாரர் மனைவிக்குப் பலயுத்திகள்போதித்தானாதலால் இவனுக்குநலம்செய்யவேண்டுமென்றுசொல்லித் தனது மனைவியையழைத்து பெண்கள் நாயகமேஇம்மு



டவனை உனது வலதுகையால் தடவுமென்று சொல்ல, மனைவி அவ்வாறு தடவ முடவன் முடம் நீங்கி நல்ல யௌவன திசையடைந்தான் மந்திரிதன்னிடத்தில்வைத்துக்கொண்டான்; சபையார் யாவரும் நகரம் சேர்ந்து சபாமண்டபத்தில்வந்து கொலுவிருந்து மந்திரிகுமாரனை இனி நடக்கவேண்டியதென்ன சொல்லுமையாவென,மந்திரிகுமாரர் சொல்லுகிறார். நாங்கள் கொண்டுவந்த ராசகன்னிகைகளையழைத்துவந்து விவாகஞ்செய்வித்துக் கண்களிப்பாக பார்க்கவேண்டுமென்றுசொல்ல, அவ்வாறு பெரிய ராசாவும் மந்திரிகுமாரனும் பரிசனத்தோடுபோய் அக்கிராரத்திலிருக்கும் இராசகன்னிகளை அழைத்துவந்து இராசகுமாரத்திகளினுடைய பிதாவுக்கு திருமுகமெழுதி அவ்வரசர் வந்தவுடனே முகூர்த்தம் வைத்து சகல ராசர்களுக்குந்தெரிவித்து யாவரும் வந்தவுடனே நகரத்தை யலங்கரித்து மணப்பந்தலிட்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் பெண்களையும் பிள்ளைகளையும் மணவரையிலிருத்தினர்.மந்திரிகுமாரன் பரமசிவனை நினைந்து மணவரையிலிருந்தான். பரமசிவன் பார்வதியாரோடு முப்பத்துமுக்கோடி தேவர்கள்சூழ வந்திருந்து மந்திரிகுமாரன் முதலானவரை வாழ்த்தினர். ராசாக்கள் கண்டு துதித்து மகிழ்ந்தார்கள். இராசகுமாரனும் மந்திரிகுமாரனும் பரமசிவனுக்கும் பார்வதியாருக்கும் வணங்கி கலியாணமேடையிலிருந்து வேதவிதிப்படி திருக்கலியாணச் சடங்குகளை நிறைவேற்றி பரமசிவனைவணங்கினர். பரமசிவன் ஆசீர்வதித்துத் தமதிருப்பிடம்சென்றார். பெரிய ராசனும் மந்திரியும் வந்தவர்களுக்குத்தகுந்த மரியாதை செய்துவிருந்திட்டுதானதருமங்களைச்செய்தனர்.ராசகுமாரனும் மந்திரிகுமாரனும் தங்கள்தங்கள் தேவிமாரோடு கூடிச் சுகித்திருந்தார்கள் பெரிய ராசகுமாரனுக்கு பட்டாபிஷேகஞ்செய்து மந்திரிகுமாரனுக்கு பெரிய மந்திரிபட்டங்கொடுத்தான், ராசகுமாரனும் யாதொரு குறைவுவராமல் குடிகளை பாதுகாத்து ஆறிலொருகடமை வாங்கி செங்கோல்செலுத்தி வாழ்ந்து சுகித்திருந்தார்கள்.

மதனகாமராஜன் கதை

முற்றிற்று.

கடவுள் துணை.

# இந்நூலில் அடங்கிய

# கதைகளின் அட்டவணை


| கதை. | | பக்கம். |
|---|---|---|
| | மதனகாமராஜன்கதை முதற்பாதி | 3 |
| 1-வது | கூடுவிட்டுகூடுபோய்கிற கதை | 25 |
| 2-வது | பூனைக்குட்டிவளர்த்த கதை | 42 |
| 3-வது | தாயைபெண்டாளவந்த இராஜகுமாரன் கதை | 63 |
| 4-வது | ஆமையாயிருந்த இராஜகுமாரன் தகப்பனார்கோரிய பெண்ணை மணம்புரிவித்த கதை | 75 |
| 5-வது | ஜெகதலப்பிரதாபன் கதை | 97 |
| 6-வது | மாங்கனியாலரசுபெற்ற கதை | 130 |
| 7-வது | ஆமையாயிருந்த இராஜகுமாரன் தேவகன்னியினது மகத்துவத்தால் மந்திரிகுமாரத்தியை விவாகஞ் செய்த கதை | 144 |
| 8-வது | சூதன் கதை | 165 |
| 9-வது | குத்துவிளக்கென்ற இராஜகுமாரத்தியின் கதை | 179 |
| 10-வது | இராஜகுமாரனை மந்திரிகுமாரன் மோசஞ்செய்து முடிவில் அவமானப்பட்ட கதை | 197 |
| 11-வது | பிராமணப்பிள்ளை அன்னதானப்பலனை அறிந்தது | 218 |
| 12-வது | வாணியப்பெண் தன் சபதத்தைமுடித்த கதை | 2.7 |
| | மதனகாமராஜன் கதை பிற்பாதி | 24[illegible] |


கதைகளின் அட்டவணை

முற்றிற்று.

18609

சென்னை-600 008

திருமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1926.

சென்னை-600 008